வெளியீடு 28-11-1983] [Issued 28-11-1983

31 மார் 1984
2724
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 20, 1983— தொகுதி L எண் 4
Wednesday the 20th April 1983 Volume L No. 4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

D
Y2N,31 N83
N83.50.4 ஏ:
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136043
சென்னை-600 008.

உள்ளடக்கம்.

20–4–1983.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 433—467 |
| 2. வரவு—செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு —(தொடர்ச்சி) | |
| கோரிக்கை எண் 15—காவல் துறை<br>கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் —(தொடர்ச்சி) .. .. | 468—528 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். | 468—527 |
| 3. அறிவிப்பு : | |
| நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு 1983. (ஆ,இ.) | 528 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவு : | |
| நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு 1983. | 528 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் : | 529 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

புதன்கிழமை, 1983 ஏப்ரல் 20.

சித்திரை 7, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை ''

தன் அளவு சிறிதாகத் தேய்தலும், தலைவரிடம் நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லாதிருக்குமானால் அத்தகைய படை வெற்றி பெறும்.

## 1. வினாக்கள் — விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**வடார்க்காடு மாவட்டத்தில் கயிறு அபிவிருத்தி மையம் ஏற்படுத்தும் திட்டம்:**

*வினா எண் 811.—திரு. சி. கோபால் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் கயிறு அபிவிருத்தி மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** : (அ) வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் தென்னை நார் உற்பத்தி வளர்ச்சிக்காக ஒரு தொழிற் கூட்டுறவு சங்கம் 13–4–1982-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர இம்மாவட்டத்தில் கயிறு அபிவிருத்தி மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1983 ஏப்ரல் 20

திரு. ந. குலசேகரபாண்டியன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் இன்றைக்கு தென்னை உற்பத்தியில் அதிக அளவுக்கு முன்னேறி கொண்டிருக்கிறது. ஆகவே நமது அரசுத் துறையில் ஒரு கயிறு தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் ஆரம்பிக்கின்ற உத்தேசம் இல்லை. ஆனால் தனியார் முன்வருவார்களானால் எல்லாவிதமான உதவியும் செய்யப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக்கயிறு அபிவிருத்தி மையம் ஏற்கனவே எங்கெங்கே நமது அரசு தரப்பில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் வேறு எங்கேயாவது ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால் இந்த ஆண்டு தமிழக அரசு இந்தக்கயிறு தொழிற்சாலையில் முனைப்பாக செயலாற்றி கிராமப்புறங்களில் அதிக அளவு வேலைவாய்ப்பு உருவாக்கவேண்டும் என்ற திட்டத்தோடு மத்திய அரசினுடைய கயிறு போர்டு, கயிறு நிறுவனத்திலிருந்து பல உதவிகளைக் கேட்டு இந்த ஆண்டு பெற்றிருக்கிறது. விரைவில் தஞ்சாவூரில் ஒரு Regional coir D.v.lopment and Training Centre என்ற வகையில் 50 லட்சம் ரூபாய் முதலீட்டில் இந்த ஆண்டுக்குள்ளாகவே அந்த வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தை தஞ்சாவூரில் நிறுவ இருக்கிறோம். அதற்கு தமிழக அரசு திருச்சி—தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்திற்கு பக்கத்தில் நிலத்தை இனாமாக கொடுத்து இருக்கிறது. அதன் மூலமாக இந்தத் தொழில் வளரும் வாய்ப்பு இருக்கிறது. அது அல்லாமல் கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் ஒரு துணை நிலையம் சப்-சென்டர் அதாவது தஞ்சாவூரில் உருவாக்குகின்ற ரீஜினல் சென்டருக்கு சப் சென்டர் இந்தப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் உருவாக்க இருக்கிறது. இந்த கயிறு போர்டு. அதற்குத் தேவைப்படும் நிலம், கட்டிடம் அனைத்துக்குமாக 5 லட்சம் ரூபாய் இந்த நடப்பு ஆண்டிலே 1983–84 ஆம் ஆண்டில் ஒதுக்கி தமிழக அரசு அதை ஊக்குவிக்க இருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயிறு உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள் தென்னை நார் நம்முடைய தேவைக்கு ஏற்ப தமிழகத்தில் கிடைக்கிறதா ? அல்லது வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது அப்படியானால் இன்றைக்கு எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?



1983 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தேவைப்படும் மூலப்பொருள் இன்றைக்கு கேரளாவிலிருந்து சேலம் போன்ற பகுதிகளுக்கு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு தமிழக அரசினுடைய சார்பாக தென்னை பயிரை அபிவிருத்தி செய்கின்ற வகையில் 'கிராஷ் புரோகிராம்' என்ற வகையில் சில கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கி அதிகமாக தென்னை மரங்களை நம்முடைய தமிழ்நாட்டில் வளர்ப்பதற்கும் அதனைப் பேணிக்காப்பதற்கும் எல்லா விதமான முயற்சியும் எடுக்கப்படும். மூலப்பொருள் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற வகையில் எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம்.

திரு கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்தில் தென்னை நார் உற்பத்தி வளர்ச்சிக்காக ஒரு தொழிற் கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய பங்குத் தொகை அத்தனையும் செலுத்தியும் நீண்ட நாட்கள் ஆகியும் அது முறையாக இயங்க அரசு ஆவன செய்யவில்லை என்று கூறுகிறார்கள். அது உண்மையானால் அதை துரிதமாக இயங்கச் செய்வதற்கு அரசு ஆவனச் செய்யுமா என கேட்டுக்கொள்கிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் அது பற்றிய சில முறையீடுகள் அரசு கவனத்திற்கு வந்தது. உடனடியாக தொடர் நடவடிக்கை எடுத்து இன்றைய தினம் 13–4–1982-ல் அது பதிவு செய்யப்பட்டு அதனை விரைவுபடுத்தும் வகையில் அதற்குத் துணை செய்கின்ற வகையில் முதுநிலை ஆய்வாளர் ஒருவரை நிரந்தரமாக நமது அரசு சார்பில் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது மட்டும் அல்ல அந்த சங்கத்திற்கு தேவைப்படுகின்ற கட்டிடங்கள் சொந்தத்திலேயே கட்டுவதற்கு நிலத்தை கையகப்படுத்த அரசு தீவிரமாக முயற்சி எடுத்து வருகிறது. மேலும் பல நன்மைகள் கிடைப்பதற்கும் குடியாத்தத்தைப் பொறுத்தவரை இந்தத் தொழிலை ஒரு முனைப்பான தொழிலாக ஆக்குவதற்கு அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே காட்பாடி, சங்கரன்பாளையம், வாணியம்பாடி போன்ற இடங்களில் தென்னை மரங்கள் கூடுதலாக வளர்கின்றன, எனவே, அங்கே இதைப்போன்ற மையம் ஒன்றை அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்யக்கூடிய முறையிலே காட்பாடி போன்ற இடத்திலே ஒரு மையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

[1983 ஏப்ரல்2)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல் இந்த ஆண்டு தஞ்சாவூரிலேயும் பொள்ளாச்சிலேயும்வரும். அதுபற்றிய வெற்றியை, வளர்ச்சியைப் பார்த்துவிட்டு அடுத்த ஆண்டிலே அப்படிப்பட்ட மற்ற இடங்களிலே விரிவுபடுத்தப்படும்.

திரு. பு. மணி : தலைவர் அவர்களே, இது இப்போது அபிவிருத்தி அடைந்து வருகிற ஒரு தொழில் என்ற முறையிலே வட ஆற்காடு மாவட்டத்திலே உற்பத்தியாகிற தேங்காய் மட்டைகள் எந்த அளவுக்கு இருக்கும்? குறிப்பாக அதைக் கொள்முதல் செய்ய, குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா? ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 25 கோடி ரூபாயை காயர் போர்டு ஒதுக்கியும் முறையாகப் பெற்றுக் கொள்வதற்கு—தேங்காய் மட்டைகள் அதிகம் கிடைக்கின்ற மாவட்டங்களிலே எல்லாம் அதற்குத் தகுந்த யூனிட்டுகளை ஏற்படுத்தவும்—தேங்காய் நாரையும் ரப்பரையும் சேர்த்து மெத்தைகள் தயாரிக்கக்கூடிய ஒரு யூனிட்டை வட ஆற்காடு மாவட்டத்திலே ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கயிறு தொழில் சம்பந்தப்பட்ட விவரங்களைக் கேட்டிருக்கின்றார்கள். மூலக் கேள்விக்கான விடைகளைத்தான் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் நிச்சயமாகத் தேவையான விடைகளை அளிக்கிறேன்.

தாமலில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்:

*வினா எண். 812—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் தாமலில் துணைப் பதிவாளர் (பத்திரத்துறை) அலுவலகம் திறக்கவேண்டுமென கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ)ம்.

(ஆ) 1983-84-ம் ஆண்டில் தாமலில் சார்பதிவகம் திறக்கப்படும்.



.983 ஏப்ரல் 20]

திரு. ப. வேங்கடசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற தாமலில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க ஆணை பிறப்பித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அலுவலகம் எப்போது முதல் பணியாற்றத் தொடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இந்த ஆண்டே அங்கீகரிக்கப்பட்டது. அதற்கும் இடம் கண்டுபிடித்து மாண்புமிகு உறுப்பினருடைய ஒத்துழைப்போடு விரைவாகவே துவக்கப்படும்.

சேலம் மாவட்டத்திலுள்ள பட்டுநூல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்.

*வினா எண். 813—செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தற்போது எத்தனை பட்டு நூல் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன?

(ஆ) எத்தனை சங்கங்கள் இயங்கி வருகின்றன?

(இ) புதியதாக சங்கம் துவங்க அனுமதி கேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சேலம் மாவட்டத்தில் ஆறு பட்டுநூல் விவசாயிகள் மற்றும் நூற்பு தொழில் கூட்டுறவு சங்கங்கள் இராசிபுரம், ஆத்தூர், அனியாபுரம், மோசனூர் மேலபட்டி மற்றும் வெண்ணந்தூர் ஆகிய இடங்களில் உள்ளன.

(ஆ) ஐந்து சங்கங்கள் நன்றாக செயல்பட்டு வருகின்றன. வெண்ணந்தூர் பட்டு நூற்பு செய்வோர் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் செயல்படாது ''டார்மெண்ட்'' நிலையில் உள்ளது.

(இ) இல்லை.

செல்வி ப. விசயலட்சுமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சங்கத்திற்கும் அரசு எவ்வளவு தொகை வழங்கியுள்ளது? மேலும் அதன் மூலம் எவ்வளவு பேர்கள் பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை, தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செல்வி ப. விசயலட்சுமி : தலைவர் அவர்களே, இந்த பட்டு நூல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தாழ்த்தப் பட்டவர்களின் பங்குத் தொகைகளை அரசே வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதுபற்றியும் நான் அறிந்து தகவல் அளிக்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் புதிதாக கூட்டுறவு சங்கம் அனுமதிக்கப்பட விண்ணப்பங்கள் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு 6 சங்கங்கள் செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். இந்த தொழிலைப் பொறுத்தவரையிலே ஏதோ ஒரு சுணக்கமான நிலை சேலம் மாவட்டத்திலே இருக்கிறது. அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பட்டுக் கூடுகளை அங்கேயே மார்க்கட்டிங் செய்வதற்கு வாய்ப்பு இல்லை, எனவே, கர்நாடக மாநிலத்திலே உள்ள கொள்ளேகாலுக்கு சென்று விற்கக்கூடிய நிலை இருக்கிறது. இங்கே இந்த மாவட்டத்திலேயே அதனை கொள்முதல் செய்து உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கும் அரசு அவர்களை ஊக்குவிப்பதற்கும் ஏதாவது வழிவகைகளை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வோடு அரசும் ஒன்றி இன்றைய தினம் கர்நாடகத்திற்கு நம்முடைய பட்டுக் கூடுகள் எல்லாம் செல்லாமல், இங்கேயே பட்டு நூற்பு ஆலைகளில் பட்டு நூலாக ஆக்குகிற அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறோம். இந்த ஆண்டில் நிச்சயமாக ஒரு நல்ல திருப்பம் இந்தத் துறையில் இருக்குமென்று கருதுகிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டு நூல் உற்பத்தி அளவு தமிழ்நாட்டில் மிகவும் குறைவாக இருக்கிறது என்று உற்பத்தியாளர்கள் கூறுகிறார்கள். எனவே பட்டு நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யவும் விநியோகிக்கும் படியான திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா? அல்லது அடுத்த ஆண்டிலாவது இதுகுறித்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டுநூல் உற்பத்திக்கு இன்றைக்கு திண்டுக்கல் பகுதியில் கூட உற்சாகப்படுத்தப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லை மையமாக வைத்து டிஸ்டிரிக்ட் செரிகல்ச்சர் செண்டர் என்ற வகையிலே விரைவில் அங்கே ஒரு மையத்தை தொடங்கவிருக்கிறோம். அதுபோன்ற முயற்சிகள்





வாயிலாக இதனை ஊக்குவிக்க இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு இருப்பது இரண்டே இரண்டுபிரச்சினைகள். குவாலிட்டி பிரச்சினை இருக்கிறது. தரமான நூலை உற்பத்தி செய்யமுடியாத ஒரு சுணக்கம் இருக்கிறது. அந்த சுணக்கத்தை இந்த ஆண்டு எப்படியாவது போக்க வேண்டுமென்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

திரு. து. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை பட்டு நூல் உற்பத்தியாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்தச் சங்கங்களை தஞ்சை மாவட்டத்திலே விரிவுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இன்றையதினம் வேகமாக பணிகளை செய்து வருகிறோம். ஆனால் அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை என்பதால் தனிக் கேள்வி கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நெசவுத் தொழில்கள் அதிகமாக இருக்கிற காஞ்சிபுரம், ஆரணி போன்ற பகுதிகளில் இதுபோன்ற பட்டு நூற்பாலைத் திட்டத்தை அமல்படுத்த அரசு முனையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும், அவரும் நானுமே ஒரு நூற்பாலைக்கு காஞ்சிபுரத்திற்கு சென்றிருக்கிறோம். காஞ்சிபுரத்திலே இன்றைக்கு அது நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Amendment to the Apprentices Act.*

*Q. 814—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether this Government have made any proposal to the Centre that in order to encourage students to consider vocational course as a terminal Course, the Apprentices Act should be amended to cover those passing out of the vocationalisation course in the plus two stage ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) தொழிற்பயிற்சி நிலையங்களில் (I.T.I. and Polytechnic) பயின்ற மாணவர்கள் கல்விக்குப்பின் 'அப்ரன்டீஸ்ஷிப்' சட்டத் தின்படி (Apprenticeship Act.) தொழிற்சாலைகளில் ஒரு குறிப்பிட்ட காலம் பயிற்சி பெற்று அந்தத் துறைகளில் வேலை வாய்ப்பு பெற தகுதியுடையவர்களாகின்றனர். மேற்கண்ட பயிற்சிக்கு மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி மாணவர்கள் தகுதி யானவர்களாக இதுவரை கருதப்படவில்லை. மேற்கண்ட ''அப் ரன்டீஸ் பயிற்சி'' மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி மாணவர் களுக்கு அளிக்க வேண்டுமென்றால் அதற்கேற்ப பாடங்களைத் தேர்ந்தெடுத்து அந்தந்த பாடங்களுக்கேற்ப அப்ரன்டீஸ் பயிற்சிக் கான பாடத் திட்டங்கள் மாற்றி அல்லது உருவாக்க வேண்டும். அத்துடன் புதிதாக இவர்களை இந்தப் பயிற்சிக்கு சேர்க்க வேண்டி ''அப்ரன்டீஸ்ஷிப்'' சட்டத்தை மாற்ற வேண்டும். அப் பொழுதுதான் மேற்கண்ட பயிற்சிப்பெற்று வேலை வாய்ப்பை முறையாக பெறமுடியும். இந்த அப்ரன்டீஸ் சட்டமானது மைய அரசினால் இயற்றப்பட்டது என்பதால் சட்டத்தை மாற்றுவதற்கு மைய அரசின் ஒப்புதல் தேவை. இது குறித்து மைய அரசுடன் தொடர்புகொள்ளப்பட்டு இதற்கான முடிவை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் முடிவிற்கேற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிபாரிசு செய்ததற்கும், மத்திய அரசிடம் இது சம்பந்தமாக தொடர்பு கொண்டதற்கும் மிக்க நன்றி. இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு கான்கிரீட் புரோபோசல்ஸ் ஏதாவது, யோசனைகள் ஏதாவது, மத்திய அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியென் றால் அது என்ன புரோபோசல் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, இப்போது நாம் 11-வதிலும், 12-வதிலும் தொழில் கல்வியை தந்து கொண்டிருக்கிறோம். தொழில் கல்வியை மட்டும் தருவதில்லை. அவர்களுக்கு ஆங்கிலத்தைச் சொல்லித் தருகிறோம். தமிழைச் சொல்லித் தருகிறோம். வேறு ஒரு பாடத்தைச் சொல்லித் தருகிறோம். அதுபோக மீதியிருக் கிற நேரத்தில் தொழில் கல்வி சம்பந்தமான தியரி, பிராக்டீஸ் இவைகளை சொல்லித் தருகிறோம். இரண்டு ஆண்டுகளில் கற்க அவர்களுக்கு இந்த வாய்ப்பை தந்திருக்கிறோம். இந்த இரண்டு ஆண்டு கால தொழில் கல்வி, இந்தப் பயிற்சி அனுபவத்திற்கு அப்ரென்டீஸ் ஆக்ட் படி அப்ரென்டீசாக பணியாற்ற வாய்ப்பு இல்லை. அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது தொழில் கல்வியை கற்க மாணவர்கள் அதிகமாக வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற ஒரு யோசனையைச் சொன்னோம். அந்த அடிப்படையிலே, பெங்களூரிலே இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னதாக ஒரு மாநாட்டைக் கூட்டி அவர்கள் இதுபற்றி ஆராய்



வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இந்த அப்ரென்டிஸ் ஆக்ட் அவர்களுக்குப பொருந்துமாறு செய்வது என்பது பற்றி அவர்கள் ஆராயந்து கொண்டிருக்கிறார்கள். அப் படி வருகின்றபொழுது அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கு மானால், நிறைய மாணவர்கள் தொழில் கல்வி எடுத்துப் படிப் பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதிலேயிருந்து இரண்டு ஆண்டு களுக்கு முன்னதாக அந்த மாநாடு கூடி ஆய்வு செய்வதுஎன்று முடிவெடுத்ததாகச் சொன்னார்கள். இரண்டு ஆண்டு தாண்டி விட்டது. இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகப்போகிறது என்று தெரியவில்லை. ஆகவே, இரண்டு ஆண்டுகள் ஆகி அதைப்பற்றி எந்தவிதமான விவரமும் வராத காரணத்தால் அதைத் துரிதப் படுத்துவதற்கு நம்முடைய மாநில அரசு நேராக மைய அரசிடம் ஏதாவது ''கரஸ்பான்டன்ஸ்'' அல்லது மற்றபடியோ முயற்சிகள் எடுத்து இருக்கிறார்களா? அல்லது என்ன எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, அவர்கள் மேற்கொண்டு சில விவரங்களை எல் லாம் கேட்டிருக்கிறார்கள். இந்த விவரங்களின் அடிப்படையில் அவர்கள் இந்த முடிவை எடுக்க இருக்கிறார்கள். அப்ரென்டிஸ் ஆக்ட், எமப்ளாய்மென்ட் அன்ட் டிரெயினிங் துறையினுடைய அதிகாரத்தின்கீழ் வருகிறது. நம் கல்வித் துறை, மத்திய கல்வித் துறையோடு தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக, இந்த எம்ப்பளாய்மென்ட் அன்ட் டிரெயினிங் துறை யோடு தொடர்பு கொண்டு மாற்றம் கொண்டு வருவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இன்னொன்று, அப் ரென்டிஸ் ஆக்ட், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் ஆகிய நிறுவனங் களிலிருந்து வெளியே வருகின்ற மாணவர்களுக்கு மட்டும் இருந்து வருகிறது. இப்பொழுது நம்முடைய தொழில் கல்வி என்று பார்த்தால், அங்கே சொல்லித்தரப்படுகின்ற பொறியியல் தொழில் நுட்பப் பாடங்களைத் தவிர, விவசாயம், மனையியல், வணிகயியல், உடல் நலம், நுண்கலை, வேறு பாடங்கள் ஆகிய இந்தப் பல்வேறு துறைகளிலும் நாம் இந்தத் தொழில் கல்வியைத் தந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, நாம் அப்ரென்டிஸ் ஆக்டிலே இதைப் பொருந்துமாறு செய்கின்ற முடிவை எடுக் கின்றபொழுது பெரிய செலவு ஏற்படக் கூடிய நிலையும் இருக் கிறது. அதே நேரத்தில், ஐ.டி.ஐ. மாணவர்களைப் பாதிக்கக் கூடிய விதத்திலே இது அமைந்து விடக் கூடாது. அதே நேரத் திலே இதைப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஓரளவு உதவி செய் கின்ற முறையிலே இருக்க வேண்டுமென்று கருதி நாம் இந்த யோசனையைச் சொல்லியிருக்கின்றோம். ஆகவே, ஒருவேளை அவர்கள் இந்தப் பாடத் திட்டத்திலே ஏதாவது மாறுதல் செய்யச் சொன்னால், நாம் அதைச் செய்வதற்குத் தயாராக இருக்

வேண்டும். அல்லது, இதற்கே ஒரு குறைந்த அளவுத் தொகை யைத் தருகிறோம் என்று சொல்லி அவர்கள் ஒரு மாற்றத்தைச் செய்வார்களானால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். எப்படியும் இந்த அப்ரென்டிஸ் ஆக்ட் அவர்களுக்குப் பொருந்துமாறுச் செய்வார்களானால் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லும் போது, ''அப்ரென்டிஸ் கோர்ஸ்'' மாணவர்கள் பயன்பெறுவ தாகச் சொன்னார்கள். ஆனால், அந்த அப்ரென்டிஸ் ஆக்ட் பிரகாரம், படித்தும் வேலையற்ற மாணவர்களாக இருக்கிற அவல நிலை இருக்கிறதே, அவர்கள் சம்பந்தமாக, அரசாங்கமே முன்வந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய முறை யில் ஏதாவது உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கூட நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அரசாங்கமே, அனைவருக்குமே வேலை தரவேண்டு மென்ற முயற்சியிலே ஈடுபட முடியாது. ஆனால், வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்ற முறையில் பல்வேறு திட்டங்களை ஒரு அரசு போடலாம். அதை இந்த அரசு போட்டுக்கொண்டு வருகிறது. படிக்கின்ற மாணவர்களும் அரசு உத்தியோகங் களுக்குத் தான் போக வேண்டுமென்று நோக்கத்தோடு படிப்பார் களானால், அப்படிப்பட்ட மாணவர்கள் விரைவிலே வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பைப் பெற முடியாது. ஆகவேதான் செய்யக் கூடிய ஏதாவது ஒரு தொழிலை, தனக்கு, வாழ்க்கைக் குத் தேவையான வேலையை, எது கிடைத்தாலும் போக வேண்டுமென்று மாணவர்களும் நினைக்க வேண்டும், இளைஞர் களும் நினைக்க வேண்டும். வேலை வாய்ப்புகளை உருவாக்குகிற திட்டங்களை அரசும் போட வேண்டும். அந்த முறையிலேதான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேல்நிலைப்பள்ளியில் தொழிற்கல்வி பயில் கின்றவர்களுக்கு ஆர்ட்ஸ் காலேஜிலும் இடம் கிடைக்கவில்லை. பொறியியல் கல்லூரியிலும் போதுமான இடம் கொடுக்க முடிய வில்லை. அவர்கள் அப்ரென்டிஸ்ஸாக தொழிற்சாலையில் வேலை செய்ய முடியாத நிலையிருப்பதால் அவர்கள் ஒரு தண்டனை போல தொழில் கல்வியைப் படிப்பது இருக்கிறதே. ஆகவே, நம்முடைய மாநில அரசே ஒரு திட்டத்தை வகுத்து மத்திய அரசுக்குத் துரிதமாக இதை அமுல் நடத்த வேண்டு மென்று வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் கல்வி படிக்கின்ற மாணவர்கள் என்று நாம் யாரை மனதிலே வைத்து இந்தத் தொழிற் கல்வி ஆரம்பிக்கிறோம் ? கல்லூரி போகிற மாணவர்கள் 10,000 பேரா அல்லது 50,000 பேரோ என்று வைத்துக் கொண்டால், மீதியிருக்கின்ற ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் பேர் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். அவர்கள் சமுதாயத்திலே எந்தவிதமான தொழிலும் தெரியாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு உதவ வேண்டும் என்று இதைக் கொண்டு வந்திருக்கிறோம். தொழில் கல்வியைக் கொண்டு வந்ததன் முக்கிய நோக்கம் , 12-வது முடித்த பிறகு மேலே படிக்க முடியாத நிலையில் உள்ள மாணவர்கள் வாழ்க்கையில் ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள் வதற்கான அளவிற்கு ஒருதகுதியை உருவாக்குவதற்காக அதை நாம் தருகிறோம். அவர்களைப் பொறுத்தமட்டில் இந்தப் பிரச்சினை கிடையாது. மேலே படிப்பதோ, பொறியில் கல் லூரிக்குப் போவதோ அப்படிப்பட்ட பிரச்சினை கிடையாது. ஆனால் நாம் இப்பொழுது என்ன செய்திருக்கிறோம் என்றால் அப்படி ஒரு டெர்மினல் கோர்ஸ்ஸாக இதை வைத்தால் ஒரு வேளை மேலே படிக்கக்கூடிய மாணவர்கள் இருந்து, அந்த வாய்ப்பைப் பெற முடியாத நிலைமை நம்மால் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகப் பொறியியல் கல்லூரியிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்; கலைக் கல்லூரியிலேயும் ஒரு பாடத்திலே அவர்கள் ஆங்கிலத்திலே சேரலாம் ; தமிழிலே சேரலாம் ; அது தவிர அவர்கள் படித்திருக்கின்ற இன்னொரு பாடம் ஒன்றிருக் கிறதே அது கணக்காக இருக்கலாம் அல்லது பிசிக்ஸ்-ஆக இருக் கலாம் அல்லது எகானாமிக்ஸ்-ஆக இருக்கலாம் ; எந்தப் பாடத் தைப் படித்திருக்கிறார்களோ அந்தப் பிரிவிலே போய் அவர்கள் சேரலாம். இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் உருவாக்கி வைத் திருக்கிறோம். ஆகவே, இதை டெர்மினல் கோர்ஸ்ஸாக முழு மையாக இருக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் விரும்பியிருந்தாலும்கூட, நாம் அப்படிச் செய்யாமல் மேலும் படிக்க விரும்புகின்ற மாணவர்கள் யாரோ, நூற்றுக்கு நான்கு பேர்கள் படிக்க விரும்பினால்கூட படிப்பதற்கான வாய்ப் பையும் நாம் வைத்திருக்கிறோம்.

**சாரண இயக்கத்தில் சேவை செய்தோருக்கு வேலை வாய்ப்பில் சலுகை அளிக்கும் திட்டம்.**

*வினா எண். 815—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாரண இயக்கத்தில் சேவை செய் தோருக்கு வேலைவாய்ப்பில் சலுகை தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

[1983 ஏப்ரல் 20

(ஆ) ஆம், எனில் விவரம் யாது ?

(இ) எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) உள்ளது.

(ஆ) மேட்டூரில் நடைபெற்ற ஐந்தாவது சாரண சாரணீய காம்போரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாரண சாரணி இயக்கத்தில் பங்கு கொண்டு சிறப்பாக செயலாற்றும் மாணவ மாணவியருக்கு வேலை வாய்ப்புப் பெறுவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதனை எந்த வகையில் செயல் படுத்தலாம் என்பது பற்றி அண்மையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பல்வேறு துறைகளிலிருந்தும் ஆணைகள் வெளியிடப்பட வேண்டியுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(இ) ஆணைகள் பிறப்பித்த பின்னர் செயலுக்கு வரும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, போலீசுக்கு ஆள் எடுக்கும்பொழுது இப்பொழுது சாரண இயக்கத்தில் பொதுச் சேவை செய்தோருக்கு முழுக்க முழுக்க முன்னுரிமை கொடுக்கப்படும் என்ற நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, குடியரசுத் தலைவரின் விருது பெற்ற சாரணர்களை வேலை வாய்ப்பில் சலுகை அளிப்பதற்குத் தலை சிறந்த சாரணர்களாகக் கொள்ளலாம் ; தலை சிறந்த சாரணர்களுக்கு அரசு மற்றும் அரசைச் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்பு கொடுக்க முன்னுரிமை மட்டுமே கொடுக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சாரண இயக்கத்தில் சேர்பவர்கள் பொதுச் சேவை செய்வதற்காகத்தான் சேர்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும் பொதுச் சேவை செய்வதற்காகத்தான் இருக்கிறோம். எனவே, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களையும் சாரண இயக்கத்தில் சேர்த்து அவர்கள் இன்னும் அதிக அளவில் பொதுச் சேவை செய்வதற்கான வாய்ப்பை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சேரக் கூடாது என்ற தடை கிடையாது.



1983 ஏப்ரல் 20]

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சாரண இயக்கத்தில் பங்கு பெறுகின்ற மாணவர்கள் எதிர்காலத்திலே மிலிடரி போன்ற மத்திய அரசின் படைகளிலே சேர்வதற்குத் தக்க சான்றிதழ்கள் கொடுத்து மத்திய அரசுக்குச் சிபார்சு செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? சாரண இயக்கத்தில் நல்ல முறையில் தொண்டாற்றி பொதுச் சேவை செய்பவர்களுக்கு ஏதாவது வெகுமதி கொடுப்பதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, நல்ல முறையிலே சாரண இயக்கத்திலே பணியாற்றியவர்களுக்குக் குடியரசுத் தலைவர் விருது தரப்படுகிறது. அது ஆண்டுதோறும் 50 பேர் 60 பேர் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். இந்த மாணவர்களுக்குத்தான் இந்தச் சலுகை தருவது என்று நாம் இப்பொழுது அறிவித்திருக்கிறோம். அவர்களை ஊக்குவிக்கின்ற பொருட்டு நாம் இந்தச் சலுகையை அறிவித்திருக்கிறோம். ஆனால், சாரணர் இயக்கத்திலே சேர்ந்து முறையாக சாரணர் பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் மற்ற மாணவர்களிடையே அல்லது தான் சாரணர் பயிற்சியிலே கலந்து கொள்ளாமல் இருக்கின்ற நிலையை விட அதிகமான மார்க் வாங்கவும், அல்லது நல்ல முறையிலே பயிற்சி பெறும் சக்தியைப் பெற்றிருப்பான்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த சாரணர்களுக்கு வழங்கப்படுகிற முன் உரிமைபோல் என். ஸி. ஸி. யில் உள்ளவர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது சாரணர்களைப் பற்றித்தான் இந்த முடிவை நாம் எடுத்திருக்கிறோம்.

## சென்னை மியூசியத்திலிருந்து திருடுபோன சிலைகள்.

***வினா எண். 816.—திரு. சி. கோபால் : திரு. செ. இராமலிங்கம் : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

**(அ) சென்னை மியூசியத்தில் இந்த ஆண்டும் கடந்த ஆண்டும் சிலைகள் திருடப்பட்டு உள்ளதா ?**

**(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : 1981ல், இந்தக் கேள்வி கேட்கப்பட்டது கடந்த ஆண்டு சிலைகள் ஒன்றும் திருட்டுப்போகவில்லை, ஆனால் 1982-ல், 17-2-1982**

அன்று அருங்காட்சியகத்தில் உள்ள படிமக்கூடத்தில் ஐந்து புத்தர் சிலைகள் திருடுபோனது தெரிய வந்தது. காவல் துறையினர் விசாரணை நடத்தி தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, கலை நுணுக்கம் மிகுந்ததும், புராதனச் சின்னங்களாகிய பல பொருள்கள் இந்த மியூசியத்திலிருந்து களவாடப்பட்டதாக கூறப்படுகிறது. இரண்டு ஆண்டுக் காலமாக காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் என்ன என்பதை அறிவிக்க முடியுமா? உரிய நேரத்தில் புகார் கொடுக்காமல் அந்த மியூசியத்தின் பொறுப்பாளர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, திருட்டுப் போனது தெரிந்தவுடன் அவர்கள் உடனடியாக புகார் செய்து நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. சென்ற இரண்டாண்டுக் காலமாக அவர்கள் விசாரித்துக் கொண்டு வருகிறார்கள். துப்பு தெரிந்தவுடன் இவர்தான் செய்திருக்கிறார் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்தால் மேற்கொண்டு அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியும்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த மியூசியத்தில் பணியாற்றுகிற பணியாளர்கள் யாராவது இந்தக் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் விசாரிக்கிறபோது அவர்களுக்கு யார் யார் மீது சந்தேகம் இருக்கிறதோ அவர்களையெல்லாம் தான் விசாரிப்பார்கள். விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, களவு போன சிலைகளின் மதிப்பு எவ்வளவு என அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவைகளின் மதிப்பு எவ்வளவு என்பது திருட்டுப் போனதற்குப் பின்னர்தான் நமக்கு தெரிய வருகிறது. அவற்றின் விலைமதிப்பு அதிகமாக இருக்கிறது என்பது அவற்றை எடுத்துக் கொண்டுபோனதின் காரணமாக தெரிய வருகிறதே



தவிர இன்ன விலை என்று இதில் குறிப்பிடப்படவில்லை. அது புத்தர் சிலை என்ற காரணத்தால் ஒரு சர்வதேச ரீதியில் ஒரு மதிப்பு, பெரும் மதிப்பு அதற்கு இருக்கிறது, என்பது மட்டும் நமக்குத் தெரிகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னை மியூசியத்தில் இருந்து பிள்ளையார் சிலை களவு போயிருக்கிறதா? பிள்ளையார் களவு போய், திருடி வைத்தால்தான் அந்தச் சாமிக்கு சக்தி அதிகம் என்று கிராம மக்கள் நினைக்கிறார்கள். ஆகவே அப்படி பிள்ளையார் சிலை திருட்டுப் போனால் அதற்கு வழக்கு தொடரப்படாமலிருக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சாமிக்கு சக்தி இருந்தால் அந்தப் பிரச்னையே வராது. பக்கத்தில் யாரும் போக மாட்டார்கள். ஆனால் இல்லை என்று தெரிந்து கொண்ட காரணத்தினால்தான் இது கொஞ்சம் அதிகமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, சென்னை மியூசியத்தில் ஐந்து அதிக விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டுப் போயிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சிலைகள் உள்ள மியூசியத்தின் காவலுக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அந்தக் காவலாளி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, படிமக்கூடத்தில் பாதுகாப்பை அதிகரிக்கும் பொருட்டு அங்குள்ள மரக்கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் இரும்பு வலைகளும் கதவுகளும் பொருத்தும் வகையில் ரூ. 55,000 செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் நியமிக்கப்பட்டு பகல் இரவு இரண்டு நேரங்களிலும் சுற்றிவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மின் விளக்குகள் அதிகமாகப் பொருத்தப்பட்டுள்ளன. படிமக்கூடத்திற்கு வரும் பார்வையாளர்கள் அனைவரும் பதிவேட்டில் அவர்கள் முகவரியை எழுதி கையொப்பம் இடவேண்டுமென்று முறை தொடங்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வருகிற பார்வையாளர்கள் தங்களுடைய அயல்நாட்டு முகவரியையும் குறிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. அங்கே பணியாற்றுகிறவர்கள்மீது நமக்கு சந்தேகம் ஏதாவது இருக்குமானால் அவர்களும் நிச்சயம் விசாரிக்கப்படுவார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக போலீஸ் டிப்பார்ட்மென்ட்டினால் குறிப்பிட்ட சில பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது உண்மைதானா? அப்படி வழக்கு தொடரப்பட்டவர்கள் மீது சரியான

முறையில் விசாரிக்காமல் விட்டுவிட்டதாகச் பரவலாகச் சொல்லப்படுகிறது. அது உண்மைதானா? அப்படியானால் மறு விசாரணை நடத்தி சந்தேகப்பட்டவர்களை விசாரித்து கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, விசாரணை நடத்திவருகிறது என்ற தகவல்தான் எனக்கு தரப்பட்டிருக்கிறது. ஆகவே மேற்கொண்டு விளக்கங்கள் என் னிடமில்லை.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர் களே, இந்தச் சிலைகள் திருட்டுப்போவது என்பது, வெளி நாடுகளுக்குத்தான் அதிகமாகப் போகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் பார்க்கிறபோது அங்குள்ள மியூசியத்தில் நம் நாட்டினுடைய விலை உயர்ந்த சிலைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆகையினால் நமது துப்பறியும் இலாகா மூலம் அமெரிக்கா போன்ற நாடுகளில் அங்கிருக்கக்கூடிய மியூசியங்களில் நம் தமிழகத்தைச் சார்ந்த சிலைகள் இருக் கின்றனவா என்பதை அறிய அரசாங்கம் ஆவன செய்யுமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, இப்படிப்பட்ட செய்திகள் வருமேயானால், நிச்சயமாக நம்முடைய காவல்துறையினர் போய்ப் பார்த்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். அப்படி செய்திகள் வருகின்ற நேரத்தில், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத் துக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர் களே, சென்னை மியூசியத்தில் புத்தர் சிலை திருட்டு போன தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். புத் தர் - சிலை மட்டும் திருடு போயிருக்கிறதா? புத்தர் சிலை போன்று சிறப்பான வகையில் என்னென்ன வகையான சிலைகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன? எல்லா சிலைகளுக்கும் தக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 17-2-1982 அன்று புத்தர் சிலை திருடு போயிருக்கிறது. பாதுகாப்புக்கு அதிகப்படியான கூடுதல் நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது.



**கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசிய கல்வி கடன் தொகை.**

*வினா எண். 817—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பார்ரா :

(அ) கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசிய கல்வி கடன் தொகை 1982 மார்ச் முடிய மாநிலம் முழுவதும் மாணவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலுவை எவ் வளவு?

(ஆ) அதை வசூலிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை விவரம் என்ன?

(இ) அக்கடனில் மாணவர்களுக்கு சலுகை அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1982 மார்ச் முடிய வசூலிக்கவேண்டிய தொகை ரூ. 4,52,96,147.55

(ஆ) தேசிய கடன் படிப்புதவி திட்டவிதிகளின்படி படிப்பு தவித் தொகை இறுதியாக பெற்ற ஆண்டிலிருந்து மூன்று ஆண்டு கள் கழித்தோ அல்லது வேலை கிடைத்த ஒரு ஆண்டு கழித்தோ, எது முந்தி நிகழ்கிறதோ, அதன்படி கடன் தொகையைத் திருப் பிச் செலுத்தத் தொடங்க வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளருக்கு தெரி வித்து வருவாய் வசூல் சட்டம் 1890 பிரிவு 3 (1)-ன் கீழ் வசூ லிக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(இ) புதிய சலுகைக்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கல்விக் கடனை வசூல் செய்கிறபோது, உரிய நேரத்தில் வசூல்செய்தால், 50%-ஐ நாமே வைத்துக் கொள்ளலாம் என்று மைய அரசு 1975-ஆம் ஆண்டிலே சொல்லியிருக்கிறதா? அப்படியென்றால், அந்தச் சலுகை பணத்தை, படிப்பை முடித்து, வேலை கிடைக்காமல் உள்ள மாணவர்களுக்கு வழங்க மாநில அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வசூலாகின்ற தொகையில் பாதியை மாநில அரசு வைத்துக்கொள்ளலாம் என்ற சலுகையை மத்திய அரசு அளித் திருப்பது உண்மைதான். அந்த அடிப்படையிலேதான் இந்தச்

சலுகை வந்ததற்குப் பிறகு இன்னும் கொஞ்சம் வேகமாக வசூல் செய்து, அதிகப்படியான தொகையை திரும்பப் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநில கல்விக் கடன் வழங்குகின்றபோது குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகிறதா? அல்லது தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இந்தம் கல்விக் கடன் வழங்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய கடன் படிப்பு உதவித் திட்டம் இந்திய அரசாங்கம், கல்லூரி மூலம் படிக்கும் மாணவர்களுக்கு, கல்வி உதவிக்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். இந்த தேசீயக் கடன் திட்டம் 1963–64 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் கடன் வழங்கப்பட்டு, திருப்பித் தருவதற்கான விதிமுறைகள் அனைத்தும் இந்திய அரசால் வரைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த உதவி செய்யப்படுகிறது. குறிப்பிட்ட மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இங்கே இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வாங்கிய கடனை 3 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது அதற்கு முன்னால் வேலை கிடைத்தால், அந்தத் தொகையை வசூலிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 3 ஆண்டுகள் கழித்தபிறகும், வேலையே கிடைக்காமல், அந்தக் குடும்பத்திற்கு வருமானமும் இல்லாமல் தவிக்கக் கூடிய மாணவர்களுக்கு,—இந்தமாதிரியான கேஸ்கள் இருந்தால், அவர்கள் விஷயத்தில் இந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு சிபார்சு செய்ய மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கடனைப் பெற்ற மாணவர்கள் ஆசிரியர் பணியிலோ அல்லது இராணுவத் துறையிலே தொடர்ந்து பணியாற்றினால், அப்பேர்ப்பட்டவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு மட்டுமே விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு எந்த விதிவிலக்கும் இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** அதாவது மூன்று ஆண்டு கழிந்த பிறகும், வேலையும் கிடைக்காமல், குடும்பத்தில் வறுமை இருக்கிற அந்த மாணவர்களுடைய கடன்களை ரத்து செய்ய மத்திய அரசுக்கு பிரபோஸ் பண்ணுமா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அப்படி ரத்து செய்ய யோசனை சொல்வது மிக எளிது. யோசனையை செயல்படுத்துவது திட்டத்திற்கு உகந்ததல்ல. தற்போது அந்த யோசனை இல்லை.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு தலைவரவர்களே, பட்டப் படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும், தேசிய கல்விக் கடன் தொகை எவ்வளவு? அவர்களுடைய கல்விக்கு ஆகின்ற முழு செலவுத் தொகையினையும் கடனாக வழங்கிட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது கொடுக்கப்படுவதே கடன்தான்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்:** தலைவரவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு கடன்தொகை வழங்கப்படுவதைப்போல, பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கும், மிகவும் ஏழ்மை நிலையிலே இருக்கின்ற மாணவர்களுக்கும், இந்தத் திட்டத்தை அரசு விஸ்தரிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஓ. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற தேசீயக்கல்விக் கடன் தொகையை, அவர்கள் படித்து முடித்து, வேலைக்குச் சென்ற பிறகு, அவர்கள் வாங்குகின்ற சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்கான ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தற்போது குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கடனைத் திருப்பித் தரமுடியாத நிலைதான் இருக்கும். ஆகவே தான் இப்படிப்பட்ட விதியை வைத்திருக்கிறார்கள். சம்பாதிக்கின்ற நிலையை வைத்துச் சொல்கிறேன். ஆகவே ஒரு சர்க்கார் உத்தியோகத்திற்குப் போனால் மட்டும் வேலை நிலைமை ஏற்படும். அப்போது தான் திருப்பித் தருகின்ற வாய்ப்பினைப் பெறுகிறார்கள் என்று எண்ணக் கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே தான் இப்படிப்பட்ட விதியைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**திரு. ரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, அமெரிக்காவில் எல்லாம் 5 ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தால், அவர்களுக்கு கல்விக்காகின்ற செலவு பூராவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. அதோடு பாக்கெட் மணியும் கொடுக்கப்

படுகிறது. அதே மாதிரி இங்கே உள்ள மாணவர்களிடையே நாட்டுப்பற்று ஆர்வத்தை ஏற்படுத்துகின்ற வகையில், ராணுவத்தில் பணிபுரியக்கூடிய, அவர்களுக்கு ஆகும் செலவை அரசாங்கமே ஏற்று, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. என்றாலும் ராணுவத்திலே சேர்கின்றவர்களுக்குச் சலுகைகளை எப்போதுமே மத்திய, மாநில அரசுகள் தந்துவருகின்றன. அப்படி வேலையில்லாமல் வீதியிலேச் சுற்றிக்கொண்டிருக்கிறார்களே தவிர, ராணுவத்திலே சேர்கின்ற உணர்வு அதிகமாக வரவில்லை.

**பள்ளி ஆசிரியர்களின் குறைகளை நீக்க குழுக்கள் ஏற்படுத்தும் திட்டம்.**

*வினா எண் 818—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி ஆசிரியர்களின் குறைகளை நீக்க மூன்று மட்டங்களில் குழுக்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) குழுக்களில் யார், யார் அங்கத்தினர்களாக இருப்பார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றிய விவர அறிக்கை * சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, பள்ளி ஆசிரியர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்படுகின்ற அந்தக் குழுக்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவில்லை. அவர்களை குழுவிலே சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பிரதிநிதிகள். அங்கே ஆசிரியர்களைப் பிரதிநிதிகளாக, அந்த குழுவிலே போட வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள்.

---

* 530—533-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த வருவாய் மாவட்டம், கல்வி மாவட்டம் ஆகியவைகளிலே இருக்கின்ற குழுக்கள் அதிகமாக கூடவில்லை என்ற புகார் இருக்கிறது. போன ஆண்டு எத்தனை முறை கூடியது? அவைகள் எடுத்த முடிவுகளை செயல்படுத்தியதா, அல்லது இனிமேலாவது அதை முறைப்படுத்துவதற்காக, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்த யோசனை இப்போது தான் செயல்முறைக்கு வந்திருக்கிறது. இப்போதுதான் குழு அமைக்கப்படவிருக்கிறது. அமைக்கப்பட்ட குழுக்கள் இனி கூடும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாவட்ட அளவில் இருக்கின்ற குழுக்களில் அங்கீகாரம் பெற்ற சங்கத்தின் ஆசிரியர்கள் தான் அங்கம் வகிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் இன்னும் அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் இருக்கின்றன. மாவட்ட அளவில் மூன்றில் ஒரு பாகம் அல்லது 25 சதவீதத்திற்கு, இனிமேல் அங்கீகரிக்கப்படாத சங்கங்களின் ஆசிரியர்களையும் சேர்க்க பரிசீலிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவிலே போட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் அங்கீகாரத்தையே வழங்குகிறோம். ஆகவே அப்படிப்பட்ட சங்கங்கள் அங்கீகாரத்தை வாங்கிக் கொள்வதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர அங்கீகாரத்தை வாங்காமலே அங்கீகாரம் பெற்ற சங்கங்களைப் போல உரிமையை அனுபவிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் குழு அமைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாவட்ட வாரியாக வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கல்விக் குழு என்ற ஒன்றை அமைக்கிறார்கள். இந்தக் குழுவையும், அந்தக் குழுவையும் ஒன்றாக சேர்த்து செயல்படுத்த அரசு ஆலோசிக்குமா? அதோடு ஏற்கனவே போட்டிருக்கிற இந்தக் குழு ஒரு முறை கூட கூட்டப்படவில்லை, இந்த 3 ஆண்டுகாலமாக என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைக் கூட்ட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் குழு வேறு. அது வேறு. இதனுடைய முக்கிய நோக்கம் ஆசிரியர்களுடைய பிரச்னைகளை அதிகாரிகளோடு பேசி இந்தக் கல்வி மாவட்ட அளவிலே அல்லது வருவாய் மாவட்ட அளவிலே தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவேண்டும். அப்படி

தீர்க்க முடியாமல் இருக்கிற, மாவட்ட அளவிலே இருக்கின்ற பொதுப் பிரச்சினைகளாக இருந்தால் இந்த மாநில அளவிலே இருக்கின்ற குழுவிற்கு வரவேண்டும். எதற்கு எடுத்தாலும் ஒரு ஆசிரியர்களுடைய தனிப்பட்ட பிரச்னைக்குக்கூட சென்னைக்கு வருவதுபோன்ற நிகழ்ச்சிகள் குறையவேண்டும் என்பதற்காகத்தான் நாம் இதை வைத்திருக்கிறோம். இதை நேரிலேயே உட்கார்ந்து ஆசிரியர்களோடு பேசி, அவர்களுக்கு என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றனவோ அதைத் தீர்த்துக்கொள்ளவதற்கான ஒரு அமைப்பாகத்தான் இதைக்கருதி அதைச் செய்கிருக்கிறோமே தவிர, கல்வி வளர்ச்சி என்ற அடிப்படையிலே நாம் இதைப் போடவில்லை.

**சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் தனி அறை ஒதுக்கித்தரும் திட்டம்.**

*வினா எண். 819—திரு என். பழனிவேல், திரு. ப. சுந்தரம், திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நகராட்சி ஊராட்சி ஒன்றியங்களில் தனி அறை ஒதுக்கித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் இயன்ற அளவிற்கு தனி அறைகள் ஒதுக்கப்பட்டு உள்ளன. தனி அறை ஒதுக்க இயலாத இடங்களில், முன்னாள் பெருந்தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகளும், மற்ற இடங்களில் கவுன்சில் அறையில் மேசை நாற்காலி முதலிய வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முடிந்த அளவு வசதி செய்து கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் முடிந்த அளவிற்கு ஒரு பெஞ்ச், நாற்காலி போட்டு ஒரு சிறிய அறை ஒதுக்கியிருக்கிறார்கள். அதை சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லாதபோது அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். நகராட்சிகளில் இந்த மாதிரி அறைகளே இருப்பதாகத் தெரியவில்லை. அதை நிறைவேற்றுவதற்கு அரசு உத்தரவு ஏதாவது போட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் எப்படி தனி அறைகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றனவோ அதேபோல்தான்



நகராட்சிகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய 98 நகராட்சிகளிலும் இதுபோல் தனி அறைகள் எம். எல். ஏக்களுக்காக தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நகராட்சிகளிலும், ஊராட்சி ஒய்றியங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறைகள் ஒதுக்கப்பட்டு உள்ளதாகச் சொன்னார்கள். ஆனால் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் என் தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும், ஒரு நகராட்சியும் இருக்கிறது. அங்கே அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. நானும் இரண்டு முறை கேட்டுப் பார்த்தேன். அவர்கள் ஒதுக்குவதாகத் தெரியவில்லை. எனவே உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நகராட்சிக்கு அடிக்கடி சென்று பார்த்திருந்தால் கண்டிப்பாக தெரிந்திருக்கும். ஏன் என்றால் எந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடம் கொடுக்கக்கூடாது என்பதல்ல. இடம் கொடுக்கவில்லை என்றால் நீங்கள் நேரடியாக என்னிடத்திலே கேட்டிருக்கலாம். அதன்மீது நடவடிக்கைகளை நான் எடுத்து இருப்பேன். ஏற்கனவே இதுபற்றி ஒரு சர்குலர் மூலமாக எல்லா நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனி இடங்கள் ஆங்காங்கே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இல்லை என்று சொன்னால் தயவுசெய்து என்னிடத்திலே எந்தெந்த நகராட்சிகளிலே எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களிலே ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்குவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் ஏற்கனவே உத்தரவு அனுப்பியுள்ளதாக சொல்லிவிட்டார். ஆகவே அதை நான் ஏற்றுக்கொள்ளகிறேன். இன்றைக்கு நகராட்சிகளிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே மாதத்திற்கு ஒரு முறை ஜீப் கொடுப்பதற்கு உத்தரவு இருக்கிறது. அது சில நேரங்களில் காலதாமதம் செய்து கிடைக்கிறது. ஆனால் நகராட்சிகளில் அந்த மாதிரி ஒன்று இருப்பதாக தெரியவில்லை. அங்கே வேன்கள் எல்லாம் இருக்கின்றன. அந்த வேன்களை இதுபோல் மாதத்திற்கு

ஒரு முறை கொடுத்தால் வார்டுகளைச் சுற்றிப்பார்ப்பதற்கும் குறைகளைத் தெரிந்துகொள்வதற்கும் உதவிகரமாக இருக்குமே, அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், எல்லை அதிகமாக நீளம் அதிகம் உடையதாக இருப்பதன் காரணமாக அங்கே ஜீப்புகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. நகராட்சி பகுதிகளில் எல்லை குறைவான தாக இருப்பதால், குறைகள் கேட்கவேண்டிய நிலைமை இருந்தால், நடந்து சென்றால்தான் முடியும். ஜீப்புகள் மற்ற வாகனங்களில் சென்று பார்க்கிறபோது குறைகளும் தெரியாது. குறைகளையும் கேட்கமுடியாது.

**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஜீப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டதாகவும், மாதம் ஒன்றுக்கு 50 லிட்டர் பெட்ரோல் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள ஆலங்காயம், திருப்பத்தூர் ஒன்றியங்களில் ஜீப்புகள் கேட்டால், அவை ரிப்பேராகியிருக்கின்றன என்றுதான் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமைகளைச் சீர்படுத்தி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதியைச் சுற்றிப்பார்க்க வசதி செய்யும்பொருட்டு அரசு போட்ட ஆணையை கண்டிப்பாக அமல் நடத்த அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே இதுபற்றி ஏற்கனவே சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, பல்வேறு நேரங்களில் அதற்காக பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்தில் இரண்டு நாட்கள் ஜீப் ஒதுக்கப்படவேண்டும் என்றும், அதற்காக 50 லிட்டர் பெட்ரோல் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எந்த ஒன்றியத்தி லாவது அதைச் செய்யவில்லை என்றால் என் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் கூட எனக்கு நல்ல நண்பர்தான். என்னிடத்தில்கூட சொல்லியிருக்கலாம். நான் உடனடியாக அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து இருப்பேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில்' இடங்கள் தனியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருப்பதாக சொன்னார்கள். கிராமப் புறங்களில் வருவாய் ஆய்வாளர்களுக்குக் கூட நிரந்தரமான முறையில் கட்டிடம் கட்டி இடம் ஒதுக்கீடு



செய்து இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும் பாலோர் கிராமப் புறங்களில் இருந்து தான் வருகிறார்கள். அவர்களுக்கு தலைநகரங்களில் இடங்கள் கிடைப்பது கஷ்ட மாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மக்களின் கருத்துக்களை அறியும் வகையில் ஒரு இடத்தில் அமர்ந்து அந்தப் பணிகளைச் செய்வதற்கு இடம் இல்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாகக் கட்டடம் கட்டி,, 'எம்.எல்.ஏ. கட்டடம்' என்று பெயரிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள்—சட்டமன்றம், சட்டமன்ற உறுப்பினர் கள், அமைச்சர்கள் முதலியவை குறித்து வருகின்ற நேரத்தில் இதைச் சிறப்பாகப் பேசினால், கண்டிப்பாக உங்களுக்கு விடை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி யைச் சுற்றிப் பார்க்க அரசு செய்து இருக்கின்ற வசதிகளைச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அதற்கு மேல் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் பொருட்டு, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு டைப்பிஸ்ட் தனியாக ஒதுக்க வேண்டும். அதற்கு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, டைப்பிஸ்ட் தனியாக ஒதுக்கலாம். ஆனால் ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப் பெறுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் கொடுக்கவேண்டும், அதற்காக 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றி அரசாணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஒன்றியங்களில், வாகனங்கள் பழுதான நிலையில் இருந்தால் வேறொரு ஒன்றியத் தில் இருந்து ஜீப் கொடுக்க வேண்டும் என்று மாற்று ஏற்பாடு செய்து கொடுத்தால் வசதியாக இருக்கும். அதுமாதிரியான மாற்று ஏற்பாடு செய்து தர அரசு முன்வருமா ?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1983 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எல்லா ஒன்றியங்களுக்கும் ஜீப் கொடுத்து விட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த ஆண்டு கூட பல்வேறு ஒன்றியங்களுக்கு ஜீப் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பி.டி.ஓ. க்களுக்குக்கூட ஜீப்புகள் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் அமுல்படுத்தாத அப்படிப்பட்ட ஒன்றியங்களில் எல்லாம் மாற்று ஏற்பாடு செய்யப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் இருந்த நேரத்தில் அவர்களுக்கு உதவியாளர் ஒருவரும், ஏவலாளர் ஒருவரும் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் தற்போது பெருந் தலைவர் பதவி இல்லாததால் ஒன்றியங்களில்தான் வேலை பார்க்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களிடத்தில் இருந்து பெறுகின்ற மனுக்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கவும், அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும் வகையில், தற்காலிக ஏற்பாடாக அந்த ஒன்றியப் பெருந் தலைவர்களுக்கு இருந்த உதவியாளர்களையும், ஏவலாளர்களையும், சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது பெருந் தலைவர்கள் இல்லாததால் அந்த ஏற்பாட்டை தற்காலிகமாகச் செய்யலாம். பின்னர் வேண்டுமானால் நிரந்தரமான வகையில் வேறு ஏற்பாடு செய்யலாம். ஆகவே, அதற்கான ஆணை பிறப்பிக்க அரசு முன் வருமா?

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக் கேள்வி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தனியாக அறைகள் ஒதுக்கித் தர வேண்டும் என்பது. அறை கொடுத்த பின்னால் அவர்களுக்கு உதவியாக அலுவலர்கள் தேவை என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கான செயற் குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளை மாதம் இரண்டு தடவை பயன்படுத்தலாம், 50 லிட்டர் பெட்ரோல் போட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். சில நேரங்களில் இந்த வசதிகளைப் பெற முடியவில்லை. இந்த வசதிகளைப் பெற முடியாத ஒன்றியங்களில் சொந்தக் கார் வைத்திருப்பவர்களுக்கு அந்தக் காருக்கு மாதம் 50 லிட்டர் பெட்ரோல் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்படிப்பட்ட யோசனை இல்லை. சொந்தக் கார் வைத்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, பின்னால் இரவல் கார்களையும் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. ஆகையால் அரசு ஜீப்புகளில் தான் செல்ல வேண்டும். அப்படிச் சென்றால்தான் வருகின்ற அதிகாரிகளும் அதே ஜீப்பில் வர வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தும்.



1983 ஏப்ரல் 20]

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மார்ச் 1982 முடிய கொடுக்கப்பட்ட தையல் இயந்திரங்கள்.**

*வினா எண் 820—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மார்ச் 1982 முடிய எத்தனை பேர்களுக்கு தமிழகத்தில் தையல் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) முகவை மாவட்டத்தில் எத்தனை தையல் இயந்திரங்கள் இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப் பெற்றுள்ளன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மார்ச் 1982 முடிய 28,962 நபர்களுக்கு தமிழகத்தில் தையல் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) முகவை மாவட்டத்தில் தையல் இயந்திரங்கள் இத்திட்டத்தின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. ச. அங்குசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டம் பெண்களிடத்திலே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஆனால் போன ஆண்டு 6 மாதமாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்காமல் நிறுத்தி விட்டார்கள். மீண்டும் இத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை யாரும் நிறுத்தவில்லை. நிதி போதவில்லை என்றால் நிறுத்தியிருப்பார்கள். அப்படிப்பட்ட நிலை இருந்தாலும் ஏன் நிறுத்திவிட்டார்கள் என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் 1982 முடிய 28,962 பேர்களுக்கு வழங்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தரங்கம்பாடி தாலுகா நொடக்க விழாவின் போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எனது தொகுதியைச் சேர்ந்த மங்கநல்லூர் பகுதியில் பயிற்சி பெற்ற 20 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கினார்கள். இந்த 20 தையல் இயந்திரங்களையும் அரசாங்க அதிகாரிகள் திரும்ப வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். இதுவரையில் அந்தப் பெண்களுக்கு மீண்டும் அந்த இயந்திரங்கள் வழங்கப்படவில்லை. இது குறித்து மாவட்ட அதிகாரிக்கு 22–2–1983 அன்று கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது.

வழங்கிவிட்டு திரும்பப் பெற்றுக் கொண்ட இந்த தையல் இயந்திரங்களை உடனடியாக அவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல கொடுத்த இயந்திரங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மீண்டும் கொடுக்காமல் இருந்தால் கண்டிப்பாக கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கூட தனிப்பட்ட குற்றச்சாட்டாக இல்லாமல் என்னிடம் கூறினால் கூட நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறேன்.

திரு. ச. அங்குசாமி : தலைவரவர்களே, குறைந்த பட்ச கல்வித் தகுதி பெற்ற பெண்களிடம் இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஏனென்றால் இந்தத் திட்டத்தினால் சில கஷ்டங்களைப் போக்குவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தை நிரந்தரமாக செயல்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ? அதோடு நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, திட்டத்தினுடைய பெயரே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். ஆகவே, கிராமங்களில் இருக்கக் கூடிய இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தத்தான் இந்தத் திட்டத்தை நாம் அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நகரப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் நோக்கம் இல்லை. மேலும் இது மத்திய அரசுத் திட்டமாகும். ஆகவே மத்திய அரசைக் கேட்டுத்தான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

### திருச்சி நகரின் மத்தியில் ஓடும் உய்யக்கொண்டான் வாய்க்கால்.

*வினா எண் 821—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரின் மத்தியில் சென்று கொண்டிருக்கும் உய்யக்கொண்டான் வாய்க்காலில் நகரத்தின் வீதிகளிலிருந்து கழிவு நீர், கழிவுப் பொருள்கள் போய் கலந்து தண்ணீரைக் கெடுத்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) நகர மக்கள் அந்த வாய்க்காலின் தண்ணீரைக் குடிக்கவும், குளிக்கவும் பயன்படுத்துவதால் தொத்து நோய்கள் பரவும் அபாயத்தை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இவைகளைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ), (ஆ) மற்றும் (இ) : திருச்சி நகரின் கழிவு நீரில் ஒரு பகுதியும் இதரக் கழிவுகளும் உய்யக்கொண்டான் வாய்க்காலில் கலக்கின்றன. இவ்வாய்க்காலின் தண்ணீரை குடிநீராக யாரும் பயன்படுத்தவில்லை. திருச்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. இத்திட்டம் முடிவடைந்ததும் கழிவுநீர் உய்யக்கொண்டான் வாய்க்காலில் கலப்பது தவிர்க்கப்படும்.

### கொல்லுவேலை மற்றும் தச்சுவேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண் 822—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லுவேலை, தச்சுவேலை தொழிலாளர்களுக்கு, மாவட்ட குடிசைத் தொழில் ஆய்வாளர் மூலமாக ரூபாய் 2,400 வரை கடன் வழங்கப்படுகிறது என்பது உண்மையா ?

(ஆ) சொத்து சான்று இல்லாமல் திருநெல்வேலி மாவட்டத்தில் கடன் வழங்குவது போன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கடன் வழங்க அதிகாரிகள் மறுக்கிறார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம். மாவட்ட குடிசைத் தொழில் ஆய்வாளர்களின் பரிந்துரையின் பேரில் கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தால் கொல்லுவேலைத் தொழிலாளர்களுக்கு தலா ரூபாய் 1,200 மான்யமாகவும், ரூபாய் 1,200 கடனாகவும், தச்சுவேலைத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 600 கடனாகவும், ரூபாய் 600 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. இந்தத் தொகை பணமாகத் தரப்படாமல் தொழிலுக்கு தேவையான கருவிகளாக சொத்து சான்றின் பேரில் வழங்கப்படுகின்றன.

(ஆ) இல்லை. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் வழங்கப்படும் ரூபாய் 100-க்கு மேற்பட்ட எல்லாக் கடன் உதவிகளும் தகுந்த சொத்து சான்றிதழ் மேலேயே வழங்கப்படுகின்றன. இக்கொள்கை எல்லா மாவட்டங்களிலும் பின்பற்றப்படுகின்றது.

[1983 ஏப்ரல் 20

## மண்பாண்டத் தொழிலை ஊக்குவிக்கும் திட்டம்.

*வினா எண் 823—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்பாண்டத் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) மற்றும் (ஆ) : மண்பாண்ட கைவினைஞர்களின் நலனுக்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் சிறப்புக் கூட்டுத் திட்டம் ஆகிய சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதுமட்டுமின்றி, மட்பாண்ட அலகுகள் மற்றும் செங்கல் உற்பத்தி அலகுகள் நிறுவிட நிதியுதவி அளிப்பது, சைலா சக்கரம் வழங்குவது போன்ற பல்வேறு திட்டங்களையும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்பாண்டத் தொழிலாளர்களை பாதுகாக்கின்ற நிறுவனமாக கதர் கிராம தொழில் வாரியம் இயங்கி வருகிறது. இந்த வாரியம் இப்படி மண்பாண்டத் தொழிலிலே இருப்பவர்களுக்கு, மத்திய அரசிடமிருந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏதாவது தொகையை ஒதுக்கச் செய்து அவர்களுக்கு கொடுத்து உதவியிருக்கிறதா ? அப்படி என்றால் அந்த ஒதுக்கீட்டு தொகை எவ்வளவு ? அதில் அவர்களுக்கு மானியமாக தருவது எவ்வளவு தொகை ? அவர்களுக்கு வட்டி இல்லாத கடனையும் வழங்கி அவர்களை ஊக்குவிக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒவ்வொரு நிதியாண்டும், இந்த மண்பாண்டத் தொழில் மேம்பாடு குறித்துத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அதிலே தனி நபர்களுக்கு என்று, மண்பாண்ட அலகுகள் அமைக்க 1,437.50 ரூபாய் மூலதன முதலீட்டுக் கடனாகவும், 1,462.50 மூலதனக் கடனாகவும், ரூபாய் ஆயிரம் மானியமாகவும், ஆக மொத்தம் 3,900.00 ரூபாயை இந்த வாரியம் தனி நபர்களுக்கு மண்பாண்டத் தொழிலுக்காக கொடுக்கிறது. 1982–83 ஆம் நிதி ஆண்டில் 500 மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு தலா ரூபாய் 3,900 வீதம் 19 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டு 1983–84-இல் ஆயிரம் பேர்களுக்கு இந்த உதவியை வழங்க கதர் வாரியம் திட்டமிட்டுள்ளது.



1983 ஏப்ரல் 20]

திரு. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடுகள் செங்கற்கள் செய்கின்ற வகையில் கூட்டுறவு முறையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு, இந்த வறட்சி காலத்தில், இந்தத் தொழில் மிக முக்கியமான அவசியம் வாய்ந்த தொழிலாக இருந்தும், நீர் இல்லாத காரணத்தால், தடைபட்டு அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி நீர் இல்லாத இடங்களில் அவர்களுக்கு நீரைப் பெற்றுத் தந்து, அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க உதவி செய்வதற்காக அரசு ஏற்பாடுகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சாதகமான உதவிகளை, இந்த மண்பாண்டத் தொழிலாளர்களுக்குச் செய்ய முடியுமோ, அந்த உதவிகள் அத்தனையும், இந்த வாரியம் செய்து வருகிறது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்பாண்டத் தொழிலிலே சாதாரண காலத்திலேயும், பருவ மழைக் காலத்திலே ஒரு 4, 5 மாதங்கள் அவர்கள் தொழில் நடத்த முடியாத நிலை ஏற்படுகிறது. அந்தத் தொழிலைச் செய்வது அந்த பாண்டங்களை காய வைப்பது எல்லாமே அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கூட்டாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, இதற்கென்று தனியாக கூடங்களை அமைத்துக் கொடுத்தால் நலம். அந்த வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்கள் அமைப்பது பற்றி, அந்த மண்பாண்டம் செய்கிற கூட்டுறவுச் சங்கங்கள், வாரியத்தை அணுகுவார்களேயானால் அதற்கும் வாரியம் உதவி செய்து வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்பாண்டம் தொழில் செய்கிற அந்தத் தொழிலாளர்கள் மிகச் சிரமத்தோடு வாழ்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழிலுக்கு வேண்டிய கருவி போன்றவைகளை, கூட்டுறவுத்துறை மூலமாக சலுகை விலையிலே கிடைக்கச் செய்ய அரசு ஆவண செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 10–00]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான முயற்சிகளை வாரியம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**1981 ஆம் ஆண்டு நடைபெற்ற உடல் ஊனம் தடுப்பு சிகிச்சை முகாம்கள்.**

* வினா எண் 824—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–ம் ஆண்டு தமிழகத்தில் உடல் ஊனம் தடுப்பு சிகிச்சை முகாம்கள் எத்தனை இடங்களில் நடைபெற்றன?

(ஆ) எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:

(அ) 1981 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உடல் ஊனம் தடுப்பு சிகிச்சை முகாம்கள் நடைபெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்க்கான தடுப்பு மருந்து.**

* வினா எண். 825—திரு த. வேணுகோபால்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்க்குத் தடுப்பு மருந்து தமிழகத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:

இல்லை.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி, இன்னும் பல விதமான நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் போதுமான மருந்துகள் இல்லை. தற்போது இருக்கிற மருந்துகளும் தரமான மருந்துகளாக இல்லை என்ற காரணத்தால் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை உடனடியாக தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத்தலைவர் அவர்களே, இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம், பெங்களூர், ஹெக்ஸ்ட் மருந்துக் கம்பெனி, பாரதிய விவசாயத் தொழிற் கழகம் ஆகிய 3 நிறுவனங்களும் நல்ல தரமான மருந்துகளைத் தயாரித்து வெளிச்சந்தையில் விற்பனை செய்துகொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் நாம் அந்த மருந்துகளை வாங்கி இப்போது தமிழகத்திலே சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். அந்த மருந்துகளைத் தயாரித்தால் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்த அடிப்படையில் தான் இராணிப்பேட்டை நோய் தடுப்பு





மருத்துவ நிலையத்தில் கோமாரி நோய்தடுப்பு மருந்துகள் நான்கு வரிசைகள் சோதனை அளவில் தயாரிக்கப்பட்டு பரிசோதனை மற்றும் தரக்கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளன. அதோடு மட்டுமல்லாமல் கோமாரி நோய்த் தடுப்பு மருந்துத் திட்டம் தமிழக விவசாயத்துறை ஆணை 623 நாள் 10–4–74 –ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சோதனைக்காக கன்றுகள் வைக்கப்படுகின்ற அந்தக் கொட்டில்களும், நிரந்தர ஆய்வுக்கூடமும் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளன. தளம் போடப்பட இருக்கிறது. மருந்துகளை வைக்க குளிர் சாதன அறைகள் தேவைப்படுகின்றன. அது செய்யப்பட்டு வருகிறது. அந்த வேலைகள் எல்லாம் முடிந்த உடன் ஆய்வுக் கூடத்தில் தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படும்.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிச்சந்தையில் வாங்கி அந்த மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று கூறினார்கள். ஆனால் வெளிச்சந்தையிலே குறிப்பிட்ட நேரங்களில் அந்த மருந்துகள் கிடைப்பது இல்லை. மேலும் கிராமப்புறங்களிலே இருக்கின்ற கிளை நிலையங்களில் உள்ள கால்நடை ஆய்வாளர்களுக்கு மருந்துகளைக் கொடுத்து உடனடியாக இந்த வியாதியைப் போக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மருத்துவ மனையிலிருந்து கிளை நிலையத்திற்கு மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில்தான் ஹெக்ஸ்ட் கம்பெனி, ஐ.வி.ஆர்.ஐ. மற்றும் பெய்ஃப் போன்ற கம்பெனிகளிடத்திலே இருந்து மருந்துகள் வாங்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இ.எஸ்.எம். பக்கீர் முகமது: தலைவர் அவர்களே, கோமாரி என்பதைப் பொறுத்தவரையில் வாய் கோமாரி, கால் கோமாரி போன்ற நோய்கள் இருக்கின்றன. சூட்டில் டயோரியா போன்ற நோய்களும் கால் நடைகளுக்கு வருகிற பயங்கரமான நோய்கள். இந்த நோய்கள் வந்ததற்குப் பிறகு எந்த விதமான சிகிச்சையும் செய்ய இயலாது. ஆகவே முன்கூட்டியே தடுப்பு ஊசி போடவேண்டும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே இது குறித்து அதிகமாக விளம்பரம் செய்து தடுப்பூசி போடுவதற்கேற்ப அதிகமான மருந்துகளையும் அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடை காலத்தில் வருகிற நோயாக இவை இருக்கிற காரணத்தினால் அந்த நோய் வருவதற்கு முன்புதான் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

திரு ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கால்நடை மருந்தகங்களில் மருந்துகள் வாங்குவதற்காக ஒதுக்கப்படுகின்ற தொகையின் அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் இது போன்ற கொடுமையான நோய்களுக்கு நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பாற்றுவதற்கும் அவற்றுக்கு சிகிச்சைகள் மேற்கொள்வதற்கும் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே கால்நடை மருந்தகங்களுக்கு வழங்கப்படுகின்ற மருந்துகள் வாங்குவதற்கான தொகையின் அளவை அதிகரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு கொடுக்கின்ற அந்த மருந்தின் அளவு மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழகத்தில் அதிகமாக கொடுக்கப்படுகிறது. கிளைநிலையங்களுக்கு 1500 ரூபாய் அளவுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மருந்தகங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் அளவுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மருத்துவ மனைகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. பிரதம மருத்துவ நிலையங்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இந்த மாதிரியாக நமது கிளை நிலையங்களுக்கும் மருத்துவ மனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் தான் இவ்வளவு அதிக அளவுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றையதினம் வறட்சியால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவலாக காணப்படுகின்றன. அவைகளுக்கு தடுப்பு ஊசி போடுவது அரசின் கடமை. ஆனால் தடுப்பு ஊசி போடுவதற்கு கோமாரி மருந்துகள் அரசாங்கத்திலிருந்து போடாமல் வெளியில் விலைக்கு வாங்கிப் போட்டுக் கொள்ளவேண்டும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். 10 மாடுகளுக்கு இந்த ஊசி போடவேண்டும் என்றால் 95 ரூபாய் மருந்துக்கு செலவாகிறது என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்த்தால் ஒரு மாட்டுக்கு சுமார் 10 ரூபாய் ஆகிறது. மாடுகளின் வியாதிகளுக்கு வெளியில் வாங்கி போடவேண்டும் என்று சொல்லாமல் எல்லா மாடுகளுக்கும் அரசே தடுப்பு ஊசி போட ஆவனச் செய்யுமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோமாரி நோய் தடுப்பு மருந்து விலை அதிகமாக காணப்படுகிறது. அது நம் தமிழ் நாட்டில் தயார் செய்யப்படுவது இல்லை. மற்ற இடங்களி





லிருந்து வாங்கி இதனைச் செய்கிறோம். குறுநில விவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும் மானிய விலையில் நாம் கொடுக்கிறோம். பெருநில விவசாயிகளுக்கு அப்படி கொடுக்கப்படுவது இல்லை. அவர்கள் காசு கொடுத்து அந்த மருந்தை வாங்கிப்போட்டுக் கொள்ளலாம்.

திரு என்.ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கால்நடைகளுக்கு வரக்கூடிய பல்வேறு நோய்களுக்கான மருந்துகள் அனுப்பப்படுவதாக சொல்கிறார்கள். குறிப்பாக தலைமை கால்நடை மருத்துவ மனைக்கு செல்கிற அளவுக்கு மருந்துகள் கிளை நிலையங்களுக்கு செல்வது இல்லை என்பது அரசுக்கு தெரியுமா? அப்படியானால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து தலைமை கால்நடை மருத்துவ மனைக்கு எவ்வளவு மருந்துகள் செல்கிறதோ அந்த அளவுக்கு கிளை நிலையங்களுக்கும் அனுப்ப அரசு ஆவனச்செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கோமாரி நோய்க்கு தடுப்பு மருந்து கொடுப்பது பற்றி இருந்தாலும் கிளை நிலையங்களுக்கும் மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமாரி நோய்க்கான மருந்துகள் பெரிய விவசாயிகளுக்கு மானிய விலையில் இல்லை என்றும் குறு விவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும் மானிய விலையில் கொடுக்கப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த விகிதாச்சரத்தின்படி மானியம் தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்விப் போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 15—காவல் துறை.—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.—தொடர்ச்சி

* **மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீ அணைப்புப் படை மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுப் பிரேரணைகளைக் கொண்டு வந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்தின் நலனை முன்னிட்டு அவர்களுக்கு கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கருத்துக்களை இங்கே வெளியிட்டு இருக்கிறார்கள். கருத்துக்களை வெளியிட்டவர்களுடைய நோக்கத்தை நான் உளமாற பாராட்டுகிறேன். கருத்துக்கள் எந்த வகையில் உண்மையின் அடிப்படையிலா ; தவறான செய்தியின் அடிப்படையிலா; என்பதைப் பற்றி பின்னால் விளக்கமாக பதில் சொல்ல இருந்தாலும் நோக்கம் எப்படிப்பட்டது என்பதை எண்ணிப்பார்த்து தான் இங்கே நாம் அதற்கு மரியாதைக் கொடுப்பது மட்டும் அல்ல ; வரவேற்று அந்த வகையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்ற நிலையில் இந்த அரசின் நன்றியையும் உளம் நிறைந்த பாராட்டையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இந்தப் பிரச்சினைகளைப் பேசமுடியாது போய்விட்டாலும் இன்றைய தினம் இங்கே இருப்பதைக் கண்டு உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். இடையில் வாய்ப்புக் கிடைத்தாலும் விடமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே அவர் மகிழ்ச்சியோடு இருப்பதே அதற்கு அடையாளமாக இருக்கிறது என்பதில் எனக்கு திருப்தி என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்புக் கிடைத்தால் விடமாட்டார்கள் என்பது ஒன்று, வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு விடமாட்டேன் என்று சொல்வது ஒன்று என்று கருதுகிறேன். பேராசிரியர் அவர்கள் எல்லாம் அப்படி இருக்க மாட்டார்கள், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் அப்படித்தான் என்று நம்பிக்கையோடு இருக்கிறேன். சந்தர்ப்பம்தான் தேவை. சந்தர்ப்பத்தை நாமே உருவாக்கிக் கொள்வோம் என்று நெப்போலியன் சொன்னதைப் போல் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள யாரும் விரும்ப மாட்டார்கள், சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்களாகத்தான் நாம் இருக்கிறோம் என்று உண்மையிலேயே நான் நம்பிக்கையோடு இருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

இந்த மானியக் கோரிக்கைகளின் மீது கருத்துக்களை வெளியிட்டவர்கள் எந்த எந்த நோக்கத்தில் என்பதைப் பற்றி நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போல் சொன்னாலும் ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் சொன்ன



கருத்துக்களைப் பெரும்பாலும் வைத்துப் பார்த்தால் இப்படி ஒரு இலாகா தேவைதானா என்று தோன்றும் அளவுக்குக் குற்றச்சாட்டுகள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சாதாரணமாக எந்தப் பிரச்சினையிலும் கருத்துக்களை எடுத்து வைத்தாலும் நாட்டின் நலனை முன்னேற்றத்தை பாதுகாப்பை, குறிப்பாக மக்களுடைய வாழ்க்கையில், அன்றாட வாழ்க்கை முறையில் எந்தவிதமான சஞ்சலமோ அல்லது சிக்கலோ அல்லது ஆபத்தான சூழ்நிலையோ உருவாகாமல் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அதை வெளியிடுகிறார்கள் என்பதை நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு இலாகாவே தேவைதானா என்ற அளவுக்குக் குற்றச்சாட்டுக்களை இங்கே எடுத்துக் கூறும்போது அந்தக் குற்றச்சாட்டுகளை எதை நம்பி, எந்த ஆதாரத்தில் வெளியிட்டார்கள் என்பதையும் நாம் கொஞ்சம் விரிவாக ஆராய்ந்து கவனித்து முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்ற நல்ல எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். காவல் துறையில் இருக்கிற அதிகாரிகளானாலும் சரி, காவலர்களானாலும் சரி இந்த சமுதாய மக்களிடத்திலே எவ்வளவு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவு தொடர்பு உள்ளவர்கள் என்பதையும் இந்த சமுதாயத்திலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதையும் நாம் கொஞ்சம் நினைவில் வைத்துக் கொண்டு, அதைப்பற்றி கவனிப்பது மிக அவசியம் என்று நான் என் கருத்தை வெளியிடுவதற்கு முன் கோரிக்கையாக வைக்கிறேன். ஏதோ ஒரு தனி சமுதாயம் காவலர் சமுதாயம் என்ற ஒன்று இருக்கிறது. அந்த சமுதாயத்திலிருந்து மட்டும் அவர்கள் வருகிறார்கள். அந்தப் பணியை செய்கிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால் நாம் வேறுவிதமாக அந்த இலாகாவிலே பணியாற்றுகிறவர்களைப்பற்றி நாம் சில கருத்துக்களை வெளியிடும் போது இன்னும்கூட கொஞ்சம் ஆழமாக அழுத்தமாகக்கூட கூறலாம். ஆனால் நம்மைச் சுற்றியுள்ள மக்கள் சமுதாயத்திலிருந்துதான் அவர்கள் அந்தப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே நினைவு படுத்துவதற்காகச் சொல்கிறேனே தவிர தெரியாதவர்களுக்குச் சொல்கிற உபதேசம் அல்ல என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும். இந்த காவல் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கு எவ்வளவு கடமைகள் பொறுப்புகள் இருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. பொறுப்புகள், அவைகளுக்கு வேறு விளக்கங்கள், வார்த்தைகளில் சொல்லி அதை தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்பினால் அவர்களுடைய ஆற்றலுக்கேற்ப அந்தப் பெயர்களைச் சூட்டலாம். ஆனால்பொதுவாக ஒரு தொழிலாளியினுடைய மகன் காவலராக வாலாம். ஒரு வழக்குரைஞரின் மகன் காவலராக வரலாம் அதிகாரியாக வரலாம், அல்லது முன்பு ஏதாவது தவறு செய்த ஒரு குடும்பத்திலே

யிருந்து• தவறியிருந்தால்நாம் விலக்கி, ஒதுக்கி வைக்க வேண்டுமென்று சொல்கிற, கெட்ட பழக்கத்தை—தன்னுடைய வாழ்க்கையினுடைய முறையாக ஏற்றுக்கொண்டு தவறு செய்தவர்களை நான் சொல்லவில்லை. எனவே குற்றங்களுக்கு, திருடுவதோ அல்லது திருட்டுக் குற்றங்களோ அல்லதுவேறு வன்முறைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட குடும்பத்திலேயிருந்து கூட ஒரு நல்லவர் இந்த காவல் துறையில் பணியாற்ற வரலாம். அதையெல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு நாம் இதைப் பற்றி கவனிக்கவேண்டுமென்று கூற விரும்புகிறேன். அதோடு நாகரீகம் முதிர்ச்சி அடைந்த சூழ்நிலை நாட்டிலே வளர்ந்து கொண்டிருக்கிறது. வெளி நாட்டிலிருந்து வெளியிடப்படும் பல்வேறு எண்ணங்களின் அடிப்படையிலும் நவீன முறைகளிலே, நவீன வசதிகளை கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைக்கு இலக்காகி விட்ட மாணவ சமுதாயத்திலிருந்து, அவர்கள் கல்லூரிகளிலிருந்து, பள்ளிகளிலிருந்து வெளியே வந்த பிறகு அந்த ஆசைகள் வளர்ந்து அவர்களிலே கூட சிலர் அல்லது பலர் இந்தக் காவல் துறையிலே பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பணியில் ஈடுபடுகின்றவர்களாக அமையலாம். அவர்கள் மாணவர் பருவத்திலேயே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது என்னென்ன ஆசைகள், எண்ணங்கள் தீவிரமான கருத்துக்கள் அவர்களுடைய உள்ளத்தில் உருவாக்கப்பட்டிருக்குமோ எந்தெந்த அரசியல் கட்சிகளுக்குள்ள கொள்கைகளை அவர்கள் விரும்பினார்களோ அல்லது ஏற்றுக் கொண்டார்களோ, அல்லது சமுதாயத்திலேயிருக்கிற ஏற்றத்தாழ்வு முறை, ஜாதி பேத முறை, மதவேறுபாட்டு பிரச்னைகள் இவைகளையெல்லாம் கண்டு அதைப்பற்றி மாணவர் சமுதாயத்திற்குள்ளேயே அவர்கள் விளக்கிப் பேசி அல்லது விவாதித்து தங்களுக்கென்று ஒரு கொள்கையை உருவாக்கிக்கொண்ட சூழ்நிலையில் அவர்கள் வெளியேவந்த பிறகு காவல்துறையில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்து அவர்கள் அதிலே சேரலாம். இப்படிப்பட்ட பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்தால் அந்தந்த எண்ணங்களுக்குச் சொந்தக்காரர்களாக காவல் துறையைச் சேர்ந்தவர்கள் பணியாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொண்டால் அங்கேயும் சமுதாயத்திலிருக்கிற மக்களிடையேயிருக்கிற எண்ணங்களின் எதிரொலிகள் அந்தக் காவல் துறையிலே பணியாற்றுபவர்களிடமும் அது எதிரொலிக்கும் என்பதை மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்ற என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, ஏதோ ஒரு பிரச்சினைகளற்ற ஒரு சமுதாயத்திலே, பிரச்னைகளுக்கு உள்ளாகாத ஒரு குடும்பத்திலே, காவல்துறைக்காகவே படைக்கபட்ட ஒரு அமைப்பிலேயிருந்து, சமுதாயத்திலிருந்து இவர்கள் வந்து விட்டார்கள் என்று நாம் கருதுவதற்கு இடமில்லை. ஆகவே, நம்மிடம் இருக்கிற குறைகள், நம்மால் ஏற்படுத்தப் படுகிற குறைகள், நாம் இங்கே இருக்கின்றவர்களைப் பற்றி குறிப்பிடவில்லை. ஒட்டுமொத்தமாக நாம் என்று கூறுவது





தமிழ் சமுதாயம், மனித சமுதாயம் என்ற வகையிலே நான் கூறுகிறேன். இந்த மாநிலத்திலே இருக்கிற நாம் அனைவரும் எந்தெந்த தவறுகளுக்கோ அல்லது குற்றங்களுக்கோ, செய்கைகளுக்கோ வெவ்வேறு நிலமைகளிலிருந்து காரணகர்த்தாக்களாகவோ அல்லது ஆதரிப்பவர்களாகவோ அல்லது எதிர்ப்பவர்களாகவோ இருப்பதைப் போல் அந்த உணர்வுகள் அங்கேயும் இருக்கிறதென்பதை மனதிலே பதிய வைத்துக் கொள்ள வேண்டுமென்று மிக பணிவோடு கேட்டுக் கொண்டு, என்னுடைய கருத்தை வெளியிட வேண்டும், பதில் சொல்ல வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 10–20)

இவ்வளவு பூர்வ பீடிகை, இந்த முகவுரை எல்லாம் தேவை தானா என்றால், சொல்லப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி நான் எடுத்துப் பார்க்கும்போது, கற்பழிப்புச் சம்பவமானாலும் சரி, திருட்டுக் குற்றமானாலும் சரி, கொலைக் குற்றமானாலும் சரி, பழிவாங்கும் உணர்வுகளானாலும் சரி சட்டத்தை மீறுகின்ற நிலைமைகள் ஆனாலும் சரி, சட்டத்திற்குக் புறம்பாகச் செயல் படுகின்ற நிலைமைகள் ஆனாலும் சரி, சமுதாயத்திலே இருக்கிற பெருவாரியான மக்களுடைய கருத்துக்கு எதிராக, தங்களுடைய எண்ணத்தை நிலைநிறுத்த வேண்டுமென்று, தங்களுக்குக் கிடைத்திருக்கிற வாய்ப்பைப் பயன்படுத்துகிற நிலையானாலும் சரி, எப்படியிருந்தாலும் அவர்கள் நம்முடைய எண்ணங்களுடைய வெவ்வேறு பிரதிபிம்பமாக அங்கே இருக்கின்றார்கள் என்ற நிலைமையை வைத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன் என்பதை வெளியிடும்போது சட்டத்தை மீறி சிலர் செய்கின்ற செய்கைகளுக்கு உண்மையிலேயே வருத்தம் தெரிவித்துக்கொள்ள, நான் இந்த வகையில் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்பதை இங்கே முதலிலே தெரிவிக்கின்றேன். ஆனால் முழுமையாக நூற்றுக்கு நூறுபேர்கள் அப்படிப்பட்ட தவறைச் செய்கிறார்களா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சில சமயங்களில் திருட்டுக் குற்றங்கள் நடைபெறுகின்றன, திருட்டுக்கள் எல்லாம், அந்தக் குற்றங்கள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டனவா? முழுமையாகக் கண்டுபிடித்து விட்டார்களா என்ற கேள்வி எழுவது நியாயம். கேள்விக்கு அந்த இலாகாவினுடைய பொறுப்பேற்றிருக்கிற—மிகப்பெரிய பொறுப்புதான்; அதை ஏற்றுக் கொண்டிருக்கிற நான் நிச்சயமாகப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். அதைத் தட்டிக்கழிக்க நான் விரும்பவில்லை.

ஆனால், இந்தத் திருட்டு வழக்குகள் போன்றவைகள், கற்பழிப்பு சம்பவங்கள், இவைகளைப்பற்றி நான் இங்கே குறிப்பிடும்போது என் உள்ளத்திலே இருக்கிற எண்ணத்தை மிகுந்த தெளிவாக முதலமைச்சர் என்கிற முறையிலோ, அல்லது அந்த இலாகாவிற்குப் பொறுப்பேற்றவன் என்கிற முறையிலோ மட்டுமல்லாமல், ஒரு தனிப்பட்ட மனிதன், ஒரு நாட்டின் குடி

மகன் என்கிற முறையில் அந்தக் கருத்தை மறைத்து வைக்காமல் வெளியிட நான் முயலுகிறேன், முனைந்திருக்கிறேன் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

சட்டத்தை கட்டிக்காக்க வேண்டியவர்கள் சட்டத்தை மீறுவார்களானால் அது மிகப் பெரிய குற்றம் என்பதை யாரும் மறுக்கமுடியாது; நானும் மறைக்க விரும்பவில்லை. இங்கே ஒரு உதாரணத்தை நான் எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். ஒரு சில ஆண்டுகளுக்கு முன் இதே மாமன்றத்தில் இந்த விபச்சாரத் தடைச் சட்டத்தைப் பற்றி நான் பேசியது மன்றத்திலே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் நினைவில் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். எத்தகைய தண்டனை வழங்க வேண்டுமென்பதைப் பற்றிச் சொல்லும்போது பெண்களுக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது, ஆண்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன். சில சமயம் சூழ்நிலை உருவாகி, பெண்களை அந்த நிலைக்கு ஆளாக்குகின்ற சுற்றுசார்பு ஏற்பட்டு விடுகிறது என்பதைகூட நான் குறிப்பிட்டுச் சொல்ல தயங்கவில்லை. அது இங்கே ஒவ்வொருவருக்கும் நினைவிலிருக்கும் என்று கருதுகின்றேன்.

அதைப் பற்றி நான் அப்பொழுது பிரதமர் பதவியிலிருந்த மொராஜிதேசாய் அவர்களைச் சந்தித்து இருவருக்கும் சம தண்டனை என்பதை விட, முதலில் ஆணுக்குத் தண்டனையும் பெண்ணுக்கு மன்னிப்பும், அதற்குப் பிறகு அவர்களுக்கும் தண்டனை என்று இருக்கவேண்டும். ஏனென்றால், சாட்சி சொல்லப்போகிறவன் ஆணாக இருக்கிற காரணத்தால் நான்தான் இவ்வளவு ரூபாய் கொடுத்து அந்தத் தவறுக்கு மூலகாரணமாய் இருந்தேன் என்று சொல்லி, அவனுக்குத் தண்டனை இல்லை. ஆனால் அந்தப் பெண்ணுக்கு மட்டும் தண்டனை என்றால் அது ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சொன்னபொழுது, வரவேற்றார்கள். அதை அப்படியே ஏற்றுக்கொண்டு, அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வரலாம்என்றார்கள். ஆனால் இன்னொரு அமைச்சர், அங்கே சட்ட அமைச்சராக இருந்தவர் அதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், அதை முழுமையாக்க என்னால் முடியவில்லை.

இதை நான் இங்கே எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால். அதற்கே அத்தகைய தண்டனை கொடுக்கவேண்டுமென்றுவிரும்பிய இந்த அரசிலே பொறுப்பேற்று இருக்கின்ற நான் இன்றைய தினம் காவல் துறையிலே இருக்கின்றவர்கள் காவல் நிலையத்தில் பெண்ணைக் கற்பழிப்பது, அவமானப்படுத்துவது அங்கே தற்கொலைக்குக் காரணமாக இருப்பது என்பதெல்லாம் சந்தேகத்திற்குரியதாக இருந்தாலும் அந்த நிலைமைகள் உருவாக்கப்படுமேயானால் அதற்கு எவ்வளவு பெரிய தண்டனை அளிக்கவேண்டுமென்பதைப் பற்றி இங்கே இருக்கின்ற மாமன்ற



உறுப்பினர்கள் எந்த அளவிற்கு ஆத்திரத்துடனும், வேதனையுடனும் கூறினார்களோ உங்களைத் தாழ்த்திப் பேசவில்லை— அதைவிட கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம், ஆசை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் நிலையத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பெண்களைக் கொண்டுபோய் அடைக்கக்கூடாது; வைக்கக்கூடாது என்பது இந்த அரசினுடைய திட்டவட்டமான உத்தரவு என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இரண்டு, மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு செய்தியை,ஒரு நிகழ்ச்சியை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சினிமா நடிகை அவருடைய தந்தையையும் அந்தப் பெண்ணையும் அழைத்துச் சென்று, கோடம்பாக்கத்தில் காவல்நிலையத்தில் பத்தரை மணிவரையில் விசாரித்தார்கள் என்பதற்காக அதிகாரிகளை அழைத்து, என்னுடைய அலுவலர் மூலம், செய்தது தவறு, உடனே அனுப்பி விடப்படவேண்டும் என்றும், தவறு இருந்தால் நடவடிக்கை எடுத்து வழக்கு மன்றத்திற்கு கொண்டு செல்லுங்கள், எந்தக் காரணத்தை முன்னிட்டும் காவல் நிலையத்தில் பெண்கள் யாரையும் வைக்கக் கூடாது என்று நான் சொன்னதைப்பற்றி இங்கே என்னைக் கேலி பேசியவர்கள் இருக்கிறார்கள். என்னைப் பரிகாசம் செய்வதிலே மகிழ்ச்சி அடைந்தவர்கள் இருக்கிறார்கள். சினிமா நடிகை என்பதற்காக, எம்.ஜி.ஆர். படத்தில் நடித்தவர் என்பதற்காக இங்கேயிருந்து உத்தரவு போயிற்று என்றும், அவருக்காக உடனே அதிகாரிகளின் செயல்களில் தலையிட்டு அங்கேயிருந்து அனுப்ப வேண்டுமென்று சொன்னதாகவும், இதெல்லாம் என்ன என்று கேட்டவர்களும் உண்டு. நான் அவர்களுடைய உள்ளத்திற்கு வைக்கிறேன். யாரையும் பெயர் சொல்லி இங்கே குறிப்பிட்டு பேச விரும்பவில்லை ; அதற்கு தேவையும் இல்லை.

இந்த எண்ணம் அங்கிருந்து ஏற்படுத்தப்பட்டதும் அல்ல ; அங்கிருந்து உண்டானதும் அல்ல. சாதாரணமாக எந்தப் பெண்ணாக இருந்தாலும் இப்படிப்பட்ட தவறுகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்றால் ஒன்று ஏழ்மை, வறுமை அல்லது சந்தர்ப்ப சூழ்நிலை என்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதைப் பயன் படுத்தி, அவர்களுக்குத் தண்டனை, அதற்குப் பங்கு கொண்டவர்கள் மீது தண்டனை இல்லை என்று சொல்வது நியாயம் இல்லை என்று சொல்கிறோம். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்ததற்குப் பிறகு பலமுறை மேடைகளிலே வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் இதைப்பற்றிப் பேசினேன் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த எண்ணம் இப்பொழுது மட்டும் ஏற்பட்டது அல்ல. அதைப் பற்றி நான் பலமுறை பல்வேறு நேரங்களில் பேசியிருக்கிறேன். பொதுக்குழுவிலே கூட நான் வேறு விதமாக நாட்டு

நடப்பைப் பற்றி பேசியிருக்கிறேன். அந்த ராமச்சந்திரன் தான் இப்போது இங்கேயிருந்து அதே கருத்தைச் சொல்கிறான் என்பதை எல்லோரும் நினைவில் வைத்துக்கொண்டால் பிறகு நான் எடுத்துக்கொள்ள இருக்கின்ற பிரச்சனைகளுக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அந்த வகையில் அத்தகைய செயல்களில் ஈடுபடுகிறவர்களுக்கு, காவல் துறையிலே இருக்கின்றவர்களுக்கு டிஸ்மிஸ் வேலையிலிருந்து நீக்குவது மட்டும் போதாது என்பது இந்த அரசினுடைய திட்டமான, உறுதியான கருத்து என்பதை இங்கே வெளியிட்டு மிகப்பெரிய தண்டனையாக எந்த அளவிற்குத் தண்டனை வழங்க வேண்டும் என்பதைப்பற்றி நான் பேசிக் கொண்டு இருக்கிறேன். விரைவில் அதற்குரிய சட்டம் கொண்டுவர வேண்டும் என்று இருந்தால் அல்லது திருத்தங்கள் செய்தால் போதும் என்று இருந்தால், எப்படியானாலும் அத்தகைய தண்டனையை அளிக்க நாங்கள் வழிவகை செய்வோம் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு ஒரு வாரம், பத்து நாட்களுக்குள்ளாக பல்வேறு இடங்களிலேயிருந்து பல்வேறு செய்திகள் தொடர்ந்து வருகின்றன பெண்ணை அழைத்துக் கொண்டு போனார்கள் ; திருப்பி அனுப்பினார்கள் ; இரண்டு நாட்கள் கழித்து அந்தப் பெண் தன் வீட்டின் பின்னாலே உள்ள மரத்திலே தூக்குப் போட்டுக் கொண்டார் என்பது போன்ற செய்திகள் பத்து பன்னிரண்டு நாட்களுக்கு இடையிலே அதிகமான செய்திகள் வரத் தொடங்கின. அதைப்பற்றி இப்போது விளக்கமாக நான் சொல்லக்கூடாது என்ற நிலைமையில் இத்தோடு சொல்கிறேன்.

(முற்பகல் 10–30)

இந்த அரசிற்கு கெட்ட பெயர் ஏற்படுத்தவேண்டுமென்கிற வகையில், சில காரியங்களைச் செய்கின்றவர்கள், இந்த முனைப்பில், அவர்கள் அக்கறை காட்டுகிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக்கூடிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். இன்னும் சில வாரங்களுக்குப் பிறகு அல்லது சில மாதங்களுக்குப் பிறகு, முழுமையாக விசாரித்த பிறகு அந்த உண்மைகள் வெளிவரும் என்று சொல்ல நான்கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, சமீபத்தில் இப்படிப்பட்ட தந்திகள், தகவல்கள் எல்லாம் வருகின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய ஒரு 'இன்டர்பிரடேஷன்' அர்த்தம் குறிப்பிடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன மாதிரி இருக்கலாம் வேண்டுமென்றே செய்யப்படுவது என்று, இன்னொரு உண்மையும் இருக்கலாம் அல்லவா ?





ஜனங்களுக்கு, இங்கே இருக்கக்கூடிய நேரத்தில், இந்தபிரச்சனை
களை சீக்கிரம், விரைவில் தீர்த்து, நிவாரணம் காண
லாம் என்ற நம்பிக்கையுடன் அப்படிப்பட்ட உண்மைத்தந்திகள்
வந்திருக்கலாம் அல்லவா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, எனது முதல் விளக்கத்திலே குறுக்
கிடுகிற வாய்ப்பு மாண்புமிகு உமாநாத் அவர்களுக்குக் கிடைத்த
தற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். வேண்டுமென்றே என்பதைச்
சேர்த்து கொண்டதற்காக நான் நன்றி கூறுகிறேன்.
இதிலிருந்து அவருடைய கேள்வியே எனக்குப் பதிலாகிறது. அதி
லிருந்து இத்தகையவர்கள் இப்படிப்பட்ட காரியத்திலே இப்போது
அவசரமாக, வேகமாக, இந்தப் பிரச்சினைகள் இந்த மாமன்றத்
தில் பேசிய 15 நாட்களுக்கு வருகின்றன என்றால், எந்த நோக்கத்
தில் நடைபெறுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்டுவதற்
காகச் சொன்னேன், எவ்வளவு விரைவாக அதை வெளியிடுவதற்கு
வாய்ப்பு கிடைக்குமோ, அதை நான் செய்வேன் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்தக் கற்பழிப்பு சம்ப
வங்கள் நடைபெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு, வேண்டு
மென்றே செய்வது ஒன்று, வேறு காரணங்களுக்காக, கட்டுப்
படுத்திக் கொள்ளமுடியாமல், ஏற்படுத்தப்படுகின்ற செயல்முறை
கள் என்பது ஒன்று. பிறருடைய தூண்டுதலின் விளைவாக என்று
சொல்லக்கூடிய நிலைமைகளும் உண்டு. என்றாலும் கூட,
நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன்.
சில நாட்களுக்கு முன்பு குறிப்பாக, இரண்டொரு நாட்
களுக்கு முன்பு, நேற்றைய முன் தினம், நான் ஹைதராபாத்தில்
இருக்கும்பொழுது ஒரு தகவல் வருகிறது. குழாயடியில சண்டை
போட்டுக்கொண்ட இரண்டு தாய்மார்களுக்குள் தகராறு நடந்
தது. அதைப்பற்றி விளக்கம் சொன்னார்கள். காவல்துறை
யினர் அங்கே போனார்களாம். அதிலே ஒரு பெண்ணை
அழைத்து வந்து விசாரித்திருக்கிறார்கள். விசாரித்து அனுப்பி
விட்டார்கள். இதில் தவறு நடந்ததாக குற்றச்சாட்டு ஒன்றும்
இல்லை. ஆனால் அங்கே போய் விசாரணைக்குள்ளாகி விட்
டோமே என்ற வேதனையில், வீட்டில் சில மணி நேரங்களுக்குப்
பிறகு, வீட்டில் உள்ளவர்களுக்கு அங்கே ஒரு தவறும் நடக்க
வில்லை என்று தெரிந்தும், விசாரணைக்குள்ளாக்கப்பட்டு விட்
டோமே, நாளைக்கே பேசுவார்களே, கேலி செய்வார்களே,
என்ற வேதனையில், பின்னாலே, மரத்திலே தூக்கு போட்டுக்
கொண்டதாக எனக்கு செய்தி வந்தது. இதை எதற்காகச்
சொல்கிறேனென்றால், இப்படிப்பட்டவைகள் நடைபெறாமல்
இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே அன்றி,
வேறல்ல.

இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்
கள், இந்த இலாகாவை யாரிடமாவது ஒப்படைத்து விடுவது
நல்லது என்ற யோசனையைச் சொன்னார்கள். நான் மகிழ்ச்சி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 2

யடைகிறேன். சிறு துரும்பானாலும் பல் குத்த உதவும். அது வேண்டும். அந்த யோசனைக்கு நான் மிக மிக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அடிப்படையில்தான் சொல்லி யிருக்கிறார். அவர்களுக்குக் கிடைத்த செய்திகளை எல்லாம் வைத்துப் பேசி, இறுதியாக இதைச் செய்வது தான் நல்லது என்று எனக்கு யோசனை சொன்னார்கள். இந்த யோசனையை நன்றாக அலசிப் பார்த்து, சிந்தித்து, அதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டுமென்ற ஆசையில் இருக்கின்ற நான், கண்டிப்பாக சிந்தித்துப் பார்க்கிற வாய்ப்பும் கிடைத்தது.

சில செய்திகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கேள்விகளுக்கு பதில் இல்லை. உண்மைதான். அசெம்பளிக்கு சரியாக வருவதில்லை. இதிலே கொஞ்சம் மாறுபாடு. இங்கே வருவதில்லை என்றாலும் அங்கே உட்கார்ந்து இருப்பேன். கூடுமான வரையில், நான் சட்டமன்றத்திற்கு வராமல் இருந்தாலும் கூட, இங்கே வந்து உட்காராவிட்டாலும் கூட பேச்சைக் கேட்டுக் கொண்டு இருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியும். சில சமயங்களிலே நான் வெளியே இருந்தாலும் கூட கொஞ்சம் உண்மைக்கு புறம்பான செய்திகள் இங்கே வெளியிடப்படுகிறது என்றால் நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்பதும் இங்கே இருக்கின்ற மன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். அந்த வகையில் ஒன்றை நான் இங்கே தெளிவுப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். நான் பதில் சொல்ல வேண்டும் என்று கேள்விகள் கேட்கப்படு கின்றன. உண்மைதான். அதற்கு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முன்னவர் அவர்கள் பதில் சொல்ல முடியாது என்று சொல்லி விட்டால், பதில் கிடை யாது என்று சொல்லி விட்டால் நிலைமை வேறு. இந்த அமைச்சரவையைப் பொறுத்த வரையில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற அனைவருக்கும் தெரியும். இலாகாவிலிருந்து கிடைக்கின்ற விளக்கங்கள், அவர்கள் என்னென்ன புள்ளி விவரங்களைத் தரு கின்றார்களோ அதை வைத்துக் கொண்டு தான் இங்கே பதில் சொல்கிறார்கள். இது தான் நடப்பது. எல்லோருக்கும் தெரிந்தது தான். நான் சொன்னாலும் அதைத்தான் சொல்ல வேண்டும். முன்னவர் அவர்கள் சொன்னாலும் அதுதான். ஆகவே தான் முன்னவர் அவர்கள் இங்கே பதில் சொல்லிக் கொண் டிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருந்த போது அவர்கள் அதிகமாக இந்த மாதிரி பதில் சொல்லிக் கொண்டு இருந்தது இல்லை. சி. எஸ். தான் சொல்லிக் கொண் டிருந்தார். ஆகவே ஒரு தவறான செய்தி வந்திருக்கிறதென்றோ காமராஜ் அவர்களுக்கு பதில் சொல்லத் தெரியாது என்றோ யாரும் சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்குச் சமமாக என்னை எடுத்துக் கொள்ள வேண்டாம். இந்த இடத்திற்கு எப்படியோ ......



1983 ஏப்ரல் 20]

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்த நேரத்திலே, 1957-ல் இங்கே நானும் பேராசிரியர் அவர்களும் உறுப்பினர்களாகத்தான் இருந்திருக்கிறோம். அப்போது முதல் அமைச்சராக இருந்த அவருடைய கேள்விகளுக்கு அருகிலே யிருந்த சி. சுப்பிரமணியம் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அந்தக் கேள்விகளுக்கு பதில் அளித்த நேரத்தில் கேள்வி நேரம் முழுமையும் அன்றைய முதல் அமைச்சர் மறைந்த பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் இந்த அவையிலேயே இருப்பார்கள். சி. சுப்பிரமணியமோ அல்லது பக்தவச்சலனாரோ பதில் சொல்லு கின்ற நேரத்தில் உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு சில முடிவான பதில்களைச் சொல்ல முடியாத நேரத்தில் அருகிலே யிருந்த அன்றைய முதல் அமைச்சர் காமராஜ் அவர்கள் உதவி யதையும் அவர்களே, சில கருத்துக்களைச் சொல்லியதையும் நாங்கள் அறிவோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதோடு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பதில் சொல்லா விட்டாலும் கூட, அவர்கள் சார்பிலே மற்றவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் இப்போதுள்ள நிலை, முதலமைச்சர் சார்பிலே வேறு அமைச்சர்கள்கூட பதில் சொல்வதில்லை. பல கேள்விகளுக்கு எங்களுக்கு பதில்கள் வர வேண்டியிருக்கிறது என்பதுதான் நிலை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அனு பவித்ததைச் சொன்னார்கள். ஒத்துக் கொள்கிறேன். இங்கே பதில் சொல்ல வேண்டிய நிலைமையிலே கேள்விகள் கேட்கப் பட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே அமைச்சர்கள் அதற்காகத் திணறியதாகவும் எனக்கு நினைவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினை இங்கே எழுந்த காரணத்தால் நான் இருந்து பதில் சொல்லித்தான் தீர வேண்டுமென்ற நிலைமை ஏற்பட வில்லை என்பதையும் எனக்குத் தெரிந்த வரையில் நான் குறிப் பிட விரும்புகிறேன். இதை உதாரணத்திற்கு எடுத்துக் கொண் டேனே தவிர, வேண்டுமென்றே அவர்களுடைய நிலைக்கு என்னை உயர்த்திக்கொண்டு, அல்லது என்னுடைய நிலைமைக்கு அவர்களைத் தாழ்த்திக்கொண்டு இந்தச் சமநிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற ஆசையில் இந்தப் பிரச்சினையை நான் நினைக்கவில்லை என்பதை தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும். நமது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர் கள் ஒரு பிரச்சினையைப் பற்றி பேசும் போது, இந்திரா நகர் வழக்கு, இன்னும் பலவற்றைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார் கள். சென்ற ஆண்டும் கேட்டார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே கேட்டார்கள். இன்னும் கேட்கிறார்கள். சில வற்றைக் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இன்னும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

கேட்கப் போகிறார்கள். ஏனெனில் கிடைக்காத பதிலுக்கு பதில் கிடைக்குமா என்று எதிர்பார்ப்பது நல்லதுதான். கிடைக்கக் கூடாது என்ற நிலையிலே இருந்து கொண்டு, தெரிந்ததைச் சொல்லாமலே இருக்கின்றவர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்டால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இது தான் இங்கே இருக்கின்ற சந்தேகம். ஆதாரங்களை உண்மைகளைப் பேரவைத் தலைவரிடமே சொல்கிறேன் என்று சொல்லுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் இருக்கும் போது இந்தச் செய்தி தரப்படவும் இல்லை. நான் வற்புறுத்தவில்லை. அந்தச் சிக்கலிலே அவர்கள் மாட்டிக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவும் இல்லை.

(முற்பகல் 10-40.)

ஆதாரம் இருக்கிறது தருகிறேன் என்று சொல்லிவிட்டு தராமலேயே இருந்தால் ஏன் தரவில்லை என்று அவர்களைக் கேட்பதற்கு நான் தயாராக இல்லை. ஆனால் ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று மட்டும் கேட்கிறார்கள். இது மாமன்றம். இங்கே எல்லோருக்கும் சம உரிமை இருக்கிறது. இது போல் பல உரிமைகள் நமக்கு வெளியே இருப்பதைவிட இங்கே இருக்கிறது. ஆகவே, அதை அந்த நிலைமையில் நான் விட்டு விடுகிறேன். ஆனால் எல்லாவற்றிலும் தாங்கள் சொல்வது எல்லாம் உண்மைதான் என்று நம்புவது சரியல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன். எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன.

மச்சக்காளை என்பவரை நக்சலைட் என்று சொல்லி டிராக்டரிலே இருந்து உருட்டிக் கொன்று விட்டார்கள். விசாரித்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று நீதி மன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னிடத்தில் உள்ள குறிப்புகளை நான் படித்துத் தான் தீர வேண்டும். பதில் சொல்வதற்காக. திரு. மச்சக்காளை என்பவர் இராமநாதபுரம் மாவட்டம் முகையூர் என்ற ஊரைச் சேர்ந்த விவசாயி. அவரை 26—7—1981-ல் சேத்தூர் காவல் நிலையத்தில் உள்ள காவலர்கள் சேத்தூர் பஸ் நிலையத்திற்கு கூட்டி வந்து மக்கள் முன் அடித்து இருக்கின்றனர் என்றும், அதற்குப் பின் அவர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் அடித்து இருக்கின்றனர் என்றும், மேலும் அவரை நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்ல வில்லையென்றும், திரு. மச்சக்காளை விவசாயிகளின் உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களை ஒன்று திரட்டிய காரணத்தால் அவரைக் காவலர்கள் துன்புறுத்தி உள்ளார்கள் என்றும், அவர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்றும், ஆகவே மச்சக்காளையை உயர் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகச் செய்ய வேண்டும் என்றும் மனு எண் 7037/81-ன்கீழ் டி. எஸ். வி. ஹரி என்பவர் வழக்குத் தொடர்ந்தார்.



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

உயர் நீதிமன்றத்தில் காவல் அதிகாரிகள் திரு. மச்சக்காளை காணாது போனது குறித்து புலன் விசாரணை செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்றும், அந்த அறிக்கையை பெற்று அந்த மச்சக்காளை காணாமல் போனதற்கு ஒருவர் அல்லது பலர் காரணமாக இருந்தார்கள் என்று சொன்னால், அது நிரூபிக்கப்பட்டு இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது அந்த அறிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினர். காவல் துறை இயக்குநர் திரு. வி. கே. ராஜகோபால் துணை காவல்துறைத் தலைவர் (திட்டம்—ஒருங்கிணைப்பு) அவர்களை இது பற்றி விசாரணை செய்யும்படி கூறியுள்ளார். அந்த அறிக்கையைப் பெற்ற பின்பு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் இந்த விஷயத்தில் கவனிக்கவில்லை என்றோ கவனிக்காமல் இருக்கிறோம் என்றோ யாரும் தவறாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த பதிலைச் சொல்கிறேன். மாண்புமிகு அழகர்சாமி குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரத்தநாடு அழகன் என்பவரை அடித்துக் கொன்று விட்டு தூக்கில் இறந்ததாகக் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரத்தநாடு அழகன் என்பவரை 12—11—1982 அன்று ஒரத்தநாடு காவல் நிலையத்தில் இருந்து 3 மீட்டர் தூரத்தில் ஒரு மரத்தில் தூக்கில் தொங்கியதைப் போல் காணப்பட்டது. போலீசார் பிரேதத்தைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். அழகனின் உறவினர்களும் மற்றவர்களும் கிராம மக்களும், 11—11—1982 அன்று ஒரு விறகுக் கடையில் முரட்டுத்தனமாக அழகன் நடந்து கொண்ட காரணத்திற்காக போலீசார் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றதாகவும், போலீசார் கொடுமை தாங்காததால்தான் அழகன் இறந்து விட்டார் என்றும் கூறி அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். தஞ்சை கோட்டாட்சித் தலைவர் நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு விரைந்து சென்று ஒரு பூர்வாங்க விசாரணை நடத்தி, அழகனின் உறவினரிடத்தில் பிரேதத்தை ஒப்படைத்தனர். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சம்பவம் குறித்து கோட்டாட்சி தலைவரின் காவல் நிலைய ஆணை எண் 145-ன்கீழ் ஒரு முழு விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு ஆணையிட்டுள்ளார். கோட்டாட்சித் தலைவரின் அறிக்கை இன்னும் அரசுக்குக் கிடைக்கவில்லை. கோட்டாட்சித் தலைவர் அறிக்கை வரப்பெற்றதும் ஆய்வு செய்து அதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் இன்னொரு பிரச்சனையைச் சொல்லியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் காவல் நிலையத்தில் ராஜா என்பவரை கைது

செய்து, அச்சம்புதூர் காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்து அவர் ஜாதியின் பெயரைச் சொல்லி சித்திரவதை செய்ததுபற்றி சொல்லியிருக்கிறார்கள். 10—2—83 அன்று 12-45 மணிக்கு உதவிப் பொறியாளர், தந்தித்துறை, கடையநல்லூர் காவல் நிலையத்தில் தன் சூட்கேஸ் (துணிமணிகள் மற்றும் பத்திரங்கள் அடங்கியது) ஒன்று காணாமல் போய்விட்டதாக கொடுத்த புகார் மீது கடையநல்லூர் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 379-வது பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டது. 10—3—83 அன்று காலை 3 மணிக்கு செங்கோட்டை காவல்நிலைய ஆய்வாளர் கடையநல்லூரைச் சேர்ந்த முருகையா என்ற ராஜா என்பவரை, சந்தேகமான சூழ்நிலையில் ஒரு சூட்கேசோடு கண்டுபிடித்தபோது, அவரை அழைத்துச்சென்று விசாரித்ததில் மேற்படி சூட்கேஸ் காணாமல் போய்விட்டது என்று புகார் கொடுத்த உதவிப் பொறியாளர் உடையதுதான் என்று தெரியவந்தது. எனவே விசாரணைக்காக கடையநல்லூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. 22—3—83 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இங்கே கூறப்பட்டுள்ள ராஜா என்பவர் கடையநல்லூரில் கைது செய்யப்படவும் இல்லை; அச்சம்புதூர் காவல் நிலையத்தில் அவதூறாகப் பேசவும் இல்லை. இவர் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்று எனக்கு தகவல் தந்திருக்கிறார்கள். இது விசாரணையில் இருக்கிறது. ஆனாலும் ஒன்றைச் சொல்லுகிறேன். இந்தத் தகவல் பொய்யானது, உண்மைக்கு மாறானது என்று இருக்குமானால் இந்தத் தகவல் யாரால் தரப்பட்டதோ அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். 10—4—83 அன்று ராஜமங்கலத்தில் கோவிந்தன் என்பவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். பின்னால் இறந்துவிட்டார் என்பதாகவும் கூறியிருக்கிறார். அரசுக்கு கிடைத்த தகவல்படி, 9—4—83 அன்று காலை சுமார் 7—30 மணி அளவில் கீழூர் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன் என்பவரும் அவரது சகாக்கள் முறையே பெருமுக்தி கிராமத்தைச் சேர்ந்த கன்னியப்பன், வடாற்காடு மாவட்டம், கலைபதிபுரத்தைச் சேர்ந்த முனுசாமி ஆகியோர் வில்லிவாக்கத்தை ஒட்டிய வடக்கு ஜெயராமன் நகரில் ரயில்வே லைனின் அருகில் தாங்கள் திருடிய திருட்டுப்பொருட்களை பங்குபோடுவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவருக்கொருவர் கம்பியாலும் கல்லாலும் அடித்துக் கொண்டார்கள் என்றும் அந்த சமயத்தில் வடக்கு ஜெயராமன் நகரைச் சேர்ந்த ராஜகோபாலும் மற்றும் சிலரும் சேர்ந்து வந்து அவர்களைப் பிடித்தவுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்த நபர்கள் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள், மூன்று பேரும் தப்பித்துக்கொண்டார்கள் என்றும் கோவிந்தன், முனுசாமி, கன்னியப்பன் ஆகிய 3 பேர்களும்





ராஜமங்கலம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும் அந்த 3 பேருக்கும் காயம் ஏற்பட்டிருந்ததால் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்ததாகவும் பரிசோதனை செய்து மருத்துவ அதிகாரி கோவிந்தன் இறந்துவிட்டதாக 3—15 மணிக்கு அறிவித்ததாகவும் மற்ற இருவரும் (கன்னியப்பன், முனுசாமி) உள்நோயாளிகளாக சிகிச்சைப்பெற்று வருகிறார்கள் என்றும் அவர்களுடைய உடல்நிலை திருப்திகரமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி ஆகியோர் 10—4—83 அன்று கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு சென்று மரணம் அடைந்த கோவிந்தன் பற்றி பிரேத விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணைக்குப் பிறகு பிரேத பரிசோதனைக்கு உடனே அனுப்பி வைக்கப்பட்டது. இது குறித்து காவல் நிலைய ஆணை எண். 145-ன்கீழ் கூடுதல் குற்றவியல் நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் முன்னால் விசாரணை நடத்திவருகிறார் என்று சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கை அரசுக்கு கிடைத்தபின் ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். குற்றவாளிகள்மீது ராஜமங்கலம் காவல் நிலையத்தில் குற்றயியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 41 மற்றும் 102-ன்கீழ் வழக்கு குற்ற எண். 7-9-83ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம் அடைந்த குற்றவாளிகளை சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அனுப்பத் தவறியதால் வில்லிவாக்கம் காவல் துறை ஆய்வாளர் (குற்றம்), உதவி ஆய்வாளர் (குற்றம்) ஆகிய இருவரும் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அல்லது குறைகள் இங்கே வெளியிடப்படும்போது, எழுப்பப்படும்போது, அறிய வரும் போது தக்க நடவடிக்கை எடுக்கிறது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். அதற்கு அடையாளமாக அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பை இங்கே வைக்கிறேன். ஆகவே, தெரிந்து யாருக்காகவும் எந்த வழக்கையும் விட்டுவைக்கவில்லை அல்லது அவர்களுக்கு சலுகை காட்டுவது இல்லை என்பதற்காக இங்கே நான் இதை குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10—50)

இன்னொன்றையும் நான் பேரவைத் தலைவர் அவர்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன். கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கு, அவர்கள் விளக்கம் கேட்கும்போது உடனேயே பதில் சொல்ல முடியுமா என்பதை தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும். சில நாட்களுக்கு முன் இங்கே சொன்னார்கள், ஏதாவது அறிக்கையை இங்கே வைப்பது என்றாலும், படிப்பது என்றாலும், 2 நாட்களுக்கு முன்பு எனக்குத்

தெரிவித்துவிட்டு, அதைப் பார்த்தபிறகு நான் அதை அனுமதித்தபின்பு தான் அதைப்பற்றி அவையிலே பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சி தலைவர்களுடைய கட்சியைச் சார்ந்த துணை சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். யாராவது இது போன்ற குற்றச் சாட்டுகளை படிப்பதாக இருந்தால், முன்னாலேயே என்னிடம் காட்டி அனுமதி பெற்ற பின்பு தான் படிக்க வேண்டும், அவையில் வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே, நான் இங்கேயே உட்கார்ந்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்த போதிலும் சரி, அங்கே உட்கார்ந்து கொண்டு—என்னுடைய அறையிலே உட்கார்ந்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்த போதிலும் சரி, அல்லது வீட்டிலேயே கேட்டுக் கொண்டிருந்த போதிலும் சரி, திடீர் திடீர் என்று எழுந்து ஒருவர் அறிக்கை படிக்கும்போது கேள்வி கேட்பார்கள். எவ்வளவுதான் நினைவு இருந்தாலும்—எனக்கு ஓரளவிற்கு நினைவு சக்தி தவறிவிடவில்லை என்று நான் நினைக்கிறேன்—ஆனாலும் எவ்வளவுதான் கோப்புகளைப் படித்துப் பார்த்து கையெழுத்துப் போட்டிருந்தாலும், நினைவு இருந்தாலும் கூட, சில குற்றச்சாட்டுகளை, எங்களைப் போன்ற பொறுப்பிலே இருக்கிற, இலாக்கா யாருக்கு சொந்தமோ, அவர்களுக்கு நேரிடையாகத் தகவல் கிடைப்பதற்கு முன், இங்கே சொல்லி, எங்கே பதில் என்று கேட்டால், அதற்கு உடனடியாக பதில் சொல்ல முடியுமா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு வேண்டுகோளாக வைக்கிறேன்.

அத்தோடு நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது—எப்போதுமே அந்த நாளிலேயே பதில் சொல்வது இல்லை. எப்போதுமே காலம் தாழ்த்திக் கொண்டுதான் போகும், அது இந்த அமைச்சருக்கு—குறிப்பாக எனக்கு—வழக்கம் என்று குறிப்பிட்டார்கள். நோய் வந்தாலும், அதனால் பேச முடியாமல் போனாலும், அது என்னுடைய வழக்கம் என்று குற்றச்சாட்டு.

இன்னொன்றையும் சொன்னார்கள். இதற்கு மேலே பதில் அளிக்காமல் இன்னும் நாள் நீட்டிக்கொண்டே போகுமோ என்று தாம் நினைப்பதாகவும் சொன்னார்கள். ஆந்திராவிற்கு போனாலும், அதுவும் நான் வேண்டும் என்றே நாட்களை தள்ளி வைக்கிறேன் என்று தான் அர்த்தம் அவர்களுக்கு, மாலையிலேயே நான் பதில் சொல்லிவிடுகிறேன் என்று சொன்னபோது, நான் அவர்களுக்கு பதில் சொல்வேன் என்ற நம்பிக்கையில்





பொறுப்பேற்றுக்கொண்டு, எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்கள், ஆங்காங்கே செல்லவேண்டியதாக இருந்தாலும், இடையிலே நான் ஆந்திராவிற்கு செல்லவேண்டியிருந்ததாலும், 3, 4 நாட்கள் தள்ளிப்போய்விட்டது.

ஏதோ கேட்ட கேள்விக்கு பயந்துகொண்டு, பதில் சொல்ல முடியாமல், தப்பித்துக் கொள்வதற்காகத்தான், நாட்களை தள்ளிப்போடுகிறேன் என்று—அதை கோழை தனத்தோடு என்று கூட நான் சொல்வேன்—அப்படி நினைக்கிறார்கள் போல் இருக்கிறது. அந்த வகையில் பதில் சொல்லாமல் தப்பித்துக் கொள்வதற்கு, கொஞ்ச நாட்கள் தள்ளி, எல்லோரும் மறந்து விட்டும் அதற்குப் பிறகு பதில் சொல்லாமலேயே நீட்டிக் கொண்டு போகலாம் என்ற எண்ணத்தோடு நான் இருக்கிறேன் என்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன், பதில் சொல்வது என்று நான் என்னிடத்தில் இருக்கும் அத்தனையையும் படிக்க ஆரம்பித்தால், எத்தனை மணி நேரம் ஆகும் என்பதையும், ஒரு பிரச்னையைப் பற்றி படித்துவிட்டு, அதற்குப்பிறகு அதன்மீது என்னுடைய கருத்துக்களையும் சேர்த்து நான் சொல்லும்போது, அதற்கு நீண்ட காலம் ஆகும் என்பதையும் தெரிந்துக் கொள்ள வேண்டும். நான் முன்பே குறிப்பிட்டு இதைச் சொல்லியிருக்கிறேன். மீண்டும் இங்கே குறிப்பிடுகிறேன். நேரம் இல்லை என்று பதில் சொல்வதைக் குறைத்துக்கொண்டால், நாங்கள் கேட்ட கேள்விக்கு எம்.ஜி.ஆர். பதிலே சொல்லவில்லை என்று மேடையிலே பேசி எங்களைப் பரிகாசம் செய்கிறார்கள். கேலி செய்கிறார்கள். அவருக்கு ஒன்றும் தெரியாது என்கிறார்கள். நீண்ட நேரம் பேசிவிட்டால், அவருக்கு மட்டும் ஏன் 7½ மணி நேரம், எங்களுக்கு ஏன் 1½ மணி நேரம் என்று கோபித்துக்கொள்கிறார்கள்.

அதற்குப் பிறகு பேசினாலும், என்ன பேசினார்கள் என்றே எங்களுக்குப் புரியவில்லை, 7 மணி நேரம், 8 மணி நேரம் பேசினார்கள். ஆனால் எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்கிறார்கள். புரிய வைக்கும் சக்தி எனக்கு இல்லை என்றால், அந்த அனுபவம் இல்லை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ஏதோ பதில் சொன்னேன் என்பதையாவது எடுத்துக் கொண்டால் அந்த வகையில் கொஞ்சம் திருப்தி. ஆனால் இரண்டிற்கும் இப்படி சொன்னால் அது கொஞ்சம் கஷ்டமான விஷயம்தான். ஆனாலும், (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். கடைசியில் கேட்கலாம்.

ஆகவே, யாராக இருந்தாலும், தயவுசெய்து மாண்புமிகு தலைவர் அவர்கள் அளித்த தீர்ப்பை பின் பற்றினால் சற்று வசதியாக இருக்கும். கேள்விகளை கேட்கிறார்கள். இப்பொழுது

அனுப்பப்படுகிற கேள்வி 6 மாதம் கழித்து, 5 மாதம் கழித்து, 4 மாதம் கழித்து அடுத்து சட்டமன்றக் கூட்டத் தொடர் வரும்போது தான் பதில் சொல்லப்படுகிறது. அதற்குள் அந்தக் காரியம் நடந்தே போய்விடும். எதற்காக கேட்கிறோமோ அந்தக் கேள்விக்கு பதில் அளிக்க வேண்டிய அவசியமே இருக்காது. ஆகவே, அவைகளையெல்லாம் பொறுத்துக் கொள்கிறவர்கள், தவிர்க்க முடியாத காரணத்தால், கொஞ்சம் தள்ளி வைக்க வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டால், அதை ஏதோ பெரியதாக வெளியிலே போய்ச் சொல்லி, இந்த முதலமைச்சர் பதில் சொல்ல பயப்படுகிறார், தயங்குகிறார், ஒதுங்கிக்கொள்கிறார் என்பது போலச் சொன்னால் அது சரியல்ல. நானும் கூடவே இருந்தவன் தான் என்பது அவர்களுக்குத் தெரியும். நான் இதற்கெல்லாம் பயப்படுகிறவன்தானா, எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டபோதெல்லாம், அந்தக் கட்சியிலே இருந்தபோது நான் ஓடியவனா என்பதை எல்லாம், புரிந்துக் கொண்டால், புரிந்துகொள்வது என்று சொல்வது சரியல்ல—நினைத்துக் கொண்டால் சரியாக இருக்கும்.

ஆனால் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்த வயதில் அவர்களுக்கு மறதி அதிகமாக இருக்கின்றது என்று அவர்கள் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். யார், யார் கேள்வி கேட்டார்கள்., பேசினார்கள், அவையெல்லாம் மறந்துவிட்டது. என்றும் எவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன என்றும் சொல்லி இருக்கிறார்கள், இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது. மறதி நமக்கு இருக்க வேண்டும். மனிதனுக்கு மறதி இருப்பதில் நன்மையும் உண்டு,. தீமையும் உண்டு. நான் ஏதோ உபதேசம் செய்ய வருகிறேன் என்று எண்ணிவிடக்கூடாது. சிலவற்றை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சிலவற்றை நாம் மறந்துவிட வேண்டும் என்பதை மட்டும் இங்கே நான் வேண்டுகோளாக வைக்கிறேன். நல்லவைகளை எல்லாம் நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள்., தீமைகள் இருந்தால் அவற்றை விட்டுவிடுங்கள். இங்கே தீமைகளைச் சொல்வதற்காக நான் வரவில்லை. ஆகவே மறப்பது என்பது நல்லவைகளைத்தான் நாம் மறக்கிறோம் என்பது இந்த மன்றத்தில் எடுத்துக்காட்டாக ஆகிவிடுகின்றது. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். எனவே மறந்துவிட வேண்டாம்.

இங்கே பூங்காவனம் எம்.எல்.ஏ. அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். நந்தகோபால் என்ற வாலிபர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று நையப் புடைத்து இரவில் ஒரு மணிக்கு வீதியிலே போட்டு விட்டார்கள்.





பொதுமக்கள் ஆஸ்பத்திரியிலே சேர்த்தார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2,200 ரூபாய் மதிப்புள்ள நேஷனல் பனோசானிக் ரிக்கார்டர் மற்றும் கேஸட்டுகளை ஒரு வீட்டிலிருந்து திருடியதாக சேதுவரை கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவர் மீது கேவிகுப்பம் காவல் நிலையத்தில் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 457 மற்றும் 381 ஆகியவற்றின் கீழ் ஒரு வழக்கு பதியப்பட்டது. விசாரணையின்போது பாஸ்கரன் கேவிகுப்பத்தைச் சேர்ந்த நந்தகோபால் என்பவருக்கும் இந்தத் திருட்டில் சம்பந்தம் உள்ளது என்று கூறினார். அதன் பேரில் நந்தகோபால் கேவிகுப்பம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காகக் கொண்டு வரப்பட்டார். ஆனால் இந்தத் திருட்டில் சம்பந்தம் இல்லை என்று மறுத்துவிட்டார். குற்றவாளியான பாஸ்கரன் திருட்டுப் பொருட்களை வாங்கிய நபர்களைக் காட்டியதன் பேரில் வேலூரைச் சேர்ந்த சுந்தரேசன் என்பவர் வீட்டிலிருந்து திருட்டுப்போன அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. இந்தத் திருட்டுப் பொருட்களை வாங்க முற்பட்டு பாஸ்கரனும் மற்றவர்களும் வந்தார்கள் என்று திரு. சுந்தரேசன் கூறினார். இதற்கிடையில் காவல் நிலையத்திலிருந்த மின் விளக்கு அணைந்தபோது அந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு நந்தகோபால் காவல் நிலையத்தைவிட்டு தப்பி ஓடி விட்டார். மறுநாள் காலை சுமார் 7 மணி அளவில் கேவிகுப்பம் அரசு மருத்துவ மனையில் உள்ள மருத்துவ அதிகாரியிடம் சென்று தன்னை கேவிகுப்பம் காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் ஒருவரும், இரு காவலர்களும் தாக்கியதாகக் கூறினார். அந்த மருத்துவ அதிகாரி நந்தகோபாலை வேலூர் அரசு பொது மருத்துவமனைக்கு செல்லுமாறு பணித்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு. பூங்காவனம், சி.பி.ஐ. அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றார். நந்தகோபால் மேல் காயங்கள் இல்லாவிட்டாலும் கூட அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கே உள்ள மருத்துவ அதிகாரிகளிடம் அவர் தான் கீழே விழுந்ததால் அடிபட்டதாகக் கூறியுள்ளார். கேவி குப்பம் மருத்துவமனையின் தகவல்படி அந்தக் கூற்று பதியப்பட்டன. குடியாத்தம் துணைக் காவல் துறை கண்காணிப்பாளர் தன்னுடைய அறிக்கையை திருப்பத்தூர் மாவட்ட உட்கோட்ட ஆட்சியாளரிடம் கொடுத்தார். உட்கோட்ட ஆட்சியாளர் விசாரணையை மேற்கொண்டார்கள். இந்தச் சம்பவம் தொடர்பாக மாவட்ட உட்கோட்ட ஆட்சியாளரின் அறிக்கையின் பேரில் அரசு ஆணையின்படி தலைமைக் காவலர் சிவராமன், ரத்தினம் மற்றும் கந்தன் ஆகியோர் வேறு காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். இதிலே ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஒரு மருத்துவமனையில் தாக்கப்பட்டதாகவும் இன்னொரு மருத்துவ மனையிலே தவறி கீழே விழுந்துவிட்டதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இதிலே எது உண்மை என்பதை நாம் விசாரித்து அறியவேண்டும். விசாரணைக்குப் பிறகுதான் எது உண்மை என்பது வெளிப்படும். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியிடும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

போது சேர்த்துச் சொல்லி இருந்தால் நான் நேரத்தைக்குறைத்துக் கொண்டு விசாரணையில் இருக்கின்றது என்பதையும், யார் விசாரிக்கிறார்கள் என்பதையும் வெளியிட்டிருக்க முடியும். ஆகவே தயவுசெய்து இப்படிப்பட்ட செய்திகளைச் சொல்கின்ற போது விவரங்களைச் சேர்த்து சொல்வது மாமன்றத்திற்கும் நாட்டுக்கும் நல்லது என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்து திருப்பூர் தொகுதியில் நகைத் திருட்டு சம்பந்தமாக டாக்டர் ஆப்ரகாம் என்வர் நீதிமன்றத்தில் கொடுத்த மனுவின் மீது விசாரித்து அறிக்கை அனுப்பும்படி நீதிமன்றம் அரசுக்குத் தாக்கீது அனுப்பியுள்ளது என்று மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் உள்ள குறிசிலப்பட்டு காவல் நிலையத்திற்கு ஆதி திராவிடர்கள் இனத்தைச் சேர்ந்த 5 நபர்கள் ஒரு திருட்டு வழக்கு சம்பந் மாக விசாரணை செய்ய வேண்டி அழைத்துச் செல்லப்பட்டு தவறான முறையில் காவலில் வைக்கப்பட்டு துன்புறுத்தினார்கள் என்றும் அதன் பிறகு அந்த 5 பேரில் குறிசிலப்பட்டு கண்ணுப் பையன் மகன் ராஜா என்பவர் காணாமல்போய்விட்டார் என்றும் புகார் செய்யப்பட்டது. இக்குற்றத்திற்காக காவலில் இருந்த ராஜா காணாமல் போய் விட்டார் என்று கூறப்படுவதாகவும் காவலில் துன்புறுத்தினார்கள் என்றும் பரிசைகுளம் காவல் நிலைய ஆணை எண். 145-ன் படி திருப்பத்தூர் சப்-கலெக்டர் விரிவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார். விசாரணை அறிக்கையில் கண்ணுப்பையன் மகன் ராஜா என்பவர் காவல் நிலைய விசாரணைக்குப் பின் காணாமல் போய் விட்டார் என்றும் அவர் உயிரோடு இருக்கிறாரா ? இல்லையா என்பதை தீர்மானிக்க இயலவில்லை என்றும் காணாமல் போன ராஜாவை கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கண்டுபிடிக்க முடியாமல் போனால் அது சம்பந்தப்பட்ட காவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விசாரணை அதிகாரி கூறியுள்ளார். விசாரணை அதிகாரியின் முடிவை ஏற்று குற்ற புலனாய்வுத் துறை மேலும் விசாரணை நடத்தலாம் என மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார். அரசு, அறிக்கையை ஆராய்ந்து விசாரணை அதிகாரியின் முடிவையும் மாவட்ட ஆட்சியர் பரிந்துரையும் ஏற்று இச்சம்பவம் குறித்து குற்ற புல னாய்வுத்துறையின் தீவிர புலனாய்வுத் துறைக்கு ஆணையிட்டது. இதற்கிடையில் உச்ச நீதி மன்றத்தில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஆப்ரகாம் மாட்சி என்பவர் கண்ணுப்பையன் மகன் ராஜாவினை நீதிமன்றத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று வழக்குத் தொடர்ந்தார். மாநில அரசு நடவடிக்கை எடுப்பதால் மேற்கொண்டு நடவடிக்கை தேவையில்லை என்று வழக்கை தள்ளுபடி செய்து விட்டது. சென்னை உயர்நீதி மன்றத்தில்



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

டி. எஸ். பி. ஹரி என்பவர் இது பற்றி தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து விட்டது. குற்ற புலனாய்வு துறை தனிப்பட்ட விசாரணை நடத்தி அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. அவ் வறிக்கையில் குறிசிலப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரை தவறான முறையில் காவலில் வைத்து அடித்து சித்ர வதைச் செய்ததால் தான் உயிர் இழந்தார் என்றும் அதற்கு பிறகு காணவில்லை என்றும் இதற்கு ஆய்வாளர் திரு. அண்ணா மலையும் அவருக்கு உதவியாகச் சென்ற தலைமைக் காவலர் மற்றும் சில காவலர்கள் தான் பொறுப்பு ஆகவேண்டும் என்றும் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார். மேலும் குறிசிலப்பட்டுவைச் சேர்ந்த திரு. சின்னராஜ் திரு. ராமஜெயம் மற்றும் சிலரையும் தவறான முறையில் காவல் நிலையத்தில் அடித்து சித்திரவதை செய்து இருக்கிறார்கள் என்றும் முதல் நோக்கிலேயே சட்டத்தின் கீழ் நடவடிக்கையின் கீழ் குற்றவாளிகள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை அறிக்கையை ஆழ்ந்துப் பார்த்து குற்றப் புலனாய்வுத் துறை முடிவை ஏற்று ஆய்வாளர் திரு அண்ணாமலையை உடனே தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டது. ஆய்வாளர் திரு. அண்ணாமலைக்கு உதவியாகச்சென்ற தலைமைக் காவலர் மற்றும் காவலர்கள் யார் என்று கண்டு பிடித்து அவர்களையும் உடனே தற்காலிக பணி நீக்கம் செய்யப் படும். இந்த நிகழ்ச்சிக் குறித்து ஒரு முறையான வழக்கை பதிவு செய்து தீர விசாரித்து மேல் நடவடிக்கை எடுக்கும்படியும் காவல்துறை இயக்குநருக்கு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி காவல்துறை ஆய்வாளர் திரு. அண்ணாமலை தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டுள்ள ஆய்வாளர் திரு. அண்ணாமலை சென்னை உயர் நீதி மன்றத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு உள்துறை செயலாளருக்கும் எதிராக ஒரு ரிட் மனுவை தாக்கல் செய் துள்ளார். இந்த ரிட் மனு நிலுவையில் உள்ளது.

காவல்நிலையங்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம்தர கடமைப்பட்டிருக்கின்றேன். மதுரை மாவட்டம் மாணிக்கம் பட்டியில் காட்டு ராஜா என்பவர் படுகொலை செய்யப்பட்டார் என்பதைப்பற்றி,மதுரை மாவட்டம் மாணிக்கம்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கும் ஆதி திராவிடர்கள் அல்லாதவர்களுக்கும் இடையே உள்ளூர் கோவில் திருவிழாக்களில் சூதாட்டம் நடத்து வதில் மன வேறுபாடுகள் இருந்து வந்தன. அதன் காரணமாக சிறு சிறு விவகாரங்களுக்கு எல்லாம் இரு தரப்பினரும் தகராறு செய்து வந்தனர். 17—3—1983 அன்று மாலை சுமார் 4-30 மணி அளவில் அந்த கிராமத்தில் உள்ள அடி குழாயில் தண்ணீர் பிடிப்பதில் ஆதி திராவிடர் பெண்களுக்கும் ஆதி திராவிடர் அல்லாத பெண்களுக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டது. தகராறு கைகலப்பில் முடிந்தது. இரு தரப்பிலும் ஆண்களும் கைகலப்பில் சேர்ந்து கொண்டார்கள். கலவரத்தில் ஆதிதிரா விடர்கள் 9 பேரும், ஆதி திராவிடர்கள் அல்லாதார் 11 பேரும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20]

காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக
மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அன்று காயம்
அடைந்து அனுமதிக்கப்பட்ட ஆதி திராவிடர் இனத்தைச்
சேர்ந்த காட்டு ராஜா என்பவர் சிகிச்சை பலன் அளிக்காமல்
18—1—1983 அன்று மருத்துவ மனையில் உயிர் இழந்தார்.
இச்சம்பவத்தின் தொடர்பாக 2 வழக்குகள் பதிவு செய்து காவல்
துறையினர் புலனாய்வு செய்து வருகின்றனர். குற்றம் சாட்டப்
பட்ட 9 பேரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.
அமைதிக் குழு கூட்டி, நடத்தப்பட்டது. காவல் பாதுகாப்பு
செய்யப்பட்டது. நிலைமை அமைதியாக உள்ளது..

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

வழிப்பறி, பேருந்திலே செல்லும்போது கொள்ளையடித்தல்
இது போன்றவைகளைப்பற்றியெல்லாம், மாண்புமிகு உறுப்பி
னர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை, குறைகளை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அதிலே, திரு. என். எஸ். வி. சித்தன்
அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். கே. கே.
நகரில் ஒரு வழிப்பறி நடந்ததைப்பற்றி. 21—1—1983 அன்று
இரவு சுமார் 9-30 மணிக்கு இந்து ஆங்கில தினசரி செய்தி
யாளராகப் பணியாற்றும் ரகுநாதன் கே. கே. நகரில் உள்ள தனது
இல்லத்திற்குத் திரும்பும் வழியிலே சுமார் 20 வயது மதிக்கத்
தகுந்த 2 வாலிபர்கள் ரகுநாதனிடம் கத்தியைக் காண்
பித்து மிரட்டி அவர்களிடமிருந்து ரூபாய் 420 பெறுமானமுள்ள
கைக்கடிகாரம் மற்றும் ரொக்கம் 20 ரூபாய் ஆகியவற்றைப்
பறித்துச் சென்றார்கள். அது சம்பந்தமாக சுமார் 10-10 மணி
அளவில் கே. கே. நகர் காவல் நிலையத்தில் ரகுநாதன் அளித்த
புகாரின் பேரில் கே. கே. நகர் காவல் நிலையத்தில் இந்திய
தண்டனைச் சட்ட பிரிவு 392-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்
பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இது சம்பந்தமாக காவல்
துறையினர் கே. கே. நகரைச் சேர்ந்த ரவி என்பவரை 3-3-1983
அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து களவாடப்பட்ட கைக்
கடிகாரத்தைக் கைப்பற்றினார்கள். அவர் காவலில் வைக்கப்
பட்டார். ரவியோடு சேர்ந்து வழிப்பறிக் குற்றம் செய்த
மஸ்தான் இன்னும் தலைமறைவாக உள்ளார். மேற்படி வழக்கு
25—3—1983 அன்று நீதிமன்றத்திலே ரவி, மஸ்தான் ஆகியோர்
மீது தாக்கல் செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட களவுப்
பொருட்கள் பூவிருந்தவல்லி குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்ப
டைக்கப்பட்டுள்ளன. வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில்
உள்ளது. எதுவுமே இல்லை, தகவலே இல்லை என்றார்கள்.
இந்த நிலைமையில் இருக்கிறது என்பதையும் அந்த வழிப்பறி
செய்தவர்கள் பிடிக்கப்பட்டு ஒருவர் தேடப்பட்டு வருகிறார்
ஒருவர் மேல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது
என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
நேரத்திலே அரசினுடைய நிலைமையைப்பற்றியும் நாங்கள்
எடுக்க விரும்பும் நடவடிக்கைகள் என்ன, அது எந்தப் பலனை
அளிக்கிறது எப்படிப்பட்ட எதிர்ப்பை உருவாக்குகிறது என்பது



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பற்றியும் ஒரு விளக்கம் என்பதல்ல, ஒரு கருத்தை வெளியிட நான்
விரும்புகிறேன். இதுபோன்ற குற்றங்கள் செய்கிறவர்கள்
எப்படிப்பட்டவர்கள், எத்தகையவர்கள், யார் யார் என்பது
எல்லாம் பட்டியலிலே இருக்கிறது. குற்றம் செய்பவர்கள்
என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்ட அந்தக் குற்றவாளிகள்
பட்டியலில் இருக்கிறார்களே அந்த வன்முறையாளர்கள் கூட
அவர்கள் திரும்பத் திரும்ப இந்தக் குற்றங்களை செய்கிறவர்களை
வெளி மாநிலத்திற்கு அனுப்பலாமா என்பது போன்றவற்றைப்
பற்றி இங்கே சொல்லும்போது அது நாடு கடத்தும் சட்டம்,
அது அநியாயம், அக்கிரமம் முன்னாலே இருந்து ஆண்ட
அரசைவிட இது மோசமான அரசு என்று சொல்கிறார்கள்.
பத்திரிகைகளில் படித்து இருப்பீர்கள். 29-வது முறையாக
கைது செய்யப்பட்டிருக்கிறார். இத்தனை வழக்குகளிலே சம்
பந்தப்பட்டு இருக்கிறார் என்பதையெல்லாம் பத்திரிகைகளிலே
படிக்கிறோம், பத்திரிகை படிக்க முடியாதவர்கள் என்னைப்
போன்றவர்களுக்கு செய்திகள் வருகின்றன. அது மட்டுமல்ல,
ஜாமீனிலே வெளியே வந்து 3, 4 குற்றங்கள் செய்கிறார்கள்.
2-வது, 3-வது, 4-வது குற்றங்களில் எந்த தண்டனைக்கு என்று
போடப்பட்டு உள்ளே இருந்து ஜாமீனிலே வெளியே வந்து
இருக்கிறார்களோ அவர்கள் மீண்டும் அதே குற்றத்தை அந்த
நேரத்திலே செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு சமுதாய
விரோதிகள் என்று பெயர் இல்லாமல் வேறு என்ன பெயர் இருக்க
முடியும் என்பதை மாமன்றத்திலே உள்ளவர்கள் சிந்திக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் எந்த எண்ணத்
தோடு எந்த எண்ணத்திலே இப்படிப்பட்ட சட்டத்தைக்கொண்டு
வர முயல்கிறோமோ அப்படி இருந்தால் பரவாயில்லை என்று
சொல்லலாம் என்றால் அது தவறு என்றால் வேறு எந்த வழி
யைப் பின்பற்றலாம் என்று யோசனை சொல்ல முன்வந்தால்
கொஞ்சம் உதவியாக இருக்கும்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகப்
பெரிய குற்றவாளியாக தொடர்ந்து குற்றம் செய்கிறவர்களை
வேறு மாநிலத்திற்கோ வேறு மாவட்டத்திற்கோ அனுப்பக்கூடிய
சட்டம் கொண்டுவரலாமா என்று கேட்டார்கள், அப்படி
எண்ணுகிறோம் என்றும் சொன்னார்கள். எங்களுக்கு இருக்கின்ற
கவலையெல்லாம் அந்த மாவட்டத்திலே உள்ளவர்கள் என்ன
கதிக்கு ஆளாவது. இவர்களையெல்லாம் அங்கே அனுப்பினால்
இவர்கள் போய்ச் சேருகிற இடத்திலே ஆளே அடையாளம்
தெரியாமல் எந்த அக்கிரமம் வேண்டுமானாலும் செய்வதற்கு
வேறு மாநிலத்திலோ வேறு மாவட்டத்திலோ உள்ளவர்கள் இரை
யாகாமல் அவர்களையும் பாதுகாக்க நமக்கு ஒரு கடமை இருக்கிற
தல்லவா ?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் எப்படி மாணவர்
களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டுமோ அப்படி சொல்கிறார்

கள். ஆனால் அனுபவ ரீதியாக ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். அப்படிப்பட்டவர்களை தடுப்புக் காவலில் உள்ளே போட்டால் அவர்களுக்கு கோபம் வருகிறது. அப்படிப்பட்ட வர்களை வேறு மாநிலங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு ஆபத்து வரவேண்டாம். மாவட்டங்களுக்கு அனுப்பவேண்டாம். ஒரு ஆண்டு உள்ளே இருக்கட்டுமே என்று சொன்னால் விசாரணை இல்லாமல் உள்ளே பிடித்து வைப்பதா ? அது என்ன நியாயம் ? இது சர்வாதிகாரம் இல்லையா என்று கேட்டால், இப்படியும் போகக்கூடாது, அப்படியும் போகக்கூடாது என்றால் என்ன செய்வது.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு இந்தப் பிரச்சினைகளில் ஆழமாக வாதிக்க விரும்பினால் இந்த மன்றத்திலே உள்ள எல்லா கட்சித் தலைவர் களையும் வைத்து பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்ப தைப்பற்றி பேச வேண்டும். ஆகவே, இப்படி இருக்கிறது, தடுப்பு காவல் சட்டத்திற்கு அங்கீகாரம் தாருங்கள் என்று கேட்டாலோ அல்லது மாகாணத்திற்கு வெளியே அனுப்பவேண்டு மென்று அனுமதி கேட்டாலோ அது சரியாக இருக்காது. அப் படித்தான் அதை தீர்க்க முடியுமென்றால், அது அதற்கு பரிகார மாகாது என்ற காரணத்தாலே தான் கூறுகிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் எதை ஏற்றுக் கொள்ள அவரால் முடியாதோ அதற்கு ஆதரவாக கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். நான் ஒத்துக்கொள்கி றேன். ஆனால் எந்தெந்த பிரச்சினைகளைப் பற்றி எல்லா அர சியல் தலைவர்களும் உட்கார்ந்து பேசலாம் என்பதற்கு ஒரு சில நியாய வரையறைகள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். இதுபோன்ற விஷயங்களில் எல்லோரையும் உட்கார வைத்து பேசினால் அதன்மேல் பல்வேறு கருத்துக்கள் வந்தால், பல சமையல்காரர்கள் சேர்ந்து சமையலை பாழடித்ததைப் போல, இந்த நாட்டினுடைய நன்மைக்காக எதை செய்கிறோமோ அதற்கு கேடு வந்து விடுமோ என்ற அச்சம் இந்த அரசிற்கு இருக்கிறது. உங்களுடைய நல்லெண்ணத்தில் எங்களுக்கு சந்தேகம் இல்லை. ஆனால் நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற முடிவு இருக்கிறதே அதற்கேற்பத்தான் உங்களுடைய கருத்துக்கள் வரும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, பல சமையல்காரர்கள் சேர்ந்து ஒரு சமையலை செய்தால் எப்படி இருக்கும் என்பதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அவர் கள் சொன்னார்கள். பல சமையல்காரர்கள் யோசனை செய்தாலும், சமையல் செய்கிற கடைசி முடிவை ஒரு சமையல் காரரிடத்திலே தான் விடுகிறோம். அதை நம்முடைய மாண்புமிகு முதல்வரிடத்திலே தான் விடுகிறோம். அவர்கள்





நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட்டிலே இப்படிப்பட்டவர்களை போடுவதற்கு நாங்கள் ஆட்சேபனை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் கோர்ட்டிற்கு போய் விடுதலை வாங்கி அவர்கள் வருகிறார்களென்றால் அப்போது என்ன செய்வீர்கள் ?

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்றால், சர்வகட்சியினரையும் கூப்பிட்டு பேசவேண்டுமென்று சொன்னது, பல குற்றங்களை செய் கிறார்கள் என்று சொல்கிறார்கள்; ஆகவே அதற்கு தண்டனை என்ன ? அதை எப்படி சமாளிப்பது ? ஏன் அவர்கள் அப்படி குற்றங்களைச் செய்கிறார்கள் ? என்று அந்த சமூக, பொரு ளாதார பிரச்னையைப் பற்றி ஆய்வு செய்து முடிவு செய்யாமல் போனால், அதன் விளைவு தான் இன்றைக்கு வந்திருக்கிற தடுப்பு காவல் சட்டம். இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை ஜனநாயக கட்சிகளும் எதிர்க்கிற சட்டம். ஆகவே இந்த இரண்டும் ஏற்றுக்கொள்ள முடியாத இரண்டு ஆக்ஷன்ஸ். இரண்டையும் ஏற்றுக்கொள்ள முடியாதபடி பாயின்ட்சை வைத்தால் என்ன செய்வது ? அது தான் அதிலே உள்ள பிரச்னை என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்களும் மாண்புமிகு சங்கரய்யா அவர்களும் இருவேறு கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, முடிவு முதலமைச்சருடைய கையில் தானே என்று சொன்னார்கள். நான் ஏற்றுக்கொள் கிறேன். அப்படி நம்பி விட்டுவிட்டீர்களானால் பேசிய பிறகு, நாங்கள் எதை நியாயம் என்று கருதுகிறோமோ, வேறு வழியின்றி அதை ஏற்றுக்கொள்கிறீர்கள் என்ற உத்தரவாதம் அதிலே அடங்குகிறது. எனக்கு மகிழ்ச்சி.

திரு. ரா. உமாநாத் : அந்த உத்தரவாதம் அதிலே அடங்க வில்லை. அனைத்து கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து யோசனை கேட்கிறபோது, அவர்கள் யோசனை கூறுகிறார்கள். கடைசியிலே அந்த கூட்டத்திலே ஒருமுகமாக முடிவு வந்தால் அது முடிவு. முடிவு வரவில்லையென்றால் அதுபற்றி என் னென்ன முடிவு செய்யவேண்டுமென்ற அதிகாரம் தேர்ந் தெடுக்கப்பட்ட சர்க்காரைச் சேர்ந்தது. ஆகவே நாங்கள் ஆர்பிட்ரேஷனுக்கு விட்டோம் என்று அர்த்தமில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு உமாநாத் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காருடைய பொறுப்பு என்று சொன்னது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. ஆகவே என்ன சொன்னா லும், கருத்துக்களை பகிர்ந்து கொண்டாலும், யோசனைகளை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

பல்வேறு ஆதாரங்களோடு எடுத்து வைத்தாலும் கூட,
நிலைமையை சிந்தித்துப் பார்த்து முடிவு செய்கிற அந்த
பொறுப்பு எங்களைச் சேர்ந்தது என்று சொல்கிறார்கள்.
அதிலே இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள்.
யிருந்து வழக்குமன்றத்திற்கு போகிறார்கள். இங்கே
கிடைக்கிறது ; வந்துவிடுகிறார்கள் ; அதற்கு என்ன செய்யப்
போகிறீர்கள் ? என்று சொல்கிறார்கள். அதைப்பற்றியும்
சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். என்னவென்றால் தடுப்புக்
காவல் சட்டத்திலே வைப்பதற்கு முன்னதாக அரசு மட்டும்
முடிவு செய்வதல்ல. சம்பந்தப்பட்ட வல்லுநர்கள், நீதி
மன்ற பொறுப்பிலே இருக்கிறவர்கள் போன்றவர்கள், இவர்கள்
எல்லாம் சேர்ந்து தான் இப்படிப்பட்டவர்களை கைது செய்து
வைக்கலாம், அப்படிப்பட்ட குற்றம் செய்தவர்கள் தான் இவர்
கள் என்று சொல்லி, அதற்கு பிறகு தான் நாங்கள் முடிவெடுக்
கிறோம். நாங்களே முடிவு எடுத்து, கையெழுத்து போட்டு
அவர்களைக் கொண்டு போய் வைத்துக்கொள்ளுங்கள் என்று
சொல்லவில்லை. சில அதிகாரங்கள் மாவட்ட ஆட்சித்
தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அந்த
மாவட்டத்தைக் கட்டிக் காக்க வேண்டிய காரணத்தால், அவர்
கள் பரிந்துரைக்கிறார்கள். அவர்கள் பரிந்துரைத்ததற்குப்
பிறகு, அதை ஏற்றுக்கொண்டு நாங்கள் அவைகளை அமுல்
படுத்துகின்றோம். இதுதான் நிலைமை. ஆகவே, தன்னிச்சை
யாக இந்த அரசு செய்வதில்லை. அப்படியும் வழக்குமன்றத்
திற்குப் போய் அவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்றால்,
நீதிமன்றம் சில சமயம் நமக்குச் சாதகமாகத் தீர்ப்பு தருகிறது :
சில சமயம் எதிர்ப்பாகத் தருகிறது. அப்படி நீதிமன்றத்
திற்குச் சென்று வெற்றி பெறுவதற்கு அந்த நபர்களுக்கெல்லாம்
வாய்ப்பிருக்கிறது என்று சொன்னால், நாங்கள் வேறு வழியைப்
பார்க்க வேண்டும். இதற்கிடையே இதைப் பயன்படுத்திக்
கொண்டேன். இதைப் பயன்படுத்திக்கொண்டேனே தவிர,
இன்னும் முடிவிற்கு வரவில்லை. ஆனால், ஏதாவது செய்தாக
வேண்டும். சிலர் இதைத் தொழிலாக வைத்துக் கொண்டிருக்
கிறார்கள் என்பதை உங்களுக்குத் நான் சொல்லிக்கொள்ள
கடமைப் பட்டிருக்கிறேன். திறமைசாலிகளாக இருக்கிறார்
கள் ; மோட்டார் பைக் வைத்துக் கொள்கிறார்கள் ; அவர்
களுக்கு யார் பைனான்ஸ் செய்கிறார்கள் என்றே தெரியவில்லை.
இது திட்டமிட்ட ஒரு குழுவாகக் கூட வேலை செய்கிறதோ என்ற
சந்தேகம் தமிழக அரசுக்கு இருக்கிறது என்பதை இங்கே நான்
இப்பொழுது வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறேன். பார்த்
தால், திடீரென்று எங்கெங்கோ காட்சியளிக்கிறார்கள் ;
எங்கெங்கோ இருந்தெல்லாம் வருகிறார்கள், மோட்டார்
பைக்கில். சில சமயம் எங்கெங்கோ போகின்றார்கள்.
உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆட்சி
டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு, நாங்கள் ஊர்வலம் வந்தோம்.
பெரிய குழப்பம் ஏற்பட்டது ; தடியடி நடந்தது ; எல்லாம்
நடந்தது. நாங்கள், சி.பி.ஐ.,யைச் சேர்ந்தவர்கள், சி.பி.எம்.-



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் எல்லோரும்—பெரியவர் கல்யாணசுந்தரம் போன்றவர்கள்—தலைவர்கள் எல்லாம் போய்க் கொண்டிருந்தபொழுது திடீரென்று ஒரு மோட்டார் பைக்—அதிலே முரட்டுத்தனமாக ஒரு ஆள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். எங்கள் கட்சியிலே அப்படி ஒருவரைப் பார்த்ததே கிடையாது. பின்னாலே ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். சட்டை எல்லாம் கிழிந்திருந்தது ; ரத்தமெல்லாம் இருந்தது. அவர் என்ன சொல்கிறார் என்றால், 'என்ன, எல்லோரும் போய்க் கொண்டிருக்கிறீர்கள்' என்று போய்க் கொண்டிருக்கிற தொண்டர்களை எல்லாம் பார்த்து, 'அதோ பாருங்கள், காவல் துறையினர் அடிக்கின்றார்கள் ; தடியால் அடிக்கின்றார்கள். என்ன போய்க் கொண்டிருக்கிறீர்களே' என்று போகின்ற மக்கள் திரும்ப அங்கே செல்வதற்கு அவர் முயன்று, அதற்கு அவர் என்ன, என்ன வார்த்தைகள் சொல்ல வேண்டுமோ, அவர்களைத் தூண்டுவதற்கு என்ன, என்ன வார்த்தைகள் பயன்படுமோ, ஆத்திரத்தை உண்டாக்குவதற்கு, அதையெல்லாம் சொன்னார்கள். உடனடியாக, என்னால் முடிந்தது, அப்பொழுது அதுதான். நண்பர்களை வேண்டிக் கொண்டேன், 'அவரைக் கொண்டு போய் போலீசாரிடம் ஒப்படையுங்கள்' என்று சொல்லி, அவர்கள் அழைத்துக் கொண்டு போவதற்குள், திரும்ப அவர் எங்கோ போய்விட்டார். கடைசி வரையில் கிடைக்கவில்லை. அதிலிருந்து என்ன புரிகிறது என்றால், சமூக விரோதிகள் எங்கெங்கோ இருக்கிறார்கள் ; எப்படி எப்படியோ இருக்கிறார்கள். அவர்களுக்கு இது விளையாட்டு, அல்லது தொழில். நமக்கு அப்படியல்ல ; நமக்குத் தொல்லை. மக்களுக்கு விபரீதங்கள், ஆபத்துக்கள், இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இவைகளை எல்லாம் உத்தேசித்து, பல திட்டங்களை நாங்கள் வெளியிடாமல் வகுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் மாமன்றத்திற்கு அது சொல்லப்படும். அப்பொழுது அவர்களுடைய கணக்குகள், இவர்கள் யார், யார் என்பதையெல்லாம் கண்டு பிடிப்பதற்கு வெகு எளிதாக வழிமுறைகள் கிடைக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நண்பர் சாகுல் ஹமீது அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். 13–1–1983 அன்று தென்காசியில், ஆற்றிலே குளித்து விட்டு வந்தப் பெண்ணின் சங்கிலி பறிக்கப்பட்டது. அவனைப் பிடித்துக் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 13–1–1983 அன்று காலை 11.00 மணிக்கு தென்காசி சிந்தாமதார் என்பவர் தன் மனைவி பீரம்மா பீவி ஆற்றிலே குளித்து விட்டு வரும்போது 12 கிராம் எடையுள்ள கருக மணியை யாரோ அறுத்துக் கொண்டு போனதாகக் கொடுத்த புகாரின் பேரில் தென்காசி காவல் நிலையக் குற்ற எண் 56/83-ன் கீழ் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பொன்னுசாமி என்ற சலவைத் தொழிலாளி இது குறித்து விசாரணை செய்யப்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

பட்டார். பீரம்மா பீவி அவர்களால் அவர்தான் குற்றம் செய்தார்
என்று அடையாளம் காட்ட முடியவில்லை. வழக்கு விசாரணை
யில் உள்ளது. இது சம்பந்தமாக, பிடித்துக் கொடுத்தும்
நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்பது சரியல்ல என்று
சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையா, பொய்யா என்பது
விசாரணை முடிவில் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இன்னும் வேறு ஏதாவது செய்திகள் சொல்ல
முடியும் என்றால், தகவல்கள் தர முடியும் என்றால், தரும்படி
அவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவரே இன்னொரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்
கள். வாசுதேவநல்லூரில் ஒரு இஸ்லாமியரின் கடை சூறை
யாடப்பட்டது.

(முற்பகல் 11–20)

முகமது அலி என்பவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்
என்று பிரச்னைக்குரிய ஒரு செய்தியை அவர்கள் சொல்லியிருக்கி
றார்கள். யாரோ ஒருவருடைய என்பதற்கும், ஒரு வியாபாரி
யுடைய என்பதற்கும், குறிப்பிட்ட ஒரு மதத் தலைவருடைய
என்று கூறுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, ரொம்ப
அக்கறையோடு நான் கவனித்து கேட்டுப் பதிலைப் பெற்றிருக்கி
றேன். அதைச் சொல்ல வேண்டியது என்னுடைய மாபெரும்
பொறுப்பு என்று நினைக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி பகுதியில் ஜூன் 1982ல்
கலவரம் நடந்தபொழுது ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் இது ஒன்றா
கும். 11–6–1982 அன்று அதிகாலை இரண்டு மணி அளவில்
வாசுதேவநல்லூர் முகமது அலி ராவுத்தரையும், சையத் சுலை
மான் என்பவரையும் ஒரு வகுப்பினர் தாக்கியதில் அந்த
இருவரும் படுகாயம் அடைந்தனர். அவர்களுடைய
கடைகளையும் சூறையாடி உள்ளனர். காயமடைந்த
இருவரும் பாளையங்கோட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்
பட்டனர். முகமது அலி ராவுத்தர் 11–6–1982 அன்று இரவு
9–30 மணி அளவில் மரணம் அடைந்தார். சையத் சுலைமான்
மருத்துவமனையிலிருந்து சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பி
னார். இச்சம்பவத்தின் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு,
எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர். குற்றப் புலனாய்வுத்
துறையின் குற்றப் பிரிவு இவ்வழக்கினைப் புலன் விசாரணை
செய்து வருகின்றது.

எப்படிச் சொல்கிறேன் என்றால், அவர்களைத் தாக்கியது
யார் என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக்
குறிப்பு இருப்பதை நான் இங்கே இந்த மாமன்றத்தில் சொல்லும்
பொழுது, இந்த அரசு அதிகாரிகள் அவரவர்களுக்கு கிடைக்கின்ற
தகவல்களை அப்படியே தருகிறார்கள் என்பதையும், அதிலே
**ஜாதி வேறுபாடுகள், வேறு சுயநலங்களைக் கருதாமல் கொடுக்கி**



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

றார்கள் ; கொடுத்தவுடனே அதை நம்பி விடவில்லை ; விசா
ரணை நடைபெறுகிறது என்பதையும் இங்கே சொல்வதன் மூலம்
உண்மைக் குற்றவாளி யார் என்பது விசாரணைக்குப் பிறகுதான்
தெரிய முடியும். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.
எதுவுமே செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல என்பதற்
காகவே இதை நான் வெளியிடுகிறேன்.

மாண்புமிகு திரு. சுந்தரராஜ் அவர்கள் திருச்சி மாவட்டத்
திலே உள்ள ஒரு பள்ளியில் இரண்டு மாணவர்கள்மீது பொய்
வழக்கு போடப்பட்டுள்ளது என்பதைப் பற்றிக் குற்றம் சொல்லி
யிருக்கின்றார்கள். மாணவர்கள்மீது பொய் வழக்குப் போடு
வதன் மூலம் இந்த அரசுக்கு ஆக வேண்டிய அவசியம் எதுவுமே
இல்லை. ஏனெனில் இப்பொழுது தமிழ்நாட்டில் மாணவர்
களுடைய போராட்டம் என்பது பிரச்னையாக இல்லை என்
பதையும், அவர்கள் படிப்பில் காட்டுகின்ற நிலைமைகள்
மேலோங்கி நிற்கின்றன என்பதையும், அவர்களுடைய பிரச்னை
களை அவ்வப்பொழுது கல்வியமைச்சரவர்களோ. அதிகாரிகளோ
கேட்டுப் பேசி அல்லது ஆங்காங்கே இருக்கின்ற முதல்வர்கள்
அல்லது பள்ளியிலே இருக்கின்ற பொறுப்பாளர்கள் அதைச் சரி
செய்து கொள்கிறார்கள் ; சரி செய்ய முயல்கிறார்கள் என்பதை
யும், ஏதாவது தவறு நடந்தால்கூட அதை மிகைப்படுத்தி செய்தி
கள், பத்திரிகைளிலே செய்தியாக வந்து விட்டாலும் கூட அதை
உண்மையாக்கி விடாமல் பேசித் தீர்த்து விடுகிறார்கள் என்ற
காரணத்தால் தமிழ்நாட்டில் மாணவர்கள் பிரச்னை பெருமள
விற்கு என்று கூட அல்ல ; நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பதே
முக்காலே அரைக்கால் வீசம் இல்லை என்ற அளவிற்கு அந்த
நிலைமைகள் உருவாகி இருக்கின்றன என்கின்ற சூழ்நிலையில்
ஒரு பொய் வழக்கு போட வேண்டிய அவசியம் அரசுக்கோ,
காவல்துறைக்கோ வரவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

நடந்தது என்ன என்பதை எனக்குத் கிடைத்த தகவலிலி
ருந்து குறிப்பிட விரும்புகிறேன்.

12–3–1983 காலை 9–00 மணிக்கு தா. பாளூரில் இருக்கும்
எமனூர் என்கிற இடத்தில் பிளஸ் 2 படிக்கும் மாணவர் பவுன்
மோகன் என்பவரும், தாதம்பேட்டை பாளூரில் வானொலிப்
பெட்டி பழுது பார்க்கும் கடை வைத்திருக்கும் அப்துல் சலாம்
என்பவரும் குளித்துக் கொண்டிருக்கும்போது இருவருக்கும் சச்ச
ரவு ஏற்பட்டு, அப்துல் சலாம் என்பவர் இரும்புக் கம்பியால்
பவுன் மோகன் மீது குத்திக் காயம் ஏற்படுத்தி விட்டார்; சாதார
ணக் காயம் என்று கொடுத்திருக்கிறார்கள். இப்படிக் காயம்
ஏற்பட்டிருக்கிறது. பவுன்மோகன் கொடுத்த புகாரின் பேரில்
தா. பாளூரில் காவல் நிலையக் குற்ற எண். 92/83, இந்தியத் தண்
டனைச் சட்டம் 324இன் கீழ் வழக்கு 12–3–83 அன்று பதிவு
செய்து எதிரி அன்றே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு

அனுப்பப்பட்டார். 15—3—83 அன்று அப்துல் சலாம் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு 23—3—83 அன்று நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பிறகு அன்று பகல் சுமார் 12—30 மணிக்கு பவுன்மோகன் படிக்கும் அரசு மேல்நிலைப் பள் ளியைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவர்கள் துரைராஜன், கிருஷ்ண ராஜ், சீனிவாசன் மற்றும் ஒன்பதாவது வகுப்பு படிக்கும் அன்பழ கன் ஆகிய நான்கு மாணவர்களும் அப்துல் சலாமுக்குச் சொந்த மான வானொலி பழுது பார்க்கும் கடையினுள் நுழைந்து, கடையி லிருந்த சுமார் ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள பொருட்களைச் சேதப் படுத்தி கடையிலிருந்த அப்துல் சலாம், பிரேம் நசீர் என்பவரைக் கைகளால் அடித்துக் காயம், சாதாரணக் காயம் ஏற்படுத்தினார் கள்.

மேற்படி பிரேம் நசீர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 448, 427, 323-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கில் இருப்பவர் தலைமறைவாகி இருப்பதாக அறிவித்து வழக்கு ஒன்று 30—3—83 அன்று நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆக மாண்பு மிகு உறுப்பினர் மாணவர்கள் மீது ஒரு பொய் வழக்குப் போடப் பட்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு நா. சுந்தரராஜ் :** பேரவைத் துணைத் தலைவரவர் களே, முதலமைச்சரவர்கள் சொன்ன முதல் பகுதி சரி. அங்கே சண்டை சச்சரவு, மோதல் ஏற்பட்டது உண்மை தான். அங்கேயிருக்கக்கூடிய ஒரு ஒப்பந்தக்காரர், ஒரு தனியார், அவர்கள் தூண்டுதலின் பேரில், காவல் துறை உதவியோடு, அந்த மாணவர்களை பரிட்சை எழுதுவதற்கு கூட தடுக்கின்ற வகையிலே, அவர்களே அடித்திருக்கிறார்கள். அது சம்பந்த மாக மாணவர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். மற்றும் டி. ஜி. பி.-க்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த ஒப்பந்தக்காரரின் தூண்டுதலின் பேரில் மாணவர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டிருப்பதாக எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர் களே, தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பொய் வழக்கு போட்டு இருப்பதாக சொல்லக் கூடிய அந்த தனி நபர் யார்? தூண்டி விட்டவர் யார் என்பதை தனியாக என்னி டம் சொல்ல வேண்டும். அந்த மனுவைத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். அந்த மனு எனக்கு வரவில்லை. வந்தால் நிச்சயமாக அதை விசாரித்து பதில் சொல்லியிருப்பேன். அன்றே என்னிடம் சொல்லியிருந்தால், இந்த பதிலையும் சேர்த்து சொல்லி யிருந்தால், இதையும் சேர்த்து விசாரித்து நான் பதில் சொல் வதற்கு உதவியாக இருந்திருக்கும்.





பெரியார் மாவட்டத்தில், அழிச்சூர் காவல் நிலையத்தில் விசைத்தறி தொழிலாளர்கள் மீது பொய் வழக்கு போட்டிருப்ப தாக மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி சொல்லியிருக்கிறார் கள். அழிச்சூர் காவல் நிலையத்திற்குட்பட்ட, அனுமந்தப் பட்டி கிராமத்தில் உள்ள அந்த ஆலையில், 19 விசைத்தறி தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களில் 15 பேர் கட்சி சார்பற்றவர்கள். எஞ்சிய 4 பேர் ஏ.ஐ.டி.யூ.சி சங்கத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். தங்கராஜ் என்பவரைத் தவிர மற்ற வர்கள் ஆலை நிர்வாகத்தினர் அளிக்கின்ற போனசை ஏற்றுக் கொள்ள உடன்பட்டனர். 12—11—1982 அன்று அவர்கள் சுமார் காலை 9-00 மணி அளவில் ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தைச் சார்ந்த 19 விசைத் தொழிலாளர்கள், ஆலைக்குச் சென்று, தங்கராஜுக்கு ஆதரவாகச் சென்று அங்கே கைகலந்ததால், அலு வலகத்திலிருந்த பொருட்கள் சுமார் ரூ. 500 பெறுமான அள விற்கு சேதம் அடைந்தன. அங்கே கைத்தறி ஆலைகளில் பணி புரியும் மற்ற தொழிலாளர்களுக்கும், சிறு காயங்கள் ஏற்பட்ட தால், அவர்கள் அனைவரும் சிகிச்சை பெற்றிருக்கி றார்கள். இதுசம்பந்தமாக அழிச்சூர் காவல் நிலையத்தில், பிரிவு எண் 147, 427, 323 மற்றும் 335-ன்படி தண்டனை பெற்று, சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. 19 பேரும் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்ட பின்பு கோர்ட்டு ஜாமீன்லே விடுவிக்கப்பட்டனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. காவல்துறையினர் பொய் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்பது சரியல்ல. ஏதாவது பதில் சொல்லவேண்டுமென்றால் சொல்லலாம். இது நீதிமன்றத் திற்குப் போய் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** அதாவது இதுசம்பந்தமாக ஏற் கனவே அங்கே சில சச்சரவு இருப்பதன் காரணமாக ஒரு சம்பவம் நடந்துவிட்டது. அதனால் சம்பந்தமில்லாத தொழிற் சங்கத்தைச் சார்ந்த, தனக்கு ஆகாத பல பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, அதில் சம்பந்தமில்லாத கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள் மீதெல்லாம் வழக்கு தொடரப் பட்டிருக்கிறது. அதைச் சரியானபடி விசாரணை நடத்தினால் அந்த உண்மை வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வழக்கு நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறது. என்ன முடிவு வருகிறது என்று பார்ப்போம். அதற்குப் பிறகும், உங்களுக்கு திருப்தி இல்லை யென்றால், அதற்கு மேலும் நானே விசாரித்து மீண்டும் வழக்கு மன்றத்திற்குப் போவதா என்பதைப் பற்றி பார்க்கலாம்.

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1983 ஏப்ரல் 20

மாண்புமிகு குமரி அனந்தன் ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். ** **

பொது மக்கள் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்வதற்காகத் தான் இந்த மாமன்றத்தில் நாம் கூடியிருக்கிறோம். நிர்வாகத்தில் குறைபாடுகள், நிர்வாகத்தை நடத்திச் செல்லும் அதிகாரிகள் செய்யும் குற்றங்கள், மக்கள் படும் அவதிகள் ஆகியவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு ** **

(முற்பகல் 11-30)

மேலெழுந்தவாரியாகச் சொல்கிறேன். ஏன் என்றால் வழக்குமன்றத்திலே இருப்பதினாலேதான். இதில் திரு முத்து தலைமறைவாக இருக்கிறார். குற்றம் செய்யாதவர் ஏன் தலைமறைவாக இருக்கவேண்டும் என்று நான் கேட்கிறேன். அதே சமயத்திலே ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை, நான் இங்கே பெயரைக் குறிப்பிடாமல் இருப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அதைச் சொன்னால், விசாரணைக்குள் போவதாக இருக்கும். இது அவர்களுக்குத் தெரியும். நாம் அந்த வகையில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள்— நான் காவல்துறை பற்றிச் சொன்னது போல்—எங்கோயிருந்து தனியாக வந்து பணியைச் செய்கின்றவர்கள் அல்ல. பொதுவாக பல அரசியல் கட்சிகளிலே இருப்பவர்கள் கூட இருக்கிறார்கள். எங்கள் கட்சியிலே இருக்கின்றவர்களைக் கூட கைது செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெளிவாக்க விரும்புகிறேன். ஆகவே இது தவிர்க்க முடியாத நிலையில் ஒரு நடவடிக்கைக்கு பொதுக் கொள்கையாக எடுத்துக்கொள்வது என்ற வகையில் நாம் சிலவற்றை வெளியிலே எடுத்துச் சொல்லக்கூடாதவைகளாக இருந்தாலும்கூட நமது கட்சிக்கு கெட்ட பெயர் வந்துவிடும் என்று நான் எண்ணினாலும்கூட, பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் நடவடிக்கை எடுக்காமல் இருக்கமுடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சில சமயங்களில் சிலர் பல்வேறு கட்சிகளிலே போய்ச் சேர்ந்துவிடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஆட்சியிலே இருக்கும்போது பச்சை குத்திக் கொண்ட ஒருவர், ஆட்சியிலேயிருந்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அகற்றப்பட்டவுடனே, ஆசையாகக் குத்திய பச்சையை அழித்துவிட்டு வேறு அரசியல் கட்சியிலே போய், நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடனே திரும்பவும் வந்துவிட்டார். அவரை வெளியேற்றி இருக்கிறோம். இதைப்போலத்தான் நடக்கிறது. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இப்படியும் சிலர் இருக்கிறார்கள். ஆகவே நாம் நடவடிக்கை எடுப்பது என்று வரும்போது, அதிலே வேறுபாடுகள் பார்க்காமல், விருப்பு வெறுப்புகளுக்கு உட் படாமல் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே வழக்குமன்றத்திலே இருந்து தீர்ப்பு வெளியிட்ட பிறகுதான் இது எந்த அளவிற்கு வரும் என்பதை நாம் முடிவாகச் சொல்லமுடியும். ஆகவே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அன்றுகூட சிலர் பேசினார்கள். மதுவிலக்கு பற்றி. இப்போது லைசென்ஸ் எல்லாம் கொடுத்து, விற்பனை அதிகமாகியிருக்கிறது. ஆகவே கள்ளச்சாராயம் இப்போது குறைந்திருக்கிறது என்று சொன்னாலும் கூட இப்போது கள்ளச் சாராயம் அதிகமாக விற்கப்படுகிறது என்று சிலர் கருத்துச் சொன்னார்கள். நான் உண்மையைச் சொல்கிறேன். எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி பல பேர்கள் வெவ்வேறு இடங்களுக்கு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதும், ஆங்காங்கே சென்று இப்படிப்பட்ட பணியைச் செய்ய முடியுமா என்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் நான் சூசகமாக மட்டும் வெளியிட விரும்புகிறேன். எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை குறிப்பாகச் சொல்ல நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் தாட்சண்யமே இல்லை. யாருக்காகவும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எங்கள் கட்சியைப் பற்றிச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது என்ற காரணத்தால், அந்த வகையில் சொல்கிறேன். இதிலே ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எங்களுக்குத் தகவல் கிடைத்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கிறோம். கட்சியிலேயிருந்தும் சிலர் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே வெளியிட விரும்புகிறேன். ஒரு நடவடிக்கை எடுக்க முற்பட்டும் சில பல மாதங்களுக்கு முன்பு ராக்கெட் என்பார்களே, அதைப் போல், பெரிய பெரிய அலுவலர்கள், அல்லது பொறுப்பிலே இருப்பவர்கள், அல்லது பிரமுகர்கள், இவர்கள் எல்லாம் இந்த சாதாரண விஷயங்களில் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களாக இருப்பவர்கள் இங்கிருந்து எங்கே போனாலும் அங்கேயெல்லாம் அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கக்கூடிய நிலைமை வளர்க்கப்பட்டு விட்ட காரணத்தால் அதை எளிதாக தீர்த்து வைக்க முடியவில்லை. கொஞ்சம் கண்டிப்பாக நடந்தாலன்றி கடுமையான நடவடிக்கை எடுத்தாலன்றி அவர்களுக்கு பெரு நஷ்டம் ஏற்பட்டாலன்றி அவர்களுக்கு தண்டனைகளை அதிகமாக வழங்கப்பட்டாலன்றி, அவர்கள் இதிலேயிருந்து விலகுவார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே நாங்கள் கொஞ்சம்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

அதிகமாகவே அக்கறை காட்டி, டி.ஐ.ஜி. ஷர்மா போன்ற
வர்கள் இடத்திலே எல்லாம் இதிலே பொறுப்பை ஒப்படைத்து
அதிலே அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் ஓரளவுக்கு
என்பதையும் இங்கே நான் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடை
கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநா
யகர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
சொன்னபோது நான் நிர்வாகத்தைப் பற்றி இங்கே சொல்
வதற்குக் காரணம், மாமன்றத்திலே சில பாதுகாப்பு வேண்டு
மென்ற முன்னுரையோடு சொன்னார்கள் என்று எச்சரிக்கை
யாக வார்த்தைகளை நான் பயன்படுத்தியதாக எனக்கு
முதலமைச்சர் அவர்கள் நினைவுபடுத்தியதற்கு நான் என்னு
டைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்
கிறேன்.**

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, ஒரு வழக்கு போடப்பட்டு இருக்கிறது
என்று சொன்னார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால்
அதைப்பற்றி இங்கே விவாதிப்பது அந்த வழக்குக்கு பாதகமாக
அமையும் என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.
ஆகவே, அந்த வழக்கைப் பற்றி அவர் குறிப்பிட்ட அந்தப்
பகுதிகளை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடுவது நல்லது என்று
கருதுகிறேன்.

அவர் அதைப் பற்றி ஏற்கனவே பேசியிருக்கிறார் என்பதால்,
நானும் அதற்கு பதில் சொன்னேன். மறுபடியும் அதை உறுதிப்
படுத்துகின்ற விதத்தில் அவர் இங்கே குறிப்பிட்டுள்ளதால்
அந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்களை--நான் சொன்னதையும்
சேர்த்து—அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொல்
வதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. பெரும்
தலைவர் காமராஜர் அவர்கள் எத்தகைய கொள்கைகளுக்காக
இருந்தார் என்பது பற்றியும் எனக்குச் சந்தேகம் கிடையாது.
ஆனால் எப்படியோ வேண்டாதவர்கள் சிலர் சில இயக்கங்
களிலே சேர்ந்து விடுகிறார்கள். அவர்கள் மீது வழக்குப்போடு
கிறபோது அதைப் பற்றி உண்மை நிலையை அறிந்து சொல்ல
வேண்டியது நீதிமன்றத்திற்கு இருக்கிறது. அதைப்பற்றி
இங்கே சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.



136043

1983 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கு பற்றி
குறிப்பிட்டவைகளை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடுமாறு
ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பி
னர் கிட்டப்பா அவர்கள் குற்றச்சாட்டு ஒன்றைச் சொல்லி
யிருக்கிறார்கள். ஆர்.கே. மட் ரோடு சாலையில் உள்ள சாராயக்
கடை அடைக்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்த
கங்காதரன், மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர் காவல் நிலை
யத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு, அவர்கள் வாயில் சாரா
யத்தை ஊற்றி, லாக்கப்பில் வைத்தார்கள் என்று குற்றச்சாட்டு
சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒன்றை நான் மாண்புமிகு
உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இதுபோன்ற
குற்றச்சாட்டு சொல்கிறபோது இப்படி எல்லாம் சொல்லப்
படுகிறது என்று சொல்லலாம். என்னிடத்தில் சொன்னார்கள்
என்று சொல்லலாம். சாராயத்தை ஊற்றி லாக்கப்பில் வைத்
தார்கள் என்று சொன்னால், ஏதோ அவர்கள் முன்னாலேயே
அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது போன்று சொல்வது போல் இருக்
கிறது. இருந்தாலும் பதில் சொல்ல வேண்டிய கடமையில்
நான் இருப்பதால் சொல்கிறேன்.

திருவாளர்கள் கங்காதரன் மற்றும் பூச்சி என்கிற ராதா
கிருஷ்ணன் ஆகிய இருவரும் 17—3—1983 அன்று சுமார் அதிகாலை
2-30 மணிக்கு குடிபோதையில் ஆர்.கே. மட்ரோடு கதவிலக்கம்
52-ல் உள்ள ஒரு ஒயின்கடை முன்பு பாலகிருஷ்ணன் என்பவரோடு
சண்டையிட்டதோடு மறுதினம் அந்த ஒயின் கடை
திறக்கக்கூடாது என்றவகையில் முயற்சி செய்ததாகவும், அது
தொடர்பாக பாலகிருஷ்ணன் என்பவர் கொடுத்த புகாரின்
பேரில் நகர குற்றச் சட்டம் பிரிவு 75-ன் கீழ் மொத்தம்
5 சிறிய வழக்குகள்—பெட்டி கேசஸ் 633/83 மற்றும் 664/83
வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. திருவாளர் கங்காதரன்
மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோரை காவல் உதவியாளர் திரு.
தர்மலிங்கம் கைது செய்தார். அவர்கள் இருவரும் குடி
போதையில் இருந்தார்கள் என்பதற்கு சான்றிதழ்கள் பெறப்
பட்டன. இவ்வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு,
அது தற்போது சைதை 18—வது பெருநகர் குற்றவியல் நீதி
மன்றத்தில் சி.சி. எஸ். 1718/83-ல் விசாரணையில் உள்ளது.

(முற்பகல் 11-40)

இந்த இரு குற்றவாளிகளும் அவர்களுடைய கூட்டாளிகளும்
சேர்ந்து தங்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளதாகக்
கூறி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து 19—3—1983 அன்று மந்த
வெளி தபால் அலுவலகத்தின் முன்பு அடையாள உண்ணாவிரதம்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

இருக்க சென்னை நகர காவல்துறை துணை ஆணையாளர் (சட்டம்-ஒழுங்கு) (தெற்கு) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். ஆனால் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவில்லை.

இதை இங்கே குறிப்பிடுவதற்கு இன்னொரு முக்கிய காரணம் உண்டு. அவர்கள் குடித்திருந்தார்களா இல்லையா என்பதை அதிகாரப்பூர்வமாக ஆதாரங்களோடு பரிசீலித்து அந்த ஆதாரங்களை வைத்து வழக்குகள் போடப் பட்டிருக்கின்றன. அப்படி இருந்தும் அவர்கள் குற்றம் செய்ய வில்லை, வாயில் ஊற்றினார்கள் என்றால், வாயில் ஊற்றினால் மட்டும் அவர்கள் குடித்திருக்கிறார்கள் என்று அந்த அத்தாட்சியை மருத்துவர்கள் தரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே அந்த அடிப்படையில் வழக்குகள் போடப்பட்டிருக்கும் போது அவர்கள் இருந்துவிட்டார்கள். இருக்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது என்று சொன்னால், உண்ணாவிரதம் இருக்கவில்லை. ஆகவே, அந்தப் பிரச்சினை இல்லை. ஆனாலும் என்னவோ மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்கு என் மீது அவ்வளவு அன்பு. ஆகவே, இந்தக் குற்றச் சாட்டை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள்.

**திரு. ப. நெடுமாறன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிரச்சனையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் எழுப்பினார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** திரு. கிட்டப்பா அவர்கள் என்று குறிப்பு இருக்கிறது.

**திரு. ப. நெடுமாறன் :** ஒருவேளை அவரும் குறிப்பிட்டிருக் கலாம். இதே பிரச்சினை, மயிலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் நடைபெற்ற இந்தப் பிரச்சினை சம்பந்தமாக திரு. கங்காதரன் என்பவரை போலீஸ் ஸ்டேஷனில் அடித்து, கைகளை முறித்திருக் கிறார்கள். அவர் குடித்திருக்கிறாரா இல்லையா என்ற பிரச்சினைக்குள் நான் போகவில்லை. வழக்கு நடக்கிறது. ஆனால் போலீஸ் ஸ்டேஷனில் அவரை அடித்து கைகளை முறித்ததற்கு டாக்டர் சர்ட்டிபிகேட் இருக்கிறது. அது போக, இந்தமாதிரி போலீஸ் ஸ்டேஷனில் அடித்து கைகளை முறித்ததை கண்டித்து மயிலாப்பூரிலே ஒரு சர்வகட்சி கூட்டம் சில நாட்களுக்கு முன்னாலே நடத்தப்பட்டது. எல்லாக் கட்சித் தலைவர்களும் அதிலே பேசியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத் திற்கு ஏற்பாடு செய்தார் என்பதற்காக எங்கள் கட்சியைச் சேர்ந்த மாணவர் பிரிவு தலைவர் உன்னீர்பாட்சா அவர்கள் மீது நேற்று அந்த போலீஸ் ஸ்டேஷனில் ஒரு வழக்கு தாக்கல் செய்து அவரை வீட்டிலே வந்து அந்த போலீசார் மிரட்டியிருக் கிறார்கள். இது எந்தவகையிலே சரியானது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.



1983 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சர்வ கட்சிக் கூட்டம நடைபெற்றிருக்கிறது என்றும் அது பற்றி அங்கே பேசியிருக் கிறார்கள் என்றும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவர் நெடுமாறன் அவர்கள். அதில் கலந்துகொண்டதற்காக ஒருவரை அழைத்துச் சென்று மிரட்டுவதற்கு முயன்றிருக்கிறார்கள் என்றும் அழைத்துச் செல் லப்பட்டவர் கையை முறித்துவிட்டார்கள் என்றும் சொல்லியிருக் கிறார்கள். அந்த கங்காதரன் என்பவரை..........

**திரு ப. நெடுமாறன் :** துணைத் தலைவரவர்களே, கங்காதரன் அடிக்கப்பட்டிருக்கிறார். போலீஸ் ஸ்டேஷனில் அவருடைய கை முறிக்கப்பட்டிருக்கிறது. அவர் மீது தனியாக வழக்கு நடக்கிறது. இந்த சம்பவத்தை கண்டிப்பதற்காக அனைத்துக் கட்சிக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த எங்கள் கட்சியைச் சேர்ந்த மாணவர் பிரிவுத் தலைவர் உன்னீர்பாட்சா என்பவர் மீது நேற்றைய தினம் பொய் வழக்கு பதிவுசெய்து, அவருடைய வீட்டிலே போய் உடனடியாக போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று அச்சுறுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம. ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, இந்த நிலையிலே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாணவர் பிரிவு தலைவர் எந்த காரணத்தின் அடிப்படையிலே அழைக்கப்பட்டார் என்பதைப் பற்றி இங்கே கூறியிருப்பாரானால் எந்தக் குற்றச்சாட்டை வைத்து அழைத் திருக்கிறார்கள் என்று நான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். ஆனால் அழைக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்போது வழக்கு பதிவு செய்யப்பட்டது, அவர்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை; விசாரிக்கிறேன். இருந் தாலும் கையை முறித்தார்கள் என்று இப்போது சொல்லப் படுகிறது. இங்கே இருவர் சொன்னதில் அது இல்லை. சாரா யத்தை ஊற்றினார்கள் என்று இருக்கிறது.

**திரு நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் கையை முறித்தார்கள் என்று யாரும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். நான் பேசும் போதே சொல்லியிருக்கிறேன். கங்காதரன் என்ப வரை சப்-இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் அவர்கள் காவல் நிலையத்திலே சாரயத்தை அவருடைய வாயில் கூட அல்ல, உடம்பிலேயே ஊற்றி, அவர் சாராயம் குடித்திருக்கிறார் என்று சொன்னார்கள். உண்மையில் அவர் சாராயம் குடிக்கவில்லை. ஆனால் அவருடைய சிறு நீரைக்கூட டெஸ்ட் செய்யாமலேயே, அவர் குடிபோதையில் இருந்ததாக சர்டிபிகேட் வாங்கி அவரை அடித்திருக்கிறார்கள். அதற்கான மருத்துவமனை சான்றுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னதைப் போல, காவல் நிலையத்திலே இதுபோன்ற அக்கிரமம் நடந்ததன் காரணமாக, சர்வகட்சி கூட்டம் நடத்தப்பெற்றிருக்கிறது. போலீசாருடைய அக்கிரமத்தை அதிலே கண்டித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள், அதற்கு பதில் மட்டும் சொன்னால் போதாது, கடுமையான நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சாராயத்தை வாயில் ஊற்றினார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. இன்னொருவருடைய குற்றச்சாட்டு உடம்பிலே ஊற்றினார்கள் என்பது. அவருடைய சிறுநீரைக் கூட பரிசோதிக்காமல் அத்தாட்சிக் கொடுத்திருக்கிறார்கள், அப்படிக் கொடுத்தது தவறு என்பது இன்னொரு குற்றச்சாட்டு. கையை முறித்திருக்கிறார்கள் என்பது இன்னொரு குற்றச்சாட்டு, இவை அத்தனைக்கும் ஆதாரம் இருக்கிறது என்பது இரு பக்கத்திலேயும் சொல்லப்படுகிற வாதம். இதற்கு வழக்கு மன்றம் தான் தீர்மானிக்க முடியுமே தவிர, அதற்கு முன்னால் நான் பதில் சொல்ல வேண்டும் என்பதோ, நடவடிக்கை எடுப்பேன் என்று நான் சொல்லவேண்டும் என்பதோ, பொருத்தமாக இருக்காது. ஆனால், ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லவிரும்புகிறேன். வழக்கு மன்றத் தீர்ப்புக்குப் பிறகு கை முறிக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் இருந்தால், சிறுநீர் பரிசோதனைக்கு முன்னாலேயே தவறான சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால், அதற்குக் காரணமானவர்கள் மீது, அப்படிப்பட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்று நான் உறுதியாக கூறவிரும்புகிறேன். அதிலே தயவு தாட்சண்யம் இருக்காது. இதற்காகத்தான் நான் முன்பே பேசும்போது, $1\frac{1}{2}$ மணி நேரம் விளக்கத்தைச் சொன்னேன். சட்டத்தைக் கையிலே வைத்திருப்பவர்கள் அநியாயம் செய்ய முற்பட்டால் எப்படி தண்டனை வழங்கப்படவேண்டும் என்று சுட்டிக் காட்டியது கூட இதுபோன்றவைகளை நினைத்துத்தான் என்று சொல்ல முற்படுகிறேன்.......

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, என்னுடைய உரையில் குறிப்பிட்ட சில செய்திகளைப் பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அபிப்பிராயத்தை இங்கே கேட்டதற்குப் பின்னால், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரைகளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தொடங்கியிருக்கிற காணத்தால் நான்சொன்ன மற்றச் செய்திகள் எல்லாம் விடுபட்டிருக்குமோ என்ற அச்சத்தின் காரணமாக நினைவு படுத்த விரும்புகிறேன்.

மிக முக்கியமான சில செய்திகளை நான் சொன்னதிலே, ஒன்றைக்குறிப்பாக சொல்லவிரும்புகிறேன். தீர்த்தகிரியம்பட்டி என்ற இடத்திலே சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுவதற்





காக ஒதுக்கப்பட்ட இடத்தை, ஒருவர் ஆக்கிரமித்துக் கொண்ட காரணத்தால், அதைப்பற்றி நான் அவையினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகவும், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன், காரணம் அந்த இடத்திலே இதன் காரணமாக பெரிய தகறாரே வர இருந்தது. அதற்காக அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் உண்ணா நோன்பு இருக்க வேண்டும் என்று, சர்வகட்சியைச் சேர்ந்தவர்கள் நிச்சயம் செய்து போராட்டம் செய்யத் துவங்கியபோது, வேண்டாம் நான் அவையிலே வைத்துவிடுகிறேன் என்று சொன்னேன். ஆனால் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், அது போலீஸ் நடவடிக்கைகளுக்கு உட்பட்டது என்று கூறி இங்கே எடுக்க மறுத்துவிட்டார்கள். போலீஸ்காரர்களும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 17 நாட்கள் காத்திருந்துவிட்டு, அவர்கள் உண்ணா நோன்பும் இருந்தார்கள். அதையும் இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னேன். சொன்னதற்குப் பிறகு, யார் புகார்கள் கொடுத்தார்களோ, அவர்களை இப்போது போலீஸ்காரர்கள், ஹெரேஸ் பண்ணுவது என்று சொல்வார்களே அந்த வகையில் துன்புறுத்துகிற காரணத்தால், இதையும் சேர்த்து முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நான் இந்த மன்றத்திலே முதலிலே சொன்னபோது போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை மன்றத்திலே சொன்னதற்குப் பிறகு, இப்போது, அவர்கள் துன்புறுத்தப்படுவதால், அதையும் சேர்த்து நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவனத்திற்கு என்ற சில செய்திகளைச் சொல்லி, அதற்குப் பிறகு அதைச் சொன்னதற்காக அவர்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றால், அது உண்மையிலேயே கடுமையான குற்றம் தான் என்பதையும்; நாளையை தினம் முடியுமானால் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் என்னைக் காலையிலே 11 மணிக்கு இங்கே சந்திப்பார்களேயானால், நான் எந்த வகையிலே நடவடிக்கை எடுக்க உதவிசெய்ய முடியுமோ, அந்த நடவடிக்கையை எடுக்க முற்படுவேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆதாரத்தோடு சொல்லவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, சான்றாக ஏற்கனவே அந்த சத்துணவு கூடத்திற்கு என்று ஒதுக்கப்பெற்ற இடத்தில், முன்பே கட்டிடம் இருந்தது அல்லவா என்று போலீஸ்காரர்கள் அவர்களை மீண்டும் மீண்டும் கேட்கிறார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1983 ஏப்ரல் 20

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11-50).

நான் வைத்திருக்கின்ற குறிப்பிலே சத்துணவுக் கூடத்தைக் கட்டுங்கள் என்று அந்த ரூரல் டெவலெப்மென்ட் ஆஃபீஸருக்குப் போட்ட உத்தரவு இருக்கின்றது. ஆகவே ஏற்கெனவே நாம் தேர்ந்தெடுத்த இடத்தில் கொடுங்கள் என்று உத்தரவு இருக்கின்றபோது இப்போது போலீஸ் ''ஏற்கெனவே அங்கே கட்டிடம் இருந்ததல்லவா,கட்டிடம் இருந்தல்லவ.'' என்று கேட்டுக்கொண்டிருப்பதாகத் தகவல். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மிகுந்த நன்றியோடு பாராட்டோடு ஏற்றுக்கொள்கிறேன். அவர்களைச் சந்தித்து அந்தத் தகவல்களை நான் கொடுக்க இருக்கிறேன். இன்றைக்கே சந்திக்க முடிந்தாலும் சந்திப்பேன். ஏன் என்றால் நாளை நான் ஊரிலே இல்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஊரிலே இருந்து வந்து சொல்கின்ற வரை நான் காத்திருக்கத் தயார்.

அடுத்து சென்னையிலிருந்து புறப்பட்ட திருவனந்தபுரம் மெயிலில் அரக்கோணம் அருகே டிசம்பர் 26 அன்று முகமூடி அணிந்த கொள்ளையர்கள் ரூ. 50,000 மதிப்புள்ள நகைகளை கொள்ளையடித்து விட்டனர் என்றும் அது என்னஆயிற்று என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

26–12–1982 அன்று சென்னையிலிருந்து புறப்பட்ட திருவனந்தபுரம் மெயிலில் அரக்கோணத்தைத் தாண்டிச் சோளிங்கர் அருகில் சென்றுகொண்டிருந்தபோது பெண்கள் வண்டியில் ஒரு நபர் தன் வாய்மீது துணியைக் கட்டிக்கொண்டு கத்தியைக் காண்பித்து மிரட்டி பயணிகள், விஜயகுமாரி—கல்லூரி மாணவி, கிரேசி தாமஸ் எர்ணாகுளத்தைச் சேர்ந்த ஆசிரியை, திருமதி சாராம்மாள் தாமஸ் ஆகியோரிடமிருந்து முறையே 2 சவரன்கள், 5 சவரன்கள் 3 சவரன்கள் கொண்ட தங்கச் சங்கிலிகளை கொள்ளையடித்துப் பின்னர் காட்பாடி ரெயில் நிலையத்தை இரயில் நெருங்கும்போது வெளியே குதித்துத் தப்பிச் சென்றுவிட்டான். இது விஷயமாக காட்பாடி இருப்புப்பாதை காவல் நிலையத்தில் இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவு 392-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர் சென்னை சென்ட்ரல் இருப்புப்பாதை காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. சென்னை சென்ட்ரல் இருப்புப்பாதை காவல் ஆய்வாளர் அவர்களால் நேரடி விசாரணை செய்யப்பட்டு வருகிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க காவல் துறை அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. இந்த



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வழக்கிலே கொள்ளை அடிக்கப்பட்டது 10 ஆயிரம்தான் அல்லது
50 ஆயிரம்தான் என்ற பிரச்சினை இல்லை. கொள்ளை அடிக்கப்
பட்டது என்பதுதான். நிச்சயமாக இதைத் தீவிரமாக புல
னாய்வு செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு
கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில்
இன்னொன்றையும் நான் சொல்லவேண்டி இருக்கின்றது.
27–12–1982 அன்று இரவு 1-45 மணி முதல் 2-15 மணி வரை
நாற்றம்பள்ளி காவல் நிலையத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தில்
தேசிய நெடுஞ்சாலையில் 10 அல்லது 15 நபர்கள் தங்களது
முகத்தைத் துணியாலே மறைத்துக்கொண்டு கத்தி, தடி ஆகிய
வற்றைக் கையிலே வைத்துக்கொண்டு வீதியிலே பாராங்கற்களை
வைத்து 6 லாரிகளையும் இரண்டு கார்களையும் வழிமறித்து
லாரி மற்றும் கார்களின் கண்ணாடிகளை உடைத்துத் தாக்குதல்
நடத்தி பயணிகளிடமிருந்து பணம், தங்க நகைகள், கைக் கடி
காரங்கள் ஆகமொத்தம் 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்
களைக் கொள்ளை அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். இந்
தச் சம்பவத்தில் கார் என்.வி.என். 3300-ன் டிரைவரின் தலையில்
பலத்த காயம் பட்டு இறந்து விட்டார். இந்த நிகழ்ச்சியில் காயம்
அடைந்த 11 நபர்களுக்கும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்
கப்பட்டது. இது சம்பந்தமாக நாற்றம்பள்ளி காவல் நிலையத்
தில் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 396, 397-ன் கீழ்
வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

13–1–1981 அன்று கர்நாடக மாநிலம் ஹரிஹரி என்ற இடத்
தில் இதுபோன்ற சம்பவம் ஏற்பட்டு ஹரிஹரி காவல் நிலையம்
இந்தியத் தண்டனைச் சட்டம் 396-ன் கீழ் வழக்கு பதிவு செய்
துள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக மகாராஷ்டிரா மாநிலத்தில்
ஷோலாப்பூர் மாவட்டம் அணிப்பூர் தாலுக்காவைச் சேர்ந்த
கேசவசிங் என்ற சங்கர்சிங் கைது செய்யப்பட்டு விசாரணை
செய்ததில் மேற்படி குற்றவாளிகள் நாற்றம்பள்ளியில் நடந்த
கொள்ளையையும் தாங்களே செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளனர்.
இன்னும் 10 எதிரிகள் தலைமறைவாக உள்ளனர். இன்னும் 10
பேர் தலைமறைவாக உள்ளதன் காரணத்தால் வடாற்காடு
மாவட்டத்தைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகள் கர்நாடகா,
ஆந்திரா மாநிலங்களில் தலைமறைவாக இருப்பவர்களைப் பிடிக்க
விசாரணை செய்து வருகிறார்கள். யாரும் கிடைக்கவில்லை.
ஆகவே அதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சந்தேகப்
படுகின்ற அளவுக்கோ அல்லது இந்த அரசின் காவல் துறை
நடந்தது நடந்துவிட்டது என்று பேசாமல் இருந்துவிட்டார்கள்
என்றோ எதையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வரதட்சிணைச் சாவுகளைப்பற்றி இங்கே பலர் பேசியிருக்
கிறார்கள். [illegible] நம் உள்ளத்தை எல்லாம் பண்படுத்தும்
செய்திதான் என்றாலும் இது பல ஆண்டுகளாக இந்தியா
முழுவதும் இருக்கின்ற பிரச்சினை என்பதும் அண்மைக்

காலத்தில் அதிகமாக இது நடைபெறுகிறது என்பதற்கு ஆதாரமாக செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அடிப்படை காரணம் சமுதாயத்தில் உள்ளவர்கள் தாங்களாக ஓரளவுக்கு மனம் திருந்தினால்தான், திருந்தினால் அன்றி வேறு வழியில் அவர்களை சட்டத்தின் மூலமாக மட்டும் கட்டுப்படுத்திவிட முடியாது என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் அண்மையில் ஒரு செய்தியைச் சொன்னேன், பத்திரிகை நண்பர்களிடம். ஒரு திருமணத்தின் போது மணப்பெண் மேடைக்கு வந்து உட்கார்ந்து தனக்கு தாலிக் கட்டப்போகின்ற, கணவனாகப் போகின்ற அந்த இளைஞர் முதல் நாள் குடித்துவிட்டு இருந்த அந்த நாற்றம் அப்போதும் இருந்ததைக் கண்டு இப்படிப்பட்டவரை நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொல்லி எழுந்து போய் விட்டதை பத்திரிகையிலே படித்து நான் வெளிப்படையாகச் சொன்னேன். அப்படிப்பட்டவர்களுக்கு அரசு பாராட்டைத் தர விரும்புகிறது. வேறு வகையில் உதவி செய்யவேண்டும் என்றால் வேலை கொடுக் வேண்டும் என்றால் கூட அதற்கு ஏதாவது வழி இருக்குமானால் கண்டிப்பாக முன்னுரிமைக் கொடுத்துச் செய்யலாம் என்பதை கூட நான் கருத்தாக வெளியிட்டேன். இப்படிப்பட்ட துணிச்சல் பெண் இனத்திற்கு வந்து ஆகவேண்டும். எத்தனையோ ஆண்டுகளாக பல்வேறு தலைவர்கள் சொல்லியிருந்தாலும், ஐயா பெரியார் அவர்கள் எவ்வளவு கடுமையாக முயற்சித்தும்கூட இன்னமும் இந்த நிலை இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதி, அவ்வப்போது பேசி இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியும் அதைப் பின்பற்றுகின்றவர்கள் அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும்போது எல்லாம் இதைப்பற்றி திருமணங்களிலும் வேறு பல நேரங்களிலும் எடுத்துச் சொல்லியும்கூட இன்னும் இருக்கிறது என்றால் பெண்களுக்கு சொத்து உரிமை வந்தால் அன்றி இது போய்விடும் என்று நான் கருதவில்லை என்பதை நான் சொல்ல முற்படுகிறேன். பெண்களுக்கு சம உரிமை சொத்தின் மூலம் வரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம் ஆகும். இப்போது அது இல்லை. அது வந்து ஆகவேண்டும் என்பதும் சொத்து இல்லாதவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்கும் போது அவர்களுக்கு தொழில் செய்து பிழைக்கக்கூடிய வழியினை நம் சமுதாயத்தில் ஏற்படுத்திக் கொடுத்தால் அன்றி அவர்கள் நிச்சயமாக சுதந்திரத்தோடு வாழ முடியாத நிலையில், உழைத்து சம்பாதிக்கின்ற கணவனுடைய வேலைக்காரியாக இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் நாம் உணர்ந்து அனைத்து அரசியல் கட்சியை சேர்ந்தவர்களும் இந்த கருத்தில் ஒன்றுபட்டு இருப்பதால் எல்லோருமாகச் சேர்ந்து இதற்கு வழி கண்டுபிடிப்பது மட்டும் அல்லாமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து மக்களை இதற்கு தயார் படுத்த வேண்டியிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதை நாம் நிறைவேற்றினால் அன்றி இதை மக்கள்





மத்தியில் எடுத்துச் சொல்லி அவர்களுக்கு இந்த துணிச்சலை ஏற்படுத்தினால் அன்றி வேறு வழி இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நபர்களை கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று துணிச்சலோடு பெண்கள் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் ஜனநாயக மாதர் சங்கத்தினுடைய டெபுடேஷன் மாண்புமிகு முதலமைச்சரிடம் இந்தப் பிரச்சினையைச் சொன்ன போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே பதிலை அவர்களிடம் சொன்னபோது அவர்கள் ஒரு யோசனையைக் கூறியிருக்கிறார்கள். தான் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தால் அது குடும்பத்திற்கு பாரம் என்ற முறையில் பல பெற்றோர்கள் அவர்களை ஹாரஸ் பண்ணுவதும் நிர்ப்பந்தப்படுத்தும் நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட துணிச்சலோடு வெளியே வருகிறபோது அவர்கள் தங்குவதற்கு ஆஸ்டலும், வேலை செய்வதற்கு வாய்ப்பும் என்று அரசாங்கம் பிரையாரிட்டி கொடுக்கு மானால் நிச்சயமாக அந்த துணிச்சலுக்கு பெண்கள் முன்வருவார்கள் என்று சொன்னார்கள்.

[நண்பகல் 12—00]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய எங்கள் கட்சியினுடைய எண்ணத்தை நான் வெளியிடுவதற்கு வாய்ப்புத் தந்ததற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். பெண்களுக்கு சம உரிமை சொத்தில் வேண்டும், அதுபோல் வரதட்சிணை என்று சொல்கிறார்களே அதைக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால் தங்கள் குடும்பத்திலே வேறு வழியில்லை என்ற நிலை இருக்குமானால் அந்தப் பெண்கள் எந்த அளவுக்குப் பாதுகாப்புத் தேவைப்படுகிறார்களோ அதற்கு ஏற்ப சட்டத்தின் மூலமும் வேறு வகைகளில் வேலை போன்றவைகளிலும் முன்னுரிமை கொடுத்து அவர்கள் தகுதிக்கேற்ப வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற வகையில் அடுத்த கூட்டத் தொடரிலே அதற்குரிய சட்டம் வரும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். வேறு வழியில்லை. என்னதான் பிரச்சாரம் செய்தாலும் இப்படி ஒன்றைச் செய்வதைத் தவிர கொஞ்சம் பணம் செலவழித்தாலும் சரி வேறு எந்தக் சூழ்நிலையில் நெருக்கடி ஏற்பட்டாலும் சரி விடுதி கட்டிக் கொடுப்பது என்பதை விட அவர்களுக்கு வாழ்க்கைக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பது என்பதும் அந்த நிலைமையை ஏற்படுத்துவதற்கு எந்த வகையிலாவது நிதி தேடித் தர வேண்டுமென்பதும் இந்த அரசின் ஆசை என்பதை இந்த நேரத்திலே சேர்த்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த அளவிற்கு பேசப்படவில்லை என்பதை உண்மையிலேயே நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அது குறைக்கப்பட்டிருக்கிறது, குடிக்கிறவர்கள் குடிக்கிறார்கள். ஆனால் உயிருக்கு ஆபத்துள்ள பொருள்களை குடிக்காமல் அந்த அளவிற்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். இதிலே என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். இது நடைமுறைக்கு வருமா, இல்லையா என்பது மற்றவர்களுடைய ஒத்துழைப்பைப் பொருத்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் மக்கள் ஏற்றுக்கொள்கிற அந்த நிலைமையையும் பொருத்து இருக்கிறது. அந்த அளவிற்கு நாம் ஒரு பக்கம் பிரச்சாரம் செய்தாக வேண்டும். இன்னொரு பக்கத்தில் நான் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்கிறேன். இந்த கள்ளச் சந்தைக்காரர்கள் என்று சொல்கிற அளவிற்கு, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள், அதற்கு பின்னாலேயிருந்து பணம் கொடுக்கிற பெரியவர்கள்——அதற்கென்ன சொல்லுவீர்கள்——ஏகபோக முதலாளிகள், அப்படிப்பட்டவர்களுக்கு ஆபத்து வரும். நிச்சயமாக அவர்களுக்கு தண்டனை மிக அதிகமாகக் கிடைக்கும். இப்போது ஒரு ஆண்டு தான் உள்ளே பிடித்து வைப்பார்கள் என்று இருப்பது இன்னும் அதிகமாக இருக்கக்கூடிய அளவில் பல ஆண்டுகள் சிறைக்கு உள்ளே இருக்க வேண்டி வந்துவிடுமோ என்ற அச்சம் வருகிற அளவிற்கு நாம் செய்தால் அப்போதுதான் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த கொள்கையைப் பரப்புவதில் நான் மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களோடு உடனிருப்பேன் என்பதை கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போது நாம் எந்த சட்டம் போட்டாலும் அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் சாதாரண அப்பிராணிகளாக இருக்கிறார்கள். ஆகவே இந்த பிரச்னைக்கு என்ன வழியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அழகர்சாமி அவர்களுக்கு ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பெரிய பணக்காரர்கள் கூட இப்போது உள்ளேயிருக்கிறார்கள் என்பதை அவர்கள் தயவு செய்து தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, மற்ற பல புகார்களைப்பற்றியெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சேலம் கிச்சிப்பாளையத்திலே அரிசனப் பெண் மரணம் அடைந்ததைப் பற்றி, ஒரு பெரிய பிரச்னையை நானும் எழுப்பினேன். மற்றவர்களும் கூறினார்கள். அது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ? அதுபற்றி அங்கேயிருக்கிற சர்வக்கட்சிகளும் ஒரு விசாரணை கேட்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கிற பொதுமக்கள்



திரு. ரங்கசாமியும், தலைமைக் காவலர் கணேசனும், காவலர் பெருமாளும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கேட்டீர்களா ?

**திரு ரா. உமாநாத் :** இது தெரியும். டியூட்டியிலே பெயில் ஆனதால் பணி நீக்கம். கொலை என்றது என்னவாயிற்று ?

**மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்:** கிடைத்து இருக்கிற தகவலுக்கு நடவடிக்கை. கிச்சிப் பாளையம் சட்ட ஒழுங்கு துணை ஆய்வாளர் இச்சம்பவம் குறித்தும் மற்றும் தெய்வமணி மரணம் குறித்தும் உடனடியாகக் கோட்டாட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்பத் தவறியதற்காக அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

அம்மாப்பேட்டை இன்ஸ்பெக்டர் திரு. மாரியப்பன் 5–30 மணியிலிருந்து கிச்சிப் பாளையம் காவல் நிலையத்தில் இருந்தும், உடனடியாக விரைவு முன் தகவல் அறிக்கையினை சேலம் கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கத் தவறியதற்காகவும் போதிய மேற்பார்வை செய்யத் தவறியதற்காகவும் அவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேலம் தலைமை மருத்துவ அதிகாரி, மரணம் தூக்கு போட்டதால் சம்பவித்தது என்றும், சடலத்தில் துளிக் காயம் எதுவும் இல்லையென்றும் தெரிவித்து உள்ளார். இதை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. நீங்கள் சொல்வதைப் பற்றி மீண்டும் குற்றப் புலனாய்வுத் துறையின் மூலமாக அதை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, போலீஸ் குற்றப் புலன் ஆய்வு மூலமாக விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்வது என்று சொன்னதற்கு நன்றி. ஆனால் இதிலே ஒரு பிராப்ளம் ஒரு கஷ்டம், ஒரு சிக்கல் இருக்கிறது. இதில் குற்றம் செய்யப்பட்டதற்கு ஆளாக்கப்படுவது போலீஸ்; விசாரணைக்கு ஏஜன்சியும் போலீஸ். ஆக அவர்கள் எல்லாம் பொய் சொல்லுவார்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படி இருக்கும் பொழுது ஜனங்களுக்கு மத்தியிலே ஒரு நம்பிக்கை வருவதிலே பிரச்சினை இருக்கிறது. டாக்டருடைய சர்ட்டிபிகேட் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். திருச்சி சிறையிலே நடந்த ஒரு கொலை பற்றி, தற்கொலை என்று முதலிலே டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுத்தார் ; பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஜுடீஷியல் என்கொயரி வைத்த பிறகு, கிராஸ் எக்சாமினேஷன் பண்ணியதற்குக் பிறகு அதே டாக்டர் இது தற்கொலை அல்ல ; இதில் இருக்கக் கூடிய அறிகுறிகளெல்லாம் கொலை என்று அவரே கிளீனாகச் சொல்லிவிட்டார். இப்படிப்பட்ட பிரச்சினை இருப்பதால்தான் தயவு செய்து இதிலே பிரஸ்டீஜ் பிரச்னையோ மற்றதையோ பார்க்காமல் நியாயம் கிடைக்க

தனலட்சுமி மரணம், பச்சையம்மாள் மரணம், ரீடா மரணம்
இப்படிப் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி நான் படித்து பிறகு
விவரங்களைச் சொல்கிறேன். இதுபோன்றவைகளில் பதில்
வரவில்லை இதை நான் கவனிக்கவில்லை என்று கருத
வேண்டாம். இன்னும் 2, 3 வாரங்களுக்குள் அல்லது
ஒரு மாதத்திற்குள் இந்த பதில்களையெல்லாம் அச்சிட்டு
அவரவர்களுக்குப் பதிலாக நான் தந்துவிடுகிறேன். அப்போது
படிக்கிற நேரம் குறையும், உங்களுக்கும் கொஞ்சம் நிம்மதி
யாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எங்கள் கருத்தைச்
சொல்லிவிட்டேன், எங்கள் கொள்கையைச் சொல்லி விட்டேன்.
ஆகவே, இதுவரையில் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று
நம்புகிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** சபாநாயகர் அவர்களே, பெண்
களுக்குச் சொத்துரிமை என்று சொல்கிற அந்த சட்ட முன்
வடிவைக் கொண்டுவந்தால் அவையினரிலே எவரும் பாக்கியில்லா
மல் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த அருமையான
திட்டத்தை முதல்வர் அவர்கள் கொண்டுவந்தால் எங்களுடைய
வரவு-செலவுத் திட்ட விவாதத்திலே அதை வேண்டுகோளாக
நாங்கள் விடுத்திருக்கிறோம். மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்
போம். ஆனால் சட்டம் கொண்டுவந்து அதனைச் செய்ய வேண்டு
மென்று சொல்கிற அந்த வாதத்தையே சற்று நீட்டிக்கொண்டு
போனால் கணவன் குடித்த வாடை இருக்கிற காரணத்தினால்
மாலை சூட்டமாட்டேன் என்று அந்த பெண்ணுக்கு நீங்கள்
சொன்ன அந்த மரியாதையை நினைவிலே கொண்டு மது இருப்ப
தால் ஏற்படுகிற தீமைகளையெல்லாம் பிரச்சாரம் செய்ய
அனைத்து கட்சிகளும் முன்வரவேண்டுமென்று சொன்னீர்கள்.
நீங்கள் மதுவிலக்கை அமல்படுத்துங்கள், அனைத்துக் கட்சிகளைச்
சேர்ந்தவர்களும் தீவிரமாக அந்த ஷணத்திலிருந்தே பிரச்சாரம்
செய்வதற்கு தயாராக இருக்கிறோம். எனவே அந்த அறிவிப்பை
முதலமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது இங்கே சொன்ன பல
போலீஸ் சம்பந்தமான குற்றச்சாட்டுகளுக்கு விவரமான பதிலை
வைப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் சொன்ன பிரதானமான
குற்றச்சாட்டு போலீஸ் லாக்கப்பிலே குறிப்பாக பெண்கள் அழைத்
துச் செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்
கள் என்ற விவரங்களைச் சொன்னோம். கோயம்புத்தூரிலே,
சேலத்திலே, இப்படி சமீபத்திலே லாக்கப்பிலே நடந்த கொலை
சம்பந்தமாக அங்கே போய்ப் பார்த்தவர்கள் சர்வ கட்சியைச்
சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் மனுக்கொடுத்தது மட்டுமல்ல,
முதலமைச்சருக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறையே
4½ அடி 5 அடி தான் உயரம் இருக்கும் அதிலே தூக்குப்போட
எந்த வாய்ப்பும் இல்லை. இரவு நேரத்திலே டாக்டர்கள் இறந்த
பெண்ணை பிரேத பரிசோதனை செய்திருக்கிறார்கள். பகலிலே





தான் செய்ய வேண்டும். இரவிலே செய்ய முடியாது. அதுவும்
இல்லாமல் அந்தப் பெண் சேலையே கட்டாத பாவாடை கட்டக்
கூடிய கட்டடத் தொழிலாளி என்பதையெல்லாம் சொல்லியிருக்கி
றோம். அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல
வேண்டும். இப்படி நடக்கிற காரியங்களிலே இங்கே ஒத்திவைப்புத்
தீர்மானங்கள் கொடுக்கிற நேரத்திலே போலீஸ் எழுதிக் கொடுத்த
அதே பதிலை எங்களுக்குத் தருகிறீர்கள், அங்கே போனால்
உண்மையான விவரம் வேறாக இருக்கிறது, அமைச்சர்
சொல்கிற பதிலுக்கு வேறு மாறாக இருக்கிறது. இதற்கெல்லாம்
முதலமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மாண்புமிகு அழகர்
சாமி அவர்களுக்கு பதில் சொல்லிவிடுகிறேன். இதற்காகத்தான்
தொடக்கத்திலேயே இப்படிப்பட்ட தவறுகளை செய்பவர்கள்
எவ்வளவு பெரிய தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டுமென்பதை,
இந்த அரசு விரும்புகிறது என்பதை தெளிவாக நான் எடுத்துக்
கூறினேன். ஆகவே வழக்குமன்றத்திலே எத்தகைய தீர்ப்புகள்
வந்தாலும், நியாய உணர்வோடு வேறு வகையிலே நிரூபிக்கக்
கூடிய அளவிலே செய்திகள் உண்மையாக இருக்கு
மானால், வழக்குமன்றத்திற்கு போவதற்கு முன்னாலேயே துறை
யில் நடவடிக்கை எடுத்து, வழக்குமன்றத்திலே தண்டனை கிடைக்
கக்கூடிய வகையிலே, அதை பரிகாரம் என்று சொல்ல வேண்டும்;
அப்படிப்பட்டவர்களின் மீது அந்த தண்டனை பாய்ச்சப்பட
வேண்டும் என்பதைத்தான் நான் விரும்புகிறேன். அதுதான்
இந்த அரசினுடைய கொள்கை. பதில் சொல்ல வேண்டு
மென்றால் அதற்கெல்லாம் நான் பதில் கொடுத்து விடலாம். அது
உங்களுக்குச் சரியான பதிலாக அமையும். ஆனால் உங்களுடைய
மனதிற்கு சரியான பதிலாக வேண்டுமென்றால் நாம் எடுத்த
நடவடிக்கைகள் குறித்து சொன்னால் அது சரியாக இருக்கு
மென்று நான் கருதுகிறேன். இருப்பினும் அவைகளை நான்
அச்சிட்டு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களுக்கும் பதில் சொல்லி
யாக வேண்டும். அவர்கள் கேட்டார்கள். மதுவிலக்கைப் பற்றி
எல்லோரும் பிரச்சாரம் செய்வோம். மதுவிலக்கை கொண்டு
வருகிறீர்களா என்று கேட்டு நான் பதில் சொல்ல வேண்டு
மென்று சொன்னார்கள். கல்யாணம் செய்தால் பைத்தியம்
தெளியும் ; பைத்தியம் தெளிந்தால் கல்யாணம் செய்யலாம்;
என்ற நிலைமையில் தான் தமிழகம் இருக்கிறது. மற்ற மாநிலங்
களைப் பற்றி பேச நான் தயாராக இல்லை எங்கே பார்த்தாலும்.
வீதிகளில் சாராயம் ஓடுகிறது. உங்களால் அதை தடை செய்ய
முடியவில்லை. காவல்துறைக்கு தடைசெய்ய லாயக்கில்லை;
என்றெல்லாம் எவ்வளவு கிண்டலாக, கேலியாக பேசப்பட்டது
என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் இப்போது

வேண்டுமென்பதற்காக, ஜுடீஷியல் என்கொயரி முன்பெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்; இதிலே செய்வதில் தப்பு இல்லை. நியாயம் வரும் என்பதற்காக ஜுடீஷியல் என்கொயரி பற்றி நாங்கள் வேண்டுகோள் வைக்கிறோம். அதைச் செய்ய வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னது மாதிரி அந்த மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் ஜுடீஷியல் என் கொயரிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வ தோடு, நானும், எம். எல். சி., மாணிக்கம் அவர்களும் முதலமைச் சரவர்களிடத்திலே நேராக ஒரு பெட்டிஷன் கொடுத்திருக் கிறோம்.

இன்றைக்கு ஊட்டியில் இருக்கிற தோட்டக் கலை துணை இயக்குநர் ஒருவருடைய வீட்டிலே அக்ரிமென்ட் போட்டு 40,000 ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து, இந்தியன் எம்ப்ளாயீஸினுடைய அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் ஓய்வு விடுதி நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதில் அந்த வாடகை என்ன என்பதை அவர்கள் சொல்லி விட்டார்கள் என்பதற்காக, அதிக வரி போட் டார்கள் என்பதற்காக அந்த இயக்குநர் சொல்லி அங்குள்ள போலீஸ் மட்டுமல்ல ; இங்குள்ள எம்பிளாயீஸினுடன், முத்தி யால்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு என்ன வேலை ? அந்த போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர் கள் எம்ப்ளாயிஸ் யூனியனுடைய தலைவர் வெள்ளையன் என் பவரை நித்தியம் போய் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார் கள். இங்கே. ஊட்டியிலே நடக்கிற ஒரு வீட்டினுடைய வாடகை சம்பந்தமான அந்த நியாயமான விவகாரத்திற்காக இங்கே போய் யூனியன் தலைவரை முத்தியால்பேட்டையைச் சேர்ந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தொந்தரவு செய்கிறார் என்று முதலமைச்சரவர்களிடத்திலேயும், நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் பெட்டி ஷன் கொடுத்திருக்கிறோம். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு மணிக்குள் முடிக்க வேண்டு மென்று சொல்வதால், இதற்குப் பதில் இருக்கிறது ; அதனாலே நான் உங்களுக்கு எழுதிக் கொடுத்து விடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : காரண காரியங்களோடு சொன்னோம்; வேண்டிக் கொண்டோம். தயவு செய்து நீங்கள் அதற்கு முடிவு சொன்னால் நல்லது ; ஏற்றுக் கொண்டால் பரவாயில்லை.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, அங்குள்ள மக்களுக்கு அது தற்கொலை என்பதைப் பற்றி நம் பிக்கை இல்லை. அதனால்தான் ஏராளமான மக்கள் அங்கே





கையெழுத்திட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். நேரிலேயும் பேசியிருக்கிறார்கள். இந்த விவாதத்திலேயே மிக முக்கியமான பிரச்னையாக அது கொண்டு வரப்பட்டது. அரசாங்கம் அதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அல்லது எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு முன்னவர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பதிலைவிட நான் என்ன புதிதாகப் பதில் சொல்லிவிடப் போகிறேன் ? ஆகவே, புதிதாக சொல்வதற்கு எதுவும் இல்லை. ஆனால், மேற்கொண்டு ஏதா வது தெரிய வேண்டுமென்றால் வழக்கு இருக்கிறது. அதை ஒட்டி என்ன செய்திகள் வருகின்றன என்பதை நான் அடுத்த கூட்டத் தொடரில் நிச்சயமாகத் தெரிவிக்கின்றேன். இதையும் நேரில் சந்தித்துப் பேசிக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பதில் சொல்லும்போது, அங்கே இருந்து தற்கொலை என்று தகவல் வந்ததாகவும் மேலும் விசாரிக்கப்படும் என்றும் சொன்னார்கள். நான் கேட்பது, டிபார்ட்மென்ட் விசாரணை என்பதற்குப் பதிலாக, நீதிபதி மூல் மாக விசாரணை வைத்தால், உண்மை தெரியும். அது அரசாங் கத்திற்கும் நல்லது, பொது மக்களுக்கும் நல்லது, எல்லோருக்கும் நல்லது. ஆகவே, நீதி விசாரணை ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏறக்குறைய கேள்வி நேரம் மாதிரி ஆகிவிட்டது.

திரு. ரா. உமாநாத் : இதிலே இருக்கிற நிலைமை என்ன வென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்களோ ஒரு பாயின்ட்டைப் பேசி, பேசிய அங்கத்தினர்களைப் பார்த்து, ஏதாவது கேள்வி இருக்கிறதா என்று அவரே கேட்டிருக்கிறார்.

இந்தக் கிச்சிப்பாளையம் நிகழ்ச்சி சம்பந்தமாக கேஸ் இருக் கிறது என்று மாண்புமிகு முதல்வர் சொல்லியிருக்கிறார். ஆனால், இங்கே கொடுத்திருக்கக் கூடிய கவர்ன்மென்ட் வெர்ஷன் தற்கொலை என்பது. ஆகவே, தற்கொலை முயற்சித்து உயி ரோடு இருந்தால் கேஸ் இருக்கும். இங்கே தற்கொலை செய்து செத்துப் போய் விடுகிறார். ஆகவே, கேஸ் என்ற பிரச்னைக்கே இடம் இல்லை ; சப் ஜூடிஸ் என்ற பிரச்னைக்கே இடம் இல்லை. ஆகவே, கான்ப்ளிக்ட்டிங் ரிப்போர்ட்ஸ்—நேர் மாறான தகவல் கள் எதிர்க்கட்சிகளிடமிருந்து வருவதால், ஜுடிஷீயல் என் கொயரி தான் இதிலே உண்மையைக் கண்டுபிடித்து, இரு சாராருக் கும் நியாயம் வழங்க முடியும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-3-1983 அன்று பிற்பகல் 1-30 மணிக்கு அக்னி குமார் என்பவரின் மகள்கள் பேச்சி அம்மாள், திருமதி அங்கம்மாள், திருமதி சிங்கம்மாள் ஆகிய மூவரும் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறார்கள். அதில் மாரியப்பனின் என்பவரின் மகள் 19 வயதான தெய்வமணி என்ற சிறுமி, திருமதி பேச்சியம்மாள் என்பவருக்குச் சொந்தமான எவர்சில்வர் தட்டு ஒன்றைத் திருடிவிட்டதாகச் சொல்லப்பட்டது. இந்தப் புகாரின் பேரில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவில் கைது செய்யப்பட்ட தெய்வமணி என்ற அந்தப் பெண் பெருமாள் என்ற காவலரின் பொறுப்பில் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டார். அன்று மாலை 4-30 மணிக்கு காவலர் திரு. பெருமாள் லாக்-அப் ஜன்னல் வழியாகப் பார்க்கும் போது அந்தப் பெண் காவல் நிலையத்தில், தான் உடுத்திய சேலையை கழுத்தில் சுற்றிக் கொண்டு, மறு தலைப்பை லாக் அப்பில் இரும்புக் கம்பியில் கட்டி தூக்குப்போட்டுக்கொண்டு தொங்கியதைக் கண்டார். உடனே, உதவி ஆய்வாளருக்குத் தகவல் கொடுத்தார். கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் தண்டனைச் சட்டம் 174-ன் பிரிவின்படி உதவி ஆய்வாளர் மாலை 5-00 மணி அளவில் இந்த நிகழ்ச்சி குறித்து, முதல் அறிக்கையைப் பதிவு செய்தார். இந்தப் பெண் ஏற்கனவே குற்ற எண் 99/82-ன்படி 13-7-1982 அன்று சேலம் முதன்மைக் குற்றவியல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் இந்தியக் குழந்தைகள் சட்டப் பிரிவு 29-ன் கீழ் தண்டிக்கப்பட்டவர்.

தெய்வமணி தற்கொலை செய்து கொண்டார் என்று உதவி ஆய்வாளர், சேலம் மாவட்ட கோட்டாட்சித் தலைவருக்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பி, பிரேத விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அன்றிரவு 11 மணி அளவில் ஆண்களும், பெண்களுமாக சுமார் 100 பேருக்கு மேல் காவல் நிலையத்தில் கூடி சடலத்தை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பக் கூடாது என்று கோரிக்கை வைத்தார்கள். தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அசம்பாவிதங்கள் ஏதும் நடந்துவிடாமல் தடுக்கப் பட்டது. கோட்டாட்சித் தலைவர் அன்றிரவு 11 மணியிலிருந்து 1 மணி வரை மரணம் குறித்து விசாரணை செய்து, பிரேத பரிசோதனை செய்வதற்காகத் தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார். 16-3-1983 அன்று பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, பிரேதம் மறைந்த பெண்ணின் தாயாரிடம் ஒப் படைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் கோட்டாட்சித் தலைவரை பி. எஸ். ஓ. 145-ன் கீழ் விசாரணை செய்து அறிக்கை அனுப்பும்படி உத்தரவிட்டுள்ளார்.

வயது வந்த பெண்ணை லாக் அப்பில் வைத்திருந்ததற்காகவும் அப்படி வைத்திருந்தபொழுது போதிய பாதுகாப்பும், கவனமும் இன்றி இருந்ததற்காகவும் கிச்சிப்பாளையம் ஆய்வாளர்





சென்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். நாம் மக்களின்
எண்ணங்களை மதிக்கிறோம். அங்கேயுள்ள மக்களுக்கு ஆழ்ந்த
சந்தேகம் இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி நீதி விசா
ரணை நடத்தினால் உண்மை தெரிய வரும். சி. ஐ. டி. விசா
ரணை நடத்தினால் மட்டும் உண்மை தெரிய வராது. ஏனென்
றால், அந்த விவாதம் வரும் பொழுது சொன்னோம், அவர்கள்
ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்டு இருப்பதாலே நிர்ப்பந்திக்கி
றார்கள் ; ஆகவே உண்மை வராது என்று. இப்படி ஒரு குறிப்
பிட்ட பிரச்சினையின்மீது தான் நாங்கள் வற்புறுத்துகிறோம்.
அது ஒரு அரிசனப் பெண். அதிலே இன்றைக்கு அங்கே போன
வர்கள் யார் பார்த்தாலும் அனைவருக்கும் சந்தேகம் ; அது
உண்மை அல்ல என்று. ஆகவே, அரசாங்கம் இதை விசேஷ
மாகக் கருதி, உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களைக் கொண்ட ஒரு
விசாரணை நடத்தினால் மக்கள் தைரியமாக அதிலே சாட்சியம்
சொல்வார்கள் ; அதிலே உண்மை வெளிவரும்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த விவா
தத்திலே முதலமைச்சரவர்களிடத்திலே நீதி விசாரணை பற்றிய
முறையீட்டினை மாண்புமிகு இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளைச்
சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் கேட்டிருக்கிறார்கள்.
எல்லாக் கட்சிகளும் இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே குரல்
கொடுத்திருக்கின்றன. ஒருவேளை முதலமைச்சரவர்கள் ஏதோ
இரண்டொரு கட்சிகள்தான் இங்கே கேட்டார்கள் ; பிரதான
எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் கூடக் கேட்க
வில்லை என்று சொல்லிவிடக் கூடாது என்பதற்காக நான்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் மாண்புமிகு முத
லமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்னை
குறித்து ஒரு நீதி விசாரணை வைப்பது சிலாக்கியமானதாக
இருக்கும். ஏனென்றால் பருவம் அடைந்த ஏழு அல்லது எட்டு
மாதங்கள்கூட நிரம்பப் பெறாத ஒரு சிறுமி. முதலமைச்சரவர்
களே இங்கே சொன்னார்கள், ஏற்கெனவே சில மாதங்களுக்கு
முன்பு அந்தச் சிறுமியின் மீது சிறுவர்கள் குற்றப் பிரிவின்பால்
அடிப்படையிலே ஒரு வழக்குத் தொடரப்பட்டது, அப்படிப்பட்ட
ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றுகூடக் குறிப்பிட்டார்கள்.

(பிற்பகல் 12-20)

அந்த அளவிற்கு வயது வந்து 6, 7 மாதங்கள்கூட ஆகாத ஒரு
சிறுமி கற்பழிக்கப்பட்டு, கொலை கூட செய்யப்பட்டிருக்கிறாள்
என்கிற நிலைமை, அந்த வட்டாரங்கள் பூராவும் எல்லோராலும்
நம்பப்படுகின்ற ஒன்றாக இருப்பதாலும், அதுகுறித்து நீதி
விசாரணை வேண்டுமென்று, அந்தப் பொது மக்களும் விரும்பு
கின்ற காரணத்தினாலும், அனைத்துக் கட்சிகளும், இந்த வேண்டு
கோளை இந்த அரசு முன்னால் வைக்கின்ற காரணத்தினாலும்,
ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நானும்
முதலமைச்சரவர்களை கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 20

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சிகளுடைய இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று, இந்தப் பிரச்சினையில் ஒரு விரிவான நீதி விசாரணைக்கு இணங்க வேண்டுமென்று, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் நானும் மாண்புமிகு முதலமைச்சரவர்களை வலியுறுத்துகிறேன்.

திரு. குமரி அனந்தன் : நீதியைப் பொறுத்தவரையில், எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம் என்பதனை நீதி விசாரணையின்மூலம் முதலமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது அரிஜன சமுதாயத்தை சேர்ந்த ஒரு சிறுமியைப் பற்றிய ஒரு ‘ சென்சிடிவ் இஷ்யூ’ இதிலே எல்லாக் கட்சிகளும், சேலம் மாவட்டத்தை சார்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட இதை ஏற்றுக்கொள்வார்கள். அந்த அளவிற்கு எல்லோருடைய உணர்வையும் பாதித்திருக்கின்ற பிரச்சினையில், நீதி விசாரணைக்கு உத்தரவிடுவதன் மூலம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பெருமை மேலும் உயரும். நீதியைக் கண்டுபிடிக்க, அவர் உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கிறார் என்று மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையிலே, தயவு செய்து, எதிர்க்கட்சிகளின் ஒட்டுமொத்தமான கோரிக்கைக்கு இணங்கும்படி, மாண்புமிகு முதலமைச்சரவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முசமது இஸ்மாயில் : இந்த நியாயமான கோரிக்கையை ஜனதா கட்சியின் சார்பிலே நானும் வலியுறுத்துகிறேன்.

திரு. கி. சர்பநாத கவரயாளர்: : தலைவரவர்களே, எல்லா அரசியல் கட்சிகளின் வேண்டுகோளோடு நானும் என்னுடைய வேண்டுகோளை இணைத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு, எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் விடுத்தது வேண்டுகோள் அல்ல உரிமையோடு கேட்டுக்கொண்ட அதைப்பற்றி, நான் என்னுடைய கருத்தை வெளியிடப் பெரிதும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் இங்கே கூறினார்கள். எல்லோரும் கேட் கிறார்கள். ஆனால் பிரதான எதிர்க்கட்சி கேட்கவில்லை என்பதற்காக பேசாமல் இருந்துவிட வேண்டாம். ஆக நானும் கேட்கிறேன் என்றார்கள். நியாயத்தைப் பற்றி சொல்லும் போது, ஒருவர் கேட்டாலே ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையிலே ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கும். சில சமயம்



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இது நியாயம் இல்லை என்று தெரிந்தாலும், எல்லோரும் பேசினால் கூட, இது இயலாது என்று சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகவேண்டியிருக்கும். (சிரிப்பு) இருப்பினும், இது ஒரு மானப் பிரச்சினை. நான் முதலிலே அரை மணி நேரம் பேசினேனே, அந்தக் கொள்கையின் அடிப்படையிலே எழுந்த இந்தப் பிரச்சினை மீது நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு என். எஸ். வி. சித்தன் அவர்கள் கூறினார்கள். சிதம்பரத்தில் ஆண் காவலர்கள் தொல்லை தாங்கமுடியாமல், பெண் காவலர்கள் போய்விட்டார்கள் என்று. மற்றவர்களைக் காப்பதற்கு அந்தப் பணியில் ஈடுபடுகின்ற பெண் காவலர் களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால், அது மிகப் பெரிய பிரச்சினைக்குரியது தான். ஆகவே நான் மாண்புமிகு சித்தன் அவர்களைக்கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பெண் காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லையென்றால், வேறு பெண்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்குமென கேள்வி எழும். ஆக நான் சொல்கிறேன்—எப்படித் தவறுகள் நடந்தது என்பது எனக்குத் தெரியாது. முதலிலே 20 பெண் காவலர் களே அங்கு இல்லை. இது தான் உண்மை. 10 பேர் தான் இருக்கிறார்கள். இதில் 3 பெண் காவலர்களைத் தவிர, மீதி அனைவருக்கும் அரசாங்கக் குடியிருப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர்களை வெளியேற்ற முடியாது. அவர்கள் பயந்து போகவேண்டிய அவசியமும் கிடையாது. 3 பெண்காவலர் களில், 2 பேர்கள் தனியார் வாடகைக் குடியிருப்பில் இருக் கிறார்கள். மற்றொரு பெண்காவலர், தாய், தந்தையருடன் அண்ணாமலை நகரில் குடியிருக்கிறார்கள். ஆகவே அவர்களை யாரும் வெளியேற்றவும் இல்லை, அவர்களும் போகவில்லை. இந்தச் செய்தி வெளியே வரும்போது, அன்றையதினமே நான் பதில் சொல்லியிருந்தால், படிக்கின்றவர்களுக்கு கொஞ்சம் சௌகர்யமாக இருக்குமென்று ஒத்துக்கொள்கிறேன். இது போன்றவைகளை எல்லாம் இங்கே சொல்லும்போது உடனே என்னிடம் புள்ளிவிவரம் இருக்கமுடியாது. வாங்கித் தான் சொல்ல முடியும். ஆகவேதான் முதலிலே வேண்டு கோள் விடுத்தேன். இரண்டு நாளாவது நீங்கள், அவரவர்கள் இதுமாதிரி விஷயங்களைச் சொல்லும்போது பதில் சொல் வதற்கு, தயாரித்து வைத்துக் கொள்வதற்கு, அதனுடைய நிலைமைகளைத் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்புத் தர வேண்டும் என்பதுதான். இருந்தாலும் பத்திரிகை நண்பர்கள் இங்கே இருக்கின்றார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் இதை வேண்டிக்கொள்கிறேன். பெண் காவலர்களுக்கு அப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை என்பதை பத்திரிகை நண்பர்கள் வெளியிடவேண்டும் என்று நாங்கள் வேண்டுகோள் விடுத்தால் பெண் காவலர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை இந்த நாட்டில் இல்லை என்பது சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் மக்கள்

மத்தியிலே வர நிலைமை உருவாக்கப்படவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட செய்தி
களைப் பற்றி எல்லாம் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக
இருப்பது நல்லது. மற்றவர்களைப் பற்றி நான்........

திரு எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்
களே, சென்ற ஆண்டு போலீஸ் மானியத்திலேயே நான்
சொன்னேன். இதைப் பற்றி விசாரித்துச் செய்வதாகச்
சொன்னார்கள். இடைப்பட்ட காலத்திலே கூட சொன்னேன்.
ஆகையினாலே தவறான கருத்து போன போலீஸ் மானியத்
திலே கொடுக்கப்பட்டது, ஆதி திராவிடர்கள் செய்யாததை
செய்ததாக. இந்த ஆண்டும் கூட தஞ்சை மாவட்டத்திலே
திருவிடைமருதூர் தாலுக்காவிலே, திருப்பனந்தாள் என்ற
கிராமத்திலே தவறு செய்தவர்கள் 91 பேர்கள் இருந்தும்,
ஹைதராபாத்திலே வேலை செய்திருந்த ஒரு அரிசனனைக் கூட
இந்தக் கொலைக் குற்றத்திலே தவறாக சேர்த்து
இருக்கிறார்கள். இந்த ஆண்டுக் குறிப்பிலே கூட அது
தவறாகக் கொடுக்கப்பட்டிருகிறது. ஆகவே இரண்டு
ஆண்டுகள் போலீஸ் மானியக் குறிப்பிலே தவறான
தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான்
முதலமைச்சரிடம் எழுதிக் கொடுத்தேன். ஆனால் இன்று
பதில் சொல்லும் போது சொல்வார்கள் என்று நினைத்தேன்.
ஆனால் இன்றைக்கு பதில் சொல்லாவிட்டாலும்கூட, இதைப்
போன்ற தவறான தகவல்களை போலீஸ் மானியத்திலே
சேர்த்த, செய்யாத காரியத்தை செய்ததாக குறிப்பிட்ட,
அந்த அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு,
உடனடியாக இல்லாவிட்டாலும், இதில் யார் சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் என்பதைத்தெரிந்து அவர்கள் மீது நடவடிக்கை
எடுப்பார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒட்டுமொத்தமாகத்
தான் சொன்னேன். எல்லோருக்கும் அவரவர்கள் பதில்அனுப்பி
னால் பத்திரிகையிலே போடலாம் என்று சொன்னேன்.
உங்களுக்குப் பதில் சொல்வதில் பிரச்னைகள் வராது
என்று சந்தேகப்பட்டால் நீங்கள் கேட்டதாக இப்போது
வரும். (குறுக்கீடு). இந்த விவரங்கள் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்கு கண்டிப்பாக அனுப்பி வைக்கப்படும்.
இந்த மன்றத்திலேயும் அது வைக்கப்படும் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். சில விஷயங்களை நான் சொல்லி
யாக வேண்டும்:

நமது உறுப்பினர் என். எஸ். வி. சித்தன் அவர்கள் எந்த
எந்த வழக்குகள் எல்லாம் கவனிக்கப்படாமல் இருக்கின்றன,
எத்தனை வருடங்களாக கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன





என்று குற்றம் சொன்னார்கள். கைதாகாமல் இருக்கிற்
குற்றவாளிகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். வேண்டு
மென்றே யாரையும் கைது செய்யவேண்டாம் என்ற நிலைமை
யில் இந்த அரசு வைக்கவில்லை என்பதை நான் புள்ளிவிவரங்
களோடு சொல்வதற்கு முன்பு, இந்த அரசு காவல்துறையை
எந்த அளவிற்கு எச்சரிக்கை செய்திருக்கிறது என்பதையும்,
காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எந்த அளவிற்கு அக்கறை
யாக இருக்கிறார்கள் என்பதற்கும் பல்வேறு உதாரணங்களோடு
இங்கேநான் சொல்ல முடியும். எந்தெந்த ஊர்களில் எந்த எந்த
கொலை வழக்குகள், களவுகள் நடத்தப்பட்டனவோ அதிலே
58 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும்,
எத்தனையோ ஆண்டுகளாக கண்டுபிடிக்க முடியாமல்
இருந்ததை கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்பதையும் நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு குறிப்பாக
இந்தக் காவல்துறை எதையும் செய்யவில்லை என்பதைப்
பற்றியும், எதையும் கண்டுபிடிக்கவில்லை என்பதைப் பற்றியும்
மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகள் அவர்கள் கூட
சொன்னார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் ஒன்று
சொல்வேன். 1950 ஆம் ஆண்டிலிருந்து டெல்லியில் கண்டு
பிடிக்க முடியாமல் விட்டிருக்கின்ற கைதாகாமல் இருந்த
குற்றவாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை நான்
சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.
இது ரொம்பவும் ஜாஸ்தியாகப் போகாமல் 1962-லே
இருந்து வைத்துக்கொள்வோம். ஏன் என்றால்
எண்ணிக்கை ரொம்பவும் ஜாஸ்தியாக இருக்கும்.

(பிற்பகல் 12—30)

டெல்லியிலே நடந்தது. 1962-லே 5, 63-லே 7, 64-லே 8,
65-லே 17, 66-லே 13, 67-லே, 27, 68-லே 33, 69-லே 82,
70-லே 101, 71-லே 181, 72-லே 254, 73-லே 221, 74லே 244,
75-லே 284, 76-லே 475, 77-லே 351, 78-லே 407, 79-லே
403, 80-லே 329, 81-லே 273, இப்படி ஏறக்குறைய 3,600-க்கு
மேற்பட்டு இருக்கின்றன. இத்தனை பேரும் இன்னும் கண்டு
பிடிக்கப்படவில்லை. திறமை இல்லாது இல்லை. சிலர் செத்துப்
போய் இருக்கலாம். சிலர் வேறு நாட்டுக்குப் போய் இருக்கலாம்.
அடையாளம் கிடைக்காமல் இருக்கலாம். சில நவீன முறைகளை
இப்போது சினிமாவில் பார்க்கிறார்கள். வெளி நாடுகளில்.
இருந்து வருகின்ற படங்களைப் பார்க்கிறார்கள். வெளி நாடு
களில் இருந்து வருகின்ற புத்தகங்களைப் படிக்கிறார்கள்.
அந்தப் படங்களில் பார்ப்பது போல சிலர் அதை பயன்படுத்திக்
கொள்கின்றனர். படித்தவர்கள் இருக்கிறார்கள். இவைகளை
எல்லாம் நான் குறிப்பிட்டாக வேண்டும். இதைச் சொல்கிற
போது, இப்படிப்பட்டவர்களையெல்லாம் விட்டு வைத்து இருக்
கிறார்கள் என்று பொருள் இல்லை. அவர்கள் எல்லாம்
சொந்தக்காரரர்கள் என்று பொருள்! இல்லை. கிடைக்க
வில்லை என்பது தான். ஆகவே, தமிழக போலீசைப் பொறுத்த

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 ஏப்ரல் 20

வரையில், பாகிஸ்தான் அதிபர் ஜியா அவர்கள் என்ன எழுதி
யிருக்கிறார்கள் என்றால், டெல்லி மாநகரத்தில் நடுநிலை
மாநாட்டிற்கு அவர்கள் வந்திருந்தபோது, தமிழக போலீசைப்
பற்றி எழுதியிருக்கிறார்கள். தமிழக காவல்துறையைச் சேர்ந்த
வர்கள் மிக மிகப் பொறுப்போடும், திறமையோடும் பணி
யாற்றினார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன் என்று
எழுதி வைத்திருக்கிறார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக்
காரணம் தமிழக காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எந்த அள
விற்கு சிறப்பான முறையில் எங்கே சென்றாலும் பாதுகாப்புத்
துறையிலோ அல்லது மற்றத் துறைகளிலோ பணி செய்கிறார்கள்
என்பதற்கு ஒரு பெருமையாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.
அதுமட்டுமல்ல, ஆசிய விளையாட்டுகளின் போது தமிழகத்தி
லிருந்து தான் அதிகமான ஆண், பெண் போலீசார் அழைக்கப்
பட்டார்கள். இப்படி பல்வேறு பிரச்சினைகள் வருகிற போது
தமிழகத்திலிருந்துதான் அதிகமான அளவிற்கு கேட்கிறார்கள்
என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, தமிழகத்
திலுள்ள காவல் துறை, தமிழகத்திற்கு நல்ல பெயரை வாங்கிக்
கொடுக்கும் வகையில், பெருமை சேர்க்கும் வகையில் பணி
யாற்றுகிறது. சிலர் செய்யும் தவறுகள் பல்லாயிரக்கணக்கான
பேர்களுக்கு கெட்ட பெயரை பெற்றுத் தருகிறது என்பதைத்
தவிர வேறொன்றுமில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நக்சலைட்டுகளைப் பொறுத்தவரையில் ஏதோ நாங்கள்
வேண்டுமென்றே பழி போடுகிறோம் என்று சொல்கிறார்கள்.
நாகேசம்பட்டியைச் சேர்ந்த தர்மலிங்கம் செட்டியார் என்பவர்
ஐந்து தீவிரவாதிகளால்—நான் நக்சலைட் என்று சொல்ல
வில்லை ; தீவிரவாதிகள் என்று தான் சொல்லுவேன்—கொலை
செய்யப்பட்டார். நந்தம்பள்ளியைச் சேர்ந்த பெரியண்ணன்
செட்டியார் என்ற நிலச் சுவான்தார் கொலை செய்யப்பட்டார்.
அதற்காக கோபால் என்ற தீவிரவாதியை கைது செய்ய முயன்ற
இரகசிய குற்றப் பிரிவைச் சேர்ந்த ஆய்வாளர் கத்தியால் குத்தப்
பட்டார். சக்திபாளையம் கிராமத்தில் அப்பாசாமி செட்டியார்
என்ற நிலச்சுவான்தார் கோரமான முறையில் தீவிரவாதிகளால்
கொலை செய்யப்பட்டார். ஆசிட் வெடி குண்டு வெடிக்கப்
பட்டு சுமார் 35,000 மதிப்புள்ள நகைகளும், பணமும் எடுத்துச்
செல்லப்பட்டன. சேலம் மாவட்டத்தில் தளவாய் என்ற காவ
லர் தீவிரவாதிகளால் கத்தியால் குத்தப்பட்டார். பாப்பாரப்
பட்டியைச் சேர்ந்த விஸ்வநாதன் செட்டியார் என்ற நிலச்சுவான்
தார் மீது வெடிகுண்டுகளை வெடித்து சுமார் 33 பவுன் தங்க
நகைகளை எடுத்துக் கொண்டு போய்விட்டனர்.

கண்ணன் என்ற தீவிரவாதியை கைது செய்ய சென்ற காவல்
துறை மீது அவர் வெடிகுண்டை வீசியெறிந்தார். சின்னச்சாமி
கவுண்டர் என்பவர் வீட்டில் பயங்கரமான ஆயுதங்களை எறிந்து
வீட்டிலுள்ளவர்களை தாக்கி காயப்படுத்தி, ரூபாய் 10,000 மதிப்
புள்ள பொருள்களுக்கு சேதம் விளைவித்து, நகைகளை எடுத்துக்



1983 ஏப்ரல் 20] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கொண்டு ஓடிவிட்டனர். காசிக் கவுண்டர் என்பவர் வீட்டில்
15 நபர்கள் வீட்டிலிருந்தவர்களை அடித்து, பொருள்களுக்கு
சேதம் விளைவித்தார்கள். சிங்கநாயக்கன்பட்டியிலேயுள்ள
பக்கிரிசாமி என்பவர் வீட்டில் நுழைந்து பொருள்
களுக்கு சேதம் விளைவித்தனர். இப்படி இவ்வளவு
நடந்திருக்கிறது. எல்லாம் படிக்கிறேன். ஆனால் ஒரே
ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.
சென்ற ஆண்டு இதைப் போன்று மானியக் கோரிக்கையின்
போது என்று கருதுகிறேன். தீவிரவாதிகளைப் பற்றி நக்சலைட்டு
கள் என்று சொல்லும்போது எந்த சூழ்நிலையில் எத்தகைய
நிலையில் அவர்கள் உருவாகிறார்கள் என்பதைப் பற்றி நான்
இங்கே குறிப்பிட்டேன். சமுதாயம்தான் அவர்களை அந்த
நிலைக்குக் கொண்டு செல்கிறது என்ற கருத்தை சொன்னவன்
தான் நான் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

ஆனால் இன்னொன்றையும் சொல்கிறேன். நக்சலைட் என்று
அழைக்கப்படுகின்றவர்கள், உண்மையான நக்சலைட் பெண்
களை மதிப்பவர்கள். கற்பைக் காப்பாற்றுவதில் அவர்கள்
யாருக்கும் பின் தங்கியவர்கள் அல்ல என்பதையும் இங்கே நான்
பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டு
மல்ல. கொள்ளையடிக்க வேண்டுமென்ற எண்ணத்
திலே இருப்பவர்கள், அதிலே திருப்தி படுகிறவர்கள் என்ற தகவல்
இல்லை. வேறுபல பிரச்சினைகளில்தான் அவர்கள் ஈடுபடு
கிறார்கள் என்பதைத் எனக்குக் கிடைத்த தகவல், செய்தியை
வைத்து ஓரளவுக்குச் சொல்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட வன்
முறைகளில் ஈடுபடுகின்றவர்கள் அவர்களுடைய பெயரை வைத்
துக்கொண்டு சிலர் காரியம் ஆற்றுவதிலே ஈடுபடலாம். எப்படி
நான் இங்கே ஒரு பொதுக் கூட்டத்தில் மோட்டார் பைக்கில்
வந்ததாகச் சொன்னேனோ அதைப் போன்று கூட இருக்கலாம்.
ஆனால் ஒட்டு மொத்தத்தில் காவல் துறை நடவடிக்கை எடுக்
கும்போது இப்படிப்பட்டவர்கள் வெடிக் குண்டு வீசுதல், துப்
பாக்கியால் சுடுதல், கொலை செய்ய முயலுதல், கொலை செய்
தல் போன்றவைகளிலே எல்லாம் ஈடுபடுவதை நிச்சயமாக
நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல. அவை பற்றி நட
வடிக்கை எடுக்கப்படுகிறதே தவிர, யார் மீதோ குற்றச்சாட்டைச்
சுமத்த, வேறு வழியில்லாமல் பழி வாங்குவதற்காக எங்கோ
இருக்கிறவர்கள் மீது காவல் துறை வழக்கு போடுகிறது என்று
சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்பதை இங்கே நான்
திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்த இரண்டு ஆண்டுகளாக அதிகமாக
காவல்துறை நடவடிக்கை எடுத்ததாகவும் இல்லை ; சுடப்பட்ட
தாகவும் இல்லை ; கொலை செய்யப்பட்டதாகவும் இல்லை ;
கொள்ளையடிக்கப்பட்டதாகவும் இல்லை. ஆக யாரோ இதை
வைத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய காரியங்களை செய்து

வந்தார்கள் ; அவர்கள் அடக்கப்பட்டு விட்டார்கள் ; அந்தக்
குற்றங்கள் தடுக்கப்பட்டு விட்டன என்பதை மட்டும் இங்கே
நான் கூறி, இந்தச் சூழ்நிலையில் இருந்து அவர்களை மாற்று
வதற்கு கல்வி அறிவு மட்டுமல்ல ; தொழில் வசதி, வாழ்வதற்கு
வ்சதி இவைகளை ஏற்படுத்திக் கொடுத்தாலன்றி இதைப்போன்ற
குற்றங்கள் நாட்டில் நிகழும் நேரத்தில் காவல் துறை சில நட
வடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதை மட்டும்
இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் மற்ற விளக்கங்களை எல்லாம் நான் முன்பு சொன்ன
தைப்போல அத்தனை கருத்துக்களைச் சொன்னதற்கும் அச்
சடித்து எல்லாவற்றையும் ஒருமித்து, அவரவர்கள் கேள்வி
களுக்கு மட்டுமல்ல ; ஒரு புத்தகமாகவே அவர்களுடைய கை
யிலே ஒப்படைக்கிறேன் என்று குறிப்பிட்டு, காவல் துறைக்கு
சில அறிவிப்புகளை சொல்ல வேண்டியிருக்கிறது, அதை நான்
வெளியிட விரும்புகிறேன்.

சென்னை பெருநகர் காவலுக்கு கூடுதலாக 6 புதிய காவல்
பிரிவுகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது. பெரியார்
மாவட்டத்திலுள்ள காவல் பிரிவுக்கு கூடுதலாக 60 பேர்கள்
நியமிக்கப்படுவார்கள். மரம் திருட்டு, சிலை திருட்டு போன்ற
வற்றை தவிர்க்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கோவில்களைக் கண்
காணிப்பதற்கு என்று தனியாக பணியாளர்களை நியமிப்பது
கடினம். இப்படி கிராமங்களில் உள்ள கோயில் சொத்துக்களை
பாதுகாப்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது சில கிரா
மங்களை இணைத்து விழிப்புக் குழுவை அமைக்க அரசு முடிவு
செய்துள்ளது. அந்த ஊரில் இருக்கிற முன்னாள் இராணுவ
வீரர்கள், முன்னாள் காவல் வீரர்கள் இந்த விழிப்புக் குழுவில்
பணியாற்ற வகை செய்யப்படுவார்கள்.

சிலை திருட்டு வழக்குகளைக் கவனிப்பதற்கு கூடுதல் காவல்
பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இப்போது சென்னை
யிலும் மற்றுள்ள இடங்களிலும் உள்ள தொல்பொருள் காட்சி
அகங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். வனங்
களில் உள்ள சொத்துக்களை பாதுகாக்கவும் கள்ளக் கடத்தலை
தடுப்பதற்கும் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு நிகழாமல் பார்த்துக்
கொள்வதற்கும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் அளிக்கப்
படும் பொறுப்பை ஆற்றுபவர்களுக்கும் அரசு நேரடி கண்காணிப்
பில் சிறப்பு பயிற்சி பெற்ற ஒரு தனி காவல் படையை அமைக்க
அரசு முடிவு செய்துள்ளது. மருத்துவமனைகளில் விலை உயர்ந்த
மருந்துகள், மற்ற பொருள்கள் திருட்டுப் போவதை தடுப்பதற்
கும் அனுமதி பெறாத பார்வையாளர்களைத் தடுப்பதற்கும்
சட்டம்-ஒழுங்கு பற்றி கண்காணிப்பதற்கும் விசேஷ பாதுகாப்பு





அளிப்பதற்கும் ஒரு அமைப்பை உருவாக்க இந்த அரசு முடிவு
செய்துள்ளது. முதல் கட்டமாக சென்னை மாநகரில் உள்ள
அரசு பொது மருத்துவ மனையில் இந்தப் புதிய திட்டம் இந்த
ஆண்டு தொடங்கப்படும்.

காவல் துறையில் மைக்ரோ ஃபிலிம் பிரிவுக்கு கூடுதலாக ஒரு
உதவி கண்காணிப்பாளரையும், 20 உதவியாளர்களையும் நிய
மிக்க அரசு முடிவு செய்துள்ளது.

(பிற்பகல் 12–40)

காவல் துறையின் சுருக்கெழுத்து பிரிவிற்கு கூடுதலாக ஒரு
தலைமை ரிப்போர்ட்டர், 10 சீனியர் ரிப்போர்ட்டர்கள், 15
ஜூனியர் ரிப்போர்ட்டர்கள் பதவிகளை அமைப்பதாக அரசு
முடிவு செய்துள்ளது. மக்கள் உரிமை பாதுகாப்புச் சட்டத்தை
அமுல்படுத்த அமைக்கப்பெற்றுள்ள, சமுதாய பொருளாதார
உரிமைப் பிரிவிற்கு, மாவட்டத்திற்கு ஒன்றாக, 20 புள்ளி விவர
ஆய்வாளர்கள் பதவிகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.
காவல்துறையின் அமைச்சுப் பணிக்காக தேவைப்படும் கூடுதல்
பணியாளர்கள் நியமனம் குறித்து ஆலோசனைக் குழு வழங்கும்
பரிந்துரையின் அடிப்படையில் கூடுதல் பணியாளர்களை வழங்கு
வது குறித்து, அரசு விரைவிலே முடிவு எடுக்கும். காவல் துறை
யில் பணிபுரிபவர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில்
தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கங்களின் எண்ணிக்கையை
மேலும் 10 கூடுதலாக்க அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு காவல் துறையின் நலம் நீடிக்க ஆண்டுதோறும்
வழங்கப்பட்டு வரும் மானியம் 1.50 இலட்சத்திலிருந்து 2.50
இலட்சமாக உயர்த்தப்படும். காவல்துறைக்கு நவீன வசதிகளை
அனைத்தும் செய்யும் பொருட்டு, ஒவ்வொரு நிலையத்திற்கும்,
நவீனச் செய்தித் தொடர்புக் கருவிகளை வழங்குவது என்ற
அடிப்படையில் ரூபாய் 40 இலட்சம் செலவில், அந்தக் கருவிகளை
இந்த நிதியாண்டில் வழங்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது.
விஞ்ஞான ரீதியாக தொழில் நுட்பச் சாதனங்களை பயன்படுத்தி
கண்டு பிடிக்க தேவைப்படும் கருவிகள் ; அல்ட்டிரா வயலட்
விளக்குகள், புலனாய்வு சாதனங்கள் அடங்கியப் பெட்டிகள்,
மைக்ரோபோன் சாதனங்கள் போன்றவற்றை காவல் துறைக்கு
அரசு வழங்கும். தமிழகத்தில் இயங்கி வரும் மின்னணுக்கருவி
செய்தித் தொடர்பு அமைப்பினை ரூபாய் 50 இலட்சம் செலவில்
விரிவாக்கப்படும். அதில் காவல் துறைக்கு பல்வேறு வகையில்
பயன்படும் பொருட்டு, ஒரு செய்தி தொடர்பு அமைப்பு உரு
வாக்கப்படும்.

1981-82ஆம் ஆண்டில் 150 காவல் நிலையக் கட்டிடங்களைக்
கட்ட ஆணையிடப்பட்டு, அது முடியும் தருவாயில் இருக்கிறது.
அடுத்த கட்டமாக 96 காவல் நிலையங்களின் கட்டிடங்களைக்
கட்ட அரசு முடிவு எடுத்திருக்கிறது. 1983–84 ஆம் ஆண்டில்

காவல் துறையில் பழைய வாகனங்களுக்கு பதிலாக 10 சதவீதம்
புதிய வாகனங்கள் வாங்கும் திட்டம், 1.83 இலட்சம் செலவில்
நிறைவேற்றப்பெறும். 1983—84 ஆம் ஆண்டில் மேலும் 50
காவல் நிலையங்களில் பெண் காவலர்களுக்கு தனி இணைப்பு
நிலையங்கள் கட்ட அனுமதி வழங்கப்படும். காவல் துறை சரி
வர செவ்வனே பணிபுரிய வேண்டும் என்றால், அடிப்படைத்
தேவையான இன்றியமையாத வசதிகள் என்ன என்பது குறித்
தும், எப்படி திறமையாக காவல் துறை செயல்பட்டு மக்களுக்கு
பயன் அளிக்கும் வகையில் பல பணிகளை ஆற்ற முடியும் என்பது
குறித்தும், அரசு தீவிரமாக சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வரும்.

தீ அணைப்புத் துறையைப் பற்றி யாரும் குறையாகப் பேச
வில்லை என்றாலும், எனக்கு ஒரு குறை இருக்கிறது. காவல்
துறையில் இருப்பவர்களுக்கு ஜனாதிபதி அவர்களுடைய பதக்கம்
கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்ய நம்மால் முடிகிறது.
ஆனால், தீயணைப்பு பணியில் அப்படி பரிந்துரை செய்ய முடி
யாத நிலைமை இருப்பதை அறிந்து இந்த அரசு வருந்துகிறது.
அதற்கான ஏற்பாடுகளையும், அதற்கேற்ற பயிற்சிகளையும் அவர்
களுக்குத் தனியாக அதற்கென கொடுக்க வேண்டும் என்று அரசு
விரும்புகிறது. ஆங்காங்கே தீ அணைப்பு நிலையங்கள் வேண்டும்
என்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த வகையில்,
இந்த ஆண்டு என்ன செய்யவிருக்கிறோம் என்று குறிப்பிட விரும்பு
கிறேன். மறைமலை நகர், வால்பாறை, திருமங்கலம், கம்பம்,
வேடசந்தூர், செய்யார், நாற்றாம்பள்ளி, சோளிங்கர், ஆலங்
குடி, திருமயம், வத்திராயிருப்பு, ஏற்காடு, காட்டுமன்னார்
கோவில், குறிஞ்சிப்பாடி, நெல்லிக்குப்பம், திட்டக்குடி, கீரனூர்,
சாத்தான்குளம், சங்கரன்கோயில், விளாத்திக்குளம், பாபநாசம்,
பேராவூரணி, சீர்காழி, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில்
ஒவ்வொரு தீ அணைப்பு நிலையங்களை அமைக்க அரசு முடிவு
எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

தீ அணைப்புத் துறை பணியாளர்களுக்கு சொந்தமாக வீடு
கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலித்து தமிழ்நாடு
காவல் வீட்டு வசதி கழகத்திடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க
அரசு முடிவு செய்துள்ளது. அத்தோடு, இந்த ஆண்டு ஒரு
திட்டத்தை அமுல் படுத்த வேண்டும் என்று விரும்பினோம்.
வறட்சியின் காரணமாக, நிதிநிலை பற்றாக்குறை ஏற்பட்டு,
அடுத்த ஆண்டுக்கென அது தள்ளிவைக்கப்பட்டிருந்தாலும், அதை
விரைவிலே செய்ய வேண்டும் என்கிற என்னுடைய உள்ளக்கிடக்
கையை, எண்ணத்தை, நான் எப்படியாவது சொல்லித் தீரவேண்
டும் என்று விரும்புகிற காரணத்தால் அதை குறிப்பிட விரும்பு
கிறேன்.

முதல்நிலை காவலர்கள் என்கிற பதவியில் 4,587 பேர்கள்
பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை
கூடுதலாக்கும் வகையில், அவர்களை தலைமைக் காவலர்களாக





ஆக்குவது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கு
ஆண்டுதோறும் 28 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று
மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு தமிழ் நாட்டில் நிலவி வரும் வறட்சி நிலைமை
யைப் போக்கும் வகையில் அரசு பல நிவாரணப் பணிகளை மேற்
கொண்டிருக்கின்ற காரணத்தால் அதற்கான நிதியை முழுமை
யாக வழங்கிவிட்டது. எனவே, அடுத்த ஆண்டு வறட்சி பற்றிய
பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடுமேயானால் அரசு இந்தத்
திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது. ஆனால், இடை
யிடையே நிதிநிலைமை சீர்படுமேயானால் அந்த இடைக்காலத்தில்
கூட, அடுத்த கூட்டத் தொடரிலேயே கூட அறிமுகப்படுத்த
விரும்புகிறேன் என்பதைச் சொல்லி அளிக்கப்பட்ட வெட்டுப்
பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்
கைகளை நிறைவேற்றித் தருமாறு பேரவைத் தலைவரின் மூல
மாக நான் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.
இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 15—காவல் துறை.

திருவாளர்கள் த. வேணுகோபால், கு. ரமணி, பொ. உத்திரா
பதி, எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாத
தால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனு
மதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்
பெற்றன.

திரு. இல. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம்,
பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக் கொள்ளப்
பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை
என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 76,23,05,000-க்கு மேற்படாத
தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

### கோரிக்கை எண் 16— தீயணைப்புப் பணிகள்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், தி. கா. [illegible]ல்லப்பன்,
எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தி[illegible] இல்லாத
தால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனு
மதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக்
கருதப்பெற்றன.

[1983 ஏப்ரல் 20

திருவாளர்கள் இல. பலராமன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 5,64,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## 3. அறிவிப்பு.

நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 21—4—1983 காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12—48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

259. ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமத்தின் சென்னை பெருநகர்ப்பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு-வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13 ஆம் தேதியிடப்பெற்ற 811 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

260. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) 1956 [ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

## இணைப்பு.

(452 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 818-க்கான விடையைக் காண்க.)

அவ்வப்போது ஏற்படும் ஆசிரியர்களின் குறைகளைக் களைய கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம், மற்றும் மாநில அளவிலான மும்மட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### கல்வி மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு

| | | |
|---|---|---|
| 1 | மாவட்டக் கல்வி அலுவலர் .. | தலைவர். |
| 2 | மாவட்டத் தலைமையிடத்து உதவிக் கல்வி அலுவலர் (மாவட்டத் தலைமையிடத்தில் உதவிக் கல்வி அலுவலர் இல்லாதிருப்பின் மாவட்டக் கல்வி அலுவலரால் நியமிக்கப்படும் ஒரு உதவிக் கல்வி அலுவலர்). | உறுப்பினர்-செயலாளர் |
| 3 | கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து உதவிக் கல்வி அலுவலர்கள் .. .. .. | உறுப்பினர்கள். |
| 4 | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட அங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் (இவர்கள் ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களாக இருக்க வேண்டும்). | உறுப்பினர்கள். |
| 5 | பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் கல்விக்காக பாடுபட்ட இரண்டு முக்கியமானோர் (இவர்களில் ஒருவர் பெண்மணியாக இருக்க வேண்டும்). | ஷை |
| 6 | பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் பெற்றோர் — ஆசிரியர் கழக சமூக தொண்டு புரிந்தோரிலிருந்து பிரதிநிதிகள் இருவர் (இவர்களில் ஒருவர் ஆதித் திராவிடரினத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்). | ஷை |





### வருவாய் மாவட்டக் குழு

| | | |
|---|---|---|
| 1 | முதன்மைக் கல்வி அலுவலர் .. | தலைவர். |
| 2 | மாவட்டத் தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் .. | உறுப்பினர்-செயலாளர் |
| 3 | வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் மகளிர்ப் பள்ளி ஆய்வாளர்களும். | உறுப்பினர்கள். |
| 4 | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் (இவர்கள் தற்போது ஆசிரியர்களாக பணியாற்ற வேண்டும்). | ஷை |
| 5 | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் (இவர்கள் தற்போது ஆசிரியர்களாக பணியாற்ற வேண்டும்). | ஷை |
| 6 | தமிழ்நாடு கல்வி சார்நிலை பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் (இவர்கள் தற்போது பணியாற்று ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களாக இருக்க வேண்டும்). | ஷை |
| 7 | பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் வருவாய் மாவட்டத்திலுள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணி மூப்பில் முதன்மையாக உள்ள தலைமை ஆசிரியர்கள் இருவர். | ஷை |
| 8 | பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் கல்விக்காக பாடுபட்ட முக்கியமான இருவர் (இவர்களில் ஒருவர் பெண்மணியாக இருக்க வேண்டும்.). | ஷை |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 28-11-1983]                [Issued 28-11-1983

2721
ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
31 மார் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 21, 1983—தொகுதி L எண் 5

Thursday the 21st April 1983 Volume L No. 5

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்]                [Price Rs. 3-50 Paise

| | |
|---|---|
| 9 பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் பெற்றோர் — ஆசிரியர் கழகம் சமூகத் தொண்டு புரிந்தோரிலிருந்து பிரதிநிதிகள் இருவர் (இவர்க களில் ஒருவர் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்). | உறுப்பினர்கள். |

### மாநில அளவிலான குழு

| | |
|---|---|
| 1 கல்வி அமைச்சர் .. .. | தலைவர். |
| 2 கல்வி, அறிவியல் மற்றுத் தொழில் நுட்பவியல் துறை ஆணையர் மற்றும் செயலாளர். | துணைத் தலைவர். |
| 3 பள்ளிக் கல்வி இயக்குநர் .. | உறுப்பினர்-செயலாளர் |
| 4 துணைச் செயலாளர் (பள்ளிக் கல்வி) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை. | உறுப்பினர். |
| 5 துணைச் செயலாளர் (கல்வி சம்பந்தப்பட்ட பொருளை ஆய்வு செய்யும்) பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை. | ஷை |
| 6 துணைச் செயலாளர் (கல்வி சம்பந்தப்பட்ட பொருளை ஆய்வு செய்யும்) நிதித்துறை. | ஷை |
| 7 அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாநில அளவிலான தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகப் பிரதிநிதிகள் இருவர் (இவர்கள் தற்போது ஆசிரியர்களாக பணியாற்ற வேண்டும்). | ஷை |
| 8 அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அளவிலான அமைப்பிலிருந்து இரு பிரதிநிதிகள் (இவர்கள் தற்போது ஆசிரியர்களாக பணியாற்ற வேண்டும்). | ஷை |



| | |
|---|---|
| 9 தமிழ்நாடு கல்விச் சார்நிலைப் பணியாளர் சங்கத்தின் மாநில அளவிலான சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் (இவர்கள் தற்போது ஆசிரியர்களாகப் பணியாற்ற வேண்டும்). | உறுப்பினர்கள். |
| 10 பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் கல்விக்காகப் பாடுபட்ட முக்கியமானோர் இருவர் (இவர்களில் ஒருவர் பெண்மணியாக இருக்க வேண்டும்). | ஷை |
| 11 பெற்றோர்—ஆசிரியர் கழகம் மற்றும் சமூகச் சேவை புரிந்தோர் இவர்களிடையேயிருந்து இரண்டு பிரதிநிதிகள் (இவர்களில் ஒருவர் ஆதித் திராவிடர் இனத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்). | ஷை |

21—4—1983

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கங்கள். |
| 1. | வினாக்கள்—விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 535—568 |
| 2. | தகவல் கோரல்— | |
| | அரசின் நிருவாக நடவடிக்கைகள் .. | 560—577 |
| 3. | அறிவிப்புகள்— | |
| | (அ) அவைக்குழு .. .. .. | 570 |
| | (ஆ) உள்ளூர் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு 1983 (ஆ.இ). .. .. .. | 577 |
| | (இ) உறுப்பினர் திரு. வே. இராஜசேகரன் கைது செய்யப்பெற்றுள்ளது. .. | 669 |
| 4. | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) அம்பத்தூர் பகுதியில் வீட்டுமனைப் பட்டாக்களுக்காக வசூலிக்கும் தொகை. .. .. .. | 571.. 573 |
| | (ஆ) பெரியார் மாவட்டத்திலுள்ள எரி சாராய ஆலைகளின் கழிவுநீரினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பெறாது பாதுகாத்தல். .. .. .. | 573—577 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| | (அ) உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு 1983. .. .. .. | 577—584 |
| | (ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு, 1983. .. .. .. | 58 |
| | (இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. | 585—669<br>669—670 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 670 |

[1983 ஏப்ரல் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தவேண்டுமென்றுதான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கருதுகிறது. தமிழ்நாட்டிலே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் அத் தனையும் அரைவை செய்வதற்கு அரசாங்கத்தால் நடத்தப் படுகிற ஆலைகள் போதுமானவையாக இல்லை. தனியார் ஆலை களிலே கொடுத்து அரைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது., இன்றுகூட அவைகளைப் பெருக்க வேண்டிய திட்டத்தை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தீட்டிக்கொண்டு இருக்கிறது. நிதிவசதியைப் பொறுத்து அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்யும். சிறு சிறு ஆலைகளை அமைப்பதற்குப் பதிலாக நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் அரைக்கக்கூடிய பெரிய ஆலையை தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் தஞ்சை மாவட்டத் திற்கும் இடையிலே சீர்காழிக்கு அருகிலே நிறுவுவதற்கு திட்ட மிடப்பட்டு அதைப் பொறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

**தற்போது அமுலில் உள்ள 50 சதவீத லெவி முறை.**

***வினா எண் 827—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அமுலில் உள்ள 50 சதவிகிதம் லெவியைக் குறைக்கக்கோரி, அரசுக்கு விண்ணப்பம் எதுவும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். (ஆ) பொது விநியோக முறையில் தற்போது 85,000 டன்கள் அரிசிக்கு மேல் வழங்க வேண்டியிருக்கிறது. மைய அர சிடமிருந்து அரிசி கிடைப்பதில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் அரிசி கிடைக்காமல் போய் விடக்கூடாது என்பதற்காக எவ்வளவு அதிகமாக முடியுமோ அந்த அளவு தமிழ் நாட்டிலேயே கொள் முதல் செய்ய வேண்டும். அதனால் லெவியை 50 சதவிகிதத் துக்கு குறைவாக நிர்ணயிக்கவேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர் களே, தமிழ்நாட்டில் நெல்லுக்கு 50 சதவீதம் லெவி விதித்து இருப்பதை எடுக்க முடியாது என்று நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் முழு நெல்லையுமே அரசுக்குக் கொடுக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு வைக்கப்பட்



1983 ஏப்ரல் 21]

டிருக்கிறதே, அது தளர்த்தப்படுமா ? அந்தக் கட்டுப்பாடு குறித்து உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதே அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே 50 சதவீதம் வியாபாரிகள் லெவி கொடுத்துவிட்டு மீதி நெல்லை பிற மாவட்டங்களுக்கோ பிற பகுதிகளுக்கோ எடுத்துச் செல்லலாம் என்ற விதிமுறை இருந்தது. ஆனால் மத்திய அரசினுடைய இருப்பிலிருந்து போதுமான அளவுக்கு அரிசி நமக்குக் கிடைக்கவில்லை. பொது விநியோக முறையைச் சீராகவும் செம்மையாகவும் நடத்தவேண்டுமென்ற கடப்பாடு நமக்கு இருப்பதன் காரணமாக நம்முடைய இருப்பை அதிகப் படுத்தவேண்டியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அதைச் சுற்றி யிருக்கிற திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தாலுக்காக்கள், தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தாலுகாக்கள் இவற்றில் கொள் முதல் செய்கிற அதிகாரம் அரசுக்கு மட்டுமேதான் இருக்கிறது, வியாபாரிகளுக்கு இல்லை என்று விதித்து விவசாயிகள் தங்க ளுடைய செலவுக்குப் போக வெளிச் சந்தையிலே விற்கிற அத்தனையையும் அரசுக்கே தரவேண்டுமென்ற முறையிலே—சாதா ரணமாக இந்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலை குவிண்டாலுக்கு 122 ரூபாய் தான், ஆனால் வறட்சிச் சலுகை என்ற முறையில் 15 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை இருக் கிறது — தஞ்சாவூர் மாவட்டத்திலே இது ஓரளவுக்கு சீராகவும் நல்லமுறையிலும் நடைபெற்று அரசாங்கத்தினுடைய இருப்புக்கு கொள்முதல் மூலமாக அரிசி வந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9–10).

ஆனால் சிலர் உயர்நீதி மன்றத்திலே ரிட் பைல் பண்ணியதன் காரணமாக விவசாயிகள் தங்களுடைய நெல்லை முழுவதையும் வாங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடாது, அவர்கள் கொடுப்பதை வாங்கிக்கொண்டு மீதியை அவர்கள் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று விரும்புவார்க ளானால் அனுமதிக்கவேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதை மேல்முறையீடு செய்கிற முயற்சிகளில் அரசு ஈடுபட் டிருக்கிறது. ஆனால் விவசாயிகள் மட்டும் தான் அதைச் செய்ய லாமே தவிர வியாபாரிகள் அதை செய்யக்கூடாது என்பது உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு கொள்முதலாக 50 சத வீதம் லெவியை அமல்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அது நிரந்தரமாக்கப்படுமா ? குறுவை, சம்பா பயிர்களில் வட ஆற்காடு மாவட்டத்தில் தஞ்சைக்கு அடுத்தபடியாக நெல்லை உற்பத்தி செய்தாலும், அவர்கள் லிப்ட் இரிகேஷன் அதாவது

[1983 ஏப்ரல் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீன அரிசி அறவை
ஆலைகள் அனைத்தும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்
பாக நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர தனியார்
அரிசி ஆலைகளும் தனியாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.
இப்போது சமீபத்தில் உரிமங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
உரிமங்கள் வழங்கவேண்டும் என்றால் மத்திய அரசு அதற்கான
சில நிபந்தனைகளை எல்லாம் விதித்து அந்த அடிப்படையில்
தான் அது வழங்க வேண்டியிருக்கிறது.

**திரு. பா. ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வடாற்காடு மாவட்டம் செய்யாறில் உள்ள நவீன
அரிசி ஆலை லாபத்தில் நடைபெறுகிறதா? நஷ்டத்தில் நடைபெறு
கிறதா? அதன் புள்ளி விவரம் இருந்தால் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, செய்யார் நவீன அரிசி ஆலை
லாபத்தில் தான் நடைபெறுகிறது.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில்
உள்ள நவீன அரிசி ஆலையில் சுமார் நூற்றுக்கணக்கான மூட்டை
கள் களவுபோய் விட்டதாகச் சொல்லப்படுகிறது.
உண்மைதானா? அதனால் அந்த ஆலையில் நஷ்டம் வந்ததாகச்
சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க
அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டம் ஏற்பட்டுள்ள ஆலை
கள் பற்றி ஏன் நஷ்டம் ஏற்பட்டது என்பதற்கான காரண
காரியங்களை விசாரித்து எதிர் காலத்தில் நஷ்டம் ஏற்படாத
அளவுக்கு கண்காணிப்பாக இருக்கவேண்டும் என்று பொதுவாக
உத்திரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கூறுவது போன்று சிதம்பரத்தில் நடைபெற்றது பற்றிய விவரம்
இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால்
அதனுடைய விவரங்களைப் பெற்றுத்தர முடியும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மற்ற ஆலைகளை விட நவீன அரிசி ஆலைகளில் அரிசி
அதிகமாக கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே 100
கிலோ நெல்லுக்கு எத்தனை கிலோ அரிசி இந்த நவீன அரிசி
ஆலை மூலம் கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நவீன அரிசி ஆலைகளில் அதிக
பட்சமாக 68 சதவீதம் என்ற அளவு பெறப்படுகிறது.



1983 ஏப்ரல் 21]

**திரு. இரா. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை
நவீன அரிசி ஆலைகள் உள்ளன. மேலும் நவீன
அரிசி ஆலைகள் மாவட்டத்தில் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா
என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும்
எத்தனை அரிசி ஆலைகள் இருக்கின்றன என்ற கணக்கு
இப்போது இல்லை. அந்தக் கணக்கைப் பெற வேண்டுல் என்றால்
தனியாக கேள்வி போட வேண்டும், தமிழ்நாட்டில் நுகர்
பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 13 நவீன அரிசி ஆலைகள்
செயல்பட்டு வருகின்றன அது பின்வருமாறு செங்கற்பட்டு
மாவட்டம் கம்மாவரத்திலும், வடாற்காடு மாவட்டம் செய்யாரி
லும், தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியிலும், கோவை
மாவட்டம் பொள்ளாச்சியிலும், திருச்சி மாவட்டம் அடவத்தூரி
லும், மதுரை மாவட்டம் கடாச்சநந்தலிலும், திருநெல்வேலி
மாவட்டம் தாழையூத்திலும், அம்மன்பேட்டை, சுந்தரகோட்டை,
பட்டுக்கோட்டை ஆகிய இடங்கள் தஞ்சை மாவட்டத்திலும்,
தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வத்திலும், தஞ்சை மாவட்டம்
சிதாகாட்டிலும், தஞ்சை மாவட்டம் திருவாரூரிலும் இந்த 13
நவீன அரிசி ஆலைகள் இருக்கின்றன. புதிதாக மிகப்பெரிய நவீன
அரிசி ஆலை ஒன்று சீர்காழிக்குப் பக்கத்தில் 2 கோடி ரூபாய்
மதிப்பீட்டுச் செலவில் ஏற்படுத்துவதற்கு திட்டங்கள் வகுக்கப்
பட்டிருக்கிறது.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தமிழ்
நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்த ஆண்டிலோ அல்லது
வருகிற ஆண்டிலோ இவ்வாறு எத்தனை ஆலைகள் அமைப்
பதற்கு திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, சீர்காழிக்கு அருகில் இருக்கூர் கிராமத்திலே
நாளொன்றிற்கு 100 மெட்ரிக் டன் நெல்லை அரவை செய்யக்
கூடிய திறன் உள்ள அரிசி ஆலையை அமைக்க வேண்டுமென்ற
செயற்குறிப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால்
அனுப்பப்பட்டு அதை அரசு ஏற்றுக்கொண்டு அதன்மீது நட
வடிக்கை எடுக்கப்பட்டு இந்த ஆண்டிலே வருவதற்கான முயற்
சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. என. வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த
குறுவை ஈரத்தை காயவைக்கவும் அரிசியின் அளவைக் கூடுதலாக்க
வும் இருக்கின்ற முறையிலே தான் இந்த நவீன அரிசி ஆலைகள்
உபயோகப்படுகின்றனவே, அவை இப்போது நமக்குப் போது
மான அளவுக்கு இல்லாமல் இருக்கிறது, எந்த அளவிற்கு நமக்கு
அவை தேவையிருக்கிறதோ அந்த அளவிற்கு விஸ்தாரமாக்க
தமிழகத்திலே அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

கிணற்று பாசனத்தின் மூலமாக அதிகமாக நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். வியாபாரிகளுக்கு 50 சதவீதம் என்று இருக்கிற போது உற்பத்தியாளர்களுக்கு விலை குறைவது என்பது இன்றைக்கு இருக்கிற நிலை. அதைக் குறைப்பதற்கு, வியாபாரிகளுக்கு ஊக்கம் தருவதற்காக 50 சதவீதம் என்பதை அந்த மாவட்டத்திற்காகிலும் தனியாக ஒரு சதவீதத்தை குறைப்பதற்கான ஒரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, லெவியைப் பொறுத்தவரையில் கொள முதலுக்கு ஆண்டு ஒன்றிற்கு $7\frac{1}{2}$ லட்சம், 8 லட்சம், 9 லட்சம் தேவைப்படுகிறது. அந்த இருப்பைப் பெறுவதற்கு மத்திய அரசினுடைய இருப்பிலேயிருந்து வரவேண்டும் அல்லது நாம் கொள்முதல் செய்யவேண்டும். நாம் கொள்முதல் செய்யாமல் விட்டுவிட்டு மத்திய அரசை கேட்டுக்கொண்டிருந்தால் அதுவும் முறையாக இருக்காது. நம்மால் முடிந்த அளவிற்கு கொள்முதல் செய்கிறோம் என்று சொல்லி, இவ்வளவு தான் இருக்கிறது தமிழ்நாட்டிலே என்று எடுத்துச் சொல்லி, பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்று கேட்கிற நிலையில் இருப்பதன் காரணமாக, அவர்கள் லெவியை இன்னும் கொஞ்சம் கூட அதிகமாக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். 60 சதவீதம் ஆக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் தான் 50 சதவீதம் என்று போட்டிருக்கிறோம். ஆகவே விவசாயிகள் வியாபாரிகளுக்கு விற்று, வியாபாரிகள் எடுத்துச்செல்கிற போதுதான் இந்த 50 சதவீதத்தைப் போடுகிறோம். மீதி 50 சதவீதத்தை அவர்கள் எங்கே வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்கிறபோது அது விவசாயிகளை கஷ்டப்படுத்துவது அல்ல. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் லெவி நாம் போடவில்லை. வியாபாரிகள் லெவி தான் போட்டிருக்கிறோம். வியாபாரிகளுக்கு சர்ப்ளஸ்ஸாக இருக்கிறபோது அவர்கள் எங்கே வேண்டுமானாலும் கொண்டு போகலாம். 50 சதவீதத்தை கொடுத்துவிட்டு மீதியை எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்கிறோம். வியாபாரிகளுக்குத் தான் இந்த நிபந்தனையை வைத்திருக்கிறோம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நிர்ப்பந்தம் காரணமாக வியாபாரிகளுக்கு 50 சதவீதம் என்று இருப்பதை குறைப்பதற்கு வசதியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நெல்லை கொள்முதல் செய்து, நாம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விநியோகிக்காத நிலையில் அவர்கள் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு இந்த லெவியிலிருந்து விதிவிலக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? அப்படிப்பட்ட கோரிக்கை





ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதன் மீது அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களில் கொள்முதல் செய்கிறபோது கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு லெவி கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று தான் வைத்திருந்தோம். ஆனால் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டம் திருச்சி மாவட்டம் மற்ற நெல் கிடைக்கிற இடங்களில் முழு கொள்முதலையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே செய்வதன் காரணமாக அந்த நிலை இருக்கிறது. இப்போது அதுபற்றி இன்னும் உத்தரவிடப்படவில்லை. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் லெவி கொடுக்காமல் வாங்கி வைத்து விற்கிற நிலையை சென்ற ஆண்டு நாம் வைத்திருந்தோம்.

**திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது குவிண்டாலுக்கு 122 ரூபாய் என்றும், ஊக்கத்திற்காக 15 ரூபாய் மேற்கொண்டு கொடுப்பதாகவும் சொன்னார்கள். ஆக 137 ரூபாய் அரசு கொடுக்கிறது. ஆனால் வெளி மார்க்கெட்டிலே 160 ரூபாய், 170 ரூபாய் கொடுத்து தான் வியாபாரிகள் வாங்குகிறார்கள். அதிலே ஏகப்பட்ட நஷ்டம் ஏற்படுவதாலே அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் கூடுதல் ரூபாய் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் விவசாயிகள் எவ்வளவு விலை வேண்டுமானாலும் வியாபாரிகளைக் கேட்கலாம். ஆனால் வியாபாரிகள் தான் நமக்கு 122 ரூபாய் குவிண்டாலுக்கு விற்றுவிட்டு மீதியை அவர்களுக்கு ஏற்படுகிற நஷ்டத்தையும் சேர்த்து வைத்து வெளிச்சந்தையிலே விற்கலாம் அல்லது வெளி மாநிலங்களுக்கு ''ஓன் சோன்'' என்ற முறையிலே கொண்டுபோகலாம் என்றிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் விரும்புகிற விலைக்கு வியாபாரிகளிடத்திலே கொடுப்பதற்கான வழியை நாம் தடுத்து நிறுத்திவிட்டதன் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே முழு கொள்முதலை நாமே வாங்கவேண்டுமென்று உத்தரவிட்டதன் காரணமாக, வறட்சி சலுகையென்று நாம் கூடுதலாக 15 ரூபாய் கொடுக்க வேண்டிய தன்மை வருகிறது. இல்லாவிட்டால் விவசாயிகள் அவர்களுக்கு விருப்பப்படியான விலையில் தான் வியாபாரிகளுக்கு தருவார்கள். வியாபாரிகளிடத்தில் நாம் 12 ரூபாய்க்கு வாங்குகிறோம். அவர்களுக்கு ஏற்படுகிற

நஷ்டத்தை அதன் மேலே வைக்க வேண்டும். வியாபாரி களுக்கு எந்தவிதமான சலுகைகளும் தருகிற நிலைமைகள் இல்லை. ஆனால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படாமல் இருக்க, அரசாங்கத்தின் கொள்கையும் நிறைவேற, அவர் களுடைய பணிகளும் சிறப்புற நிறைவேற எந்தெந்த வழி வகைகளைச் செய்யமுடியுமோ அவைகளை அரசு செய்து வரு கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, வியாபாரிகளிடத்திலிருந்து கொள்முதல் செய்யப் படுகிறது என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் சாதாரண ஏழை விவசாயத் தொழிலாளர்கள் கூலிக்குச் சென்று அறுவடை செய்து அவர்கள் கொண்டு வந்த கூலி நெல்லைக்கூட அதிகாரிகள் கட்டாயப் படுத்தி பறிமுதல் செய்திருக்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய உபயோகத்திற்காகக் கூலியாக பெற்றுக்கொண்டு வருவதைத் தடுக்க வேண்டாமென்று தான் சொல்லியிருக்கிறோம். எனவே கூலியாகக் கொண்டு வருகின்றபோது தடுப்பது இல்லை. அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி சொல்லியிருக்கிறோம். உறுப்பினர்கள சிலர் உணவுத் தட்டுப்பாடு இருக்கும்பொழுதும் பேசியிருக்கிறார்கள்; அதற்கு முன்னாலும் பேசியிருக்கிறார்கள். அதிகாரிகளிடத்திலேயும் சொல்லியிருக்கிறோம். ஆனால் சிலபல தந்திரமான வியாபாரி கள் கூலியாகப் போகின்றது என்று சொல்லி கொண்டு போகின்ற நிலைமைகள் வருகின்றபொழுது அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆராய வேண்டிய நிலைமைகள் வருகின்றனவே, தவிர கூலியாகக் கொண்டு போவதைத் தடுக்க வேண்டுமென்பது நோக்கம் அல்ல.

பழைய தங்கம் வெள்ளி மீதான விற்பனை வரி விலக்கு.

*வினா எண் 828—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சிதம்பரம்—தங்கம், வெள்ளி, வைரம் வியாபாரிகள் சங்கம் 14—2—1981 தேதியில் பழைய தங்கம், வெள்ளி விலைக்கு வாங்கி விற்பனை செய்வதற்கு விற்பனை வரி விலக்கு அளிக்க கோரிக்கை அனுப்பி உள்ளனரா?

(ஆ) அக் கோரிக்கையின் நிமித்தம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.



திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே நகைக் கடைகளில் நகைகளை விற்காமல் இடைத்தரகர்கள் மூலம் ரோடுகளிலேயும், வெளியிலேயும் நகைகளை வாங்கு வதும், விற்பனை செய்வதும் நடக்கிறது. பழைய நகைகளுக்குத் தங்க மெருகேற்றியும் விற்கிறார்கள். இதனால் அதிக இலாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அதற்கு விற்பனை வரி விலக்கு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதோடு பெரிய பெரிய பணக்காரர்கள்தான் ஆடம்பரமான தங்க நகைகளை வாங்குகிறார்களே தவிர சாதாரண ஏழை எளிய மக்கள் வாங்குவதில்லை; எனவே, 2 பெர்செண்ட் விற்பனை வரியை 5 பர்செண்ட் ஆக உயர்த்தியும், வெள்ளிக்கு முழுக்க முழுக்க விற்பனை வரி விலக்கு கொடுத்தும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலை வரவர்களே, இப்பொழுது இருக்கின்ற முறையில் கொள்முதல் வரி தங்கமாக இருந்தாலும் சரி, வெள்ளியாக இருந்தாலும் சரி, வைரமாக இருந்தாலும் சரி, 2 பர்செண்ட் வசூல் செய் கிறோம். அதற்குப் பிறகு விற்பனை வரி என்று வருகின்ற பொழுது தங்கத்திற்கும், வைரத்திற்கும் 5 பர்செண்ட் மல்ட்டி பாயிண்ட்; வெள்ளியை ஆபரணங்களாகச் செய்து விற்கின்ற பொழுது இப்பொழுது தான் அதற்கு அந்த விற்பனை வரியை எடுத்திருக்கிறோம் என்பதையும், அதை ஆபரணங்களாக அல்லது மற்றப் பொருள்களாகச் செய்து விற்றால் வரி உண்டு என்பதை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம், சென்னை, திருச்சி, மதுரை மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர், கரூர் போன்ற இடங்களிலும், காயல்பட்டினம், கீழக்கரை போன்ற இடங்களிலிருந்து எப்படியெப்படியோ வருகின்ற நகை களைக் கணக்கில் எழுதுவது கிடையாது. பழைய நகைகளை உருக்கி கணக்கில் எழுதுகிறார்கள். அதனால் மத்திய அரசாங் கத்தையும், மாநில அரசாங்கத்தையும் ஏமாற்றி வரி ஏய்ப்பு செய்யும் நகைக் கடைகளின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலை வரவர்களே, மனித சமுதாயம் இருக்கின்றவரையிலும் நல்லவர் களும் இருப்பார்கள்; ஏமாற்றுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஏமாற்றைக் கண்டு பிடிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வெற்றி பெறுவதும் உண்டு; தோல்வி அடைவதும் உண்டு; வெற்றி எவ்வளவு என்றால் சதவீதத்தைத்தான் சொல்ல முடியும்.

[1983 ஏப்ரல் 21

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, செயற்கை வைரத்திற்கு வரி விதிக்கப்படுகிறதா? அப்படி யென்றால் அந்த வரியை எடுத்து விடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வைரம் என் றால் விலை உயர்ந்தது என்று பொருள், போடப்படும் வரியை நீக்குவதாக இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இங்கே நம்முடைய அமைச்சரவர்கள் சொல் வதில், வைரம் போன்றவற்றிற்கு வரி விலக்கு வேண்டு மென்று நான் கேட்கவில்லை. ஆனால் கவரிங் நகைகளைப் பொறுத்தவரையில், அதைச் செய்கின்ற தட்டார்களும் சாதாரண மானவர்கள்; அதை அணிகின்ற மக்களும் சாதாரணமானவர் கள்தான். செம்பிலே தங்க முலாம் பூசி அணிபவர்கள் ஏழை எளிய மக்கள். உலகத்திற்கு, தாங்களும் தங்க நகை கள் அணிகிறோம் என்று காட்டிக் கொள்வதற்காகச் சாதாரண மக்கள் ஆசைப்பட்டு அப்படிச் செய்கிறார்கள். அப்படி நடுத்தர ஏழை எளிய மக்களின் ஆசையைப் பூர்த்தி செய்யும் வகையில் கவரிங் நகைகைளுக்கு வரி விலக்கு கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் யோசிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அணிபவர்கள் மட்டும் சாதாரணமானவர் கள் இல்லை; இப்பொழுது கேள்வியைக் கேட்பவரும் சாதாரண மானவர் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகையால், சாதாரணமானவர்கள் பளபளப்பாக இருப்பதாகக் காண்பிக்க வேண்டுமென்ற எண்ணமே கூட தவிர்க்கப்பட வேண்டும்.

(முற்பகல் 9-20)

சமுதாயத்திலே பளபளப்பாய், மினுமினுப்பாய், வாழ வேண்டுமென்பதாலே மக்களுக்கும் பயன் இல்லை. அவர் களுக்கும் பயன் இல்லை. ஆனால், நீங்கள் சொல்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. கவரிங் நகைகளுக்கு வரி விதிப்பு எடுக்க வேண்டுமென்பதை அரசு உண்மையாக அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.



1983 ஏப்ரல் 21]

## கொல்லி மலையில் விதை உற்பத்திப் பண்ணை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 787—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கொல்லி மலையில் விதை உற்பத்திப் பண்ணை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : கொல்லி மலையில் விதை உற்பத்திப் பண்ணை அமைக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மலைப் பகுதியில் பயிரிட ஏற்ற விதைகளான நெல், ராகி, மரவள்ளி, பீன்ஸ், பழ வகைகள், போன்றவைகள், அதிகப் பலன் தரத் தக்க விதைகள், மலைப் பகுதி சீதோஷ்ண நிலைக்குத் தயாரிக்கப்பட்டால்தான் பலன் அளிக்க வாய்ப் பிருக்கிறது. ஆகவே, கொல்லி மலையில் மலைகளுக்கு ஏற்ற பயிர்களுக்கு விதைப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, விதைப் பண்ணை என்பது மாநிலம் முழுவதற்கும் பயன் படத்தக்க வகையிலே இருக்க வேண்டும். மலைப் பகுதிகளுக்கு மட்டும் பயன்படக்கூடிய பயிர்களை வைத்து நாம் விதைப் பண்ணை அமைக்க முடியாது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாநிலம் முழுவதும் உள்ள விதைப் பண்ணை களில் தயாரிக்கின்ற விதைகள் மலைப் பகுதிகளுக்கு ஏற்றபடி யாக இல்லையாதலால், அங்கு நல்லபடியாக விளைச்சலைத் தரக்கூடிய பயன் உள்ள விதைகள் கிடைக்காத காரணத்தால், அங்கு பழைய வகைளைப் பயன்படுத்தி, பழைய விதை களைப் பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைப் பகுதிகளுக்கென்று ஒரு விதைப் பண்ணை அமைக்க முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, மலைப் பகுதிகளுக்கென்று விதைப் பண்ணைகள் தேவை யில்லை. ஆனால், அங்கே எந்த அளவுக்குப் பயிர்களை விளை விப்பதற்கு உதவி செய்யலாம் என்பதைப் பற்றி வேளாண்மைத் துறை ஆராயும். கொல்லி மலையைப் பொறுத்தவரையிலும் அங்கே அன்னாசிப் ப த்திற்கான நாற்றங்கால் ஒன்று அமைக் கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்கனவே எத்தனை விதைப் பண்ணைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. விதைப் பண்ணைகள் மேலும் தேவைப் படும் என்ற நோக்கத்தில், ஏதாவது புதிதாக நிறுவ வேண்டு மென்ற திட்டம் இருக்கிறதா? அப்படி விதைப் பண்ணை நிறு வதற்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 49 விதைப் பண்ணைகள் தமிழகத்திலே அமைந்திருக்கின்றன. இந்த ஆண்டும்கூட நாம் புதிதாக, 5 விதைப் பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற முயற்சியிலே இருக்கிறோம். இதற்கு இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ. 53 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 788—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த வட்டத்தில் துவக்க அரசு முடிவு செய்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கிடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்றார்கள். வேளாண்மையை மட்டுமே நம்பி வாழும் தஞ்சை மாவட்டத்தில், வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பது நியாயமானதாகவும் பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் அமையும் என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீது 18—3—1983 அன்று பேசுகின்றபொழுது, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு இந்த ஆண்டு ஒரு கால்நடைக் கல்லூரியும், ஒரு வேளாண்மைக் கல்லூரியும் அமைக்க சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்தக் கல்லூரிகளில் ஒன்றைத் தஞ்சை மாவட்டத்தில், மக்களுடைய வேண்டுகோளை



ஏற்று அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை எடுப்பாரா என்பதை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக்குழு புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியும், புதிதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் தொடங்கலாம் என்கின்ற பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலையை ஒட்டி, நாம் புதிதாக அதைத் தொடங்கக்கூடிய வாய்ப்பில்லை. ஆனால் கொள்கை அளவிலே அரசு ஏற்றிருக்கிறது. அவைகளை அமைக்க வேண்டுமென்ற முடிவுக்கு அரசு வரும்போது, தஞ்சை மாவட்டமும் பரிசீலிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, காலாலே மடை தள்ளுகின்ற மாவட்டங்களை விட, உழைப்பால், உறுதியால், நல்ல முறையிலே விவசாயம் செய்கின்ற வட ஆற்காடு மாவட்டத்தில், வேளாண்மைப் பல்கலைக் கழகமோ அல்லது கால்நடை பற்றிய ஆராய்ச்சிக் கழகமோ, துவக்குவதற்கு—வட ஆற்காடு மாவட்டம் சிறப்பான மாவட்டம், உழைப்பால் உயர்ந்த ஒரு மாவட்டம், பம்ப் செட்களால், இறைவையால் விவசாயம் செய்கின்றவர்கள். தஞ்சைக்கு அடுத்து உழைப்பால் விவசாயம் செய்கின்றவர்கள். ஆகவே, அந்த மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு நல்ல பயிற்சி இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தில் மேலும் கூடுதலாக ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்களும் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்களும் கூடிக் கலந்துபேசி அவர்கள் ஒட்டுமொத்தமான ஒரு முடிவு தெரிவித்தால் நல்லது. அதிக உழைப்பு தரக்கூடிய மாவட்டம் என்பதில் வட ஆற்காடு மாவட்டம் மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டமும் அதில் அடங்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரியும் வேளாண்மைக் கல்லூரியும் அமைக்கிறபோது தஞ்சை மாவட்டத்தை அனுதாபத்தோடு கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். அதற்காக என் நன்றி. அந்தக் கல்லூரியை அமைக்கிறபோது ஆடுதுறையில் இன்று உழவர் பயிற்சி நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம் போன்றவை இருக்கின்றன. அதையெல்லாம் இணைத்து அந்தப் பகுதியில் அந்தக் கல்லூரியை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அமைக்க முடிவு செய்கிறபோது இந்த யோசனைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. இதற்கு சொந்தமாக 110 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கே வாழை ஆராய்ச்சி நிலையம் உள்ளது, உர ஆராய்ச்சி நிலையம் உள்ளது, மண் பரிசோதனை நிலையம் உள்ளது, பூச்சிக்கொல்லி ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இந்த 110 ஏக்கர் நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. ஆகவே இங்கே வேளாண்மைக் கல்லூரி அமைவது எல்லா வகைகளிலும் தகுதியானதாக இருப்பதால் ஆடுதுறையில் இந்த வேளாண்மைக் கல்லூரியைத் துவங்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இவ்வளவு ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கிறபோது அங்கே மேலும் வேளாண்மைக் கல்லூரி தேவையா என்றளவிற்கு இதிலிருந்து கேள்வி எழக்கூடும். ஆனால் அரசாங்கம் அப்படி அமைக்க முடிவு செய்யும்போது இதைப் பரிசீலிக்கும்.

### பணப்பயிர்களின் மகசூலை அதிகரிக்கும் திட்டம்.

*வினா எண் 789—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பணப்பயிர்களின் மகசூலை அதிகரிக்க வடிமுனைக் குழாய்களும், துளைக்கிணறுகளும் கூடுதலாக அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, பணப்பயிர்களின் மகசூலை அதிகரிக்க தனியார் துறையிலிருந்து வடிமுனைக் குழாய்களும், துளைக்கிணறுகளும் அமைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் அவர்களுக்கு கடன் கொடுக்கும் உத்தேசமிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, பணப்பயிர்கள் மகசூலை அவர்கள் அதிகரித்துக்கொள்ள இந்த வறட்சி நிலையில் முடியாமல் போகிற காரணத்தால் தமிழ்நாட்டில் சுமார் எவ்வளவு ஹெக்டேர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன? அப்படி பாதிக்கப்பட்டிருப்பின் தமிழ்நாடு அரசு எதிர்பார்த்த அளவிற்கு எவ்வளவு டன் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதியாகக்



கூடிய பொருள்கள் குறைபடும் ? அப்படிக் குறைகிற அந்த நிலையில் அந்த நிலங்களுக்கு அரசாங்கம் சிபார்சு செய்து வரி விதிப்பிலிருந்து ஏதாவது விலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, வருவாய்த்துறையிடம் இதுபற்றிய முழுவிவரங்களும் இருக்கும். இருந்தாலும்கூட, வறட்சி நிவாரணப் பணி மேற்கொள்கிறபோது நாம் இத்தகைய பணிகளைத்தான் மேற்கொள்ள இருக்கிறோம். அதற்காகத்தான் மைய அரசின் உதவியைக் கேட்டிருக்கிறோம்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, வேளாண்மை வளர்ச்சியை அதிகப்படுத்துகிற வகையில், விவசாயிகள் பயனடைகிற வகையில், மகசூலை அதிகப்படுத்த வேண்டுமென்ற வகையில் துளைக் கிணறுகள், வடிமுனைக் குழாய்கள் போன்றவை மின் இணைப்பு பெறுவதற்கு, வேளாண்மைத்துறை மூலம் சீனியாரிட்டி பார்க்காமல் பெற்றுத்தர ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்காக தனியாக ஒரு துறையும் தனியாக ஒரு அமைச்சரும் இருக்கிறார்.

திரு. செ. செம்மலை : தலவைர் அவர்களே, வேளாண் விளைபொருள் மகசூலை அதிகரிக்க 'டிரிப் இரிகேஷன்' முறை வெளிநாடுகளில் வெற்றிகரமாகச் செயல்படுவதாகச் சொல்லப்படுகிறது இந்த முறையின்கீழ் நீரைச் சிக்கனப்படுத்தி சேமிப்பதற்கு அரிய வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே அந்த 'டிரிப்' இரிகேஷன் முறையை நம் நாட்டில் செயல்படுத்துவதற்கு—பரீட்சார்த்தமாகவாவது செயல்படுத்திப் பார்க்கப்பட்டதா ? நல்ல பலன் கிடைத்ததா ? அப்படியானால் இதை விவசாயிகள் விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நம் அரசாங்கப் பண்ணை சிலவற்றில் இந்த முறையை மேற்கொண்டிருக்கிறோம். இதன் மூலம் தண்ணீரை சிக்கனப்படுத்த முடியும் என்பது உண்மைதான். ஆனால் இதற்காகும் செலவைக் கணக்கிட்டுப்பார்க்கும்போது அது விவசாயப் பெருமக்கள் தாங்கக்கூடியதாக இல்லை. ஆகவே இதன் செலவை எந்தளவிற்குக் குறைக்கமுடியுமோ அந்தளவிற்கு குறைத்தால் அது பெரும்பாலும் விவசாயப் பெருமக்களுக்குப் பயன் அளிக்க வைக்கிற வகையில் முயற்சி மேற்கொள்ளலாம். அதைப்பற்றி பொறியியல் துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னை மரங்களுக்கு அதிகமான நோய்கள் ஏற்படுகிற காரணத்தினால் பல மரங்களை வெட்டி மாற்றவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

[1983 ஏப்ரல் 21

அந்த நேரத்தில் அந்த விவசாயிகளுக்குச் கொடுக்கக்கூடிய மானியத் தொகை காணாது என்று பரவலாக பேச்சு அடிபடுகிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை அதிகப் படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே. மூலக்கேள்விக்குத் தொடர்பில்லை.

**அம்பத்தூர் டி. வி. எஸ். தொழிற் சாலையிலிருந்து ஸ்டெட்போர்டு மருத்துவமனை வரையிலான சாலையை விரிவுபடுத்தும் திட்டம்.**

* வினா எண் 829—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை அம்பத்தூர் டி.வி.எஸ். தொழிற் சாலையிலிருந்து ஸ்டெட்போர்டு மருத்துவமனை வரை குறுகலாக இருப்பதால் போக்குவரத்திற்கு மிகவும் தடையாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், சாலையை விரிவுபடுத்தும் திட்டம் எப்போது துவங்கும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :**(அ) ஆம்.

(ஆ) டி.வி.எஸ். லூக்காஸ் தொழிற்சாலை முதல் ஸ்டெட்போர்டு மருத்துவமனை வரை உள்ள சாலையை உள்ளடக்கிய சென்னை—திருவள்ளூர் சாலையை வில்லிவாக்கம் சாலை—புது ஆவடி சாலை சந்திப்பிலிருந்து ஆவடி வரை உலக வங்கி நிதி உதவியுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் ரூ. 151.00 இலட்சம் செலவில் சாலையின் இரு மருங்கிலும் 2 மீட்டர் அகலத்திற்கு மிதி வண்டி செல்லும் தடங்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1983—ஆம் ஆண்டு அக்டோபர் மாத முடிவிற்குள் இவ்வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9–30)

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசின் சார்பிலே இந்தப் பணி துவக்கப்பட்டிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தொழிலாளர் பெருமக்கள் அதிகமாக வந்து செல்லக்கூடிய அம்பத்தூர் தொழிற்பேட்டைப் பகுதியிலே இன்றைக்கு வேலை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் பணிகள் அங்கே சற்று காலதாமதமாவதால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக, அதிகமான விபத்துக்கள் அடிக்கடி ஏற்படகூடிய சூழ்நிலை



1983 ஏப்ரல் 21]

ஏற்பட்டுள்ளது. எனவே இந்தத் தொழிற்பேட்டையை உள்ளடக்கிய பகுதிக்கு மட்டுமே, விரைவிலேயே அக்டோபர் மாதத்திற்குள் அந்தப் பணிகளைச் சீக்கிரமாக முடிக்கவேண்டும். மேலும், இரண்டு பக்கமும், பாதசாரிகள். தொழிற்பேட்டைத் தொழிலாளர்கள், நடந்துசெல்வதற்கு தனியாக பிளாட்பாரம் இரண்டு பக்கமும் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மனதிற்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்கிறேன். இந்தத் திட்டத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய சாரரரின் முக்கிய வசதிகளாக, பாதசாரிகளுக்கும், சைக்கிள் பயணிகளுக்கும், குறிப்பாக செய்யும் பொருட்டு, உலக வங்கியின் உதவியோடு, சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போதைய 7 மீட்டர் சாலையின் இரு பக்கமும், ஒவ்வொன்றும், 2 மீட்டர் அகலமுள்ள சைக்கிள் பாதையும், மக்கள் வசிக்கும் தொழிலாளர்கள் உள்ள பகுதிகளில் தனியாக இருபுறமும் நடைபாதை வசதியும் அமைக்கப்படும் என்று நெடுஞ்சாலை கிராமப் பணித் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

**கடற்கரைப் பகுதிகளில் கட்டிடங்கள் கட்டுவதைத் தடுக்கும் திட்டம்.**

வினா எண். 830—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடற்கரைப் பகுதிகளில் கட்டிடங்களை கட்டுவதன் மூலமும், இதர நடவடிக்கைகளின் மூலமும் கடற்கரையை தவறாகப் பயன்படுத்துவதையும், தரத்தை குறைப்பதையும் தடுக்குமாறு முதல்வருக்கு மத்திய அரசிடமிருந்து வேண்டுகோள் கடிதம் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவன் விவரம் என்ன?

(இ) அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ, ஆ அண்ட் இ) : உறுப்பினர் குறிப்பிட்டப்படி கடற்கரையின் எழிலைப் பாதுகாக்கவும், கடல் நீரிலிருந்து 500 மீட்டர் தூரம் வரையிலும் கட்டிடங்கள் கட்டப்படுவதைத் தவிர்க்கவும், தொழிற்சாலைகளின் கழிவுப்பொருட்கள் கடலில் கலப்பதை நிறுத்தவும், நில அரிப்பைத் தடுக்க முயற்சிகள் எடுக்கவும், கடற்கரையோரங்களில் மரங்களை நடவும் வலியுறுத்தி பாரதப் பிரதமரிடமிருந்து நவம்பர் 1981—ஆம் ஆண்டு முதலமைச்சருக்கு கடிதம்

வந்தது. ஏற்கனவே இவ்வரசு கடற்கரை ஓரப்பகுதிகளில் கட்டிட வளர்ச்சியை ஒழுங்குபடுத்தியும், மரங்களை வளர்த்தும், நில அரிப்பைத் தடுத்தும் கடற்கரையின் இயற்கை எழிலைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. புதிய கட்டிடங்கள் சென்னை-மாமல்லபுரம் பகுதியில் பக்கிங்காம் கால்வாய்க்கும், கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கட்டதடை ஒன்று 1975—ஆம் ஆண்டிலிருந்தே உள்ளது. கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் 7 மீட்டர் உயர்த்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என 1979-ல் அரசு ஆணையிட்டுள்ளது. மற்ற கடற்கரைப் பகுதிகளில் கட்டிடம் கட்டும் பணி சீர்படுத்தப்படும். பிரதமர் தெரிவித்த கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னைக் கடற்கரைப் பகுதியிலே, காலையிலும், மாலையிலும், எருமை மாடுகள் மேய்வதும், அங்கே சாணம் போடுவதும் வழக்கமாக இருக்கிறது. அது தடுத்து நிறுத்தப்படுமா? அதுமட்டுமல்ல, காதலர்கள் கடற்கரைக்குப் போகமுடியாத அளவிற்கு பாதையில் புகாரி ஒட்டல் இருக்கிறது. அது அப்புறப்படுத்தப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி கடற்கரைப் பகுதிகளில் கட்டிடங்களைக் கட்டுவதன் மூலமாகவும், இதர நடவடிக்கைகளின் மூலமும், கடற்கரையை தவறாகப் பயன்படுத்துவதையும், தரத்தை குறைப்பதையும், தடுப்பதையும் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி, இதர நடவடிக்கைகள் என்பதை மனதில் கொண்டு கேட்கிறார் என்று நினைக்கிறேன். அவர் சொல்லியிருக்கக் கூடிய பிரச்சினை ஒரு மிகச் சிக்கலான பிரச்சினை. எருமை மாட்டை விரட்டிப் பிடிப்பது மிகப் பெரிய பிரச்சினை. சாணத்தை அகற்றுவது அதைவிடப் பெரிய பிரச்சினை. ஏற்கனவே அங்கே குடிசை போட்டிருந்தார்கள். அந்தக் குடிசை அகற்றப்பட்டுவிட்டது. சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை சென்சிடிவ் இஷ்யூ. எவ்வளவு தந்திரமாக கையாள முடியுமோ, அவ்வளவு தந்திரமாகக் கையாள அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

**திரு. மி. வின்சென்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையில் பல்வேறு உல்லாச ஹோட்டல்களும், தொழிற்சாலைகளும் கடற்கரைப் பகுதியில் கட்டப்பட்டு வருகின்றனவே இவைகள் எப்போது அனுமதிக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சொன்னதைப்போல புதிய கட்டிடங்கள் சென்னை—மாமல்லபுரம் பகுதியில் பக்கிங்காம்—கெனால், கால்வாய்க்கும்—கடலுக்கும், இடைப்பட்ட பகுதியில் கட்டதடை 1975ஆம் ஆண்டிலே இருந்து உள்ளது. ஆகையினாலே 1975-க்குமுன்னதாக கட்டப்பட்டதாக இருக்கலாம் என்று யூகிக்கக்கூடும். 1975-க்குப் பின்னால், 1979-லே இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. இடையில் 1975—79, அல்லது 1983-க்கு இடையிலே ஏதாவது கட்டிடங்கள் வந்திருக்குமானால் அவைகள் அன்-ஆதரைஸ்டு கன்ஸ்ட்ரக்சனாக இருக்கலாம். ஆகவே எந்தெந்தக் கட்டிடங்கள்அப்படி வந்திருக்கிறது என்ற தகவல் வந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் கொடுத்தாலும் அல்லது வேறு வகையிலே வந்தாலும், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைப் பற்றி நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, சென்னை முதல் மகாபலிபுரம் வரையில் இருக்கக்கூடிய கடலோரப் பகுதியில் சில பெரும் புள்ளிகள் அந்த இடங்களை வைத்து வேலி போட்டு அந்தப் பகுதிக்கு மீனவர்கள்கூட செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்பது அரசுக்கு தெரியுமா? அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் இருந்தால் அவைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக்கேள்விக்கு தொடர்பு இல்லையென்றாலும், பிரச்சனை முக்கியமானது என்ற காரணத்தால் அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தகவல் எழுத்து மூலமாகக் கொடுத்தால் அதை வைத்து நான் விசாரிக்கச் சொல்கிறேன்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் பிரதமர் அவர்களே கோரிக்கைபடி கழிவு நீரைக் கடலில் விடக்கூடாது என்று குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள் என்று அவர்கள் கூறினார்கள். அந்த முறையில் சென்னை மாநகரக் கழிவு நீர் இராயபுரத்தில் விடப்படுகிறது. இதனால் பெரும் நாற்றம் ஏற்படுகிறதே. அதைப் போக்குவதற்கு ஏதாகிலும் திட்டத்தை தமிழக அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் இம்ப்ரூவ்மென்ட்ஸ் ஸ்கீம் என்று ஏற்கனவே ஒரு திட்டம் போட்டது உங்களுக்கு தெரியும். விளைவுகளும், தெரியும். அதற்குப் பின்னால் இப்போதும், கூவம் இம்ப்ரூவ்மென்ட்ஸ் ஸ்கீம்

என்பதற்கு அடிக்கடி கூட்டங்கள் போட்டு, எல்லாக் கழிவு நீரையும் ஒரே குழாய் மூலமாகக் கொண்டு போய், வேறு இடத்திலே, புல் பண்ணைகளில் விடுவதற்கு வேண்டிய திட்டம் இருக்கிறது. அதைப்பற்றி என்னென்ன செய்திருக் கிறோம் என்றால் 15 பம்பிங் ஸ்டேஷனை இம்ப்ரூவ் பண்ணி யிருக்கிறோம். இப்படி பல்வேறு காரியங்களைச் செய்திருக் கிறோம். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் 6 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விரிவான பதில் சொல்ல இயலும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, கடற்கரை ஓரங்களில் கட்டிடங்களைக் கட்டுவதை, அல்லது மற்ற தனியார்களுடைய ஆக்கிரமிப்புகளை அரசு தடை செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஆனால் வி. ஜி. பி. கடற்கரை என்று சொல் லப்படுகிறதே, இதைப்போன்ற தனியார்கள் பல ஏக்கர்களை வைத்துக்கொண்டு இருக்கிறார்களே அது அரசுக்குத் தெரியுமா? அல்லது இதற்கு அரசு அனுமதி அளித்து உள்ளதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன் னேன். 1975-லே ஒரு உத்தரவு. 1979-லே ஒரு உத்தரவு. இவைகள் போடப்பட்டிருக்கின்றன. வி. ஜி. பி.—யைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் அது எவ்வளவு தூரத்திலே இருக்கிறது, 500 மீட்டருக்குள்ளே இருக்கிறதா? வெளியிலே இருக்கிறதா? ஸ்பெசல் சாங்க்சன் வாங்கப்பட்டதா? அப்படி வாங்கினார்கள் என்றால் எப்படி வாங்கினார்கள்? எப்படி வாங்க முடிந்தது? இவைகளைப் பற்றி எல்லாம் தகவல்களைத் தருகிறேன். இதற்காக தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தருவதற்கான தனித் திட்டம்.**

வினா எண் 831—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் மானியத்தோடு கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும் தனித்திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?





(இ) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ, ஆ, மற்றும் இ) : மத்திய அரசு தனியாக எந்த திட்டத்திற்கும் நிதியுதவி அளிப் பதில்லை. மாநில அரசால் நிறைவேற்றப்படும் கிராம குடிநீர் திட்டத்திற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற இந்த குடி நீர் திட்டத் திற்காக மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால் இப்போது நடைபெறுகின்ற இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலே நடைபெறுகின்ற பணிகளுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக் கிறதா? அல்லது தனியாக இந்தத் திட்டம் கிராமங்களிலே செயல்படுத்தப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு கிராமத்திலுள்ள மக்களுக்கு குடிநீர்க் கொடுப் பதற்காக மத்திய அரசு கொடுப்பதாக ஒத்துக்கொண்ட தொகை 25 கோடி. இந்த 25 கோடி ரூபாய் போதாது என்று கடிதம் எழுதி, எழுதி, இப்போது 26.67 கோடி ரூபாயாக அதை உயர்த்தி இருக்கிறது. அதாவது 1.67 கோடி ரூபாய் அதிகமாக வாங்கியிருக்கிறோம். இன்னும் விரிவாகச் சொல்ல வேண்டுமானால் இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1980—81—ல் இந்த அரசு செலவு செய்து இருப்பது 20 கோடி. மத்திய அரசு கொடுத்திருப்பது 5 கோடி.

(முற்பகல் 9-40)

1981—82-ல் இந்த அரசு கிராம குடிநீர் திட்டத்திற்காக —கிராமங்களுக்கு குடிநீர் கொடுப்பதற்காக செலவு செய்து இருக் கும் தொகை 30 கோடி ரூபாய். மத்திய அரசு கொடுத்தது 5.637 கோடி. 1982—83-ல் இந்த அரசு செலவு செய்தது 42 கோடி ரூபாய். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒரு 10 கோடி ரூபாய். ஆக மொத்தம் 52 கோடி ரூபாய் இந்த அரசு செலவு செய்து இருக்கிறது. மத்திய அரசு கொடுத்து இருப்பது 8.505 கோடி ரூபாய். இந்த நடைமுறை ஆண்டு 1983—84ல் 60 கோடி ரூபாய் என்று பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியிருக்கிறோம். மத்திய அரசு கொடுத்து இருப்பது 6.883 கோடி ரூபாய். 1984—85-ல் 6-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிற காலம்—அதற்காக 70 கோடி ரூபாய் செலவாகும் என்று இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு 40 கோடி. 1983—84-ல் ஒரு 60 கோடி ரூபாய். அடுத்து அடுத்து ஆண்டு 70 கோடி

ரூபாய் என்று எல்லாவற்றையும் கூட்டிப்பார்த்தால், 17)
கோடி ரூபாய் இந்த அரசு செலவு செய்கிறது. இதில் ஒரு 55
கோடி ரூபாயாவது மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று
கேட்டு இருக்கிறோம் என்ற இந்தத் தகவல்களை மாண்புமிகு
உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே,
மத்திய அரசு அளித்த மானியத்தொகை பற்றி இங்கே விரிவாக
அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இன்னும் மத்திய அரசு
உதவவேண்டும் என்பதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடை
யாது. நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தத் திட்
டத்தை நாம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச்
செயல்படுத்துகிறபோது, அதற்காக அந்த நிதி மானியமாகப்
பெறப்படுகிறதா அல்லது பிற்பட்ட பகுதி என்று தனியாக
இந்த நிதியை அரசாங்கம் வாங்குகிறதா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுவரையில்
கொடுத்து இருக்கக்கூடிய தொகை 26.025 கோடி ரூபாய்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராம குடிநீர் திட்டச்
செலவுகள் எல்லாம்—ரூரல் வாட்டர் ஸ்கீம் எல்லாம்—மானிய
மாகத்தான் செலவு செய்யப்படுகிறது.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, நேஷ
னல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் என்பது 1957-58-ஆம் ஆண்டில்
கொண்டுவரப்பட்டு, அதிலே குடிநீர் வசதி எல்லாம் செய்யப்
பட்டது. அது இடைக்காலத்தில் கவனிப்பாரற்றுப் போய்,
அப்படி செய்யப்பட்ட குடிநீர் திட்டங்கள் எல்லாம் உபயோகப்
படுத்தப்படாத காரணத்தால், பயன்படுத்தபடமுடியாமல் தற்
போது இருக்கலாம். ஆகவே, அப்படிப்பட்ட திட்டங்கள்
குறித்து ஒவ்வொரு ஜில்லாவில் உள்ள குடிநீர் வடிகால் வாரியத்
திற்கும் தெரிவித்து, ஏற்கெனவே கிராமங்களில் செய்த அந்தத்
திட்டங்களின் மூலம் மக்கள் குடிநீர் பெறும் வகையில்,
அதனை ரிப்பேர் செய்து தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற
நேஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் என்பது 1955—56-ஆம் ஆண்டில்
இருந்தது. அது போய் ஒரு குவார்ட்டர் ஆப் சென்சுரி
ஆகியிருக்கிறது. இப்போது அவையெல்லாம் டிலேபிடெட்
கன்டிஷனில் அல்லது டார்மென்ட் கன்டிஷனில் இருக்கலாம்.
மாண்புமிகு உறுப்பினர் அது குறித்து விரிவாகக் கடிதம் எழுதி,
1955—56-இல் இப்படிப்பட்ட திட்டங்கள் இன்னின்ன இடத்
தில் செய்யப்பட்டன. அதனுடைய நிலைமை தற்போது
என்ன என்பதை எழுதி அனுப்புவார்களானால், அதை டுவார்ட்





போர்டுக்கு அனுப்பி, அவையெல்லாம் இருக்கிறதா அல்லது
போய்விட்டதா என்பதை விசாரித்து ஆவன செய்யச்
சொல்லலாம்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, 1974 வறட்சியின் போது போடப்பட்ட குடிநீர்
திட்டங்கள் பாதியில் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அப்படிப்
பட்ட திட்டங்கள் தற்போதுள்ள வறட்சியின் போது எடுத்துக்
கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத்
தலைவர் அவர்களே, கிராம குடிநீர் திட்டத்தைப் பொறுத்த
வரையில், 6-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் எல்லா
கிராமங்களுக்கும் குடிநீர் கொடுத்துவிடவேண்டும் என்று இந்த
அரசு முடிவு எடுத்து இருக்கிறது. இதிலே ஒரு சிக்கல் இருக்
கிறது. நேரம் அதிகமாகும் என்பதால் அதைப்பற்றி நான்
சொல்ல விரும்பவில்லை. மத்திய அரசைப் பொறுத்த வரையில்,
ப்ராப்ளம் வில்லேஜ் என்று எடுத்துக்கொள்கிறார்கள். அவர்
களுடைய கணக்குப்படி சுமார் 7,500 கிராமங்கள் தான் வரு
கின்றன. ஆனால் நாம் ஹேபிடேஷன் அடிப்படையில்-குடியிருப்பு
கள் அடிப்படையில்—காலனிகள் அடிப்படையில் அந்தத் திட்டங்
களை நிறைவேற்ற எடுத்துக்கொள்கிற காரணத்தால் ஒரு
கிராமத்தில் 5—6 குடியிருப்புகள், காலனிகள் என்று வரும்போது
அதிகம் எண்ணிக்கை வருகிறது. அந்த அடிப்படையில் நமக்கு
வருவது ஏறத்தாழ 17,000-க்கு மேற்பட்டு வருகிறது. ஆனால்
மத்திய அரசுக்கு வருவது 7,026 தான். ''தே டேக் இட் ஆஸ்
ப்ராப்ளம் வில்லேஜ்''. இப்படி எடுத்துக் கொண்டால் கிராமங்
களில் குடிநீர் பிரச்னை தீராது. ஒரே கிராமத்தில் 5—6 குடி
யிருப்புகள் அல்லது ஓரிரு காலனிகள் இருப்பதால் எல்லோருக்கும்
குடிநீர் கொடுத்துவிட வேண்டும் என்று புரட்சித் தலைவர்
அரசு முடிவு எடுத்து இருப்பதால் 17,000-க்கு மேற்பட்ட
ஹேபிடேஷன்களில் இந்த குடிநீர் வசதி செய்து கொடுப்பதாக
இருக்கிறோம். அதற்காகத்தான் 170 கோடி ரூபாய் என்று
கணக்குச் சொல்லி, அதிலே 55 கோடி ரூபாயையாவது மத்திய
அரசு தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதோடு விட்டு
விடப்போவதில்லை. மத்திய அரசை இன்னும் வற்புறுத்திக்
கேட்க இருக்கிறோம். எப்படியும் பெற்றுவிடலாம் என்ற
நம்பிக்கை இருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, இந்தக் குடிநீர்
பிரச்சனை இன்றைக்கும் தமிழ்நாட்டில் கடுமையான பிரச்னை
யாக இருக்கிறது. கிராமப்புறங்களில் இன்னும் அதிகமான
கஷ்டம் இருக்கிறது. துயர் துடைப்புப் பணியாக இந்த வேலை
யைச் செய்வதால் இதிலே நமக்குச் செலவாகும் தொகையில்

[1983 ஏப்ரல் 21

75 சதவீதத்தையாவது மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு அழுத்தமாக வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் ஒரு ட்ரேடு யூனியன் லீடர். நானும் ஒரு ட்ரேடு யூனியன் லீடராக இருந்திருக்கிறேன். எப்படி அழுத்தமாகக் கேட்பது என்பது இரண்டு பேர்களுக்கும் தெரியும். மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம்; பேசியிருக்கிறோம். மாண்புமிகு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பொறுப்பில் இருந்தார்கள். முக்கியமான பிரச்சனை என்பதால் தேவையை வலியுறுத்தி எடுத்துச் சொன்னோம். எல்லாவற்றுக்கும் மேலாக இதற்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மிகவும் ஆதரவு தரவேண்டும். இருபது அம்சத் திட்டத்தில் இது இரண்டாவது அம்சமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஒரு தூது கோஷ்டியாகப் போய் மனு கொடுத்து கேட்பார்கள் என்று இந்த நேரத்தில் நான் எதிர்பார்க்கிறேன்.

## சென்னையில் வழங்கப்படும் குடிநீர்

*வினா எண் 832—**திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் வழங்கப்படும் குடிநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஆம்.

**திரு. து. புருஷோத்தமன்:** தலைவரவர்களே, சென்னை நகரில் வழங்கப்படும் குடிநீர் பரிசோதனைக்கு உட்பட்டது. என்று சொல்லியிருக்கிறார்கள். * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவரத்தைக் கேள்வி நேரத்தில் எப்படி கேட்க முடியும்? இதை ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ வேறு வகையிலோ கொண்டு வந்தால் விரிவான பதில் அளிக்க வசதியாக இருக்கும். * *

**திரு. து. புருஷோத்தமன்:** * *.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1983 ஏப்ரல் 21]

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த விவரங்கள் எல்லாம் பத்திரிகையில் வந்திருக்கிறது. பத்திரிகையில் வந்ததை ஏன் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்?

**திரு. பாபு ஜனார்த்தனன்:** * * *

இந்த விவரம் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்க ஒரு வரம்பு உண்டு. * * *
பத்திரிகையில் வருவதற்காக இப்படிப்பட்ட தன்மையில் கேட்கக் கூடாது. 'I won't accept it' கேள்வி சென்னையில் வழங்கப்படும் குடிநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றதா என்பது. பரிசோதனைக்கு உட்படுகிறது என்று சொல்லி இருக்கிறார். * * ஆகவே, நான் சொன்னது, அவர் சொன்னது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-50)

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு செய்தி வந்து, இன்று காலை பத்திரிகையில் அப்படி இல்லை என்று அதிகாரி வெளியிட்ட மறுப்புச் செய்தியும் வந்திருக்கிறது. அது உண்மையாக இருந்தால், கேட்ட கேள்விக்குப் பதிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அப்படி இல்லை என்று அதிகாரிகளுடைய மறுப்புச் செய்தியைச் சொல்லலாம். (கூச்சல் குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்களுக்கு விஷயங்கள் பூராவும் தெரிந்திருக்க வேண்டும் என்பது சரியல்ல. (குறுக்கீடு) நானும் அமைச்சராக 5 வருஷம் இருந்திருக்கிறேன். இரண்டு மாதமாக செய்தி நிலவுகிறது என்கிற காரணத்தால், முழு விவரமும் அமைச்சருக்குத் தெரியும் என்பது அல்ல. துறை மூலமாக தகவல் வந்த பிறகுதான் சொல்ல முடியும். ஆகவே, மாண்புமிகு புருஷோத்தமன் அவர்கள் கேள்வியைச் சற்று மாற்றிக் கேளுங்கள்.

**திரு. து. புருஷோத்தமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கேள்வி கேட்டுவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட பிரச்னையை நீக்கியிருக்கிறேன். அது ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ வரும்போது, இப்படி பேச எடுத்துக்கொள்ளுங்கள். இப்போது வேண்டாம். கேள்வியை மாற்றிக் கேளுங்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1983 ஏப்ரல் 21

**திரு. பாபு ஜனார்த்தனன் :** ஊரிலே நிலவி வரும் பிரச்னை. இரண்டு மாதமாக பேசப்பட்டு வரும் பிரச்னை. மக்களுக்கு தண்ணீர் கொடுக்கின்ற அமைச்சர் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது போல மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் குடிதண்ணீர் தொட்டியிலே பிணம் இருந்ததாகச் செய்தி இருக்கிறதே அது பற்றிய விளக்கம் என்ன? உண்மை என்ன என்று கேட்பது தவறு இல்லை. அத்தோடு தன்னுடைய எண்ணங்களையும், கருத்துக்களையும், சேர்த்து சொல்லும்போதுதான் பிரச்னை வருகிறது. அது போன்ற தகவல் இல்லை என்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபோல. மறுப்புத் தெரிவிக்க மாண்புமிகு அமைச்சருக்கும் உரிமையும், பொறுப்பும் இருக்கிறது. நேரிடையாகக் கேள்வி கேட்டால் நேரிடையாக பதில் வரும்.

**திரு. து. புருஷோத்தமன் :** * * * (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை......

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னது, உறுப்பினர் சொன்னது இரண்டும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சென்னையில், மக்கள் பயன்படுத்துகிற குடிநீர் தொட்டியிலே ஒரு பிணம் இருந்ததாக செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறதே. அது உண்மைதானா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி ஒரு கால் அட்டென்ஷன் மூலமாகவோ, அட்ஜெர்ன்மெண்ட் மோஷன் மூலமாகவோ கொண்டு வந்து கேட்டார்களேயானால், நான் தகவல்களை விசாரித்துச் சொல்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1983 ஏப்ரல் 21]

**டாக்டர். மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சென்னையினுடைய குடிநீர் பிரச்னையைப் பற்றி நாள்தோறும், ஏன் மணிக் கணக்கில் அவ்வப்போது அறிந்து, இருக்கிற பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டிய ஒரு நிலையிலே, பொறுப்பிலே இருக்கும் அமைச்சர் அவர்கள், எதிர் தரப்பிலே இருக்கிற கட்சி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, அல்லது ஒத்திவைப்புத் தீர்மானாகவோ கொண்டு வந்தால்தான் பதில் சொல்ல முடியும் என்ற முறையில் சொல்வது சரியல்ல. அந்தச் செய்தி உண்மையா இல்லையா என்று தெரிவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் இல்லை என்பதுதான். நான் இன்னும் சற்று விரிவாக, தெளிவாக, விளக்கமாக இதற்கு பதில் கொடுக்க வேண்டும் என்றால்—"ow it is 9-54 இப்போது மணி 9-54—இந்த நேரத்தில் எனக்கு கிடைத்திருக்கிற தகவல் அப்படி இல்லை என்பதுதான்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானாமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ கூட கொண்டு வர வேண்டும் என்ற அவசியம் இல்லை. அது குறித்த விளக்கமான அறிக்கை ஒன்றினை இன்றோ நாளையோ கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு தரலாம்.

**திரு.து. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னை மக்களுக்கு வழங்கப்படுகிற குடிநீரினால் மக்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இன்றையதினம் தண்ணீர் வழங்கப்படுகிற அந்த துறையிலே—அதாவது தண்ணீர் தொட்டியிலேயிருந்து குடிநீர் வழங்குவதற்கு—ஆளும் கட்சியிலே உள்ள, ஆளும் கட்சியைச் சார்ந்த அத்தனை பேர்களும் வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கிறார்கள், 100 ரூ. 200 ரூ. சம்பளத்திலே. அதிலே பெரிய ஒரு பர பரப்பும், கலவரங்களும் மூண்டு இருக்கின்றன. எனவே சென்னையிலே உள்ள பல பகுதிகளில் அது போக்கப்படுமா? மக்கள் பாதுகாப்போடு குடிநீர் பெறுவதற்கு அரசிடம் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சென்னையில் வழங்கப்படும் குடிநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றதா என்பது. தொட்டிக்கு ஆள் வைப்பதில் அவர் போய் கேட்டு அதிகாரி முடியாது என்று சொல்லி இருந்தால் தனியாக வேறு கேள்வி போடலாம். தண்ணீர் சுத்தப்படுத்தப்படுகின்றதா என்றால் ஆம். எங்கே சுத்தப்படுத்துகிறீர்கள், எப்படி சுத்தப் படுத்துகிறீர்கள் என்று கேட்டால் அப்படிப்பட்ட துணைக் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன்.

## திருமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 833—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் அருகிலிருந்து திருமங்கலம் நகராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தலைமையிடத்தில் கிணறு தோண்டும் வேலையும் அங்கிருந்து திருமங்கலத்துக்கு குழாய் பதிக்கும் வேலையும் நடைபெற்று வருகிறது.

(ஆ) இத் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் 1984ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடித்து பயனுக்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக திருமங்கலம் நகருக்கு இந்த ஆண்டிலேயே குடிநீர் வழங்கப்படும் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆகவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு காலதாமதம் ஆனாலும் கூட தற்போது கிணறு தோண்டுகின்ற பணிகளும், குழாய்கள் அமைக்கின்ற பணிகளும் நடந்து கொண்டிருப்பதால் இந்த ஆண்டிலேயே ஒரு பைலட் ஸ்கீம் என்ற வகையிலே ஒரு முன்னோடித் திட்டத்தைப் போட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாமலேயே திருமங்கலத்தில் இருக்கின்ற பைப்கள் மூலமாக நகர மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதைப்பற்றிய கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அது 24 ஆம் தேதி என்று கருதுகிறேன். நான் மதுரைக்குப் போகிறேன். அப்போது சூப்பிரண்டன்டிங் என்ஜினியர் வருவார். நான் கேட்டுப் பார்க்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, சோழவந்தான் அருகிலிருந்து திருமங்கலம் நகரத்திற்குத் தண்ணீர் கொண்டு வருகின்ற வழியிலே இருக்கின்ற கிராமங்கள் தவிர அதற்குப் பக்கத்திலே ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்ற கே. புளியங்குளம், சென்னிமங்கலம், கே. பாறைப்பட்டி, போன்ற ஐந்தாறு கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கப்படுமா? ஏனெனில் அந்த மக்களும்





தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் கொடுக்கப்படுமா? மேலும் இப்போது கொண்டுவருகின்ற இந்தத் தண்ணீர் எந்த ஆண்டு வரை அந்த மக்களுக்குப் போதுமானது என்று அரசு கருதுகின்றது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் தற்போதைய மக்கள் தொகையில் உடனடிக் குடிநீர் தேவையையும் 1991-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகையில் குடிநீர்த் தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் வழியோர கிராமங்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்காக, அந்தக் குழாய் களைப் போட்டுக்கொண்டு வருகின்றபோதே 'டி' பைப்பையும் போட்டுக்கொண்டு வந்துவிடுவார்கள். பிறகு அந்த 'டி' பைப்பில் கனெக்ஷன் கொடுப்பார்கள். அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமங்கள் வழியோரத்திலே இருக்குமேயானால் அந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். ஆனால் தள்ளி இருக்குமேயானால் அந்த கிராமங்களுக்கு கன்வேயர் பைப் ஒன்று தனியாகப் போட வேண்டி இருக்கும். அதனால் செலவு அதிகமாகும். இந்த ஸ்கிமிலேயே அதைச் செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல இதிலே எவ்வளவு குடிநீர் கொடுக்கிறோம் என்று கணக்கிட்டு இருக்கிறோமோ அந்தக் குடிநீர் பெறக்கூடிய வழியோர கிராமங்களுக்கும், திருமங்கலத்திற்கும் குறைந்துவிடும். எனவே இவற்றை எல்லாம் பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும். ஆனால் எந்தெந்த கிராமங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் அந்தந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கொண்டு போக முடியுமா, சாத்தியக்கூறு உள்ளதா என்பதை பார்க்கலாம்.

திரு. இரா. முத்தையா : தலைவர் அவர்களே, திருமங்கலம் நகருக்கு வழங்க இருக்கின்ற இந்த குடிநீர் திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் பொதுக் குழாய்கள் எத்தனை அமைக்கப்படும் என்ற குறிப்பைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எத்தனை பொதுக் குழாய்கள் என்ற தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை.

## திருமுட்டம் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 834—**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி திருமுட்டம் பேரூராட்சிக்கு குடிநீர் விநியோகிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) ரூ. 34.50 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆயுள் பாதுகாப்புபீட்டு கழகத்திடமிருந்து கடன் உதவி பெற வழி செய்வதற்காக அரசின் தாற்காலிக ஒப்பளிப்பு அளிக்கப் பட்டுள்ளது.

(முற்பகல் 10–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. ஆர். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுட்டம் பேரூராட்சி நகரத்திலுள்ள சுற்றுப் பகுதி கிராமங்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்புதிய திட்டத்தின்படி திருமுட்டத்திற்கு 250 மில்லிமீட்டர் விட்டமுள்ள 2 குழாய் கிணறுகளிலிருந்து தண்ணீர் பெற திட்டமிடப்பட்டுள்ளது என்று சொல்லபடுகிறதே தவிர சுற்று வட்ட கிராமத்திற்கு இந்தத் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டு இருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை.

**திரு. கே. ஆர். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எத்தனை ஆண்டுகளில் செயல் படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தை எவ்வளவு விரைவில் செயல் படுத்தமுடியுமோ அவ்வளவு விரைவில் செயற் படுத்துதற்காக ஏற்பாடு செய்கிறோம். ஏன் என்று



சொன்னால் நீர் தேக்கத் தொட்டிகள் சேகரிக்கப்பட்டு 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு பதிக்கப்படும் பக்குவமான குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு வினியோகிக் கப்படும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதில் கொண்டு எவ்வளவு விரைவில் செயல் படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

## கிள்ளை பேரூராட்சிப் பகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள கிராமங் களுக்கான குடிநீர் திட்டம்.

*வினா எண் 835—**திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளை பேரூராட்சிக்கும் அதனை ஒட்டிய கிராமங் களுக்கும் குடிநீர்த்திட்டம் குடிநீர் வாரியத்தால் அனுமதிக்கப் பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) கிள்ளை பேரூராட்சி மற்றும் கீல் அனுவம்பட்டு, மேல் அனுவம்பட்டு, பின்னத் தூர், கிள்ளை விடாகம் ஆகிய நான்கு வழியோர கிராமங்களுக்கு புதிய குடிநீர்த்திட்டம் உலகவங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படவிருக்கிறது.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளைப் பகுதியில் மீனவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். பின்தங்கிய மக்கள் அங்கே அதிகமாக வாழ் கிறார்கள். அங்கே தண்ணீர் எடுத்தாலும் உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஆகவே இந்த திட்டம் அனுவம்பட்டிலிருந்து நல்ல தண்ணீர் கிடைக்கின்ற இடத்திலிருந்து கொண்டு வரவேண்டும் என்று அரசு பல ஆண்டுகளாக முயற்சி செய்தும் இன்னும் முடிவு செய்யாமல் இருக்கிறது. அந்த திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வளவு காலத்தில் அது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 61.85 லட்சம் ஆகும். மேலும் இந்த திட்டம் ஏப்ரல் 1984-ல் செயல்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு 4 1/2 ஆண்டு காலங்களில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளை பேரூராட்சி திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் நிதி வழங்கியிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டம் செயல்படுவதற்கு 4 1/2 ஆண்டு காலம் ஆகும் என்று சொன்னார்கள். ஆனால் வறட்சி பகுதியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் உடனே அந்தத் திட்டத்தை துவக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் உலக வங்கி குழுவால் பிப்ரவரி மாதம் 1983-ம் ஆண்டு பரிசீலனைச் செய்யப் பட்டுள்ளது. பரிசீலனை செய்யப்பட்டு இந்தத் தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விரைவு படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள், அது இன்ஜினியர்களை கலந்து தான் சொல்ல இயலும். நான் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

அரசுப் பேருந்துகளில் டிக்கட் வ்ாங்காமல் பயணம் செய்வோரைக் குறைக்க புதிய திட்டம்.

*வினா எண் 836—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துகளில் டிக்கட் வாங்காமல் பயணம் செய்வோரை குறைக்க அரசிடம் புதிய திட்டம் ஏதும் பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) பயணச் சீட்டு பரிசோதகர்கள் அதிக அளவில் நியமிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. பேருந்துகளில் மிகவும் நெரிசலான நேரங்களில் இரண்டு நடத்துநர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களை குறைக்கின்ற நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பயணிகள் கட்டாயமாக பயணச்சீட்டு வாங்குகின்ற வகையில் கண்டக்டர் பயணச்சீட்டை கொடுக்காவிட்டாலும் கட்டாயப்படுத்தி வாங்கு கின்ற வகையிலும் பயணம் முடிந்தபிறகு இந்த பயணச்சீட்டுக்கு ஒரு மதிப்பு இருக்கின்ற வகையில் போக்குவரத்துக் கழகங்களில்



இருக்கின்ற பயணச் சீட்டில் குலுக்கல் முறையில் பரிசு திட்டத் தை அமுல்படுத்த அரசு பரிசீலிக்குமா ? அப்படி செய்யும் போது தனியார் பேருந்துகளை விட இந்த அரசு பேருந்துகளில் போகலாம் என்கின்ற உணர்வு பொது மக்களுக்கு ஏற்படும் என்ற கருத்தில் இந்த பரிசு சீட்டு முறையை போக்குவரத்துக் கழகங்களில் அமுல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே 2 ஆண்டுகளுக்கு முன் இது ஒரு முறை ஆலோசிக்கப் பட்டு கொஞ்சம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஏதாவது சட்ட சிக்கல்கள் வருமா ? வேறு ஏதாவது சங்கடம் வருமா என்று யோசித்து கொஞ்சம் தள்ளிவைக்கப்பட்டு இருக் கிறது. எனவே இதைப்பற்றி பின்னாலே யோசிக்கலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பயணச் சீட்டு இல்லாது பயணம் செய்கிற பயணி களுக்கு இப்போது 500 ரூபாய் அல்லது கட்டணத்திலே 10 மடங்கு என்று இருக்கிறது. அதை 100 ரூபாய் அல்லது 200 ரூபாய் என்ற அளவுக்கு நிர்ணயிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே 2 ரூபாயாக இருந்தது 500 ரூபாயாக மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஒரு ரூபாய் என்று கட்டணம் இருக்குமானால் பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்கின்ற பயணிகளுக்கு அபராதம் 10 ரூபாய் என்ற முறையில் சமீபத்தில் மத்திய அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. இந்த நிலையில் இதை மேலும் உயர்த்த வேண்டுமா என்பது யோச னைக்குரிய விஷயமாகும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, இப்படி அபராதம் அல்லது பைன் என்று பணமாக விதிக்காமல் சிறு தண்டனை என்ற வகையில் 3 நாள் அல்லது 7 நாள் என்று போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை.

திண்டிவனத்திலிருந்து ரெட்டணைக்கு நகரப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண் 837—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலிருந்து சிங்கனூர், முட்டியூர், பெர மண்டூர், நாரேரிக்குப்பம் வழியாக ரெட்டணைக்கு பெரியார் போக்குவரத்துக்கழக நகரப்பேருந்து விட அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு கே. எம் தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்திலிருந்து சிங்கனூர், முட்டியூர், பெரமண்டூர், நாரேரிக்குப்பம் வழியாக ரெட்டணைக்கு பஸ் விடுவதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த பஸ்ரூட்டில் நூற்றுக்கணக்கான பயணிகள் பஸ்ஸிற்காக காத்துக் கிடக்கின்றார்கள் என்பதை அறிந்து இதைப் புனர் ஆலோசனை செய்து பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தப் பாதை மிகக் குறுகிய பாதையாக இருக்கிறது. இது 15.4 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஏற்கனவே ஒரு பேருந்து எட்டு நடைகள் போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு மேலே தேவையில்லை என்றுதான் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு மேலும் தேவையிருந்தால் பாதை சரியாக இருந்தால் இன்னொரு பேருந்து ஓடுகிற நிலைமை இருக்குமானால் அரசு அதைப்பற்றி யோசிக்கும்.

திரு. கே. எம். தங்கமணி : ஜனநெருக்கடி உள்ள நல்ல கலெக்‌ஷன் வரக்கூடிய ரூட்டாக இருப்பதால் தயவு செய்து அமைச்சர் அவர்கள் புனர் பரிசீலனை செய்து பஸ் விடுவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன், தேவையாக இருந்தால் அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரைசரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்.

### அரசின் நிருவாக நடவடிக்கைகள்.

திரு. எல். இளையபெருமாள் : பாயின்ட் ஆப் ஆர்டர்,
தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய முதலமைச்சர் பதில்
கொடுக்கிறபோது நான் உண்மைக் கருத்தைச் சொன்னேன்.
1982–83 ஆம் ஆண்டு போலீஸ் மானிய டிமாண்டிலே தென்
ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம், திட்டக்குடி தாலுகாவில்
தொழுதூர் என்ற கிராமத்திலே அரிசனப் பெண் உண்மையி
லேயே அவமானப்படுத்தப்பட்டு சென்ற மாதத்திலே கேஸ் முடிவு
எடுக்கப்பட்டு 7 ஆண்டு தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால்
குறிப்பிலே இருப்பதானாது வன்னிய சமுதாயப் பெண்ணை
அரிசனப் பையன் மானபங்கப் படுத்தினான் என்று கூறப்பட்டு
இருக்கிறது. இது சம்பந்தமாக நான் சபாநாயகரிடம் சொன்
னேன். கடிதமும் எழுதினேன். முதலமைச்சர் அவர்களிடமும்
சொன்னேன். இந்த வருடம் போலீஸ் டிமாண்ட் சம்பந்தமான
குறிப்பிலேயும் தஞ்சாவூர் மாவட்டம் திருப்பனந்தாள் என்ற
கிராமத்திலே 96 அரிசன மக்களை—அதிலே சர்க்கார் உத்தி
யோகத்திலே இருக்கிறவர்களைக் கூட இல்லாதவர்களை இருப்ப
வர்களாகக் கொடுத்திருக்கிறார்கள், 36 என்று தவறான குறிப்பு.
நான் இதைச் சொல்கிற போது நம்முடைய முதலமைச்சர்
என்றும் இல்லாத ஒரு நிலையில் பத்திரிகையிலே வரும் என்று
கேள்வி கேட்கிறீர்களா என்று சொன்னதானது நான் உண்மை
யைச் சொல்லியிருந்தும் ஒரு ஆண்டுக் காலமாக பதில் சொல்லா
மல் இருந்தும் என்னுடைய சுய கவுரவத்தை அலட்சியப்படுத்து
கின்ற முறையிலே ஏதோ விளம்பரப்பிரியன் என்ற முறையிலே
தொனிக்கிற முறையிலே சொன்னதானது மிகத் தவறான கருத்து
என்பதை நான் சபாநாயகர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டரில் இது எப்படி வரும் ? முதலமைச்சர் நேற்று பேசும்போது எல்லோருடைய கருத்துக்களுக்கும் தனித்தனியே பதில் கொடுத்தார்கள். நேற்றே நீங்கள் கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடு).

திரு. என். வி. என். சோமு : தமிழகத்தில் மின்சார வாரியத்தில் திடீரென்று ஆயிரக்கணக்கான எஞ்சினியர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாறுதல்கள் எல்லாம் அரசின் நடவடிக்கைக்கு உட்பட்டது. உட்காருங்கள்.

## 3. அறிவிப்புகள்.

### (அ) அவைக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983—84 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு ( House Committee ) சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினோரு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றார்கள்.

1. திரு. தி. கா. நல்லப்பன்
2. திரு. என். பெருமாள்
3. திரு. மு. அரங்கநாதன்
4. திரு. பாபு ஜனார்த்தனன்
5. திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி
6. திரு. இரா. சக்கரபாணி
7. திரு. த. வீராசாமி
8. திரு. நன்னிலம் அ. கலையரசன்
9. திரு. செ. குப்புசாமி
10. திரு. எம். அண்ணாதாசன்
11. திரு. எஸ். அரங்கநாதன்

1983—84 ஆம் ஆண்டிற்கான ''அவைக் குழுவிற்கு'' இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன். இரண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு அறிவிப்பு பின்னர். செய்யப்பெறும்.

பேரவையின் 288 (1)-வது விதிக்கிணங்க,

1. திரு. ஏ. பெரியசாமி
2. திரு. மு. சுந்தரராஜன்
3. திரு. தா. சாமிக்கண்ணு
4. திரு. எஸ். என். இராமசாமி

ஆகியோர்களை இக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.



## 4 கவன ஈர்ப்புகள்.

### (அ) அம்பத்தூர் பகுதியில் வீட்டு மனைப் பட்டாக்களுக்காக வசூலிக்கும் தொகை.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''அம்பத்தூர் நகராட்சி நகரியப் பகுதியில் வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக அரசு வசூலிக்கும் தொகையில் மாறுபாடுகள் உள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, சென்னை புறநகர்ப் பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை செய்யப்படும் போது, அரசாணை பல்வகை எண். 842, வருவாய், நாள் 14—4—1977-ல் கண்டுள்ள விதிகளிளின்படி நிலக் கிரயம் நிர்ணயிக்கப்பட்டு தவணை முறையில் வசூலிகப் படுகிறது. அம்பத்தூர் நகராட்சிப் பகுதியும் சென்னை புறநகர்ப் பகுதியில் வருவதால் மேற்காணும் அரசாணையில் கண்டு உள்ள விதிகள் இதற்கும் பொருந்தும். சென்னை புறநகர்ப் பகுதியில் வீட்டுமனை ஒப்படை பெறுபவர்கள் நிலமற்ற ஏழைகளாக இருந்தால் முதல் மூன்று செண்டுகள் இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. மூன்று செண்டுக்கு மேல் ஐந்து சென்ட் வரையில் ஆக்கிரமிப்புகள் இருந்தால் ஒரு மடங்கு நிலக்கிரயம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏழைகளின் ஆக்கிரமிப்புகள் ஐந்து செண்டுக்கு மேல் இருந்தால் இரு மடங்கு நிலக்கிரயம் (நான்கு .சென்ட் முதற்கொண்டு) வசூலிக்கப்படுகிறது. இது தவிர ஆக்கிரமிப்பு செய்பவர்கள் வசதி படைத்தவர்களாக இருந்தால் முதல் மூன்று செண்டிற்கு ஒரு மடங்கு நிலக்கிரயமும், மூன்று செண்டிற்கு மேல் ஐந்து செண்ட் வரை இருந்தால் இரு மடங்கு நிலக்கிரயமும், ஐந்து செண்டுக்கு மேல் எட்டு செண்ட் வரை இருந்தால் மூன்று மடங்கு நிலக்கிரயமும், எட்டு செண்டுக்கு மேல் பத்து செண்ட் வரை நான்கு மடங்கு நிலக்கிரயமும், பத்துச் செண்டுக்கு மேல் ஐந்து மடங்கு நிலக்கிரயமும் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றது. ஆகவே தான் நிலக்கிரயம் வசூலிப்பதில் மாறுபாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அம்பத்தூர் நகராட்சி, நகரியப் பகுதி என்று குறிப்பிட்டிருந்தாலும், சென்னை புறநகர்ப் பகுதி முழுவதிற்கும் பொருந்துவதான பிரச்னையாக இந்தப் பட்டா பிரச்னை இருக்கிறது. சென்னை புறநகர் பகுதியில் ஏறத்தாழ, 10 ஆண்டு காலமாக வசித்து வருகிற மக்கள் தாங்கள் தொடர்ந்து ''பி.மெமோ'' பெற்று வருகிற நிலையில், பட்டா வேண்டுமென்று கோருகிற போது, அதிலும் குறிப்பாக தொழிலாளர்

பெருமக்கள், வருமானம் குறைவாக உள்ளவர்கள், பட்டா கோருகிற போது இன்றைக்கு இருக்கிற ''லேண்ட் வேல்யூ'', அங்கே இருக்கிற நிலம் எவ்வளவு தொகைக்கு விற்கப்படுகிறதோ, அந்தத் தொகையை திரும்ப அவர்களிடமிருந்து பட்டா பெறுகிற போது கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது அம்பத்தூர் பகுதியிலும், தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற பகுதிகளிலும் இருக்கிறது. 15 ஆயிரம், 20 ஆயிரம், 25 ஆயிரம் என்று தரவேண்டிய கட்டாய சூழ்நிலை இருக்கிறது. பட்டா பெற்றவர்கள் எத்தனை பேர்கள் புறநகர் பகுதியிலே இருக்கிறார்கள் என்று கணக்கைப் பார்த்தால் ஆண்டிற்காண்டு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் வருமானம் இந்த பட்டா தராத காரணத்தால் அரசிற்கு, வருவாய்த் துறைக்கு இழப்பாக இருக்கிறது. இன்றைக்கு சென்னைப் பகுதியிலே இருப்பதைப் போல 1977 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அந்த ஆணையின்படி ஒரு ப்ளாட் ரேட்டாக, ஏற்கனவே ''பி. மெமோ'' என்றைக்கு பெற்றார்களோ அந்த ஆண்டை கணக்கிலே வைத்து, தொடர்ந்து குடியிருந்து வருகின்றவர்களுக்கு, பி. மெமோ வைத்திருப்பவர்களுக்கு, 1977 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதிக்கு முன்னாலே இருந்தவர்களுக்கு அந்த இடங்களை எல்லாம் ரெகுலரைஸ் பண்ணுகிற அளவிற்கு ஒரு நல்ல ஏற்பாடாக ஒரு உயர் மட்டக் குழுவை.............................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது கவன ஈர்ப்பு. நினைவில் கொள்ள வேண்டும்.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன்** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருடைய தலைமையிலே ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்துத் தீவிரமாக அதைப் பற்றி ஆலோசிப்பார்களானால் அரசுக்குத் தொடர்ந்து வருமானம் வரக் கூடிய சூழ்நிலையும், ஏறத்தாழ 30,000, 40,000 வீடுகளுக்குப் பட்டா அளிக்கக் கூடிய சூழ்நிலையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்து, இந்த உயர் மட்டக் குழு அமைக்கப்படுமா? ப்ளாட் ரேட்டாக அந்தப் பட்டா வழங்குவதற்கான தொகை நிர்ணயிக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளை ஒன்றாகக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விகளுக்கு எவ்வளவு ஞாபகம் வைத்துச் சொல்ல முடியுமோ, அதைச் சொல்கிறேன். ஒன்றைச் சொல்லும்போது, சென்னையிலே விற்கிற விதிப்படி நிலம் கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். சென்னையிலே சொடுக்கப்படுவது எப்படி என்றால், ஆதிவாசி— ஆதி ஆந்திரர்களுக்குத்தான் நிலம் குறிப்பிட்ட தொகை கொடுத்து விட்டால், அவர்களுக்கு தர வேண்டுமென்றும், மற்றவர்கள் சென்னையிலே நிலம் கேட்கிறபொழுது, வழக்கத்திலுள்ள விதிமுறை பின்பற்றப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



சென்னையின் சுற்றுப் புறத்திலுள்ள இடமெல்லாம், சென்னையைப் போலத்தான் கருதப்பட வேண்டியிருக்கிறது. அவற்றினுடைய விலைக்கேற்றவாறு—சில இடங்களில் உள்ள நிலத்திற்கு விற்பனை விலை எப்படியிருக்கிறதோ, அந்த விற்பனை விலைக்கேற்றவாறு, அந்த நிலத்தினுடைய விலை இன்றைக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல, அதை யார் ஆக்கிரமிக்கிறார்களோ, அவர்களுடைய வருவாயையும், அவர்கள் பணக்காரர்களா, ஏழைகளா என்பதைப் பற்றியும் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, இதையெல்லாம் சொல்லி, அவர்கள் 20 ஆண்டுகளாக இருக்கிறார்கள், 30 ஆண்டுகளாக இருக்கிறார்கள், தொழிலாளர்களாக இருக்கிறார்கள், அவர்களால் கொடுக்க முடியவில்லை; அதை அரசு கவனிக்குமா, என்பது. அதற்குப் பதில், அவர்கள் இவ்வளவு தான் கொடுக்கவேண்டுமென்று சொல்லி, தவணை முறையில் கொடுக்காவிட்டால், 9 சதவீதம் அரசு அவர்களிடத்திலே வட்டியாக வசூல் செய்கிறது. 9 சதவீதம் வட்டியாக வசூல் செய்கிறபொழுது அதைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்ற எண்ணத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதையெல்லாம் யோசித்து, அங்கே உள்ளவர்களுடைய நிலைமையையும் சற்று யோசித்து, அவர்களுடைய வருவாயையும் யோசித்து, அவர்களுக்கு விதிக்கப்படுகிற கிரயப் பணம் அதிகம் என்றால், அரசு அதைப் பரிவுடன் பரிசீலித்து, வேண்டுமென்றால் ஒரு குழுவைக்கூட அமைத்து நியாயம் வழங்க அரசு தயாராக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோள்படி இந்த அரசு குழு அமைக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) பெரியார் மாவட்டத்திலுள்ள எரிசாராய ஆலைகளின் கழிவு நீரினால் நிலத்தடி நீர் பாதிக்கப் பெறாது பாதுகாத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருவாளர்கள் தி. கா. நல்லப்பன், சோ. அழகர்சாமி, செ. சிவசாமி, மு. அம்பிகாபதி, பி.ஜி. நாராயணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி. ஜி. நாராயணன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் எரிசாராய ஆலை மற்றும் சக்தி எரிசாராய ஆலைகளிலிருந்து கழிவுநீர் பவானி ஆற்றில் கலப்பதால், ஆப்பக்கூடல், ஜம்பை, பெரிய மோளபாளையம் மற்றும் தளவாய்ப்பேட்டையிலுள்ள விளை நிலமும், நிலத்தடி நீரும் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து'' அவசரப்

[திரு. பி. ஜி. நாராயணன்] [1983 ஏப்ரல் 21

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

சின்னப்புலியூரில் அமைந்துள்ள கோயமுத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற எரிசாராயத் தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் 35,000 லிட்டர் எரி சாராயம் தயாரிக்கிறது. இந்தத் தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் 4,80,000 லிட்டர் கழிவு நீரை வெளியேற்றுகிறது. இந் தத் தொழிற்சாலை காற்றிலி நீர்த் தொட்டிகள் மூலம் கழிவு நீர் சுத்திகரிக்கும் முறையைக் கையாளுகிறது. தொழிற்சாலையி லிருந்து சுமார் 2·3 கி. மீட்டர் தொலைவில் பவானி ஆற்றின் கரையில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு இந்தக் கழிவு, நீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் முதனிலை, இரண்டாம் நிலை காற்றிலி நீர்த் தொட்டிகள் இருக் கின்றன. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் தண்ணீருடன் கலக்கப்பட்டு நிலப்பாசனத்திற்குப் பயன்படுத்தப் படவேண்டும். 1981-ல் இந்த தொழிற்சாலைக்கு கழிவு நீர் வெளியேற்றத்திற்கு, பொது சுகா தாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மேற்படி கழிவு நீர் இருநிலை காற்றிலித் தொட்டிகள் மூலமும் பின்னர் காற்று நீர்த் தொட்டிகள் மூலமும் சுத்திகரிக்கப்பட்டு பின்னர் தண்ணீருடன் கலந்து பாசனத்திற்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனைகளின்கீழ் அனுமதி வழங்கியுள்ளார்.

2. தற்சமயம், குளிர்ச்சியூட்டப் பயன்படுத்தப்படும் நீர், உபயோகத்திற்குப் பின் பிரிக்கப்பட்டு, தொழிற்சாலை வளாகத் திற்குள்ளே உள்ள நிலத்தில் பாசனத்திற்காகப் பயன்படுத்தப் படுகிறது. மேற்படி உபயோகத்திற்குப் பயனபடுத்தப்பட்டது போக, மீதமுள்ள நீர், அருகிலுள்ள நிலங்களில் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த எரிசாராயத் தொழிற்சாலையி லிருந்து கழிவு நீரானது சுத்திகரிப்பு நிலையத் தொட்டிக்கு எடுத் துச் செல்லப்படுகிறது. தற்சமயம் இக்கழிவுகளில் ஒரு பகுதி, இத் தொட்டிகளிலிருந்து நீரேற்றி மூலம் வெளியேற்றப்பட்டு அருகிலுள்ள நிலங்களில் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படு கிறது. இக்கழிவு நீர், குட்டைகளிலிருந்து நீரேற்றி மூலம் உந் தப்பட்டு, பவானி ஆற்றி போதியளவு தண்ணீர் இருக்கும் பொழுது ஆற்றில் வெளியிடப்படுவதாகவும், பவானி ஆற்றில்



1983 ஏப்ரல் 21] [டாக்டர் எச். வி. ஹண்டே]

குறைந்தளவு தண்ணீர் இருக்கும்பொழுது, இடது கரையில் உள்ள நிலங்களுக்குப் பாசனத்திற்காகப் பயன் படுத்தப்படுவ தாகவும் தெரிய வந்துள்ளது.

3. ஆப்பக்கூடலில் அமைந்துள்ள சக்தி சுகர்ஸ் லிமிடெட், தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் 60,000 லிட்டர் எரி சாராயம் தயாரிக்கிறது. இத் தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 9,00,000 லிட்டர் கழிவு நீர் வெளியேற்றப் படுகிறது. தற்சமயம், இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரானது அதன் வெட்பத்தைக் குறைப்பதற்காக, தொடர்ச் சியாக அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் விடப்படுகிறது. பின்னர், கடைசித் தொட்டியிலிருந்து கழிவு நீரானது ஒரு கட்டிடத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, அங்கு 1:10 என்ற விகிதத்தில் எரிசாராயத் தொழிற்சாலை நீராவி குளிர்ந்த நீர், புளிக்க வைக்கும் பகுதியில் குளிர்ச்சியூட்டப் பயன்படும் நீர், சர்க்கரை ஆலைத் தொழிற்சாலைக் கழிவு நீர் மற்றும், நல்ல தண்ணீருடன் கலக்கப்படுகிறது. இவ்வாறு கலக்கப்பட்ட கழிவு நீரானது, நீரேற்றி மூலம் உந்தப்பட்டு, சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் பவானி ஆற்றின் கரையில் இடதுகரையில் அமைந்துள்ள புதுப்பாளையம், நாயக்கனூர், சின்னக் கலியூர், பெரியகலியூர், ஆப்பக்கூடல், ஒரிச்சேரி, தளவாய்பேட்டை முதலிய கிராமங்களில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில், பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. எரிசாராயக் கழிவு நீர் ஆங்காங்கே தேங்குவதால் துர்நாற்றம் எடுக்கலாம்.

4. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப் பாடு) சட்டத்தில் (மத்திய 1974 ஆம் ஆண்டு 6வது சட்டம்) பிரிவுகளின் படி தொழிற்சாலைக் கழிவு நீர் வெளியேற்றுவதற்கு இவ்வாரியத்தின் ஒப்புதலைப் பெருமாறு திருவாளர்கள் கோய முத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் சின்னப்புலியூர் மற்றும் சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல் ஆகிய தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. ஆனால், மேற்படித் தொழிற்சாலைகள் இதுவரை இவ்வாரியத்தின் அனு மதிக் கோரி விண்ணப்பிக்கவில்லை. இது குறித்து வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. பி. ஜி. நாராயணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இது நாள் வரையில் வாட்டர் பொலூஷன் போர்ட் அனுமதியில்லாமல், கோயம் புத்தூர் எரி சாராய ஆலை மற்றும் சக்தி எரி சாராய ஆலையின் கழிவு நீரைப் பவானி ஆற்றில் விடுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. அதனால் அக்கழிவு நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்து வதாலும், அந்தப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. ஆகவே, நீர் மாசுத் தடுப்பு வாரியத்தின் அனுமதி

யில்லாமல், சட்டவிரோதமாக இயங்கும் அந்த இரண்டு எரிசாராய் ஆலைகளின் பேரில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், தமிழகம் பூராவும் இம்மாதிரி பிரச்னைகளில் விரைவாக நடவடிக்கை எடுக்க வாட்டர் பொலூஷன் போர்டுக்கு தனியாக ஒரு லீகல் செல் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—20)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்னைகள் வருவதாலே, நாம் புதிதாக ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டத்திலே பீனல் புரவிஷன் இருக்கிறது. அவர்கள் நாம் சொல்லி இருக்கக்கூடிய கட்டளைகளை மீறுவார்களானால், உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு புதிதாக இயற்றப்பட்டிருக்கிற சட்டத்தில் வசதி இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, தேவைப்பட்டால் ஆறுமாதங்கள் வரையில் சிறைத் தண்டனை கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து மீறினால் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பதிலில் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்திய 1974 ஆம் ஆண்டு 6 ஆவது சட்டம்) பிரிவுகளின்படி தொழிற்சாலைக் கழிவு நீர் வெளியேற்றுவதற்கு இவ்வாரியத்தின் ஒப்புதலைப் பெறுமாறு திருவாளர்கள் கோயமுத்தூர் ஆல்கஹால் அன்டு கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் சின்னப்புலியூர் மற்றும் சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல் ஆகிய தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன, ஆனால் மேற்படித் தொழிற்சாலைகள் இதுவரை இவ்வாரியத்தின் அனுமதிக்கோரி விண்ணப்பிக்கவில்லை என்ற விவரம் தரப்பட்டிருக்கிறது. இந்த கன்டிஷன்களுக்கு உட்பட்டு இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற விதிமுறைகள் இருந்தும், அதையும் மீறி இந்த நீரைத் சுத்தப்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கேட்கவோ, விண்ணப்பிக்கவோ செய்யவில்லை. அப்படியிருக்கும்பொழுது அமைச்சரவர்கள் இனி கடுமையான நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி அவர்கள் இந்த விதிகளை மீறுவதால் அந்தப் பக்கத்தில் இருக்கின்ற குடிதண்ணிரும் கெடுகிறது; இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் பவானி ஆற்றில் விடுவதன் மூலம் பாசனம் மட்டுமல்லாமல் குடிநீரையும் குடிக்க முடியாமல், மீன்கள் கூடச் சாவதாகச் சொல்கிறார்கள். இதைக் கடுமையாகத் தடுப்பதற்கு இப்பொழுதுள்ள விதிகளை விட வேறு



கடுமையான விதிகளை இயற்றி, உடனடியாக அவர்கள் செய்யவில்லை என்றால் அவர்கள் மீது, அந்த ஆலைகளை நடத்தக்கூடிய உரிமையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய ஏதாவதொரு கண்டிப்பான உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்ன பதிலையே இங்கே சொல்லாமல் விரிவான அறிக்கையை வைத்திருக்கிறேன். இதிலே எப்படியெல்லாம் இப்பொழுது அவர்கள் அந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக, நாம் அதிகாரிகளை அனுப்பி அது சட்டதிட்டத்திற்கு உட்பட்டிருக்கிறதா; நாம் வைத்திருக்கின்ற முறைகளை அவர்கள் முறையாகக் கடைப்பிடிக்கிறார்களா என்பதை அறிவதற்காக அதிகாரிகளை அனுப்பியிருக்கிறோம்; அந்த அதிகாரி நீரைச் சுத்தப்படுத்துவதற்கு இன்னொரு லகூன் ஏற்படுத்தினால், மூன்றாவது லகூன் இல்லாவிட்டால் சுத்தப்படுத்த முடியும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சட்ட ரீதியாக எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அப்பொழுது அவர்கள் என்னென்ன செய்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். சட்டத்தின் எல்லைக்குள்ளே என்ன என்ன செய்ய முடியுமோ அவைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) உள்ளூர் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு, 1983 (ஆ.கு.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு, உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள்மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்தலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு, 1983.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: '' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப்

பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள்மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களாலே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அறிமுகம் செய்கிற கட்டம்தான். எனவே, சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அறிமுகம்தான், நுழைவு வரியை நுழைய விடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த நுழைவு வரியை அறிமுகம் செய்கின்ற இந்த நிலையிலேயே இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன். இந்த நுழைவு வரி சம்பந்தமாக, இதற்கு முன்னால் இல்லாத அளவிற்கு எதிர்க்கட்சியில் உள்ள எல்லா உறுப்பினர்களும், பொதுமக்களும், வியாபாரப் பெருமக்களும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நுழைவு வரியாலே ஏழை நடுத்தர மக்கள் பெரிதும் இன்னலுக்கு ஆளாவார்கள். அது மட்டுமல்ல, இந்த நுழைவு வரியை வசூலிப்பதற்கு அரசாங்கத்திற்குப் பெரும் செலவு ஏற்படும். இன்றைக்கிருக்கின்ற வறட்சி பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக நாடு அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இப்பொழுது புதிய வரி மேலும் தொல்லையை ஏற்படுத்தும். அரசாங்கத்திற்கு வரி வேண்டுமென்றால் வேறு வேறு இனங்களில் பெருக்கிக் கொள்வதற்கு இடம் இருக்கிறபொழுது மக்களைப் பாதிக்கின்ற இந்த வரியை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லி அறிமுக நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த நுழைவு வரி சம்பந்தமாக நிதிநிலை அறிக்கையில் பேசும்பொழுது எதிர்க்கட்சியில் உள்ள அத்தனை கட்சிகளாலும் பேசப்பட்டிருக்கிறது.

சாதாரணமாக இப்போது பொருட்களை வாங்கி உபயோகிப்பவர்களை எப்படி பாதிக்கும் என்பதைப்பற்றி விவாதித்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அத்தனை வியாபாரிகளும் இந்த வரி கூடாது என்று உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தினார்கள். இப்போது இந்தத் தமிழகத்திலே மதுவிலக்குச்



சட்டத்தை நீக்கியதன் காரணமாக ரூ. 150 கோடி வருமானம் வருகிறது. இதை எப்படி சிக்கனமாக செலவு செய்வது, எப்படி நல்ல விதமாக பயன்படுத்துவது என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசிக்கலாம் புதியதாக மேலும் மக்களை கொடுமைப்படுத்துகின்ற இந்த நுழைவு வரி விதிப்பதன் காரணமாக இனியும் விலைவாசி அதிகமாக ஏறி, வருமானம் குறைந்த மக்கள் மேலும் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகின்ற காரணத்தினாலும், அத்தனை கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தனியாகப் பேசும்போது வாஸ்தவம்தான் கூடாது தான் என்று சொல்கிறார்கள் ஆகவே அத்தனை பேரும் எதிர்க்கக்கூடிய வரியை கொண்டுவரப்போவதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தனியாகப் பேசும்போது சொல்கிறார்கள் என்று இங்கே நண்பர் அவர்கள் சொல்வது சரிதானா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே் முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சி அபிப்பிராயத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. சோ. அழகர்சாமி: ஆளுங்கட்சி என்று சொன்னால், உறுப்பினர் மட்டுமா? உங்களில் யாரும் வியாபாரிகள் இல்லையா? (குறுக்கீடுகள்) அப்படி நீங்கள் சொன்னால் சரி. ஆகவே, இந்த நுழைவு வரி சம்பந்தமாக இந்த அறிமுகக் கட்டத்திலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இதை அறிமுகப்படுத்த வேண்டாம் திரும்பப் பெற்றுக்கொண்டால், மக்களுக்கு மேலும் கஷ்டத்தை ஏற்படுத்தாமல், இருக்கிற விலைகளை மேலும் உயர்த்துவதற்கு அனுசரணையாக இல்லாமல், இந்த மக்களுக்கு இருக்கிற கஷ்டத்தை அதிகரிக்காமல் இந்த மசோதாவை திரும்பப்பெற்றுக் கொள்வது நலம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் நுழைவு வரியைப் புதிதாக அறிமுகம் செய்வதை மார்க்ஸிஸ்டு கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. ஏற்கனவே தண்ணீருக்கு நகர்ப் பகுதிகளிலே ரூ. 50, 60 தினமும் செலவழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரூ. 20 கோடிக்கு நாங்கள் நுழைவு வரி போடுகிறோம் என்று சொல்கிறீர்கள். 1982 ஆம் ஆண்டிலேயே அரசினுடைய தீவிரத் தன்மைகள் காரணமாகவும் அதிகாரிகளுடைய நடவடிக்கைகள் காரணமாகவும் ரூ. 60 கோடிக்கு அதிகமாக விற்பனை வரியை வசூலித்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய நேரத்திலே, அந்த வரி வசூலை முறைப்படுத்துகின்றபோது 60 கோடிக்கு

அதிகமாக வசூல் செய்ய இயலும், இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் ரூ. 20 கோடிக்கு நுழைவு வரி போடுகிறோம் என்று சொல்வது மக்களுக்கு மேலும் அதிகமான பளுவை ஏற்றுவதாகும். எனவே தயவு செய்து இந்த வரி தேவையில்லை. ஏற்கனவே புகையிலை, சர்க்கரை, சிமென்ட் போன்ற பொருள்களுக்கு எக்சைஸ் வரி போடவேண்டுமென்று மாநிலங்களுக்குத் தெரிவித்த போது மாநில அரசாங்கம் கடுமையான ஆட்சேபனை தெரிவித்து அந்த எக்சைஸ் வரிக்குப் பதிலாக ஏற்கனவே உள்ள விற்பனை வரியை வசூல் செய்யக் கூடிய ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். அப்போது கூட இந்த மாநில அரசாங்கம் தனது முழு எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ் நிலையில் இன்றைக்குக் கடுமையாக அவதிப்படும் தமிழக மக்கள் மீது போடுவதனால் மேலும் வரிப் பளுவை அதிகரிக்கும். அப்படிப் போடுவது தேவையற்றது. எனவே ரூ. 20 கோடி வசூலிக்கின்ற நேரத்தில், நிச்சயமாக, அதிலே ஊழல்கள் அதிகரிக்கும். ஆகவே, இதில் வியாபாரிகள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள். சோதனைச் சாவடிகளில் சில கஷ்டங்கள் ஏற்படலாம். ஆகவே இப்படிப்பட்ட தேவையற்ற ஒரு நிலைமையைப் போக்குவதற்கு இந்த நுழைவு வரியை தயவு செய்து வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–30)

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரிக்கு இந்த அவையிலுள்ள எல்லா எதிர்க்கட்சிகளும், அவைக்கு வெளியிலே தமிழகம் பூராவும் இருக்கக்கூடிய அத்தனை வணிகர்கள் சங்கமும் தங்களுடைய எதிர்ப்பை தெரிவித்து இருக்கிறார்கள். நேற்றையதினம் ஒரு பிரச்சினையிலே எதிர்க்கட்சிகள் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு வேண்டுகோள் விடுத்ததை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, சிறந்த ஜனநாயகவாதி என்பதை அவர்கள் நிலைநாட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே இன்றைக்கும் எல்லா எதிர்க்கட்சிகளும் இவ்வளவு கடுமையாக எதிர்ப்பை தெரிவித்த பின்னாலும், தமிழ்நாடு பூராவும் இருக்கக்கூடிய அத்தனை வணிகர்களும் நம்முடைய முதல் அமைச்சரிடம் நேரிலே வந்து இதைப்பற்றி எதிர்ப்பை தெரிவித்து முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே இவ்வளவு எதிர்ப்புக்கு இடையே இந்த நுழைவு வரியை அரசு கொண்டு வரவேண்டுமா என்பதை இந்தக் கட்டத்திலாவது முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். இது நுழைவு வரி அல்ல. மாறாக இது ஊழலை, லஞ்சத்தை தமிழகத்திலே நுழைய விடுகிற வரியாக இது அமைந்துவிடுகிறது என்ற அச்சம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், எதிர்க் கட்சியினரின் உணர்வுகளை





மதித்து இந்த வரியை இந்தக் கட்டத்திலாவது ரத்து செய்யவேண்டும். இந்த வரியை இங்கே கொண்டு வருவதை நான் என்னுடைய கட்சியின் சார்பில் எதிர்ப்பை தெரிவித்து அமர்கிறேன்.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வரியைக் குறைப்போம் வசதியைப் பெருக்குவோம் என்று ஒரு காலகட்டத்திலே சொல்லிவந்தார்கள். அவர்களின் பெயரால் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கட்சியை ஆரம்பித்து இன்றையதினம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கேகூட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் லெவியை 50 பர்சென்ட், வியாபாரிகளுக்குத்தான் போடுகிறோம் என்று அவர்கள் ஒவ்வொரு முறை சொல்லி வந்தாலும் பாதிக்கப்படுகின்றவர்கள் கீழ்மட்டத்திலே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகள் என்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற வியாபாரிகள் இந்த நுழைவு வரியை எதிர்த்தாலும் பாதிக்கப்படுகிறவர்கள் வியாபாரிகளைவிட கிராமங்களிலே இருக்கின்ற, நகரங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். இங்கேஇருக்கின்ற ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தாலும் வெளியிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் என்னிடத்திலே நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே உரையாற்றுகின்றபோது நீங்கள் இதை அரசுக்குச் சொல்லக்கூடாதா? இது ஒரு பெரிய தொந்திரவான நிலைமையை பொதுமக்களுக்கு ஏற்படுத்துமே என்று எல்லாம் சொல்லி வருகிறார்கள். இது நியாயம் இல்லாத ஒரு வரியாகும். ஆனால் அரசாங்கத்திற்கு வருவாய் வருவதற்கு எங்களுடைய கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதே பேரவையிலே பேசுகின்றபோது இந்தத் தொகைக்கு ஈடாக எப்படி அரசுக்கு வருவாய் வருவதற்கு வேறு ஒரு வழியையும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே இங்கே எடுத்துச்சொன்னார்கள். அப்படிப்பட்ட வழிவகைகளை இந்த அரசாங்கம் வருவாயை பெருக்கவேண்டும் என்றால், பின்பற்றலாம். ஆனால் இல்லாத ஒரு வரியை இங்கே கொண்டு வந்து அரசாங்கத்திற்கு மட்டும் கெட்ட பெயர் அல்ல, இங்கே அதிகமான அளவிலே அதிகாரிகளைப் போடுகின்றபோது ஏராளமான ஊழல் நடைபெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. பொதுமக்கள் அவதிக்குள்ளாவார்கள். இவைகளை எல்லாம் நீங்கள் சீர்தூக்கிப் பார்த்து இதிலே நீங்கள் கௌரவப் பிரச்சினைப் பார்க்காமல் இந்தக் காலகட்டத்திலேயாவது நீங்கள் கண்ணியமாக இந்த வரியை வாபஸ் வாங்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

[1983 ஏப்ரல் 21

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரியை அறிமுகம் செய்கின்ற காலகட்டத்திலே காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். நுழைவுவரி போடுவதன் மூலம் இன்றைக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாகும் என்றும் இதனால் வியாபாரிகளைவிட பொது மக்கள்தான் அதிகமாக பாதிக்கப் படுவார்கள் என்ற விவரத்தையும் மற்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்றைக்கு செக்போஸ்ட் என்ற பெயராலே நெல், அரிசி கொண்டுபோவதிலேகூட தடைசெய்வதில்கூட ஏகப்பட்ட ஊழல்கள் நடைபெற்று வருகிறது என்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். மேலும் மேலும் அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது என்பது, இதனால் லஞ்சம், ஊழல் பெருகுவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்யும் என்ற காரணத்தால் இதைத் திரும்பப் பெறவேண்டுமென்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த நுழைவு வரி சட்ட முன்வடிவை உள்ளே கொண்டு வருகிறபோது பல உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். வழக்கமாக நான் பின்னாலேதான் பதில் சொல்வது என்றாலும் ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்வதற்கு கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்கின்றபோது ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ள நீங்கள் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நேற்றுகூட நீங்கள் சொன்னதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதை நான் பாராட்டு கிறேன். ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ள, ஜனநாயகத்தின்படி கடமையைச் செய்யவேண்டுமென்ற ஜனநாயகவாதியாக இருப்பதினால்தான் நீங்கள் எல்லாம் சொன்னதை முதல்வர் அவர்கள், ஜனநாயக முறைப்படி அதற்கு ஆதரவு கொடுத்தார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயகம் என்று சொல்கிறபோது அது நியாயமானவை என்றால் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் நியாயம் இல்லாத ஒன்றை அவர்கள் சொல்கிறபோது ஜனநாயகம் என்ற வார்த்தையை சேர்த்துச் சொல்லி இருக்கிறார்கள் என்றுதான் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை அவர்கள் சொல்லிக்கொண்டே போனார்கள். அண்ணா அவர்கள் என்ன சொன்னார் என்பது தெரியாதவர்களுக்கு அண்ணா அவர் சொல்வது போல் சொன்னார்கள். அண்ணா அவர்கள்



1983 ஏப்ரல் 21] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சொன்னது, வரியே போடக்கூடாது என்று சொல்லவில்லை. வரி என்பது தாங்க முடிகின்றவர்கள்மீது போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் இருந்த நேரத்தில் உள்ள நிதிநிலை அறிக்கைகளை எடுத்துப் படித்துப் பார்த்தால் தெரியும். வரியை யார் யார் கொடுக்க முடியுமோ அவர்கள் மீது வரி போட்டு, அதை வசூலித்து மற்ற ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று அண்ணா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசுகிறபோது இந்த வரி கூடாது என்று சொன்னார்கள். இந்த வரி இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலத்திலும், கிட்டத்தட்ட 14 மாநிலங்களில், இந்த வரி இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற மாநிலங்களில் கூட இந்த வரி, நுழைவு வரி அல்லது ஆக்ட்ராய் என்ற பெயரில் இருக்கிறது. மணிப்பூர், மகாராஷ்டிரா, ஒரிஸ்ஸா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், மேற்குவங்கம், கருநாடகம், டெல்லி, பாண்டிச்சேரி, குஜராத், அரியானா போன்ற மாநிலங்களில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது ஒரு வழி சொன்னார்கள். எக்சைஸ் டியூட்டி மத்திய அரசு எடுத்துக் கொள்வது என்று வந்தபோது அதை எவ்வளவு கடுமையாக எதிர்க்க வேண்டுமோ அவ்வளவு கடுமையாக நாங்கள் எதிர்த்தோம். புத்தகம்போட்டு கொடுத்து இருக்கிறோம். மேலும் சொல்லியிருக்கிறோம். மெல்ல மெல்ல இப்படி வரிகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டால், மாநில அரசுகள் ஒரு ‘குளோரிபைடு முனிசிபாலிட்டி’ என்று ஆகும் என்று அவ்வளவு கடுமையாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். மாநில அரசுகள் ‘குளோரிபைடு முனிசிபாலிட்டி’ என்ற நிலைக்கு வந்து விட்டால் மாநிலங்கள் மத்திய அரசின் ஒரு நிர்வாக யூனிட்டாக ஆகிவிடும் அளவிற்குப் போய்விடும் என்று சொல்லியிருக்கிறோம். ‘இட் ஈஸ் ஒன்லி அன் அட்மினிஸ்டிரேடிவ் யூனிட் ஆப் தி சென்டர், என்று சொல்லியிருக்கிறோம்.

ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு இந்த அளவிற்கு விவாதம் போதும் என்று சொல்லி, இந்தச். சட்டமுன்வடிவை நான் அறிமுகம் செய்து வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு உள்ளூர்ப்பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை

செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(மாண்புமிகு பேரவைத் துணை [illegible] ம)



### (இ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.''

(முற்பகல் 10—40)

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 1983—84 ஆம் நிதி ஆண்டிற்கு மாநில அரசு செலவழிப்பதற்காக, இந்தச் சட்டப் பேரவை பல்வேறு மானியங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. மொத்தம் ரூ. 24,91,40,63,000 பல்வேறு மானியங்களின் கீழே சட்ட மன்றப் பேரவையால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை முறையாக, மக்களுடைய நன்மையைக் கருதி செலவழிக்கப்பட வேண்டும், பயன்படுத்தப்பட வேண்டுமென்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. திருமணமாகி கணவன் வீட்டிற்குச் செல்கின்ற பெண்ணிற்கு பெற்றோர்கள் குடும்பத்தை நடத்த பொருளைக் கொடுத்து முறையாக குடும்பம் நடத்த வேண்டுமென்று சொல்வது போல், பல்வேறு மானியங்களுக்கு தொகை ஒதுக்கப்பட்டு, பேரவை உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம், இங்கே நாங்கள் அதற்கு அனுமதி கொடுத்து, இன்றைக்கு அரசாங்கம் அதை செலவழிக்க இருக்கிறது. எனவே, அது முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், அரசாங்கம் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் போன முறை பேசுகின்றபோது, அந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கொடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொகை எப்படி சரியாக செலவழிக்கப்படவில்லை என்பதை அரசாங்கப் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்து எதிர்க்கட்சித் தலைவர் இங்கே சொன்னார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

1978—79 ஆம் ஆண்டிற்கான 'அப்ரோப்ரியேஷன் அக்கவுண்ட்' என்ற தலைப்பிலே, இந்த அவையிலே தரப்பட்ட புள்ளி விவரங்களைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து சொன்னார்கள். 1978—79 ஆம் ஆண்டு போலீசுக்கு

ஒதுக்கப்பட்ட தொகை 35 கோடி ரூபாய்; ஆனால் செலவழிக்
கப்பட்டது 33 கோடி ரூபாய்தான். மீதி செலவழிக்கப்பட
வில்லை. அதேபோல், கல்விக்காக ஒதுக்கப்பட்ட
187 கோடி; செலவழிக்கப்பட்டது 185 கோடிதான். தொகை
துவத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 50 கோடி; மருத்
செலவழிக்கப்பட்டது ரூ. 48 கோடிதான். ஆனால்
ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 92 இலட்சம் வேளாண்மைக்கு
வில்லை. இந்த புள்ளி விவரங்களையெல்லாம் செலவழிக்கப்பட
கொடுத்தார்கள். அவர்கள்

அதேபோல், அடுத்த ஆண்டு 1979–80 ஆம் ஆண்டிற்கான
புள்ளி விவரங்களைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள்.
போலீஸ் மானியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 40.29
கோடி; செலவழித்தது ரூ. 36.84 கோடி. கல்வித் துறைக்கு
ஒதுக்கப்பட்டதில், ரூ. 13 கோடி செலவழிக்கப்படவில்லை;
அதேபோல், மெடிகலுக்கு 4 கோடி செலவழிக்கப்படவில்லை
பப்ளிக் ஹெல்த்லே 9 கோடி செலவழிக்கப்படவில்லை;
விவசாயத்திற்கு ரூ. 6½ கோடி செலவழிக்கப்படவில்லை;
மொத்தம் ஒதுக்கப்படுவதில் அவ்வளவும் செலவழிக்கப்படுவ
தில்லை. இந்த முறை நியாயம் தானா? என்று எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதேபோல், இப்போது
ஒதுக்கப்பட்ட இந்த தொகைக்கும் இந்த நிலைமை ஏற்பட்டு
விடக்கூடாது என்பதைச் சுட்டுக்காட்டுவதற்காகத்தான் இதை
நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். ஜனாதிபதியின் ஆட்சியின்போது, 1976ஆம்
ஆண்டிலே, மத்திய அரசு ஒரு கமிஷனைப் போட்டது. ஹர்பான்
சிங் கமிஷன் என்று அதற்குப் பெயர். அந்தக் கமிஷன் எதற்
காகப் போடப்பட்டது என்று சொன்னால், மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை புரட்சிகர
மான திட்டம் என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்ட
குழந்தைகள் சிவகாசியிலே பாக்டரி ஆக்டுக்கு விரோதமாக,
வெடி மருந்து தயாரிக்கும் காரியத்தில், தீக்குச்சி தயாரிக்கும்
காரியத்தில், அந்தக் குழந்தைகளை காலை 3 மணிக்கே எழுப்பி,
—14 வயதிற்குட்பட்ட, அதாவது 7, 8 வயதுள்ள குழந்தை
களையெல்லாம் அங்குள்ள முதலாளிகள் நிர்ப்பந்தப்படுத்து
கிறார்கள். அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள்.
இதையெல்லாம் அறிந்து கொள்வதற்காகத் தான் ஒரு கமிஷன்
1976ஆம் ஆண்டிலே போடப்பட்டு, அதனுடைய அறிக்கையும்
கொடுக்கப்பட்டு, பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த அறிக்கை
1977ஆம் ஆண்டில், முதலமைச்சர் அவர்களிடத்திலே வந்து
சேர்ந்திருக்கின்றது என்று நம்புகிறேன். முதலமைச்சர் அவர்கள்
அதை இரகசியமாக வைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவின்
அறிக்கையை இந்த சபையில் வைக்கவில்லை. அதைத் தெரிந்து
கொள்வதற்கு இந்த அவைக்கு உரிமை உண்டு. குழந்தைகளுக்கு
சத்துணவு போடுவதாகச் சொல்லுகிறார்கள்; ஆனால்,





குழந்தைகள் சிவகாசியில், தீப் பெட்டி தொழிற்சாலை முத
லாளிகளால், சட்டத்திற்கு விரோதமாக, 'சைல்ட் லேபர்
ஆக்ட்'-க்கு விரோதமாக கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.
அந்தக் கமிஷனுடைய அறிக்கையை முதல்வர் அவர்கள்
ஏன் ரகசியமாக வைத்திருக்கிறார்கள்? அந்த ஹர்பான் சிங்
கமிஷனுடைய அறிக்கையின் ஒரு பகுதி 'இந்தியா டுடே' என்ற
பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அது எப்படி வெளி
வந்தது என்பது எனக்குத் தெரியாது. அதேபோல், நேற்றுகூட,
நம்முடைய முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது, இன்னொரு
கருத்தையும் இங்கேதெரிவித்தார்கள் நேரம்இல்லை.எல்லா உறுப்
பினர்களுக்கும் பதில்சொல்ல முடியாது. ஆகையால் கேள்விகளுக்கு
எல்லாம் பதில் அச்சடித்து கொடுக்கப்படும் என்று சொல்லி
யிருக்கிறார்கள். புத்தக வடிவத்தில் அச்சடித்துக் கொடுத்து
விட்டால் நாங்கள் அதிலே விவாதம் நடத்த முடியாது; விளக்கம்
கேட்க முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்
அவர்கள் நேற்றைய தினம் இங்கே இருந்தார்கள். ஒரு மணிக்குள்
என்னுடைய பதிலை முடித்துவிட வேண்டுமென்று சொல்லப்
பட்ட நிலையில், தவிர்க்க முடியாத நிலையில்தான் என்னுடைய
பேச்சை நிறுத்திக்கொண்டேனே தவிர பதில் சொல்லமாட்டேன்,
முடியவில்லை என்று நேற்றைய தினமே விளக்கி இருக்கிறேன்.
சில சம்பவங்களை மேடையில் பேசுவது போல் இங்கே
இருந்து கொண்டு பேசுவது சரியல்ல. அப்போதே இந்தப்
பிரச்சனையை எழுப்பியிருந்தால் பேரவைத் தலைவரின்
அனுமதியைப் பெற்று பதில் சொல்லக்கூட வாய்ப்பு இருந்திருக்
கும். அப்போது கேட்காமல் இருந்துவிட்டு, இன்றைய
தினம் இந்தப் பிரச்சனையை எழுப்புவது சரிதானா என்று
திரு. ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, கமிஷன் தீர்ப்புகளையோ முடிவுகளையோ
நான் மறைத்து வைக்கவில்லை; மறைத்து வைக்கவேண்டு
மென்ற விருப்பமும் இல்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில்
குழந்தைகள் வேலை செய்வதை அனுமதிப்பது குறித்து நாங்கள்
மனம் வருந்துகிறோம் என்பதையும் விரைவில் அதற்குச் சட்டம்
வர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வயது
வந்தவர்களுக்குத்தான் தகுதி பெற்றவர்களுக்குத்தான் வேலை
கொடுக்க வேண்டும், அதிக சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற
எண்ணத்தோடு இப்படிப்பட்ட சட்டம் வர இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் மத்திய அரசில், பாராளுமன்றத்தில் எத்தனை
வயது என்று குழந்தைகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டி
யிருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் பேசியிருப்பதை தயவு
செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவுபடுத்திக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 21

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் இது சம்பந்தமாக கேள்வி கேட்க முயற்சி செய்தோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னையும் திரு. துரை முருகனையும் அமரும்படி சொல்லி சைகை காட்டினார்கள். ஆகையால் தொந்தரவு செய்யக் கூடாது என்ற முறையில்..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, இது உண்மையிலேயே உரிமைப்பிரச்சனையாகிவிடுமோ என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) என்ன நடந்தது என்பது குறிப்பில் இருக்கும் ; எனக்குத் தெரியாது, என்னைப் பொறுத்தவரையில் என்னிடம் கேட்கவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள் நீங்கள் பேசவேண்டாம் அல்லது பேசலாம் என்று சொல்லவில்லை. அந்த வகையில் நான் சொல்கிறேன். நான் கவனித்துக்கொண்டே இருந்தேன். அப்போது கூட நினைத்தேன். திரு. ரகுமான்கான் பேசாமல் இன்று ஏன் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்கள் என்று நான் திகைத்தேன். இன்று அவர் எழும்பினார், பேசினார், பேச விரும்புகிறார். தடை செய்யப்பட்டது என்று சொல்வது முறையல்ல. இன்று பேசவேண்டுமென்று சொன்னாலும் நான் பதில் கொடுக்கத்தயாராக இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று குறுக்கிடாமல் உட்கார்ந்திருந்தது முதலமைச்சருக்கு மரியாதை கொடுத்து அமைதியாக இருந்தேனே தவிர வேறல்ல. இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது பதில்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டேபில்லே பிளேஸ் செய்தால் சரியாக இருக்கும். ஆனால் அப்படி சொல்லப்பட்டிருக்கக்கூடிய கருத்து, நாங்கள் கேள்வி கேட்கும்போது அவற்றுக்கு தபால் மூலம் எழுதி அனுப்புவது அல்லது அவர்கள் புத்தக வடிவத்தில் தருவது எல்லாம் சபையின் மரியாதையை குறைப்பதாகக்கூட இருக்கும். அவர்களுக்கு அந்த எண்ணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இதுபோன்ற சிக்கல் எல்லாம் அதில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சனையை நீட்டிக்கொண்டு போக விரும்பவில்லை. ஆனால் நீங்கள் அனுமதி கொடுத்துக் கொண்டே இருந்தால் மற்ற உறுப்பினர்களுக்கும் இதைப் போன்ற பேச்சு பேசுவதற்கு, கருத்துக்களை வெளியிடுவதற்கு நீங்கள் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறீர்கள் என்று பொருளாகும். அப்படியானால் இந்த அவை அமைதியாக நடக்குமா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனக்கு மரியாதை காட்டியதாகச் சொன்னார்கள்; அதற்கு நன்றி கூறுகிறேன். ஏதோ நேற்றைய தினம் அந்த உணர்வு அவர்களுக்கு வந்திருக்கிறது; ஆகையால் நன்றி. இதற்கு முன்னால்





எத்தனை முறை என்னிடம் பேசியிருக்கிறார் என்பது குறிப்பில் இருக்கிறது. பரவாயில்லை. மனிதன் வளர்கிறான்; அறிவும் வளர்கிறது; அன்பும் வளர்கிறது; ஆசையும் பெருகிறது. இப்படியே மரியாதை வளர்ந்தால் ஒருவருக்கொருவர் ஆர்வமாக கேட்டுக்கொள்ளலாம். ஆனால் இதைப்போன்று நீட்டிக் கொண்டிருந்தால் விவாதம் வேறு வகையில் திரும்பிவிடுமோ என்று அச்சப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று விவாதம் நடந்தது. இன்றைக்கு அதுபற்றி பேசவேண்டாம். அது நேற்றோடு முடிந்துவிட்டது. தலைவரின் அனுமதியோடு ஒரு உறுப்பினர் பேச வேண்டும். தலைவர் அனுமதி கொடுக்கவில்லை என்றால் உட்கார வேண்டும். அது அல்லாமல் இந்த உறுப்பினர் உட்காரச் சொன்னார்., அந்த உறுப்பினர் உட்காரச் சொன்னார், அதனால் கேட்க முடியவில்லை என்று சொல்லக் கூடாது.

(முற்பகல் 10-50)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நாட்டிலே பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகராட்சிகளுக்கும், கூட்டுறவுத் துறைகளுக்கும் தேர்தல் நடத்தப்பெறவில்லை. அதைப் போலவே மேலவையிலும் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆந்திராவின் முதலமைச்சர் என். டி. ஆர். அவர்கள் அந்த மேலவையே வேண்டாம் என்று சொல்லி ஒரு தீர்மானம் போட்டிருப்பதாக பத்திரிகையிலேயிருந்து கேள்விப்பட்டோம். சில மாநிலங்களில் மேலவை கூட இல்லை. ஆனால் இந்த அரசு நேரிடையாக அப்படிச் செய்யாமல், மறைமுகமாக மேலவையில் காலியாக இருக்கும் இடங்களை, தேர்தல் நடத்தி பூர்த்தி செய்யாமலேயே இருந்து வருகிறது. அந்த இடங்களை நிரப்புகின்ற முறையில்-ஜனநாயக முறையில் மற்ற தேர்தல்களை நடத்துவதுபோல், மேலவையில் உள்ள காலி இடங்களை நிரப்புவதற்கும் தேர்தல்கள் நடத்த அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் சார்பாக எடுக்கப்பட்ட ஒரு முடிவினை இங்கே அளிப்பதற்கு ஒரு வாய்ப்பு தந்தமைக்கு அவருக்கு நான் நன்றியைக் கூறிக் கொள்கிறேன். ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு தேர்தல்கள், குறிப்பிட்ட மாதங்களில் ஜூன் மாதம் என்று கருதுகிறேன். நடத்த வேண்டும் என்று அரசு சார்பில் முடிவு செய்திருக்கிறோம். அதற்காக விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். 18 சதவீதம் 15 சதவீதம் என்று

ஏற்கனவே செய்யப்பட்டது போல், ஒதுக்கீடுகளும் வைத்திருக்கிறோம். அந்த முறையை நகராட்சிகளுக்கும் கொண்டு வர வேண்டும் என்கிற விருப்பம் இருக்கிறது. ஒருவேளை இதற்கும் யாராவது தடைபோட்டு வழக்கு மன்றத்திற்குச் சென்றால், நாங்கள் அதிலே பிடிவாதமாக இல்லாமல், நிச்சயமாக மக்களிடம் என்ன நிலைமை என்பதை விளக்கிவிட்டு, முன்பு இருந்த நிலைமையிலேயே தேர்தல்களை நடத்தவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசைத்தட்டும் ஒலி).

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல்களை ஜனநாயகரீதியில் முறையாகச் செயல்படுத்தி நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சம்பவத்தை இந்த சமயத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். திருச்செந்தூர் நகருக்கு எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நீண்ட பயணம் போனார்கள். சில காரணங்களுக்காகச் சென்றார்கள். கமிஷன் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று Real sovereign comes from the people என்ற அடிப்படையிலே, ஜனநாயக அமைப்பிலே, வாக்களித்து தேர்ந்தெடுத்து அனுப்புகிற மக்களுக்கு, இதுபோன்ற நிலைமைகளை தெரியப்படுத்தவேண்டும் என்கிற நிலையில், அந்தப் பயணத்தை அவர்கள் மேற்கொண்டார்கள். ஒரு டாக்குமெண்டரி பிலிம் அப்போது எடுக்கப்பட்டது. கலர் பிலிம். அது ஒரு தனி நபருக்குச் சொந்தமானது. . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது பேசவேண்டிய கருத்துக்களை மட்டும் பேசுங்கள். சப்ஜெக்டை விட்டு வேறு விஷயங்களை பேச வேண்டாம்........

திரு. ரா. உமாநாத்: பட்ஜெட் உரைமீது ஆற்றுகின்ற ஸ்பீச்சுகளில் எப்படி நாட்டிலே நடைபெறும் பல விஷயங்களையும் பேச அனுமதிக்கப்படுகிறதோ, அப்படியேதான், நிதி ஒதுக்க டிஸ்கஷனிலும் பல விஷயங்களை பேசலாம். ஆகவே, இதிலே அதிகமாக குறுக்கீடுகள் தயவுசெய்து வேண்டாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே உள்ள நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது பேசினால் சரி. தணிப்பட்ட கட்சி விவரங்களை எதற்காகப் பேச வேண்டும். படச்சுருள்களைப் பற்றி எல்லாம் எதற்காகப் பேச வேண்டும்....

திரு. ரா. உமாநாத்: பைனான்ஸ் பில்லில் எல்லாத் துறைகளுக்கும் தான் நிதி ஒதுக்கம் செய்கிறார்கள். எல்லாவற்றையும் பேசலாம்......



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதி ஒதுக்கப்பட்ட அரசாங்கத்துறைகளைப் பற்றிப் பேசுங்கள். திரைப்படத்துறையைப் பற்றி கூட அல்ல, திரைப்படங்களைப் பற்றி ஏன் பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தேர்தல்கள் என்ற தலைப்பிலே நிதி ஒதுக்கம் இங்கே செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்தல்கள் முறையாக நடத்தப் பெறவேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் திரும்பவும் நடைபெறக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். சரியான முறையில் தேர்தல்கள் நடைபெற்றாக வேண்டும். இதுபோன்ற விவரங்கள் இருப்பது, மாண்புமிகு முதலமைச்சருக்கும் உங்களுக்கும் தெரியாமல் கூட இருக்கலாம். வரும் தேர்தல்களில் இதுபோன்ற நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரும் வாய்ப்பாக நான் இதைச் சொல்லியிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே, தமிழ்நாடு சினிமா சட்டத்தின் படி டாக்குமெண்டரி படங்களைப் போடலாம். தேர்தல் காலத்தில் குரும்பூரிலே அப்படி இந்தப்படம் போடப்பட்டபோது, இந்தப் படச்சுருளை பறித்துக் கொண்டு போய்விட்டார்கள். அரசியல் உரிமைச் சட்டத்தின் 19-வது பிரிவின் அடிப்படையில், சுதந்திரமாக கருத்துக்களைச் சொல்லலாம் என்று இருக்கிறது. ஆனால் இந்தப் படச்சுருள் பறிமுதல் செய்யப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சருடைய சத்துணவு திட்டங்களைப் பற்றி, வேறு சில திட்டங்களைப் பற்றியெல்லாம் டாக்குமெண்டரிப் படங்கள் வெளியிடப்பட்டது. ஆனால், அங்கே படச்சுருளை எடுத்துக் கொண்டு போன, பறிமுதல் செய்ததற்கான காரணம் கூடச் சொல்லப்படவில்லை. ஆகவே, தேர்தல்கள் என்று வருகிறபோது, அவை சரியாக, முறையாக நடைபெற வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தொகுதியிலே எந்தப் படமும் போடக்கூடாது என்றுதான் நடவடிக்கை எடுத்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடித்த படத்தைக் கூடத்தான் தடை செய்தார்கள். ஆகவே தடை செய்வது என்பது குறிப்பிட்ட ஒரு படத்திற்கு மட்டுமல்ல. யா எந்தப் படத்தையும் போடக்கூடாது என்ற அந்த அடிப்படையிலேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடித்த படங்களைப் போட தோழர்கள் விரும்பியபோது, அதுவும் தடுக்கப்பட்டது. போடப்படுகின்ற இடத்திற்கே போய் தடுத்து இருக்கிறார்கள். ஆகவே எந்தவிதமான பாராபட்சமும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பெரியகுளம் தேர்தலின்போது ஒரு சுற்
றறிக்கை வந்திருக்கின்றது. அது என்ன சுற்றறிக்கை என்று
கேட்டால் பள்ளி உதவி ஆய்வாளரிடமிருந்து வந்திருக்கின்றது.
செப்டம்பர் 25, 26 ஆகிய நாட்களில் எந்தக் காரணத்தைக்
கொண்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏதாவது
அறிக்கை அவையிலே படிக்கப்பட வேண்டும் என்றால் முதலிலே
என்னிடம் காட்டி அனுமதி வாங்கியபின் படிக்க வேண்டும்.
ஆகவே அதனுடைய ஒரு காப்பியை என்னிடத்திலே காட்டி
னால் தானே தெரியும் அது என்ன சுற்றறிக்கை என்பது.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பெரியகுளம் தேர்தலைப் பற்றி மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார். அந்த நிகழ்ச்சி
தேர்தல் வழக்கிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.
எனவே அதுபற்றி இங்கே பேசுவது முறையா என்று தாங்கள்
தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுபற்றி
வழக்கு இருக்கின்றது என்று தெரிந்துதான் சொல்ல வேண்
டாம் என்று......

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தாங்கள்தான் தீர்ப்பளிக்க உரிமை படைத்த
வர்கள். இருப்பினும் என்னுடைய கருத்தினை நான் சொல்ல
விரும்புகிறேன். அரசாங்கத்தின் அதிகாரி அனுப்பிய ஒரு சுற்
றறிக்கையைப் படித்துக் காட்டுகின்ற நேரத்திலே அதனுடைய
எண், தேதி ஆகிய விவரங்களை எல்லாம் உறுப்பினர்கள் சொன்
னாலே அது சரிதானா என்று பார்த்துக்கொள்கின்ற அத்தகைய
வாய்ப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்ற காரணத்தால், அவை
களை எல்லாம் கூட ஒப்படைத்துவிட்டுத்தான் பேசவேண்டும்
என்ற நிலை இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தா
கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சில நேரங்
களில் ஏதாவது எண்களைச் சொல்லிக்கொண்டே போய்க்
கொண்டிருப்போம். ரெஸ்பான்ஸிபிளாக நடந்து கொண்டால்
எந்தப் பிரச்சினையும் இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே,
ஏதாவது தவறான ஒரு எண்ணோ அல்லது தவறான தஸ்தா
வேஜோ காட்டப்பட்டால் அவர்மீது எந்தவிதமான நடவடிக்கை
யையும் எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதற்கும்
என்னிடத்திலே காட்டி விட்டால் நல்லது, பார்த்து விட்டால்
உறுதியாகத் தெரியும் அல்லவா ?

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, மாண்பு
மிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது மாதிரி,
ஒரு சுற்றறிக்கை பற்றி இங்கே குறிப்பிடுகின்றபோது அதன்
ரெஃபரன்ஸ் நம்பர், சப்ஜெக்ட் பற்றி குறிப்பிடுகின்றபோது அவர்
சொன்னது பற்றிப் பார்ப்பதற்கு கவர்ன்மென்ட்டுக்கும் ஒரு ஆப்
பர்சூனிட்டி கிடைக்கின்றது. ஆனால், தாங்கள் சொல்வது
எந்த நம்பரையாவது சொல்லிவிட்டுப் போய் விட்டால்
என்ன செய்வது என்பது. ஆனால் அதிலே ஒரு சீரியஸ் டேஞ்
சர் இருக்கின்றது.

I will be liable to contempt of this House. You may sentence
me. I will be taking the risk.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே கடுமை
யான வார்த்தைகள் என்ற வகையில் நாளைக்கு ஏதாவது பண்
ணும்போது நீங்கள் உறுதுணையாக இருங்கள். அந்த நேரத்
திலே நாம் விட்டுவிடலாம், அல்லது வைத்துக்கொள்ளலாம்
என்ற பிரச்சினைகள் எல்லாம் வேண்டாம் என்றால் அப்போது
நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. இரா. முத்தையா : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிடு
கின்ற பிரச்சினை குறித்து தேர்தல் வழக்கிலே இருக்கின்றது.
ஆகவே அதுபற்றி இங்கே விவாதிக்கலாமா என்பதுதான் என்
னுடைய ஒழுங்குப் பிரச்சினை. தாங்கள் தீர்ப்பளிக்க வேண்
டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அத்தேர்தல்
பற்றி வழக்கு இருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றி இங்கே
விவாதிக்கத் தேவையில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்
களே, அரசாங்கத்தினுடைய ரிக்கார்டைக் காட்டுவதற்கும் தேர்
தல் வழக்கிற்கும் என்ன சம்பந்தம் ? தேர்தலிலே தவறுகள்
நடைபெற்றதாக வாதியோ, அல்லது பிரதிவாதியோ சொல்லி
இருப்பாரேயானால் அதுபற்றி இங்கே விமர்சிக்கக் கூடாத ஒன்
றாக இருக்கலாம். ஆனால் அரசாங்கத்தினுடைய அறிக்கை
களை எடுத்துக் காட்டுவது என்பது எப்படித் தேர்தல் வழக்கிற்
குச் சம்பந்தம் உள்ளது என்பதைத் தாங்கள்தான் சொல்ல வேண்
டும்.

[1983 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேர்தல் வழக் கிலே வாதி, பிரதிவாதி இரண்டு பேரையும் உயர்நீதிமன்றத் திலே குறுக்கு விசாரணை செய்வார்கள். அந்த நேரத்தில் எந்த டாக்குமெண்டைப் படிப்பார்கள் என்பது தெரியாது. அப்படி பட்ட சூழ்நிலையில் அந்த டாக்குமெண்டை நீங்கள் இங்கே மார்க் பண்ணிக்கொண்டிருந்தால் அதன்படி இங்கே நடந்த விவாதம் நாளைக்கு அந்த வழக்கிற்குப் பாதகமாகவும் அமைய லாம். சாதகமாகவும் அமையலாம். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அந்தமாதிரி விவகாரங்கள் தேவை யில்லை. வழக்கிலே இருக்கின்றபோது, அது குறித்து இங்கே விவாதிக்க முற்படுகின்றபோது அது அவ்வளவு நல்லதல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் வழக்கு இருந்தாலும் கூட அவர் என்ன சொல்கிறார் என்பதை முழுமையாகக் கேட்ட பின்பு தீர்ப்பளிக்கலாம் அல்லவா ?

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேர்தல் வழக் கில் விவாதம் கொஞ்சம் விரிவாக அங்கே நடக்க இருக்கிறது. அதை விட்டுவிட்டு இங்கே கொஞ்சம் விவாதத்தை விரிவாக விவாதிப்பது அந்த வழக்கு பாதிக்கப்பட்டாலும் பாதிக்கப் படலாம். சொல்லமுடியாது. ஆகவே அதை இங்கே விரிவாக விவாதிக்க தேவையில்லை. அது இரண்டு பக்கத்திற்கும் நல்லது. நீங்கள் தான் வழக்கு போட்டிருக்கிறீர்கள். உங்க ளுக்காகத்தான் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து மிக முக்கியமான பிரச்சனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் சம்பந்தமாக. பிற மாநிலங்களில் இட ஒதுக்கீடு செய்கிறோம் கல்லூரி மாணவர்களுக்கு. பிற மாநிலங்களில் நாமினேஷன் என்பதன் மூலம் அரசு சிலரை நாமினேஷன் செய்து அந்த காலேஜுக்கு அனுப்புகிறது. அதிலும் என்ன முறை பின்பற்றப்படுகிறது? அதில் என்ன நார்ம்ஸ் என்பது நமக்குத் தெரியவில்லை. அடுத்து சில மாநிலங்களிலிருந்து எல்லாம் அப்ளிகேஷன் கால் பார் செய்து மெரிட்டோரியஸ் கேன்டி டேட்ஸை பரிசீலனைச் செய்து அவர்களைத் தான் அனுப்பு கிறார்கள். இங்கே என்ன வேடிக்கை என்று கேட்டால் ஒரு முக்கியமான மருத்துவ துறையில் இருக்கக்கூடிய அதிகாரிக்கு சொந்தக்காரர் ஒருவரை, தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரி அட்மிஷனிலே இடம் கிடைக்கின்ற அள வுக்கு அவருக்கு கொஞ்சம் கூட தகுதி இல்லை என்பதால் என்ன செய்தார்கள் என்று கேட்டால் அவரை மைசூர் மெடிக்கல் காலேஜுக்கு நாமினேஷனில் போடச் செய்தார்கள். அவர் அங்கே



போனார். போய் 2 மாதம் கூட ஆகவில்லை, இங்கே தகுதி யானவர்கள் இருக்கிறார்கள் ; அவர்களுக்கு இடம் கிடைக்க வில்லை. தகுதி இல்லாதவருக்கு இடம் கொடுக்கமுடியாது என்பதை புரிந்துகொண்டு நாமிஷேனில் அவரைப் போட்டு அவரை பழையபடி இங்கே சென்னை மெடிக்கல் கல்லூரிக்கு கொண்டு வந்து இருக்கிறார்கள். உத்திரவு காப்பியைக் கேட் டாலும் இங்கே நான் அதை படித்துச் சொல்ல தயாராக இருக் கிறேன். இங்கே அமைச்சர் அவர்கள் இருப்பதனால் நான் இதை வாசிக்கிறேன், உங்கள் அனுமதியோடு,

From Dr. Lalitha Kameswaran, M.B.B.S., Dean to the Director of Medical Education. Sir, In continuation of this office letter cited I have to state that Thiru S. Jagan Mohan has paid the prescribed fee and joined the first M.B.B.S., Course in this college on 7-2-1982.

இவர் யார் என்று கேட்டால் மருத்துவ துறையில் மிக உயர்ந்த பதவியை வகிக்கக்கூடிய ஒருவரின் புதல்வர் என்று நான் கேள்விப்படுகிறேன். நான் கேட்கிறேன் தமிழ்நாட்டின் சார்பாக நாமினேஷன் செய்கிறோம். அந்த இடத்திற்கு இவ்வளவு ரகசியமாக செய்யவேண்டுமா ? வாய்ப்பு கேட்டு பல பேர் இருக்கிறார்கள்; அவர்களுக்கு கிடைக்கவில்லை. இப்போது நம்முடைய 2 இடம் அங்கே வேஸ்டாகி விட்டது. ஆனால் மற்ற மாநிலங்களிலிருந்து 2 பேர் வந்து படிக்கிறார்கள். அந்தச் செலவை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த தந்திரம் சரியா ? இதற்கு பின்னணி என்ன ? இது முறைதானா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒருவர் பெயரைத்தான் சொன்னேன். இன்னும் பெயர்கள் இருக்கின்றன. கேட்டால் நான் சொல்கிறேன். ஆக முதலமைச்சர் அவர்கள் கவனத் திற்கு இதை நான் இந்த நேரத்தில் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் என்ன முறையை பின்பற்றிக் கொண்டு வந்தார்களோ அதேமுறைதான் இப்போதும் நாம் பின்பற்றிக் கொண்டு வருகிறோம். இந்தக் குறிப்பிட்ட தகவலைப் பொறுத்த வரையில் இந்தத் தகவல் எனக்கு சில நாட்களுக்கு முன்பாக வந்திருக்கிறது. இது அரசின் கவனத் திற்கு வராமல் செய்யப்பட்ட ஒரு வேலை. ஆக இது எப்படி நடந்து இருக்கிறது என்பதை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று நான் உத்திரவு போட்டிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அவர் படித்துக்கொண்டு வருகிறார் என்பதுதான் நிலைமை. அடுத்து இன்னொரு பிரச்சினையை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் திரு. ஹண்டே அவர்கள் இலாக்கா தான். எனக்கு ஒரு மனு

வந்திருக்கிறது. P.G. Course for M.D. Physiology. அது 2 ஆண்டுகள் கோர்ஸ். 2 பேர் கேண்டிடேட்ஸ். ஒரு வாத்தியார் கூட இன்னும் அங்கே போடப்படவில்லை. பரிட்சை எழுதப்போகிறார்கள் நான் கேட்கிறேன் அந்த டிப்பார்ட்மெண்டுக்கு நீங்கள் ஏன் விரிவுரையாளரைப் போடவில்லை? அந்த டாக்டர்கள் காலையிலும், மாலையிலும் போய் அட்டன்டென்ஸ் கொடுக்கிறார்கள். ஆனால் வாத்தியார் கிடையாது. சும்மா உட்கார்ந்துவிட்டு வருகிறார்கள். அதனால் அவர் வருத்தப்பட்டு எழுதியிருக்கிறார்.

"A total fee of about Rs. 383 was collected from me."
383 ரூபாயை கட்டணமாக அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

Though nine months have elapsed, not even a single lecture or class has been conducted for P.G. in M.D. Physiology.
என்று வேதனையோடு அந்த டாக்டர்கள் தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன் ஏன் இப்படிப் பட்ட தவறுகள் நடைபெறுகின்றன?

அடுத்து, இன்னும் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். பாடியில் ஒரு தவறான காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நம்முடைய மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகரன் இருக்கிறார். அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். என்ன செய்து இருக்கிறார்கள் என்று கேட்டால் சர்வே நம்பர் 253 கலைவாணர் நகரில் 150 குடியிருப்புகள் இட ஒதுக்கீடு........

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** போஸ்ட் கிராஜுவேட் எப்படி என்றால்

Till we get a qualified person we have to conduct the Post Graduate Course. If we do not get qualified Professor for two or three years we may have to wind up that particular Department.
பிஸியாலேஜுயிலே, அனாட்டமியிலே நமக்கு புரபஸர்ஸ் கிடைப்பது கிடையாது. அதற்காக குவாலிபைட் புரபஸர்ஸ் தேடிக் கொண்டிருக்கிறோம், நமக்கு இருக்கிற பிரச்சினை அந்த அளவுக்கு குவாலிபைட் பெர்சன்ஸ் கிடைக்காத காரணத்தினால் மற்றவர்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து இந்த நிலை நீடிக்குமானால் we have to wind up ஆகவே எந்தவிதமான முறைகேடும் அங்கே தெரியவில்லை. நமக்கு அப்படி ப்ராப்ளம் இருக்கிறது. ஸ்பெஷலைஸ்டு ஆக தகுதியுடையவர்கள் கிடைக்கவில்லையென்றால் வேறு புரபஸர்ளை வைத்துச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து கிடைக்கவில்லையென்றால் வைன்ட் அப் பண்ணவேண்டிய நிலை வரும்.



**திரு. அ. ரகுமான்கான்:** எத்தனை பேர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை பார்க்காமல் உங்களால் நியமிக்கப்பட்ட புரபஸர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? 4 ஆயிரம் 5 ஆயிரம் சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா? திருமதி கே. கிருஷ்ணசாமி 5 வருட காலமாக சென்னை மருத்துவக் கல்லூரியிலே பிஸியாலஜி புரபஸராக இருப்பவர் ஒருநாள் கூட வகுப்பு எடுக்க வில்லை. அதைப்போலவே இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். திருமதி காந்தாதேவி; திருமதி சகுந்தலா தேவி, திருமதி விமலா பாய், ஒருவருமே இல்லை. 9 மாதமாக வகுப்புக்கே வரவில்லை. எதுவுமே இல்லை. சம்பளம் 4 ஆயிரம் ரூபாய் 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. நம்முடைய பணம் இல்லையா? நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடியிலே சர்வே நம்பர் 253 இல் கலைவாணர் நகரில் மிகவும் வறுமையால் வாடிக்கொண்டிருக்கிறவர்கள் வசிக்கிறார்கள். 1972 இல் பெர்மிட் செய்யப்பட்டு 150 குடியிருப்புகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த சில மாதங்களாக அவையெல்லாம் பிளாட் போட்டு 2 ஆயிரம் 3 ஆயிரம் என்று விற்பனையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் நோட்டீஸ் போட்டு அந்தப் பகுதியிலே விளம்பரம் செய்திருக்கிறார். நான் உங்கள் அனுமதியோடு வாசிக்கிறேன். 'பாடி பகுதிக்கு அருகிலே உள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை சிலர் கலைவாணர் நகர் என்று பெயர் போட்டு விற்பனை செய்வதாக தகவல் கிடைத்துள்ளது. அந்த நபர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உதவிகரமாக அமையும் வகையில் அவர்களை அடையாளம் கண்டு தகவல் தரும்படி வேண்டுகிறேன். அந்த நபர்கள் யார், அவரே சொல்கிறார் 'தவறான முறையில் என் பெயரையும் அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரையும் பயன்படுத்தும் சமூக விரோதிகளின் வார்த்தைகளை பொதுமக்கள் நம்பவேண்டாம், நம்பி ஏமாற வேண்டாம்' என்று சொல்லியிருக்கிறார். ஆகவே சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரனே கண்டிக்கிறார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார், நான் வரவேற்கிறேன். ஆனால் அவ்வளவு தைரியம் பெற்ற சக்திகள் யார்? பிளாட் போட்டு பகிரங்கமாகவே அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை விற்பனை செய்திருக்கிறார்கள். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அவரே சொல்லியிருக்கிறார், சமூக விரோதிகள், என் பெயரைப் பயன்படுத்துகிறார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரைப் பயன்படுத்துகிறார்கள், மக்களுக்கு தன்னைப்பற்றி தப்பான அர்த்தம் வந்துவிடக்கூடாது என்று சொல்கிறார், நல்லதுதான், ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதைப்போலவே இன்னொரு பிரச்சினையையும் சொல்லவிரும்புகிறேன்.

மிக முக்கியமான பிரச்சினை, நம்முடைய முதலமைச்சர் அவர்
களுடைய இலாகா. டெபுடி டைரக்டர்—தீயணைக்கும் படை
துணை இயக்குநர். அவர் ஒரு நபரைப் பற்றி
ஒரு பெரிய அதிகாரியைப்பற்றி ஆயிரம் பக்கத்திற்கு மேல்
சொல்லியிருக்கிறார். கலைஞர் எங்களுடைய தலைவர், எதிர்க்
கட்சித் தலைவர் இந்தப் பேரவையில் பேசுகின்றபோது இங்கே,
ஒரு ஃபைர் சர்வீஸ் டிரெயினிங் ஸ்கூல் மதுரையிலே நடத்திய
தற்கு அனுமதியில்லாமல் நடத்தியதாக குற்றச்சாட்டை
எடுத்துச் சொன்னார்கள். கலைஞர் அவர்கள் பேசியதற்குப்
பிறகு அந்த டிரெயினிங் ஸ்கூல் மூடப்பட்டது. அந்த அதிகாரி
யின் பெயர் ஜெயபெருமாள். அவர்மீது ஏதாவது நடவடிக்கை
எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அதைப்போலவே தேவ
சகாயம், ஐ.ஜி. அவர்கள்-முன்னாள் தீயணைப்புத் துறை இயக்கு
நர்-இந்த ஜெயபெருமாள் மீது பல குற்றச்சாட்டுகளைச் சொல்லி
யிருக்கிறார். இவ்வளவும் இருக்கிறது. முதலமைச்சர் டேபி
ளில் ஒரு ஃபைல் இருப்பதாகக் கேள்வி. அந்த ஃபைல் என்ன
வென்றால் இப்போது ஸ்பெஷல் டிரெயினிங்கிற்காக அவர்கள்
லண்டன் செல்வதற்கு அனுமதிகேட்டு. அது எந்த நிலையில்
இருக்கிறது, அனுமதி தரப்படுகிறதா தரப்படமாட்டாதா என்று
எனக்குத் தெரியாநா ?

(முற்பகல் 11—10)

நடவடிக்கை இல்லை. அரசாங்கத்திற்கு விரோதமான
காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு
நம்முடைய முதல்வர் அவர்களிடத்தில் ஸ்பெஷல் ட்ரெயினிங்
கிற்காக லண்டன் போவதற்காக ஃபைல் வந்திருக்கிறது என்ற
நிலைமை இருக்குமானால் அது சரிதானா என்று கேட்க விரும்பு
கிறேன்.

தீயணைப்புப் படையிலே இன்னொரு பெரிய அதிகாரி இருக்கி
றார். அவர் பெயர் டி. கிருஷ்ணன். அவர் டைரக்டர் ஆப்
ஃபையர் சர்வீசஸ். புரோமோஷன் உத்தரவு போடுவதற்கு அவ
ருக்கு அதிகாரம் கிடையாது. ஹோம் செகரட்டரி தான்
புரோமோஷன் உத்தரவு போட வேண்டுமென்று சொல்லப்படு
றது. ஆனால் இவரே புரோமோஷன் உத்தரவு போடுகிறார்.
போடுகிறபோது என்ன சொல்கிறார் என்றால் உங்களுக்கு அது
பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஆர்டர் எண். ஆர். சி.
36926/82, நாள் 6-1-83-ல் புரோமோடட்அஸ் அசிஸ்டென்ட்
டிவிஷனல் ஃபயர் ஆபீசர், யார், கணபதி ; எதற்காக? அசிஸ்
டெண்ட் டிவிஷனல் ஃபயர் ஆபீசராக புரோமோஷன் தரப்
படுகிறது. இப்படி புரோமோஷன் உத்தரவைப் போட அந்த
அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது. ஹோம் செக்கரட்டரி
தான் போடவேண்டும். ஆனால் இவர் உத்தரவு போடுகிறார்.
ஏற்கெனவே ஏழு பேர்கள் சீனியர்கள் இருக்கிறார்கள். அந்த





ஏழுபேர்கள் சீனியரை விட்டுவிட்டு இவரைக் கொண்டு போய்
புரோமோஷனில் போடுகிறார்கள். அதிகாரமே இல்லையே?
இதெல்லாம் சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.
(மணியடிக்கப் பெற்றது)

திரு. கோ விஸ்வநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, நிதி ஒதுக்க மசோதா மீது என்னுடைய சில கருத்து
களைச் சொல்ல விரும்புகிறேன். கிட்டத்தட்ட 100 ஆண்டுகள்
கனவாய் இருந்த ஒன்று, இப்போது நனவாகியிருப்பதைக் கண்டு
நாமெல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். அன்றைக்கு சென்னை
மாகாணத்திலே தலைமைப் பொறியாளராகயிருந்த கர்னல் எலி
அவர்கள் கிருஷ்ணா நதி நீரை தமிழகத் தலைநகருக்குக் கொண்டு
வரவேண்டுமென்ற திட்டத்தை துவக்கிய காலத்திலேயிருந்து,
102 ஆண்டுகள் கழித்து இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவர் நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழ்
நாட்டின் வரலாற்றிலே மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர்
பொன்னெழுத்துகளில் பொறிக்கப்படும். அதே நேரத்தில்
தமிழக மக்களின் சார்பாக ஆந்திராவின் முதலமைச்சர் மாண்பு
மிகு ராம ராவ் அவர்களுக்கும், இரண்டு அராசங்கங்களுக்கும்
நாம் நிச்சயமாக வாழ்த்துக்களை தெரிவித்தாக வேண்டும். இந்
தத் திட்டம் 400 கிலோ மீட்டர் கால்வாய் மூலமாக வந்து,
மூன்று ஆண்டிலேயிருந்து, ஆறு ஆண்டுகளுக்குள் முடிக்கப்
படும் என்று சொல்லப்படுகிறது. இதிலே 720 கோடி ரூபாய்
செலவாகுமென்றும், அதிலே ஆந்திரம் 500 கோடியும், தமிழகம்
220 கோடியும் செலவழிக்க வேண்டுமென்றும், ஒப்பந்தத்திலே
முடிவாகியிருக்கிறது. இவ்வளவு பெரிய தொகையை நிச்சய
மாக நம்முடைய மாநிலமோ அல்லது ஆந்திர மாநிலமோ செல
விட முடியாது. இதற்கு உடனடியாக மத்திய அரசு உதவிட
முன் வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கி
றேன். உலக வங்கியிடமிருந்து தேவையான கடனை வாங்க
மத்திய அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்
டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே குடிப்பதற்கு மட்டுமல்ல
விவசாயத்திற்கும், மின் உற்பத்திக்கும் கூட தண்ணீர் தேவைப்
படுகிறது. நாட்டினுடைய பல ஜீவநதிகளின் தண்ணீர் வீணாக
கடலிலே போய் சேர்கிறது. சில நேரங்களில் பெரிய வெள்ளம்
ஏற்பட்டு சேதம் ஏற்படுகிறது. வெள்ளம் ஒரு பக்கம், வறட்
ஒரு பக்கம் என்று இதுவே ஒவ்வொரு ஆண்டும் நாட்டிலே
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசு இப்
போதாவது தன்னுடைய நீண்ட உறக்கத்திலிருந்து எழுந்து, இந்த
நதிகளை இணைக்கிற திட்டத்திற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும்.
சர் சி. பி. இராமசாமி அவர்கள் காலத்திலேயிருந்து இன்றுவரை
ஒவ்வொருவரும் பேசிவிட்டுக் போகிறார்கள். கங்கை-காவேரி
இணைப்பைப்பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதிலே
முதல் கட்டமாக கோதாவரி-காவேரி இணைப்பையாவது இப்
போது மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மிகப்பெரிய ஒரு ஒப்பந்தத்திலே கையெழுத்

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 ஏப்ரல் 21

திட்ட நம்முடைய முதல்வர் அவர்களும், மாண்புமிகு ஆந்திரா முதலவர் அவர்களும் இதை வலியுறுத்தி பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய-மாநில உறவிலே, அதிலும் குறிப்பாக நிதி யாதாரத்தை பொறுத்தவரையில் பெரும் மாற்றங்கள் தேவை. அரசியல் சட்டத்தை திருத்த மாட்டோமென்று அடம் பிடிப் பதில் அர்த்தம் இல்லை. இதுவரையிலும் 45 முறைகள் அரசியல் சட்டத்தை திருத்தியிருக்கிறோம். அதிலே இன்னும் சில மாற்றங்களை செய்வதாலே தவறு இருக்காது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு மட்டும் மத்திய அர சாங்கம் 2,600 கோடி ரூபாய் வரி கோட்டிருக்கிறார்கள். இதிலே மாநிலங்களுக்கு உரிய பங்கு கொடுக்கப்படவில்லை. அதுமட்டு மல்லாமல் எண்ணெய், நிலக்கரி, ரெயில்வே கட்டணங்களை உயர்த்தியதாலே மாநிலங்களுக்கு வருமானம் வருவது போக அதிக செலவும் ஏற்படுகிறது. அதைத்தான் பெங்களூரில் அண் மையில் கூடிய முதலமைச்சர்கள் மாநாட்டில் தீர்மான வடிவிலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதி லும் குறிப்பாக வருமான வரிக்கு போடப்படுகிற சர்சார்ஜ் வரு மான வரியோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. எக்சைஸ் வரியில் மாநிலங்களுடைய பங்கு 40 சதவீதத்திலிருந்து 50 சத வீதமாக உயர்த்த வேண்டும். கார்ப்பரேஷன் டாக்ஸில் மாநி லங்களுக்கு பங்கு கொடுக்க வேண்டும். அது 80 சதவீதமாக இருக்க வேண்டும் என்பதையெல்லாம் மத்திய அரசு நிச் மாக ஏற்றுக்கொள்ளுமென்று எதிர்பார்க்கிறேன். ஏற்று கொள்ளவேண்டும். முக்கியமான மற்றொன்று. வறட்சி நிவா ரணப் பணிகளுக்கு மத்திய அரசினுடைய உதவி இது வரை யில் கொடுக்கப்பட்டிருக்கிற தொகையை முதலில் கொடுத் விட்டு பிறகு திட்டச் செலவிலே கழித்துக் கொள்கிறார்கள். அதைச் செய்யக் கூடாது. திட்டச் செலவிலே அதைக் கழித்துக் கொள்ளக் கூடாது. அதைக் கொடுத்துதவவும், 75 சதவீதம் மானியமாகவும், 25 சதவீதம் கடனாகவும் அது இருக்க வேண்டுமென்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக் சொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், இன்றைக்கு மிகப் பெரிய வறட்சி ; குடி தண்ணீர் இல்லை. விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லை. அந்தக் கிணறுகளையும், அந்த விவசாயக் கிணறுகளையும் ஆழப்படுத்த வேண்டும். ஏரிகளைத் தூர் எடுக்கவேண்டும் ; தேவையான குடிநீர் வசதிகளைச் செய்து தரவேண்டும். இவ்வளவுக்கும் ரூ. 222 கோடி வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். அவர்கள் இப்பொழுது வெறும் ரூ. 63 கோடிதான் சொடுப்பார்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். கேட்டதிலே பாதியைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் போல், பாதித் தொகையாவது, உடனடியாகத் தமிழ கத்திற்கு அவர்கள் சொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் சொள்கிறேன்.



1983 ஏப்ரல் 21] [திரு. கோ. விஸ்வநாதன்]

எண்ணெய் உற்பத்தி செய்கின்ற நாடுகள் OPEC c6untries எண்ணெய் விலையைக் குறைத்திருக்கின்றன. அதனாலே, இந்த ஆண்டும் மட்டும் இந்திய சர்க்காருக்கு ரூ. 1,000 கோடி மிச்சப்பட்டிருக்கிறது. அவர்கள் பெற்றிருக்கிற அந்த இலா பத்தில் ஒரு பகுதியையாவது மாநிலங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். இதுவரையில் அளித்திருப்பதாகத் தெரியவில்லை. எண்ணெய் விலையையும் குறைக்கவில்லை. உலகெங்கும் எண்ணெய் விலை குறைந்திருக்கிறது. ஒரே ஒரு நாட்டிலே மட்டும்தான் விலை உயர்ந்திருகிறது என்று சொன்னால், அது இந்தியா நாடுதான். ஒன்று, அவர்கள் எண்ணெய் விலை யைக் குறைக்கவேண்டும். இல்லையானால், எண்ணெய் விலையைக் குறைப்பதற்குப் பதிலாக, நாப்தாவின் விலையைக் குறைத்து, உரங்களின் விலையைக் குறைப்பார்களேயானால், அதுதான் மக்களுக்குச் செய்கின்ற சேவையாக அமையும்.

நமக்கு இருக்கின்ற—ஒரே ஒரு காமதேனுவாக இருப்பது விற்பனை வரியாகும். ரூ. 300, ரூ. 500 கோடிக்கு இப் பொழுது ஆண்டு ஒன்றுக்கு வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இந்த விற்பனை வரி விகிதத்தை அதிகரிக்காமல், வருமானத் தைப் பெருக்குவதற்கு வழி இருக்கிறதா என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மூன்று முறை இந்த மன்றத்தில் நான் பஸ், லாரி சேசிஸ் விலையைப் பற்றிப் பேசியிருக்கிறேன். ஆவன செய்வ தாக அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நேற்று ஒரு நண்பரைச் சந்தித்தேன். ஜெனரேட்டரை உற்பத்தி செய்து, விற்பனை செய்கின்ற அவர், இதுவரையில், சேல்ஸ் டாக்சே கட்டியதில்லையென்று என்னிடத்திலே சொன்னார். இது எப்படி முடியும் என்று கேட்டேன் ? இங்கே சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக இருக்கிறது. சென்ரல் சேல்ஸ் டாக்ஸ் 4 சதவீதம் தான். இங்கே 12 சதவீதம் ஆக இருக்கிறது. எனவே, நாங்கள் ஜெனரேட்டர் விற்பனை என்று போடாமல், 'கிட் விற்பனை' என்று—உபரிகளாக, 5, 6 பில்களாகப் போட்டு, அதிலேயே முடித்து விடுகிறோம். யாரும் தமிழகத்தில் ஜெனரேட்டர் விற்பனை செய்பவர்கள், இந்த வரியைக் கட்டுவதில்லையென்று குறிப்பிட்டார்கள். அப்படி பில் என்று யாராவது கேட்டால், அவர்களுக்கு சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 4 சதவீதம் போட்டுக் கொடுத்து விடுகிறோம் என்று சொன்னார்கள். அதைப் போல், பல பொருள்களுக்கு இன்று தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய வியா பாரம் அளவுக்கு நமக்கு வருமானம் கிடைக்கவில்லை. அல்லது பக்கத்து மாநிலங்களுக்கு அது போகிறது. அதைப் பற்றி நிச்சயமாக நாம் ஆராய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 ஏப்ரல் 21

20 ஆண்டுகளுக்கு முன்னாலே, மேகநாதன் கமிட்டி அமைத்தார்கள். அதற்குப் பிறகு, அவர் தந்த அறிக்கைக்குப் பிறகு தீவிரமாக யாரும் அந்த முயற்சியிலே ஈடுபட்டு, இருக்கிற வரி விதிப்பைப் பற்றிய ஆராய்ச்சியோ, ஆய்வோ செய்யவில்லை. ஆகவே, இன்றைக்குள்ள வரிப்பிரச்சினையை ஆழ்ந்து பரிசீலனை செய்யவும், வரி ஏய்ப்பைக் கண்டு பிடிக்கவும், வரி வருவாயைப் பெருக்கவும், அதேபோல, வரியை எளிமைப்படுத்தவும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, சரியான யோசனை சொல்லவும் ஒரு 'ரேஷனலைசேஷன் ஆப் சேல்ஸ் டாக்ஸ் கமிட்டி' அமைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நமது நாட்டில் 100-க்கு 50 பேர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் பேர்கள் வேலையற்றவர்கள் பட்டியலில் சேர்வதாக நமக்குப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகவே, வறுமையை ஒழிப்பதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இருக்கிற ஒரே வழி, நாட்டைத் தொழில் மயமாக்குவதுதான். அதுவும் குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த மட்டில் என்ன விலை கொடுத்தாவது தமிழகத்தைத் தொழில் மயம் ஆக்க வேண்டும். நான் தொழில் மானியக் கோரிக்கையின்பொழுது பேசும்பொழுது குறிப்பிட்டேன். இன்றைய தினம் நாம் அரசாங்கத்திற்குக் கொடுக்கின்ற 2,490 கோடி ரூபாயில், ரூ. 22 கோடி, அதாவது, ஏறத்தாழ 1 சதவீதம் தான் தொழில் வளர்ச்சிக்கென்று நாம் கொடுத்திருக்கின்றோம். அது போதாது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் அதிபர்களை வரவழைத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் பேசி, நம்முடைய பகுதியிலே என்ன, என்ன தொழில்களைத் துவங்க முடியுமோ, அவைகளைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது செய்கின்ற ஏற்பாட்டில் அவர்களுக்கு ஏதாவது குறை இருக்குமானால், இன்னும் அதிகத் தேவைகள் இருக்கின்றன என்று சொல்வார்களானால், அதையும் அவர்களுக்குச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீனாவிலே, The great leap forward

என்ற நேரத்தில், ஒவ்வொரு வீட்டையும் ஒவ்வொரு தொழிற்சாலையாக மாற்றினார்கள். இன்றைக்குப் பஞ்சாபிலும் கூட அதைப் போல இருக்கிறது. அதைப் போல தமிழகத்தையும் மாற்றியமைத்தாக வேண்டும், இவ்வளவையும் செய்ய வேண்டு



1983 ஏப்ரல் 21] [திரு. கோ, விஸ்வநாதன்]

மென்றால், மின்சாரம் இல்லாமல் தொழில் வளர்ச்சி இருக்க முடியாது. ஆகவே, இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில், உடனடியாக நமக்குத் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாது என்ற காரணத்தால், ஜெனரேட்டர் வாங்குவதற்குத் தாராளமாக நிதி உதவி அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இப்பொழுதே டி.ஐ.ஐ.சி. நிறுவனம் நிறையக் கடன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்காளம், மராட்டியம் ஆகிய இடங்களிலே ஜெனரேட்டர் வாங்குவதற்கு மானியம் கொடுப்பதாகக்கூட நான் அறிகிறேன். அதைப் போல தமிழ்நாட்டிலேயும் அந்த முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களில் சிறு அனல் மின் நிறுவனங்களை அமைத்தால்தான் மின்சாரப் பற்றாக்குறைக்கு முடிவு காண முடியும். ஏற்கனவே பல லெட்டர் ஆப் இன்டென்ட் அரசாங்கத்திலிருந்து எழுதிக்கொடுத்தும் வழங்காமல் இருப்பதாக அமைச்சரவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சரவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு இப்பொழுது வழங்கா விட்டாலும், ஏற்கனவே கொடுத்திருக்கின்ற லெட்டர் ஆப் இன்டென்டில் வைத்திருக்கின்ற அந்த தொழில்களை உடனடியாகத் தொடங்கியாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறை சம்பந்தமாக ஆலோசனை சொல்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது மிகப் பெரிய குழுவாக இருக்கிறது. முடிந்தால் சிறு குழுவாக அமைத்து அடிக்கடி சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவாக, தொழில் துறைக்கு மட்டுமல்லாமல், எல்லா இலாக்காக்களுக்குமே கன்சல்டேட்டிவ் கமிட்டி என்று பாராளுமன்றத்தில் இருப்பதைப் போல இங்கேயும் அமைக்க வேண்டுமென்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிக்கடி பிரதம அமைச்சரவர்கள் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசுக்கும் மாநிலங்களின் முதல்வர்களுக்கும் இடையில் மோதுதல் வரக்கூடாது என்பது நாம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கருத்துதான். ஆனால், ஒருமைப்பாட்டை வளர்க்கின்ற அளவிற்கு மத்திய அரசாங்கத்தின் செயல்கள் இருக்கின்றனவா என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். வறட்சி ஏற்படுகின்றது, வெள்ளம் வருகிறது, பற்றாக்குறை ஏற்படுகின்றது, பஞ்சம் வருகின்றது என்றால் இந்த நேரங்களிலேயெல்லாம் தேவையான உதவியை மத்திய

அரசாங்கம் செய்யாமல் போய்விட்டால் நிச்சயமாகத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஏற்றதாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் மைய அரசு சென்னைக்கு இரயில் மூலம் கிருஷ்ணா நீரைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்திருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதில் மத்திய அரசு இப்படி தண்ணீர் அனுப்பப்போகிறோம் என்ற தகவலைக்கூட தெரிவிக்காமல் இருந்தது சரியா என்ற வினாவை நான் எழுப்ப விரும்புகிறேன். அதுகூடப் பரவாயில்லை. அவர்கள் ஒரு விழாவை நடத்தினார்கள். அதில் மத்திய அரசாங்கத்தில் இருக்கின்ற மூத்த அமைச்சர் மதிப்பிற்குரிய முதிர்ந்த அனுபவம் பெற்ற ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கலந்து கொண் டார்கள். பத்திரிகைச் செய்தியாகக் கூட பல பத்திரிகைகளில் நான் பார்த்தேன். தமிழக அரசு அந்த விழாவைப் புறக் கணித்தது என்று. ஆனால் உண்மை அதுதானா ? நான்கூட அந்த இன்விடேஷனிலே பார்த்தேன். இரண்டு பேர்கள்தான் அதில் இருந்தன, மத்திய அமைச்சர்கள் ஆர். வெங்கட்ராமன், கனிகான் சவுத்திரி ஆகிய பெயர்களைத் தவிர வேறு யாருடைய பெயரும் அதிலே கிடையாது. தமிழக அமைச்சர்கள் யாரை யும் அழைக்கவில்லை. ஒரு மணிக்கு விழா நடக்கிறது என்றால், பத்து பத்தரை மணிக்குத்தான் விழாவிற் கான அழைப்பிதழே முதலமைச்சரவர்களுக்கும் மற்ற வர்களுக்கும் வருவதைப் பார்த்தேன். இது எப்படி ஒருமைப் பாட்டிற்கு ஏற்றதாக இருக்கமுடியும் ? மைய மாநில அரசு களின் உறவுகளைச் சீர்படுத்துவதாக இருக்கும் ? அதிலும் முதிர்ந்த அனுபவம்பெற்ற ஆர். வெங்கட்டராமன் அவர்கள் கலந்துகொண்டது எனக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது. இப்படி மைய மாநில உறவுகளைக் கெடுக்கின்ற முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், அரசு விழாக்கள் நடக்கின்றபொழுது அந்தத் தொகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்று ஒரு கன்வென்ஷன் இருக்கிறது. அந்தப் பிரச்னை சட்டமன்றத்தில் பலமுறை எழுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் ஏன் இங்கே உள்ளசட்டமன்ற உறுப்பினர்களை அழைக்கவில்லை என்றெல் லாம் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தொகுதியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்றத்தில் துணை சபாநாயகராக இருக்கின்ற இலட்சுமணன் அவர்களின் பெயர் கிடையாது; அவரும் அழைக்கப்படவில்லை. அதைப்போல சட்டமன்ற உறுப்பினரையும் அழைக்கவில்லை. ஆனால் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான்





அறிகிறேன். ஆனால் இதே நிலைமை தமிழக அரசால் ஏற் பட்டிருக்குமேயானால், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எத்தனை கண்டனக் கணைகளைத் தொடுத்திருப்பார்கள்? ஆனால் இதில் கண்டனக் கணைகளைத் தொடுக்கவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், அழைக்காமலே போய் அந்த விழாவிலே கலந்து கொண்டும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட செயலைத் தமிழக அரசு செய் தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நமக்கிருக்கின்ற இந்த நெருக்கடி யில், அரிசிப் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறை, தண்ணீர் இல்லாத நிலைமை ஆகிய நிலைமைகளில் நாம் அனைவரும் சேர்ந்து மத்திய அரசோடு பேசி, போராடிப் பெறவேண்டியவை களைப் பெற்றாக வேண்டும். ஆனால், பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட சில பேச்சுகளைப் பார்த்தால், சில காங்கிரஸ் உறுப்பினர்களும், பல திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் களும் பேசியிருக்கிறார்கள், அவ்வளவு பேரும் ஏதோ மாநில அரசுக்கு எதிராகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு, தமிழகத் திற்கு எதிராகவோ, தமிழக மக்களுக்கு எதிராகவோ பேசியிருக் கிறார்கள். இது மாநில அரசின் வளர்ச்சிக்கு எதிரானது மட்டு மல்லாமல், தமிழக மக்களுக்குச் செய்கின்ற துரோகமாகவே முடியும். இப்படிப்பட்ட பேச்சுக்களைப் பேசி முடிப்பதைவிட பேசாமலே இருப்பது நல்லது. இன்றைக்குத் தமிழகத்திலே மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங் களும் தங்களுடைய தேவையைப் பெறுவதற்காக அரசியல் சட்டத்தில் மாற்றம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு முன்வந்து, இன்றைக்கு சர்க்காரியா கமிஷனை நியமித்திருக்கிறது. அதிலே மாற்றங்கள் செய்து தேவையான அரசியல் சட்டங்களைத் திருத்தி, இன்றைக்கு இருக்கின்ற நிதி யாதாரங்கள் போதாது என்பதை உணர்ந்து, மாநிலங்களுக்கு இன்னும் அதிக நிதியாதாரங்களைத் தரக்கூடிய, அதற்கு வேண் டிய சட்டங்களுக்கு அதிகாரங்களை வழங்க மத்திய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை உங்கள் முன்னே படைக்க விரும்புகிறேன்.

வரலாறு காணாத வறட்சியும், குடிநீர்ப் பஞ்சமும், தமிழகத் திலே எங்கு பார்த்தாலும் நிரம்பி வழிகின்ற இந்த நேரத்தில் நம்முடைய சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று சொன்னால், யாராலே நமக்கு எந்த உதவிக் கிடைத்தாலும் அதைப் பெற்று

தமிழக மக்களுடைய அந்த இல்லாமையையும், இயலாமையையும் போக்க வேண்டிய காலக் கட்டத்தில் இருக்கின்றோம். அப்படி நிலைமை இருக்கும்பொழுது, இன்றைக்கு பல பிரச்சினைகள் நம்முடைய கவனத்தை, மக்களுடைய கவனத்தை திசை திருப்புகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

உதாரணத்திற்கு இந்த அவையிலே கூட சொல்ல வேண்டும் என்றால், முதல்வர் பெரியவரா, நீதிபதி பெரியவரா, எதிர்க் கட்சித் தலைவருக்கு நிலம் இருக்கிறதா, தஸ்தாவேஜு இருக்கிறதா. இல்லையா என்பதிலெல்லால் நம்முடைய நேரத்தை அதிக அளவுக்கு செலவிட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

தண்ணீர் விநியோகம் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தத் தண்ணீர் விநியோகம் எப்படி இருக்கிறது என்று சொன்னால் ஆளுங்கட்சிக்காரர் இடத்திலே அந்தப் பொறுப்பு விடப்பட்டிருக்கிறது. அது நியாயமான முறையிலே, நேர்மையான முறையிலே கொடுக்கப்படுகிறதா என்று சொன்னால், நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது போல, பல கண்காணிப்புக் குழுக்களை அமைத்தாலும் கூட, அது சீர்படுமா என்பது ஐயப்பாட்டிற்கு உரியதாக இருக்கிறது. இன்னும் கூட சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக மத்திய அரசாங்கத்தை எங்களுக்குத் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்கவில்லை என்றாலும் கூட, அன்னை இந்திரா காந்தி அவர்கள், தமிழக மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள் என்று அவர்கள் இரயில்கள் மூலமாக நமக்கு தண்ணீர் கொடுத்தார்கள். அதைப்பற்றி விமர்சனம் செய்யும்போது அருமை சகோதரர் திரு. விஸ்வநாதன் இந்த மாமன்றத்திலே அழகாகக் குறிப்பிட்டார்கள். அவர்களை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் வெளி மேடைகளிலே என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கிறபோது, ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற அந்த அங்கத்தினர்கள், மிகவும் கேவலமாகவும், கீழ்த்தரமாகவும் விமர்சனம் செய்கின்ற அந்த நிலையைப் பார்க்கின்றபோது, "தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்துப் பார்ப்பது போல", மேலும் மேலும் உதவி பெறுவதற்குரிய சூழ்நிலையில், நாம் அந்த உதவிகளை எங்கே இழக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் இன்றைக்கு ஏற்படுகிறது. தமிழக மக்களுக்குப் பிரச்சினைகள் என்று சொன்னால், அது ஆளுங்கட்சிக்கு மட்டும் சொந்தமானது என்பது அல்ல. அது இந்த நாட்டிலே உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவானதான இழப்பாகும். அந்த சூழ்நிலையில் நமக்கு உதவி செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும்



அவர்களை பாராட்டவில்லை என்றாலும் கூட, அவர்களை கேவலமாகப் பேசுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக வறட்சி. தமிழகம் முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே 4 பிர்க்காக்கள். அதில் 3 பிர்க்காக்களை வறட்சியான பிர்க்காக்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். குன்றத்தூர் பிர்க்காவை வறட்சிப் பகுதியாக அறிவிக்கவில்லை. தமிழகம் முழுவதும் வறட்சியாக இருக்கின்றபோது, அந்த ஒரு பகுதியை மட்டும் ஏன் வறட்சியாக அறிவிக்கவில்லை எனபதை மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், சென்னை நகரத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற காரணத்தால், சென்னை நகர மக்களுக்கு என்னென்ன வரிகள் விதிக்கப்படுகிறதோ அந்த வரிகளை இங்கே விதிக்கிறார்கள். கடுமையான மின்சார வெட்டிற்கும் அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதை மின்சார வாரியத் தலைவரிடமும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆகவே சென்னை நகரத்து மக்களுக்கு எந்த அளவுக்கு சலுகைகள் கொடுக்கப்படுகிறதோ, அதே அளவிற்கு வரி வசூலை செய்கின்ற இந்த அரசாங்கம், சென்னை நகர மக்களுக்கு கொடுக்கின்ற அதே சலுகைகளை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை, அதே நேரத்திலே மிகத் துரிதமான வேலைகள், எங்கு பார்த்தாலும், வறட்சிப் பணிகளைக் குறித்து, கூட்டங்களைப் போட்டு, ஆய்வுகளைச் செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்திலே, தமிழகத்திலே வறட்சி இருந்தாலும், இல்லையென்றாலும், என்னுடைய தொகுதியான ஸ்ரீபெரும்புதூர் பகுதியைப் பொறுத்தவரையில், கடுமையான கோடைக்காலம் என்று பார்க்கின்றபோது, அது என்றைக்குமே ஒரு வறட்சியான பகுதிதான்.

(முற்பகல் 11–30)

இன்றைக்குக்கூடச் சொல்கிறேன். சுங்குவார்ச் சத்திரம் வழியாக பஸ்கள் எல்லாம் போகின்றபோது அங்கேதான் நின்று விட்டு போகின்றன. அந்த சுங்குவார்ச் சத்திரத்திலே ஒரு குடம் தண்ணீர் 30 காசுக்கு என்று ஒரு தனிப்பட்ட நபர் வண்டியிலே வைத்து விற்கின்ற நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. நீங்கள் இன்றைக்கும் சென்று பார்க்கலாம். ஒரு குடம் தண்ணீர் 30 காசுக்கு என்று விற்கின்றபோது கிராமத்து மக்கள் அதை வாங்குகின்ற நிலைமை வருமானால் அவர்களுடைய வருமானம் என்ன என்பதை பற்றியும் நாம் யோசித்துப் பார்க்க வேண்

[திருமதி டி. யசோதா] [1983 ஏப்ரல் 2

அதேபோன்று இப்போது வறட்சி வேலைகளை ஆரம்பித்து
இருக்கிறோம். போன வருடம் என்னுடைய தொகுதியிலே
வறட்சி வேலையைச் செய்தார்கள். போன வருடம் செய்ததற்கு
இந்த வருடம் வரையில் பில் பட்டுவாடா கிடையாது. போன
வருடம் செய்த வேலைக்கு இந்த வருடம் வரையில் பில் பட்டு
வாடா இல்லை என்றால், இந்த வருடம் செய்கின்ற வேலைக்கு
எந்த வருடம் பில் பட்டுவாடா என்பதை நீங்கள் யோசித்துப்
பார்க்கவேண்டும். இன்னும்கூடச் சொல்வேன். நம்முடைய
மாண்புமிகு தொழில்துறை அமைச்சருக்கு நான் என்னுடைய
நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம்
என்ன வென்றால், பல சட்டமன்றத் தொடர்க் கூட்டங்களிலே
நான் சொல்லியிருக்கிறேன். என்னுடைய தொகுதி ஸ்ரீபெரும்
புதூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. வறட்சி எந்த நேரத்
திலேயும் இருக்கக்கூடிய தொகுதி. அங்கே தொழிற் சாலைகள்
கிடையாது. அங்கே தொழிற்சாலைகளை நான் நிறுவ வேண்டும்
என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மையிலேயே அவர்
கள் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். 45 கோடி
ரூபாய்ச் செலவிலே மோட்டார் உதிரி பாகங்களைத் தயாரிக்கின்ற
ஒரு மிகப் பெரிய தொழிற்சாலயை அங்கே தோற்றுவிக்க இருக்
கிறார்கள் என்று சொல்லும்போது, என் தொகுதி மக்களின்
சார்பாக அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று குன்றத்தூர் பகுதி அதிகமான நெசவாளி
களைக் கொண்ட பகுதி. அங்கே அநேகமாக சங்கு மார்க்
லுங்கி என்று சொல்கிறார்களே, அந்த தேர்ந்த லுங்கிகளை
தயாரிக்கின்ற இந்தக் குன்றத்தூர் பகுதியை நீங்கள் ஒரு தொழிற்
பேட்டையாக ஆக்கித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

இன்னும்கூடச் சொல்வேன். நம்முடைய மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இங்கேயில்லை. நான் ஏற்
கனவே பலச் சந்தர்ப்பங்களிலே எல்லாம் பேசியிருக்கிறேன்.
ஸ்ரீபெரும்புதூர் தொகுதி ஒரு தாலுக்காவினுடைய தலைநகரம்.
ஒரு தாலூகாவினுடைய தலைநகரமாக இருப்பதால் அங்கே
தான் எல்லா அலுவலகங்களும் இருக்கின்றன. பெயர்கூட
பாராளுமன்ற தொகுதிக்கு ஸ்ரீபெரும்புதூர் தொகுதி. சட்ட
மன்றத் தொகுதிக்கும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி என்று பெயர்.
ஆனால் அந்த ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் பஸ்கள்கூட நிற்
பது கிடையாது. வருகின்ற பஸ்கள் எல்லாம் அங்கே நிற்காமல்
போகின்றன. நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் கூட
அங்கே ஒரு கருவூலத்தைத் திறப்பதற்காக வருகை தந்தபோது
அவரை வைத்துக்கொண்டு அந்த இடத்திலேயே நான் சொன்
னேன். இங்கே இருக்கின்ற மக்கள் பாவப்பட்ட மக்கள், இங்கே
இருக்கின்ற மக்களுக்கு அந்த வழியாகப் போகின்ற வருகின்ற



1983 ஏப்ரல் 21] [திருமதி டி. யசோதா]

பஸ்களைப் பார்ப்பதற்குத்தான் அவர்களுக்கு அனுமதி உண்டே
தவிர, அந்த பஸ்களிலே ஏறி பயணம் செய்து அங்கே இறங்கு
வதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை என்று சொன்னேன். பல
சூழ்நிலைகளிலே எல்லாம் நான் போக்குவரத்துத்துறை அமைச்
சர் அவர்களிடம் கடிதம் மூலமாக தெரிவித்து இருக்கிறேன்.
சென்னையிலேயிருந்து ஸ்ரீபெரும்புதூருக்கு ஒரு பஸ் விட்டால்
என்ன குடிமுழுகியா போய்விடும். அல்லது அது உங்களுக்குச்
சிரமமாக இருந்தால் சென்னையிலேயிருந்து பூவிருந்தவல்லிக்கு
ஒரு பஸ்ஸும், பூவிருந்தவல்லியிலேயிருந்து ஸ்ரீபெரும்புதூருக்கு
ஒரு பஸ்ஸும் விட்டால் என்ன குறைந்தா போய்விடும்? உதா
ரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், எங்களுடைய பழைய
சேர்மன் காதர் என்பவர், சென்னையிலே இருந்து காஞ்சீபுரம்
வருகின்ற கடைசி பஸ்ஸிலே ஏறியிருக்கிறார், காலியாக இருந்த
போது ஏறியிருக்கின்றார். அதற்குப் பிறகு கூட்டம் நிரம்பிய
உடனே அவரை இறங்கச் சொல்லியிருக்கிறார்கள். காஞ்சிபுரம்
போகிறவர்கள் மட்டும் ஏறுங்கள், ஸ்ரீபெரும்புதூர் போகிறவர்கள்
எல்லாம் இறங்குங்கள் என்று சொல்லி, இரவு 10 மணிக்கு
அவரை இறக்கியிருக்கிறார்கள். வேறு வழியில்லாத அவர்,
அந்தத் தள்ளாத வயதிலும், புட் போர்டிலே நின்றுகொண்டு
ஸ்ரீபெரும்புதூருக்குப் போய் இறங்கியிருக்கிறார்கள், அந்த பை-
பாஸ் வழியிலே. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால்
ஒரு தாலுக்காவின் தலைநகராக இருக்கின்ற அந்த இடத்திற்கு
இன்றைய தினம் வரையிலும் பஸ் போக்குவரத்து இல்லை
என்பதை நான் மிக வேதனையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படு
கிறேன்.

அதேபோல் ஸ்ரீபெரும்பதூர் தனித் தொகுதி. அந்தத் தனித்
தொகுதியிலே இருக்கின்ற அரிசனங்கள் என்ன பாவம் செய்தார்
கள் என்று தெரியவில்லை. நான் இந்த சட்டமன்றத்திலே
என்னுடைய முதல் பேச்சைத் துவக்கியதிலேயிருந்து இன்றைய
தினம் வரையிலும் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன்.
மனப்பாக்கம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. இந்த கிராமத்தில்
அரிசனக் காலனி இருக்கிறது. இந்தக் காலனி நம்முடைய முதல்
அமைச்சர் அவர்களுடைய வீட்டுக்கு எதிரே இருக்கின்ற காலனி.
அந்தக் காலனியிலே கடந்த 20 ஆண்டுக் காலமாக வசித்து
வருகின்ற அந்த மக்களுக்கு இதுவரையில் பட்டா கொடுக்கப்
படவில்லை. பட்டா கொடுத்தால்தானே அவர்கள் வீடுகள்
கட்டமுடியும். பட்டா கொடுத்தால்தானே அவர்கள் அதை
வைத்து கடன் வாங்க முடியும். பட்டா கொடுத்தால்தானே
அதை வைத்து அவர்கள் மேற்கொண்டு வேறு காரியங்களைச்
செய்யமுடியும். இதுவரையிலும் அவர்களுக்கு பட்டா கொடுக்க
வில்லை என்பதை நான் மிக வேதனையோடு சொல்லிக்கொள்
கிறேன். அதேபோல் அங்கே கோயில் நிலங்கள் என்னுடைய
தொகுதியிலே ஏராளமாக இருக்கின்றன. நிறைய கோவில்கள்
இருக்கின்றன. அவைகள் அத்தனையும் அரசுக்குச் சொந்த
மானவைகளாக இருக்கின்றன. இந்த நிலங்களை எல்லாம் பணக்

காரர்கள்தான் 11 ஏக்கர், 20 ஏக்கர், 15 ஏக்கர் என்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம வசதியற்றவர்கள் அல்ல. மிகவும் வசதியானவர்கள். இந்த நிலங்களை எல்லாம் ஆய்வு செய்து அங்கே இருக்கின்ற ஏழை அரிசனங்களுக்கு கொடுக்கக்கூடிய வாய்ப்பை நீங்கள் தோற்றுவித்துத்தர வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே பக்தவத்சலம் காலனி என்ற ஒரு காலனி ஸ்ரீபெரும்பதூர் தொகுதியிலே இருக்கிறது. அந்தக் காலனிக்கு நடந்து செல்வதற்கு வண்டிப் பாதை என்று சொல்லுகின்ற அந்த வழி இருக்கிறது. அதை ஒரு தனிப்பட்டவர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அதைத் தடுத்துவிட்டார்.

இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து, கடைசியில் கலெக்டர் அதில் குறுக்கிட்டு, நடவடிக்கை எடுக்கிறபோது, கலெக்டர்மீது அந்த தனிப்பட்ட நபர் வழக்குத் தொடுத்து கடைசியில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும் இன்று வரையில் அந்த அரிசனங்களுக்கு அங்கே வழி செய்யப்பட்டு இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. ஆனால் சொந்தம் இல்லாத ஒருவரிடம் சொந்தமாக இருக்கும் அந்த நிலத்தை அரசாங்கம் விலைக்கு வாங்கி பட்டா செய்து கொடுக்கலாமா என்று இப்போது நினைத்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற சூழ்நிலை இருப்பதால் மிக வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன் — அரிசன மக்களுக்கு என்று நீங்கள் தீட்டும் திட்டங்கள் அனைத்தும் அவர்களுக்கு சரியான முறையில் போய்ச் சேரவில்லை என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுப் பங்கீட்டுக் கழகம் மூலமாக நாம் உணவுப் பொருள்களை விநியோகம் செய்கிறோம். அப்படி உணவுப் பொருள்கள் விநியோகம் செய்கிறபோது, எனது தொகுதியைப் பொறுத்த வரையில், பல இடங்களில் உணவுப் பொருள்கள் காணாமல் போய் இருக்கின்றன. ஒரு குடும்பக்கார்டுக்கு 7–8 பேர் உள்ள குடும்பத்திற்கு மாதத்திற்கு 1½ கிலோ அரிசி கொடுத்தால் போதுமானதாக இருக்குமா, அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யுமா என்பதை உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் இன்றைக்குப் பல்வேறு யூனியன்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 40 லட்சம், 45 லட்சம், 50 லட்சம் என்று ஒவ்வொரு யூனியனுக்கும் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. அந்த இரண்டு யூனியன்களில் குன்றத்தூர் யூனியனுக்கு 25 லட்சமும், ஸ்ரீபெரும்புதூர் யூனியனுக்கு 25 லட்சமும்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.





இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்டம் வரும் என்று சொல்லப்பட்டது. அது வருமா, வராதா என்று தெரியவில்லை. இப்படி இந்த தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றுவதில் கூட ஏன் மாற்றான்தாய் மனப்பான்மை காட்டப்படுகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

சென்ற ஆண்டு செய்யப்பட்ட வளர்ச்சி நிவாரண வேலைகளில் சில தவறுகள் நடைபெற்றன, அவைகள் மீண்டும் நிகழாமல் இருக்கவேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு அந்த வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்கிற அதிகாரிகளை விரட்டக்கூடாது. பின்னர் அவர்களுக்கு வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அரிசன மக்கள் திருமணங்கள், செய்து கொள்வதற்கான வசதிகள் எதுவும் இல்லை. 44 திருமணக் கூடங்கள் அங்கே இருந்தபோதிலும் அவர்கள் ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அவை தரப்படுகிறதே தவிர வேறு யாருக்கும் கொடுப்பது இல்லை. ஆகவே அங்கே ஒரு சமூக நலக் கூடம் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே அங்கே ஒரு சமூக நலக்கூடம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு, அது இன்று வரையில் கட்டப்படாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது.

என்னுடைய பகுதியில் இன்னொரு நிலைமை இருக்கிறது. இன்றைக்கு தேர்தலில் போட்டியிட்டு நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினராக வாய்ப்பு இருக்கிறது. இங்கேவந்து பல்வேறு விவரங்களைச் சொல்கிறோம். ஆனால் எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், மக்கள் நலக்குழுவிற்குச் சென்று கூட யாராவது முறைகளைச் சொன்னால் அவர்கள் அங்கே இருக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. அரிசன மக்களைப் பாதுகாப்பதற்கு கொண்டு வரப்பட்ட சட்டம் அது. அந்த தீண்டாமைச் சட்டத்தை வைத்துக் கொண்டு, ஆகாதவர்களையெல்லாம் அங்கே பழிவாங்குகின்ற சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், உங்களுடைய இயக்கத்திலேயே இருக்கும் ஒன்றியச் செயலாளர் அவர்களை அங்கே இருக்கிற ஒருவர் அந்த தீண்டாமைச் சட்டத்தின் கீழே சிக்க வைத்து விட்டார். பாவம் அவரால் தப்பமுடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார். இப்படி சட்டத்தை யார் மீதாவது தவறாகப் போடுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை நீங்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் உங்களுடைய ஒன்றியச் செயலாளரை எந்த தீண்டாமை ஒழிப்பு சட்டத்திலே சிக்க வைத்தாரோ, அதே நபர் என்னுடைய தொகுதியில்

[திருமதி டி. யசோதா] [1983 ஏப்ரல் 21

உள்ள அத்தனை அதிகாரிகளையும் மிரட்டிக்கொண்டு வருகிறார். கேட்டால் எனக்கு அவரைத் தெரியும் இவரைத் தெரியும் என்று சொல்கிற மிகக் கடுமையான நிலை இருக்கிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எங்கள் கழகச் செயலாளர் ஒருவரைக் கைது செய்ததாகச் சொன்னார்கள். இந்த அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிச் சொல்வது அவருக்குக் களங்கம் கற்பிப்பதாகாதா, அப்படிப் பேசலாமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் அந்த ஒன்றியச் செயலாளருக்கு ஆதரவாகத்தான் இதைக் கூறினேனே தவிர அவரைக் கண்டித்து கூறவில்லை. உங்கள் கழகத்தில் இருக்கிறவரையே இப்படி சிக்க வைத்து சிரமப்படுத்துகிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப் பட்டவர் எதையும் செய்யத் தயாராக இருப்பவர், அவரை கண்காணிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சொன்னேனே தவிர குற்றமாகச் சொல்லவில்லை.

குன்றத்தூர் பகுதியில் வெங்கடாபுரம் கிராமத்தில் கை கால் ஊனமுற்ற ஒருவர் இருக்கிறார். அவர் 100 தென்னை மரம் வைத்திருக்கிறார். கனகசபை என்பது அவருடைய பெயர். அவருடைய மரங்களிலிருந்து தேங்காய்களை திருடிவிட்டார்கள். அவர் போலீஸ் ஸ்டேஷனில் அதுபற்றி மனு கொடுத்தார். போலீஸ் ஸ்டேஷனில் யார் செய்தார் என்று கேட்கிறார்கள். இன்னார்தான் இதைச் செய்தார் என்று சொன்னபோது அவர் மீது நடவடிக்கை எடுத்தால் அவர் மறுபடியும் உங்கள் வீட்டுக்கே வந்து உங்களை உதைப்பார், தொல்லை கொடுப்பார், ஆகையால் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது நல்லது என்று சொல்லக் கூடிய போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு நீங்கள் தமிழகத்தை சீர்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற ஒரு மருத்துவ மனையில் கண்சிகிச்சை செய்கிறார்கள். அறுவை சிகிச்சை செய்து, அந்தக் கண்ணில் துணி போடாமல் அதற்குப் பதிலாக பிரௌன் பேப்பரைக் கொடுக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். திருமங்கலத்தில் பேய்குளம் கிராமத்தில் ஆண்டிமூப்பனார் மனைவி மூக்காயி என்பவர் இரண்டுமாத கர்ப்பிணி. நவீன



1983 ஏப்ரல் 21] [திருமதி டி. யசோதா]

கருச்சிதைவு அறுவை சிகிச்சைக்காக குடும்பக்கட்டுப்பாடு முகாமுக்கு அவர் அழைத்துச் செல்லப்படுகிறார். கன்னிக்குடி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கொண்டுபோய், அறுவை சிகிச்சை செய்வதற்காக உபகரணங்களை வைத்து பரிசோதனை செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக புண் ஏற்பட்டிருக்கிறது. புண் ஏற்பட்டதால் 26 ஆம் தேதி திருமங்கலம் மருத்துவ மனையில் சேர்த்திருந்தார்கள். 30-ந் தேதி தலைமை மருத்துவ அதிகாரி பார்த்துவிட்டு 31-ந் தேதி மதுரை தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பி இருக்கிறார்கள். மதுரை மருத்துவ மனையில் அந்த ஆண்டிமூப்பனார் தன் மனைவியை தினந் தோறும் போய் பார்த்து வந்தார். 4-ந் தேதி வரையில் பார்த் திருக்கிறார். அதன் பிறகு 7-ந் தேதி திரும்ப போகும்போது அங்கே அவருடைய மனைவி இல்லை. டிஸ்சார்ஜ் ஆகிவிட்டாரா என்று கேட்ட போது, உங்கள் மனைவி செத்து இரண்டு நாள் ஆகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இறந்துபோன அந்த அம்மையாருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். 4 வயதில் ஒரு குழந்தை, 2 வயதில் ஒரு குழந்தை—இப்படி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். குடும்ப நல அறுவை சிகிச்சை சரியான முறையில் செய்யாத காரணத்தால், இரண்டு மாத கருவைக்கூட நவீன அறுவை சிகிச்சை முறையில் கலைக்க முடியாத காரணத்தால், நவீன முறையில் கருவைச் சிதைக்கும் அறுவை சிகிச்சை செய்யலாம் என்ற ஆலோசனையில் பேரில் சென்றவரை உயிரோடு கொடுக்க முடியவில்லை ; பிணமாகத்தான் கொடுக்க முடிந்தது என்று சொன்னால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது யாராக இருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு இறந்துபோன அந்த பெண்மணியின் குடும்பத்திற்கு தமிழக முதலமைச்சர் தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் ; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இரயில்வே வாகனில் தண்ணீர் வருவதுபற்றி குறிப்பிடும் போது ''தானம் கொடுத்த மாட்டை பல்பிடித்துப் பார்ப்பது போல் இருக்கிறது'' என்று சொன்னார்கள். மத்திய அரசு மாநில அரசுக்கு தண்ணீர் கொடுப்பது தானம் கொடுப்பது போலவா இருக்கிறது ? தமிழக அரசு குடிநீர்-வடிகால் வாரியத்தின் மூலம் எவ்வளவு தண்ணீர் இரயில்வே இலாகாவுக்குக் கொடுக்கிறது. இப்போது மத்திய அரசு எவ்வளவு கொடுக்கிறது என்று பார்த்தால் உண்மை புரியும். பொதுவாக ஆண்டவனுக்குப் படைக்கும்போது ஒரு உருண்டை வெல்லத்தைப் படைத்தால் ஒரு துளி வெல்லத்தை பிரசாதமாக திருப்பிக் கொடுப்பதைப் போல மத்திய அரசு மாநில அரசுக்கு பிரசாதம் கொடுத்திருக்கிறது என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திருமதி டி. யசோதா :** மாற்றுத் தலைவரவர்களே, இரயில்வே இலாகாவின் மூலமாகத் தண்ணீர் கொண்டுவருகிறார்கள். ''நாங்கள் இரயில்வே டிபார்ட்மெண்டுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம்'' என்றால் அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் தமிழர்கள் அல்ல, திராவிட பரம்பரையினர் அல்ல, அவர்கள் எங்கோ இருந்து வந்தவர்கள், டில்லியில் இருந்து வந்தவர்கள் அல்லது வேறு எங்கோ இருந்து வந்தவர்கள் என்று எண்ணக் கூடாது. தமிழ்நாட்டு மக்களுக்கு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உதவி செய்கிறார்கள். அதை நல்ல எண்ணத்தோடு பெற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாற்றுத் தலைவரவர்களே, இரண்டு பேர் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. ஆனால் தானம் கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடாது. கொடுக்க வேண்டியது அவர்களுடைய கடமை; கொடுக்கிறார்கள். அதை நாம் நன்றி உணர்வோடு பெற்றுக்கொள்வோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு நல்ல காரியம் நடைபெறுகிறபோது அதிலே போய் குறை சொல்லக் கூடாது. குறைபடுத்திச் சொல்லுகின்ற அந்த நோக்கம் சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு நடமாடும் பல்கலைக்கழகம் டாக்டர் நாவலர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற நிதி ஒதுக்க மசோதா மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதி தந்ததற்காக என் மனமார்ந்த நன்றியை முதலிலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வரலாற்று சிறப்புமிக்க இந்த சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அண்மையிலே நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஹைதராபாத்தில் நமது சரித்திர நாயகன் படைத்திட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை எண்ணி, எண்ணி பெருமைப்படுகிறோம், பூரிப்படைகிறோம்.

கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் என்பது சாதாரணமான ஒரு ஒப்பந்தம் அல்ல. சரித்திரப் புகழ்மிக்க ஒப்பந்தமாகும். ஆந்திரா மாநிலத்திலே ஒரு புரட்சித் தலைவர், தமிழகத்திலே ஒரு புரட்சித் தலைவர். ஆக, தென்னகத்திலே உள்ள இரண்டு புரட்சித் தலைவர்களுமாகச் சேர்ந்து, இந்த ஒப்பந்தத்தை—கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தத்தை—நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று எண்ணும்போது நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். இது வரையில் மாநிலங்கள் தங்களுக்குள்ளாகவே பேசி, மத்திய அரசின் தலையீடு இன்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றால்,





இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து இதுபோன்ற ஒரு ஒப்பந்தம் தனி தனி மாநிலங்களாக பேசி நிறைவேற்றப்படவில்லை என்பதை குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்.

மாநில அரசுகள் தங்களுடைய பிரச்னைகளைப் பேசி, தாங்களாகவே தீர்த்துக் கொள்ளக் கூடிய, இந்த நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து, நமது பேரறிஞர் பெருந்தகை அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை, நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, நான் மிகுந்த மகிழ்ச்சி கொள்வதோடு, தமிழகத்திலே இருக்கிற 4½ கோடி மக்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

1,500 கன அடி தண்ணீர் சென்னைமாநகர் குடிநீர் பிரச்சனைக்காக மராட்டிய மாநிலம், கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலம் ஆகிய 3 மாநிலங்களும் தருவது என்பது—ஏற்கெனவே மத்திய அரசின் முன்முயற்சியால், பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் நல் உணர்வினால் தருவது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால் கடந்த 7 ஆண்டுக்காலமாக இருந்தே அந்த ஒப்பந்தம், தடைபட்டுக்கொண்டே வந்தது. இதற்குக் காரணம் கிருஷ்ணா நதி நீரை எப்படிக் கொண்டு வருவது என்பதைப் பற்றித்தான் ஒரு முடிவு இல்லாமல் அந்த ஒப்பந்தம் தடை பட்டிருந்தது. இந்த 7 ஆண்டுத் தடையை நீக்குவதற்கு ஆந்திராவின் முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை அழைத்து, மிகத் துணிவோடு இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்து, தமிழகத்து மக்களையும், ஆந்திரா மக்களையும், மட்டற்ற மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய காரணத்தால் என்னுடைய பாராட்டுதலை, இரு மாநிலத்து முதல்வர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல காவிரி நீர் பிரச்னையிலும் விரைவிலே தமிழக அரசும், கர்நாடக அரசும் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு சுமூகமான உடன்பாட்டுக்கு வருவார்கள் என்று தமிழக மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 15 ஆண்டுக் காலமாக இந்த காவிரி நீர் பிரச்னை தீர்க்கப்படாமலேயே இருந்து வருகிறது. அண்மையில் டெல்லியில் இதற்கான ஒரு மாநாட்டை மத்திய பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டினார்கள். அந்த மாநாட்டிலே நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அங்கு கலந்து கொண்ட கர்நாடக மாநில முதல்வரும், கர்நாடகமும், தமிழகமும் நேரிடையாக பேசி தீர்த்துக் கொள்ள முயற்சிக்கிறோம். அதற்கு பிறகு வேண்டுமானால், மத்திய அரசை நாடி வருகிறோம் என்று கூறி, நமது முதல்வரோடு நேரிடையாக பேசுவதாக தெரிவித்து உள்ளார்கள்.

[திரு. இ. கணேசன்] [1983 ஏப்ரல் 21

எனவே, கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் ஏற்படுத்தியதைப் போல நமது புரட்சித் தலைவர் அவர்கள் காவிரி நீர் ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி, தமிழக மக்களுடைய நீண்ட நெடு நாள் பிரச்னையை சுமூகமாக தீர்க்கக்கூடிய நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று நான் நம்முடைய முதலமைச்சரை மிக்க பணிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டத்திற்குப் பின்னால், மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்னைகளை மாநில அரசுகளே தீர்த்துக் கொள்ளலாம் என்ற உணர்வு அனைத்து மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ளது என்பதை எண்ணும்போது, நமது பேரறிஞர் கண்ட கனவு இப்போது நனவாகிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல் அறிஞர் அண்ணா அவர்கள், தமது கடைசி கூட்ட பேச்சின் போது குறிப்பிட்டார்கள். ''நான் 3 காரியங்களை நிறைவேற்றியதாக பெருமைப்படுகிறேன், பூரிப்பு அடைகிறேன். மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் என்று குறிப்பிட்டார்கள்.'' அவை, சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது, சுய மரியாதை திருமணத்தை சட்டப்படி செல்லும் என்று அறிவித்தது. இந்தியை தமிழ்நாட்டிலேயிருந்து அடியோடு ஒழித்தது என்று இந்த 3 காரியங்களையும் சுட்டிக் காட்டி, பூரிப்பு அடைந்தார். மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

ஆனால் இன்றைக்கு நாட்டிலே நடைபெறுவது என்ன என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டுகிறேன். நேற்றையதினம் செய்தித்தாள்களிலே ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதிலே திருமதி சுந்தராம்பாள் என்ற ஒரு அம்மையார் அவர்கள், தமிழகத்திலே இந்தியைப் பள்ளிக் கூடத்திலே கட்டாயப் பாடமாக சொல்லித் தரவேண்டும். இந்தி படிக்காத

(முற்பகல் 11-50)

வர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு உரிய வாய்ப்பைப் பெற முடியவில்லை என்று வழக்குகளை சென்னை உயர்நீதி மன்றத்திலே தொடுத்திருக்கிறார்கள். இந்த வழக்கு உயர்நீதிமன்றத்திலே நீதிபதி திரு. சத்தியதேவ் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்தியை இந்த நாட்டிலிருந்து ஒழிக்கவேண்டும் என்பதற்காக (குறுக்கீடு) தமிழ்நாட்டிலிருந்து ஒழிக்கவேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினார்கள். தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்தக் கால கட்டத்தில் ஒரு அம்மையார் அவர்கள் கட்டாயமாக இந்தி பள்ளியிலே திணிக்கப்பட வேண்டும் என்பதற்காக வழக்கு போட்டிருக்கிறார்கள்.



1983 ஏப்ரல் 21] [திரு. இ. கணேசன்]

** ** *

நமது அரசு இந்த வழக்கை எதிர்த்து வாதாட வேண்டும்
என்று நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

** ** *

1938 முதல் இந்தியை எதிர்த்து உயிர்நீத்த தாளமுத்து,
நடராஜன் என்ற இரு மறவர்களையும் 1965 ஆம் ஆண்டு
ஜனவரி 26-ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தையும் நாம்
மறந்துவிடக்கூடாது. அந்தப் போராட்டத்தின் விளைவாக 100-க்
கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கிக்கு இரையானார்கள் என்பதே
இந்த மொழிப் போராட்டத்திற்கு ஒரு பாடமாக அமையும்
என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தாய்மொழியைக் காக்க தன் உயிரை கொடுத்த தியாகி
களுக்கு நமது நன்றியைக் காட்டக் கடன் பெற்றிருக்கிறோம்.
மொழிப்போரில் ஈடுபட்ட தியாகிகளுக்கு பென்ஷன் தரப்பட
வேண்டும். அவர்களுக்கு நிலங்களை பட்டாசெய்து தரவேண்டும்.
அவர்களுடைய வாரிசுகளுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க
வேண்டும் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்
படுகிறேன்.

அடுத்து இடைப்பாடி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த
வேண்டும். 1977 ஆம் ஆண்டு நான் சட்டமன்றத்திற்குத் தேர்ந்
தெடுக்கப்பட்டபோதே நான் சொன்னேன். இடைப்பாடி
நகராட்சியில் மட்டும் மக்கள் தொகை 1981 ஆம் ஆண்டு
கணக்குப்படி 40,177 பேர் வசிக்கிறார்கள். இந்த நகரத்தைச்
சுற்றியுள்ள 20 கிலோ மீட்டர் தூரம் வரையில் நல்ல அரசு
மருத்துவ மனை இல்லை. மேலும் இந்த நகரத்தை ஒட்டியுள்ள
ஊராட்சிப் பகுதி மக்களும் இந்த மருத்துவமனைக்குத்தான்
வருகிறார்கள். ஆகவே ஒரே ஒரு மருத்துவமனைதான் இருக்கின்
றது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இந்த மருத்துவமனையை நம்பி தொழிலாளர்களும் தாய்மார்
களும் ஆயிரம் ஆயிரமாக தினசரி அந்த மருத்துவமனைக்கு
வருகிறார்கள். அவர்களிலே சுமார் 600-க்கு மேற்பட்ட நோ
யாளிகள் உள் நோயாளிகள் அல்ல வெளி நோயாளிகள் வரு
கிறார்கள். அவர்களில் 300-க்கும் மேற்பட்டவர்களுக்கு ஊசி
போடவேண்டிய நிலைமையிலே உள்ளார்கள்.

மேலும் இரவு நேரங்களில் நான்கைந்து அவசர பிரசவ
கேஸ்கள், ஆக்ஸிடென்ட் கேஸ்கள், காச நோயாளிகள், போ
லீஸ் கேஸ்கள் முதலியவை வருகின்றன. ஆனால் அந்த ஆஸ்
பத்திரியில் படுக்கை வசதி 10 தான் இருக்கின்றது என்பதை நான்
மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
ஒரு தாய்க்கு குழந்தை பிறந்த மறுநாள் அவர் பெற்றெடுத்த

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இ. கணேசன்] [1983 ஏப்ரல் 21

குழந்தையோடு வெளியே அனுப்பப்படுகின்ற அவல நிலை இருக்கின்றது. எனவே 10 படுக்கை வசதி கொண்ட அந்த ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கொங்கணாபுரம் பஞ்சாயத்திலே உள்ள கச்சுப்பள்ளி, வெள்ளாளபுரம் ஆகிய பகுதிகளில் மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இடப்பாடியினுடைய மொத்தப் பரப்பு 12·5 ஆகும். அங்கே குடிநீருக்கு மிக மிக தடையாக உள்ளது. இடப்பாடியிலிருந்து 7 மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள பூலம்பட்டியிலிருந்து காவேரி நீர் குழாய் மூலமாக சப்ளை செய்யப்படுகிறது. ஆனால் அங்கே 20 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட ஒரு பெரிய தொட்டி மட்டும் உள்ளது. அப்போது இருந்த ஜனத்தொகை 20 ஆயிரம். ஆனால் 20 ஆண்டு காலத்திற்கு பின்னால் 40,177 ஜனத்தொகை கொண்ட இந்த பெரிய நகருக்கு இப்போது குடிநீர் பற்றாக்குறை மிக மிக அதிகமாக உள்ளது. இதைப்போக்க இடைப்பாடி மேட்டுத்தறியிலே வார சந்தைக்கு மேலே ஒரு குடிநீர் தொட்டி ஏற்படுத்தி மேட்டு பகுதியில் ஏறாத பகுதிகளுக்கு எல்லாம் மேட்டுத்தெரு, அங்காளம்மன் கோவில் தெரு, கவுண்டன்பட்டி, சின்னமலனி, வண்ணாரத்தெரு இதுபோன்ற பல மேடான பகுதிகளுக்கு குடிநீர் சப்ளையை நம்முடைய அரசு செய்து கொடுக்கவேண்டும் என்று பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் பேசும்போது உயர்நீதிமன்றத்திலே மும்மொழி திட்டத்தின்படி வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது என்றார்கள். யாரும் வழக்கு தொடுக்கவோ அதைப் பற்றி அனுமதிக்கவோ அதிலே இந்த அரசு, பேரவை தலையிட முடியாது. ஆக வழக்கை விசாரிப்பதற்கு அரசுக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய கொள்கையை நாம் எடுத்து இருக்கிற கொள்கையை வாதாடுவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. ஆக அப்படி எடுக்கக் கூடாது என்றோ அனுமதிக்கக்கூடாது என்றோ நாம் கருத்தை இங்கே எடுத்துச்சொல்லக்கூடாது. ஆனால் அரசின் சார்பாக என்ன கொள்கை என்று கேட்பார்களானால் நாம் 2 மொழி திட்டத்தை தான் வற்புறுத்துகிறோம். அதைத் தான் இந்த அவையில் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அதைத்தான் தொடர்ந்து கடைப்பிடித்துக்கொண்டு வருகிறோம். அதைத்தான் நாம் எடுத்து வாதாடுவோம். அதற்கு காரண காரிய விளக்கங்களை செய்வோம் என்ற அளவுக்கு அரசு அதனுடைய கடமையை செய்யுமே தவிர அதை எடுக்கவே கூடாது என்றோ, அனுமதிக்கவோ கூடாது என்றோ நாம் சொல்வதற்கு



1983 ஏப்ரல் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உரிமை இல்லை. அதைத் தாங்கள் பார்த்து அதிலே அப்படி ஏதாவது இருந்தால் அந்தப் பகுதியை மட்டும் நீக்கி விடலாம். என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) :** அதைக் கவனித்துப் பார்த்து, நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவரை பத்திரிக்கைகள் இவைகளை பிரசுரிக்கக் கூடாது.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, விவாதத்தில் நுழைகிறபோது நுழைவு வரி என்பதை நிச்சயமாகவும், கட்டாயமாகவும் வாபஸ் பெறவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். ஆக வலியுறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை அனேகமாக மாநிலத்தில் இருக்கக்கூடிய எல்லா பகுதி மக்களும், வியாபாரிகள் என்று மட்டும் நான் சொல்லவில்லை எல்லா பகுதி மக்களும் விரும்புகிறார்கள். அந்த முறையில் கூறுகின்றபோதுதான் காலையில் ஆளும் கட்சி சொன்னபோது ஆட்சேபணை வந்தது. அர்த்தால் நடந்து இருக்கிறது. எல்லா வியாபாரிகளும் கடைகளை அடைத்து இருக்கிறார்கள். அதிலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வியாபாரிகளும் இருக்கிறார்கள். அந்த அர்த்தத்தில் தான் சொன்னார்கள். அந்த அர்த்தத்தில் தான் நானும் புரிந்துகொண்டேன். ''ஆல் செக்ஷன்ஸ் ஆப் பீப்புள்' அது வேண்டாம் என்று சொல்கிற போது மீண்டும் அரசு அதை ஒரு பிடிவாதமாக பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல் அதை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவை முடிந்து 2 மாதத்திற்குள் மக்களின் வாழ்க்கை நிலமை கட்டுக்கு அடங்காத ஒரு நிலைமை ஏற்படப் போகிறது என்று நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். மைய அரசு ரயில்வே கட்டண உயர்வு, தபால் கட்டண உயர்வு, பெட்ரோலிய பொருட்கள் விலை உயர்வு, பட்ஜெட்டில் அதற்கு மேல் போடப்பட்டிருக்கக்கூடிய வரிகள், இவற்றின் மூலம் சுமார் 2,500 கோடி ரூபாய் பளுவை நம்முடைய மக்கள் தலையில் சுமத்தியிருக்கிறார்கள். மத்திய அரசு சுமத்தியிருக்கிறார்கள் என்றால் அது தமிழ்நாட்டு மக்களுக்கும் உள்ளிட்டுத்தான். இந்த உயர்வினால் நமக்கு ஒதுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு தொகை இருக்கிறதே அந்தத் தொகையிலே நான் நினைக்கிறேன். கிட்டத்தட்ட சரி பாதியை அது செல்லரித்து விடும் அது கரைத்துவிடும் என்று நான் கருதுகிறேன். இப்படி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அந்த தொகை இந்த மத்திய அரசினுடைய 2,500 கோடியை அவர்கள் வரி மூலமாக விலை உயர்வு மூலமாக போடுவதால் திட்ட ஒதுக்கீடு பாதியாகும் போது நிச்சயமாக திட்ட வேலைகளுக்கு சாதாரணமாக இந்த ஆண்டு செய்யக்கூடிய அபிவிருத்தி வேலைகளுக்கு அனேகமாக நிச்சயமாக குறைக்கப்படும். அப்படி குறைகிறபோது ஆண்டுக்கு ஆண்டு கிடைத்து வந்த குறுகிய வேலைவாய்ப்புகள் அடுத்து சில மாதங்களில் நிச்சயமாக பாதிக்கும். இன்னும் இதைவிட சீரியஸான

நிலைமை தரப்போகிறது. அதோடு சர்வ தேச நிதி நிறுவனம் நிபந்தனைகளை எற்று இறக்குமதி கொள்கையை தளர்த்தியதின் விளைவாக பன்னாட்டு முதலைளிகள் நம் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அந்த பொருட்களை அவர்கள் நாட்டில் உற்பத்தி செய்து நம் நாட்டில் கொண்டு வந்து அவர்கள் கொட்டி விடுவதன் விளைவாக ஏராளமான பேக்டரிகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. அந்த கொள்கையின் விளைவாக நம் தமிழ்நாட்டிலும் சிலபல பேக்டரிகள் மூடப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

தமிழகத்திலே பல தொழில்கள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து அல்லது லே ஆப் செய்யப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அனைத்து இந்திய ஸ்தாபனம் என்று தன்னை அழைக்கும் ஆளுங்கட்சி இந்தியாவைக் குட்டிச்சுவராக்கும் இந்தக்கொள்கைகளை எதிர்த்து ஒரு சுண்டுவிரல்கூட ஆட்டாமல் இருக்கிறார்களே ஏன்? அரிசி கிடைக்கவில்லை என்று சத்தம்போடுகிறீர்கள், நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதற்கு எல்லாம் அஸ்திவாரமாக இருக்கக்கூடிய பேஸிக் பாலிசிஸ் இந்த கொள்கைகளை நாட்டை இன்றைக்கு குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கும் கொள்கைகளை எதிர்த்து,—அகில இந்திய ஸ்தாபனம் என்று சொல்லிக்கெண்டிருக்கிறபோது—அந்த அடிப்படையில் இந்த அனைத்திந்திய கொள்கையை எதிர்த்து ஏன் ஒரு சுண்டு விரலைக்கூட ஆட்டாமல் இருக்கிறார்கள் என்ற கேள்வியை நான் கேட்கிறேன். நான் கேள்வி கேட்பதோடு மட்டுமல்ல, அஸ்திவாரமான இந்தக் கொள்கைகளை எதிர்த்து தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சியினரும் ஆளுங்கட்சி உள்ளிட்டு—ஏன் ஆளுங்கட்சி முன்னிற்கட்டுமே—நாடு முழுவதும் பாதிக்கக்கூடிய இந்தக் கொள்கைகளை எதிர்த்து மக்களை ஒன்று திரட்டி நிர்பந்தம் பண்ணுவதற்கு முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக கொஞ்சம் எக்ஸாசிரேட்டாக இருக்கும் என்று சொன்னாலும் அடுத்த சிலமாதங்கள் தமிழ்நாட்டைச் சுடுகாடாக்கும் அபாயம் உள்ளது என்று சொல்வேன். நான் எக்ஸாம்பிளைச் சொல்கிறேன். நாகப்பட்டிணத்தில் ஒரு நாளைக்கு அரை மணி நேரம்தான் தண்ணீர் சப்ளை, ஒரு நாளைக்கு அரை மணி நேரம்தான் தண்ணீர் சப்ளை என்றால் அடுத்த மாதம் என்ன ஆகும், அதற்கு அடுத்த மாதம் என்ன ஆகும். அது சீரியசான நிலைமை, இது ஒரு உதாரணம், கன்னியாகுமரி மாவட்டத்திலே தாமிரவருணியில் தண்ணீர் இருக்கிறது. 3 பஞ்சாயத்து யூனியன்களில் லாரிகளை அரேஞ்ச் பண்ணி அந்தக் கிராமங்களுக்குத் தண்ணீர் சப்ளை பண்ணினார்கள். அவர்கள் லாரிகளுக்குக் கொடுக்கவேண்டிய காசை அரசாங்கத்திலிருந்து கொடுக்கவில்லை. ஆகவே 3 பஞ்சாயத்து யூனியன்களும் தண்ணீர் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டை நிறுத்திவிட்டார்கள் அப்பப்பட்ட நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. உணவு விநியோகத்தை எடுத்துக் கொண்டால் இப்போதே சென்னை நகரத்திலே குடும்பத்திற்கு மாதம் 10 கிலோதான்





கிராமப் புறங்களிலே அதைவிட மோசமான நிலைமை அடுத்த மாதங்களிலே பொது விநியோகம் முறையே உடைந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படக்கூடிய நிலைமைக்கு நாம் இங்கே நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அதேமாதிரி வறட்சி நிவாரணத்தை எடுத்துக்கொண்டாலும் வட ஆற்காடு மாவட்ட கலெக்டர் 22 கோடி ரூபாய் கேட்கிறார், அவர் என்ன எக்ஸாசிரேட் பண்ணியா கேட்கிறார், அப்போது தான் மினிமம் ஏதாவது கிடைக்கும் என்று கேட்கிறார். ஆனால் கொடுக்கப்பட்டது 1 கோடிதான். மதுரை மாவட்ட கலெக்டர் 29 கோடி கேட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்டது 1½ கோடி தான். இந்த மாதிரி 22 கோடி கேட்டால் 1 கோடி என்றால் வறட்சி நிவாரணம் அங்கே நடக்காது. அதோடு சென்ட்ரல் பட்ஜெட்டினுடைய பயங்கரமான விளைவுகள், விலை உயர்வு இங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய மின்சாரக் கட்டுப்பாடு எல்லாம் சேர்ந்து தமிழ்நாடு அரசு எரிமலை மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் இதை விட்டுவிட்டால், கவனிக்காமல் விட்டால் நிச்சயம் எரிமலை வெடிக்கும், பாட்டுக்கூட இருக்கிறது நீங்கள் பார்த்திருப்பீர்கள். போனவாரம் நான் டெல்லியில் இருந்தேன். அடுத்த மாதம் தமிழக மக்கள் என்ன செய்வார்கள் என்று கவலையோடு அங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் என்னைக் கேட்டார்கள். இங்கே இருந்து இன்பர்மேஷன் வருகிறது. "What will happen next month?" அடுத்த மாதம் தமிழக மக்களுக்கு நிகழவிருக்கும் துன்பங்களைப் பற்றி டெல்லியில் இருக்கும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு கவலையோடு கேட்கிறார்களோ அந்த அளவுக்கு இங்கே சர்க்கார் இல்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அடுத்த மாதம் ஜனங்களுக்கு தண்ணீர் கொடுக்கவேண்டும், வறட்சி நிவாரணத்திற்கு இந்த அரசிடம் என்ன திட்டம் இருக்கிறது இன்னும் சீரியஸான சிட்சுவேஷன் வருகிறது. Have you got the plan? No plan to meet the contingencies. அதனால் தான் அவர்கள் கேட்கிறார்கள். பல பார்ட்டிக்காரர்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். திட்டமே இல்லை. இப்போது போட்டிருக்கிற டிரவுட் ரிலிப் கமிட்டியிலே பார்ட்டிகளைச் சேர்ந்தவர்களைச் சேர்க்கிறபோது கலெக்டர் எப்படி நாமினேட் செய்ய முடியும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இன்னார் வா அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்னார் வா, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து இன்னார் வா என்று அவர் சொல்லமுடியாது. பார்ட்டிகள் தான் சொல்லவேண்டும். "Who is the Collector to decide my party's nomination right?" என்னுடைய கட்சியிலே யார் என்பதை நாமினேட் பண்ணுவதற்கு கலெக்டருக்கு ரைட் கிடையாது. இவ்வளவு நிலைமைகள் இருக்கின்றன, தமிழக அரசு சும்மா இருப்பதாக நான் சொல்லவில்லை. சும்மா இருக்கவில்லை. சமீபத்திலே தமிழகத்திலே ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள் என்று எனக்கு தகவல். சர்வகட்சிக் கூட்டமில்லை, அமைச்சரவை கூட்டமில்லை. மாவட்ட

ஸ்பெஷல் பிரான்ச் சி.ஐ.டி.க்களின் சில அதிகாரிகளுடைய கூட்டம். அவர்களிடம் அரசு என்ன விசாரித்தது தெரியுமா ? எனக்குக் கிடைத்த தகவல். மாவட்டங்களில் வறட்சி கடுமையாக இருக்கிறதா ? அதனால் ஜனங்கள் மத்தியில் கொந்தளிப்பு வளர்கிறதா ? போராட்டங்கள் மேலும் வளருமா ? அதை அடக்க போலீஸ் ஸ்ட்ரெங்த் போதுமா ? That is the plan. They have no other plan ஸ்பெஷல் பிரான்ச் சி.ஐ.டி. அதிகாரிகள் கூறியிருப்பதாக எனக்கு கிடைத்த தகவல், subject to correction by the Government நிலைமைகள் மோசமாகிவருகிறது. போராட்டங்கள் இன்னும் அதிகமாகும். ஆனால் அதை அடக்குவதற்கான போலீஸ் ஸ்ட்ரெங்த் எங்களிடம் இப்போது இருப்பது போதாது. இது அவர்களுடைய ரிப்போர்ட். இதிலே என்ன தெரிகிறது என்று சொன்னால், அடுத்த மாதங்களில் தண்ணீர் கேட்கும் தாய்மார்களை சுட்டு அடக்குவதற்கு சதித் திட்டம் தீட்டுகிறார்கள் என்று தெரிகிறது. அரிசி கேட்கும் மக்களுக்கு ரவை வழங்குவதற்கு திட்டமிடுகிறார்கள். கோதுமை ரவை அல்ல ; துப்பாக்கி ரவை. அதைச் செலுத்துவதற்கான ஏற்பாடு நடக்கிறது. நான் அரசை எச்சரிக்கிறேன். இந்த தடவை மக்கள் அடக்குமுறையை சகித்துக்கொள்ள மாட்டார்கள். குடி தண்ணீர் கிடைக்காமல் கோழைகளாக சாவதை விட அரசினுடைய துப்பாக்கிக்கு நெஞ்சைக் காட்டுகிற அளவிற்கு, தண்ணீர் குடிப்பதற்கு கிடைக்கவில்லையென்றால் அவர்கள் கவர்ட்ஸ் ஆக மாட்டார்கள். துப்பாக்கிக்கு நெஞ்சை காட்டி வீரமரணம் அடைவார்கள் என்பதை நான் நிச்சயமாகச் சொல்கிறேன். அரசாங்கம் இப்படி மெத்தனமாக இருந்து கொண்டு ஜனங்கள் அதனை ஃபேஸ் பண்ணுகிறபோது, அந்த துப்பாக்கியை நோக்கி பொது மக்களோடு சேர்ந்து தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிற்கும். அதைப் பற்றி சர்க்கார் எங்களை என்ன செய்தாலும் கவலையில்லை என்று தான் சொல்வேன். நான் முதல் அமைச்சரிடம் ஒன்றைச் சொல்ல வேண்டும். கோரியதை மறுக்கும் பிரதமரிடம் இந்த ஆத்திரத்தைக் காட்டினால் அதை நான் பாராட்டுவேன். பல்வேறு நிவாரணங்களுக்கு போதிய நிதிதர மறுக்கும் பிரதமரிடம் இந்த ஆத்திரத்தைக் காட்டினால் அதை வீரம் என்று ஏற்றுக்கொள்வேன். ஆனால் இந்திரா காங்கிரசிடம் ஊடல் கட்டம் முடிந்து இப்போது கூடல் கட்டம் துவக்கப்படுகிறதோ என்ற ஒரு சந்தேகம் எனக்கு இருக்கிறது. இரண்டு வழிகள், ஒன்று சப்ரஷன், மற்றொன்று அங்கே கூடல். நான் சொல்லுகிறபோது ஹேஷ்யத்தை வைத்துச் சொல்லவில்லை. நியூஸ்-டுடே பத்திரிகை, மாண்புமிகு முதலமைச்சர் பாராட்டி, அவரே திறந்து வைத்த பத்திரிகை, ஆங்கிலப் பத்திரிகை. 18–4–1983 தேதியில் அந்த நியூஸ்-டுடே பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. நிச்சயமாக நம்முடைய முதலமைச்சருக்கு எதிராகவோ, அபாண்டமாகவோ, அல்லது தப்புப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதற்காகவோ எழுத மாட்டார்கள் என்பது என்னுடைய கருத்து. அதிலே எழுதியிருப்பது என்னவென்றால் தமிழகத்திலேயுள்ள ஏ.ஐ.ஏ.டி.எம்.கே.யிடமும்,



ஆந்திரா தெலுங்கு தேசமிடமும் இந்திரா காங்கிரஸ் மீண்டும் உறவு வைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது. இந்த இரண்டு மாநிலங்களிலிருந்தும் வருகிற தகவல்களை வைத்துக்கொண்டு இந்த இரண்டு கட்சிகளிடம் இதுவரை இருந்த அணுகுமுறையை மாற்ற பிரதமர் திருமதி காந்தி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. அடுத்து சொல்கிறார்கள், 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தன்னை ஆதரித்த அ.தி.மு.க.வுடன் குறிப்பாக நட்புறவை வளர்க்க அதிக ஆர்வம் கொண்டுள்ளார். என்ன அதிக ஆர்வம் ? இங்கே தான் பூனை இருக்கிறது. அடுத்து அந்த பத்திரிகை சொல்கிறது. வரக்கூடிய நவம்பர் மாதத்தில் திடீர் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறக் கூடுமென்று புது டெல்லியில் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இது விஷயமாக திருமதி இந்திரா காந்தி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வருகிற வழியிலே அ.தி.மு.க. முதல்வரிடம் சென்னையில் நீண்ட நேரம்—அதுதான் எம்பசிஸ். இது நான் சொல்வதில்லை, அந்த பேப்பர் சொல்கிறது—பேச்சுவார்த்தை நடத்தியதற்கு பார்வையாளர் முக்கியத்துவம் அளிக்கிறார்கள் ; இது நியூஸ்-டுடேயின் ரைட்டிங்ஸ். ஆகவே இது அவர்களை அவதூறு செய்வதற்கென்று சொல்ல மாட்டார்கள். வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுகிறதென்று பழைய பேச்சு இருக்கிறது. அப்படி போகின்றதோ என்கிற சந்தேகம் எனக்கிருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அ.தி.மு.க.வின் அணுகுமுறை மாறியிருப்பதைப் போல சொன்னார்கள். இன்றைய தினமலரில் ஜோதிபாசு அவர்கள் முதல்வர்கள் மாநாட்டைப் பற்றிச் சொல்கிறபோது இப்படிப்பட்ட மாநாடுகள் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட மாநாடுகள் கூட்டப்பட்டால் மத்திய அரசினுடைய அனுசரணை கிடைக்காத சூழ்நிலை ஏற்படும் என்று, இன்றைய தினமலர் பத்திரிகையில் அவர் கல்கத்தாவில் சொன்னதாக போடப்பட்டிருக்கிறது. உங்களுடைய அணுகுமுறையில் இவ்வளவு பெரிய மாற்றம் இருக்கிறதே, அதற்கு என்ன காரணம் ?

(பிற்பகல் 12-10)

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே ஏதோ வந்ததை வைத்து, அவர் ஏதோ ஒன்றைச் சொல்கிறார். நான் அதிலே டைவர்ட் பண்ண வேண்டியதில்லை. ஏனென்றால், அன்றைக்குத் துரைமுருகன் பத்திரிகையை வைத்துப் பேசினார். (குறுக்கீடு). நான் ''கன்பர்ம்'' பண்ணத் தயார். ஆனால், நான் என்னுடைய பாய்ன்ட்டிலிருந்து டைவர்ட் பண்ண இடம் கொடுக்க மாட்டேன். நான் என்ன ''கொட்டேஷன் கொடுத்தேன் ?'' மை பாய்ன்ட் இய்ஸ், உங்கள் கட்சியில் அடுத்த ஆள் பேசும்பொழுது சொல்லுங்கள். என்னுடைய கொட்டேஷனில் தப்பு இருந்தால் சேலஞ்ச் பண்ணுங்கள். I am ready to accept it. நாங்கள் என்ன செய்கிறோம் என்று அடுத்த ஆள் பேசும்பொழுது சொல்லுங்கள். நான்

இன்டர்வீன் செய்கிறேன், பதில் சொல்கிறேன். ஆகவே, மூத
லிலே இதை முடித்து விடுகிறேன். இப்படி, திருமதி காந்தி
நாடாளுமன்றத்தைக் கலைத்து, இடைத் தேர்தல் வைத்தால்....!

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: அனைத்
திந்திய அண்ணா தி. மு. க.வின் கொள்கையிலே முரண்பாடு
இருக்கிறது. ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லும்
பொழுது, அங்கே மாண்புமிகு ஜோதிபாசு கருத்திலே மாறுபாடு
இருக்கிறது என நான் சொல்வதிலே தவறு இல்லை. அதை
வாதத்திற்காகச் சொல்லாவிட்டாலும், அப்படிப்பட்ட ''இன்
கன்சிஸ்டன்சி'' இருக்கிறபொழுது ஜோதி பாசு அவர்கள், முன்பு
சொன்ன கருத்துக்கு மாறுபட்டு, மைய அரசினுடைய ஆதர
வினைப்பெறுகின்ற சூழ்நிலை மாறிவிடும், தென்னக மாநில
முதல்வர்களைக் கூட்டினால் என்று கல்கத்தா செய்தியாளர்
களிடம் சொன்னதாக, இன்றைய தினமலர் பத்திரிகையிலே
இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: அன்றைக்கு மாண்புமிகு துரைமுருகன்
இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையைக் கோட் பண்ணினார்.
நான் அதற்குப் பிறகு சென்ட்ரல் கமிட்டிக் கூட்டத்திற்குப்
போய் இருக்கிறேன். அங்கே வெஸ்ட் பெங்கால் காம்ரேட்ஸை
சந்தித்தேன். அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், வடக்கு,
தெற்கு, கிழக்கு, மேற்கு என்று இல்லாமல் இந்தியா பூராவும்
இருக்கிற முதல்வர்களை அழைக்க வேண்டும் என்று. அதுதான்
எசென்ஸ். அது வேலை செய்கிறது. ஆகவே, என்னவோ
ஜோதி பாசுவுக்கும், எங்களுக்கும் டிபரன்ஸ் இருக்கிற மாதிரி
சொல்கிறார். அது அல்ல. ஜோதி பாசுவைக் கூட நான்
கேட்டிருக்கிறேன். நான் மத்திய கமிட்டி மெம்பர். 5, 6
தேதிகளிலே இந்த விஷயங்களை எல்லாம் விவாதித்து, கலந்து
கொண்டு வந்தவன் நான். சென்ட்ரல் கமிட்டியில் ஜோதி பாசு
உட்பட, வெஸ்ட் பெங்கால் காம்ரேட்ஸ் உட்பட, போலிட்
பீரோவிலே இருக்கிற அத்தனை பேரும் உட்பட, எந்தவிதமான
அபிப்பிராய வித்தியாசமும் இந்த விஷயத்திலே இல்லையென்ப
தால், ஜெனரல் செக்ரட்டரி ஈ. எம். எஸ். கொட்டேஷனை
அன்றைக்குக் கொடுத்தேன். ஆகவே, இப்படி, திருமதி காந்தி
நாடாளுமன்றத்தைக் கலைத்து, இடைத் தேர்தலை (குறுக்கீடு)
ஒருகால் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு, எங்களுக்குள் பிளவு
ஏற்பட வேண்டுமென்ற விருப்பம் இருக்கலாம். அந்த விருப்
பத்திற்கு மார்க்சிஸ்ட் கட்சி என்றைக்கும் இடம் கொடுக்காது
என்று நிச்சயமாக அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, அனைத்து மாநில முதலமைச்
சர்களையும் கூட்ட வேண்டுமென்பதுதான் மாண்புமிகு ஜோதி
பாசுவினுடைய நோக்கம் என்று சொல்கிறார்கள். இன்று
பத்திரிகையிலே என்ன செய்தி வந்திருக்கிறது? ஹைக்கோர்ட் இது



போன்ற ஒரு கோரிக்கையினை வைத்து கடிதம் எழுதுகிறார்.
அதற்கு ரியாக்ட் பண்ணுகிறபொழுது, இப்படி தேவையில்லை
என்றதாகச் செய்தி வந்திருக்கிறது. ஏதோ உங்கள் உறவு
பிரிய வேண்டுமென்ற நோக்கம் எனக்கு இல்லை. நீங்களும்
கொள்கையிலே தெளிவாக இருந்து கொண்டு, மற்றவர்களைக்
குற்றம் சாட்டினால் நியாயமாக இருக்கும். உங்களிடையே
இவ்வளவு வேறுபாடு ஏன் என்பதுதான் என்னுடைய வாதம்.

* * *

திரு. ரா. உமாநாத்: இது
ஏனென்றால், ஒரு பத்திரிகையிலே ஒரு மாதிரி வருகிறது.
இன்னொரு பத்திரிகையிலே இன்னொரு மாதிரி வருகிறது.
* * * இல்லை. ஆனால்,
ஃபுல் ஸ்டேட்மென்ட் இல்லை. இந்தப் பிரச்னையை அங்கே
நான் சென்ட்ரல் கமிட்டி மெம்பர். இந்தப் பிரச்னையை அங்கே
விவாதித்தபொழுது யாருக்கும் டிபரன்ஸ் கிடையாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): அதைப்
பற்றிப் பேசும்பொழுது அதை மறுத்துப் பேசுங்கள். அதற்கு
உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இது * *
என்பதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத்: இப்படி திருமதி காந்தி நாடாளு
மன்றத்தைக் கலைத்து, இடைத் தேர்தல் வைத்தால் நம் முதல்
வரும் நம் பேரவையைக் கலைத்து ஒன்று சேர்ந்து, கரஸ்பான்டாக
இடைத் தேர்தலை .......................

திரு. கோ. விஸ்வநாதன்: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்பு
மிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு
அருமை நண்பர் உமாநாத் அவர்கள் பேசும்பொழுது, நம்முடைய
பாலசுப்பிரமணியம் இடை மறித்ததற்கு நேரிடையாக பதில்
சொல்லவில்லை. நான் அவரைக் கேட்டுக்கொள்ள விரும்புவது,
அண்மையிலே தென் மாநில முதல்வர்கள் மாநாடு நடைபெற்றது.
அதைப் பற்றி மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து
என்ன என்பதை அவர் தெளிவாகச் சொல்வாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
அவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே
வந்த செய்தியை வைத்துத்தான், மாண்புமிகு உறுப்பினர் துரை
முருகன் பேசும்பொழுதும் சரி, மாண்புமிகு உறுப்பினர் பால
சுப்பிரமணியம் பேசும்பொழுதும் சரி, மாண்புமிகு உறுப்பினர்
திரு. உமாநாத் பேசும்பொழுதும் சரி,—பத்திரிகைக் குறிப்பை
வைத்துத்தான் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பத்திரிக்கை
யிலே இப்படி வந்திருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்
கிறார்கள். அதுவும் இந்திரா காங்கிரசுக்கு இப்படி ஒரு அணுகு

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றது.

முறை ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது என்றுதானே ஒழிய, அவர்கள் முடிவு எடுத்து விட்டார்கள் என்று அல்ல. ஆனால், அப்படிப்பட்ட ஒரு அணுகு முறையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ, அல்லது தெலுங்கு தேசம் கட்சியோ எடுத்து வைக்கவில்லை. அவர்கள் அப்படி அணுகி வருகிறார்கள், நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள் என்று சொல்வதற்கு வருகிறாரோ, என்னமோ அது வேறு. ஆனாலுங்கூட அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வேறு. அணுகு முறை எண்ணும்போது, மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் சொல்கின்றபொழுது; 15, 20 ஆண்டு வரலாற்றைப் பார்ப்போமானால் ஒவ்வொரு கட்சியும், அந்தந்த நேரத்திற்கு, அந்தந்த தன்மைக்கேற்ப, அவரவர்களுடைய கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள், மற்றவைகளை விட்டுவிடாமல், அணுகு முறையிலே பல மாற்றங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பல கட்சிகளின் அணுகுமுறைகளிலேயும் பல மாற்றங்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொல்வதும் ஒரு பத்திரிகைக் குறிப்புதான் ; அவர்கள் சொல்வதும் ஒரு பத்திரிக்கைக் குறிப்புதான். எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. திட்டவட்டமாக ஒரு முடிவை எடுக்கும் பொழுது வேண்டுமானால் அவரவர்களும் கருத்தைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. ஏற்கனவே சொல்லியது மாதிரி, எடுத்த எடுப்பிலேயே இந்தத் தென்னக முதல்வர்களின் மாநாடு அமைந்து விட்டதன் காரணமாகத்தான் இந்த நான்காக இருக்கிறதே தவிர, இது இந்த நான்கோடு இருக்காது, 22 ஆகக்கூட மாறும். எனவே, அப்படிப்பட்ட கருத்தை வரவேற்பதில் எந்தவிதமான மாறுபாடும் இருப்பதற்கு நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரைக்கும், இங்கே நான் சொன்னது மட்டுமல்ல, ஜெனரல் செக்ரட்டரியாக இருக்கின்ற ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களே அவருடைய ஸ்டேட்மெண்டில் வெல்கம் ப ண்ணியிருக்கிறார்கள். தீர்மானத்தையே நான்தான் கொண்டு வந்தேன். பார்ட்டியின் கொள்கைக்கு எதிராகத் தீர்மானம் நான் கொண்டு 'வந்திருந்தால் இதற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு பத்திரிகையிலே வந்திருக்கும். (So do not rely on that paper news) நான் சொல்வது This paper is favourable to A.I.A.D.M.K. அவர்கள் சில டெவலப்மென்ட்ஸ் வரும் எதிர்பார்த்து எழுதியிருக்கிறார்கள். எனக்கு ஐயப்பாடு இருக்கிறது என்று நான் சொல்கிறேன். சர்க்காரிலிருந்து பதில் சொல்லும்பொழுது சொல்லுங்கள்.

ஆகவே, வரும் மாதங்களில் ஜனங்களின் ஆத்திரத்திலிருந்து தப்பிக்க ஒரு பக்கம் மக்களை ஒடுக்குவதற்குச் சதி செய்வது ; மறு பக்கத்தில் நாட்டில் சர்வாதிகார சக்தியை வளர்ப்பது,





இரண்டு பாதைகளும் நாட்டைக் கெடுக்கும் பாதைகள் என்று நாங்கள் கருதுகிறோம். இந்த இரு பாதைகளையும் தமிழக அரசு எடுக்குமேயானால் நாங்கள் கடுமையாக எதிர்ப்போம். இதன் அறிகுறியாகத்தான் மே மாதம் 4 ஆம் தேதியன்று 9, கட்சிகளைக் கொண்ட ஜனநாயகக் கூட்டணி மாநிலம் முழுவதும் இந்த மாதிரி பிரச்னைகளுக்காக மறியல் நடத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு பிரச்னையைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகர வாசிகளைக் பொறுத்தவரையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குடம் தண்ணீர் எக்ஸ்ட்ராவாகக் கிடைத்தால் கூட ஆகா ஆகா என்று வரவேற்பார்கள் ; கிடைத்தது இலாபம் என்று கருதுவார்கள். ஆனால் நான் சமீபத்தில் ஒரு விசித்திரமான நிகழ்ச்சியைப் பார்த்தேன். சமீபத்தில் மத்திய அரசாங்கம் கிருஷ்ணா நதி தண்ணீரைக் கொண்டு வந்தார்கள் ; இலவசமாகக் கொடுக்கிறார்கள். தானத்திற்கு என்று நான் சொல்லவில்லை ; இனாமாகக் கொடுக்கிறார்கள். நான்கூட நினைத்தேன், தமிழக அரசு இதைப் பயன்படுத்திக்கொண்டு, சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கொடுக்கின்றபொழுது இதைப் பயன்படுத்திக்கொண்டு, சீரியசாக நெகோஷியேட் செய்து, இந்த டேங்கர்ஸ் போதாது, பிராக்டிகபிள் என்று கண்டுபிடித்திருக்கிறீர்கள், எனவே மேலும் அதிகமாக டேங்கர்களில் கொண்டுவர வேண்டுமென்று கேட்பதற்கு நல்ல முறையில் முன் முயற்சி எடுப்பார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் தமிழக அரசு இந்தத் தண்ணீரை இறக்குவதில் ஆரம்பத்தில் — பத்திரிகைகளைப் பார்த்தபொழுது ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, ஒன்றிரண்டு நாட்கள் இடைஞ்சல் செய்ததாகக் கூடப் பார்த்தேன். மாண்புமிகு குடிநீர் வசதி அமைச்சர் இராகவானந்தம் அவர்களின் ஸ்டேட்மெண்டைப் பார்த்தால், எங்களுக்குத் தகவலே தெரியாது என்று அமைச்சரவர்கள் கூறியதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். ஆனால் உண்மை அது அல்ல என்று எனக்கு டெல்லியிலேயிருந்து கிடைத்த தகவலிலிருந்து தெரிகிறது. தண்ணீரை அனுப்புவதற்கு ஆதரவான முடிவை எடுத்தபிறகு, இரயில்வே போர்டு சேர்மன் தண்ணீரை அனுப்புவதற்கு முன் நம்முடைய லயசன் ஆபீசராக இருக்கின்ற சங்கரன் அவர்களை அப்ரோச் செய்து இந்த மாதிரி செய்ய முடியும், If they send a request it will be appreciated உங்கள் மாநில அரசாங்கம் ஒரு வேண்டுகோள் அனுப்பினால் நிச்சமாக அது அப்பிரிஷியேட் செய்யப்படும் என்று தண்ணீரை அனுப்புவதற்கு முன்னால் சங்கரனை அப்ரோச் செய்து, அவரும் ஃபார்வேர்ட் செய்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது சர்க்காருக்கு ஒன்றுமே தெரியாமல் தண்ணீர் வந்து விட்டது என்பது சரியல்ல. அப்படித் தண்ணீர் கொடுப்பதே தெரியாது என்று சொல்வது உண்மை அல்ல. தெரியும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தண்ணீர் அனுப்புவதைக் கண்டித்துக் தாக்கிப் பேசுகிறார்கள். I do not understand that அந்த இரக்சியம் என்ன? 15 இலட்சம் கேலனாக இருந்தாலும் சரி, ஒரு இலட்சம் கேலனாக இருந்தாலும் சரி,

[திரு. ரா. உமாநாத்] [1983 ஏப்ரல் 21

ஏன் அதை எதிர்க்கிறீர்கள்? அதை முதலில் வரவேற்றுவிட்டு, பிறகு வேண்டுமானால் அதன் நோக்கம் என்ன என்று பேசுங்கள். Whatever it is why should you oppose it? Let the people get the water இன்னும் அதிகமாகக் கிடைக்க முயற்சி எடுக்க வேண்டும். ஆனால் என்ன பார்த்தேன். Total condemnation இது பாலிடிக்ஸ், இது அரசியல், தண்ணீர் வேண்டாமென்றும், ஏன் அனுப்புகிறீர்கள் என்றும் கேட்பது மாதிரி இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் கூறுகின்ற கூற்றின் வழியாக இந்த அரசு அல்லது ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் அந்தக் கொள்கையை எதிர்க்கிறார்கள் என்ற தவறான எண்ணம் வந்து விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஆனால் சில பல தன்மைகளிலே, அதனுடைய தன்மைகள், நோக்கங்கள், மற்றவைகளிலே சில்பல மாச்சரியங்கள், கருத்துக்களைச் சில பேர் எடுத்துச் சொல்லியிருந்தாலும் தண்ணீர் வருவதைத் தமிழக அரசு வரவேற்கிறது; அதை இன்னும் அதிகமாகத் தர வேண்டுமென்கின்ற எண்ணம்தான். சாதாரணமாக இப்பொழுது துறைமுகத்திற்கு ஏராளமான காலன்கள் இதுவரையில் நாம் தந்து கொண்டு இருந்தோம். இரயில்வேக்கும் தந்து கொண்டிருந்தோம். இப்பொழுது எங்கு பார்த்தாலும் தர முடியாத சூழ்நிலை ஏற்படுகிற பொழுது இரயில்வேக்கும் குறிப்பிட்ட அளவிற்கு நம்மால் தர முடியவில்லை; ஓரளவுக்குத்தான் தருகிறோம். கப்பல் துறைமுகத்துக்கும் தருகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(பிற்பகல் 12-20)

ஆகவே தங்களுக்குத் தேவையானதை ஈடுகட்டுவதற்காக இரயில்வே வேகன்கள் கணக்கிலே கொண்டுவருகிறார்கள். அது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அதற்கப்பால், மாண்புமிகு உமாநாத் சொல்வது போன்று, இன்னும் அதிக அளவிற்கு பொதுமக்கள் விநியோகத்திற்குப் பயன்படுகிற அளவிற்கு, கப்பல் மூலமாக, ஒரிஸ்ஸா போன்ற பகுதிகளிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவந்து, துறைமுகப் பகுதிகளுடைய பற்றாக்குறையைப் போக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், எப்போதும் கொடுக்கிற அளவிற்கு நம்மால் கொடுக்க முடியவில்லை. ஓரளவிற்குக் கொடுக்கிறோம். அதை சரிக்கட்டுவதற்கு அவர்கள் கொண்டுவரவேண்டிய அவசியம் இருக்கிறது. சரிக்கட்டுவதற்கு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கும் விநியோகிப்பதற்கு வேண்டிய அளவிற்கு வரவேண்டுமென்று வேண்டுகோளை வைக்கிறோமே தவிர, எதிர்க்கவில்லை. இதை வேண்டாம் என்று நான் சொல்லவும் இல்லை. அவர்களுக்கும் பொறுப்பிருக்கிறது. மாநில அரசிற்கும் பொறுப்பிருக்கிறது, என்கிற காரணத்தால், இந்த மேலும் வேண்டுமென்று, அரசின் சார்பிலே, இந்த வாய்ப்பிலே நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 21]

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, அதிகார பூர்வமாக மாண்புமிகு முன்னவர் இப்படி ஒரு நிலையை எடுத்ததற்காக ரொம்ப நன்றி. நான் பேசினாலும், கூட்டங்களில் இன்னும் யார் யார் பேசினார்களோ அதை வைத்துச் சொல்லவில்லை. A responsible office-bearer of the Ruling Party. அதனால் தான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அதனால் அதை சீரியஸ்-ஆக எடுத்தேன். இப்படி இந்த நிலையைப் பொறுத்த வரைக்கும் ரொம்ப சந்தோஷம். இதிலே கூறுவது ஆளும் கட்சி உறுப்பினர்களோ, மற்றவர்களோ தானம் என்று சொல்லிவிட்டு, இந்திரா காங்கிரஸ் கட்சியிலே சொன்னார்கள். இல்லை, தமிழ்நாட்டில் ஜனங்களுடைய பிரஷரில், இந்த அவையினுடைய பிரஷரும் நிறைய மத்திய சர்க்காருக்கு போயிருக்கிறது. ஒன்று, இரண்டு—லோக் சபையிலும், ராஜ்ய சபையிலும், எல்லா பார்ட்டிகளும் சேர்ந்து, இந்த இந்த வாட்டர் ஸ்கேர்சிட்டி சீரியஸ் சிட்சுவேஷன் என்று சொல்லி எல்லா பார்ட்டிகளும் இணைந்தார்கள். அங்கே ட்ரமண்டஸ் பிரஷர் சர்க்காருக்கு போயிருக்கிறது. அடுத்து மூன்றாவதாக கடைசியிலே உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ராஜ்ய சபாவில் எல்லாக்கட்சிகளும் சேர்ந்து தோழர் இராமமூர்த்தி தலைமையில் 'வாக் அவுட் செய்தது' எல்லோருக்கும் தெரியும். இவ்வளவு சீரியஸ் சிட்சுவேஷன் வந்த பிறகு தான். பிரதம அமைச்சர் இதை நாம் அலட்சியப்படுத்தினால், நிச்சயம் மக்களை பாதிக்கக் கூடிய நிலைமை வரும் என்று they have done it. ஆகவே அந்த முறையிலே தான் நான் இதைப் பார்க்கிறேன்.

அடுத்தபடியாக மாநில விவசாயத் தொழிலாளர்கள் சகபந்தமாக மாநில விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி நிர்ணயிப்பது குறித்து, ஹரி பாஸ்கர் குழு ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்திருக்கிறது. அதைப் பார்த்து சிலர் நினைக்கக் கூடும். தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆதரவானது என்று. இல்லை என்று நான் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், எண்ணம் இருந்தால் போதாது. காரியத்திலே தான் விஷயம். காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே என்றிருக்கிறது. ஹரி பாஸ்கர் குழு சிபாரிசு செய்தவைகளை நீங்கள் சட்டமாக இயற்றினாலும், அந்தச் சட்டம் அரசாங்கத்தின் கழுத்தில் போடப்படும் ஒரு நகையாகத்தான் ஆகும்.

நான் என்ன சொல்கிறேன் என்றால், ஹரிபாஸ்கர் இந்த கூலியை நிர்ணயிருப்பதற்கு முன்னதாக, மாநிலம் பூராவுக்கும் நிர்ணயித்த சட்டக் கூலி, இன்றைக்கும் மாநிலத்தில் முக்காலே அரக்கால்வாசி விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை that is the position கிடைப்பதில்லை என்பது ஆகவேதான் அதை ஒரு ornament என்றும், அதுவும் ஒரு—it will be just an ornament என்று நான் சொன்னேன். தொழிலாளர் அமைச்சர் அடிக்கடி சொல்வார்கள். நீங்கள் விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டி சங்கம் அமைத்து, சட்டக் கூலிக்காக போராடுங்கள் என்று மாண்பு

இல்லாமல் அப்படி இருக்கிறபோது இதற்கு எப்படி நீங்கள்
அங்கே இருக்கிற நிலக்கரியை அவர்களுக்கு கொடுக்கப்போகிறீர்
கள். அதற்கு ஒரு பதில். அரசாங்கத்தின் வாதம் என்ன
என்று சொன்னால், அப்படி நிலக்கரி கிடைக்காமல் அந்த சர்க்
கரை ஆலை நின்று போனால் அந்தச் சர்க்கரை ஆலை நிர்வாகத்தி
திற்கு நின்ற நாட்களுக்கு நாங்கள் காம்பன்சேஷன் கொடுப்போம்
நஷ்டஈடு கொடுப்போம். சரி, நீங்கள் முதலாளிகளுக்கு நஷ்ட
ஈடு கொடுப்பீர்கள். அந்த நிலக்கரி இல்லாததினால் நின்ற
நாட்களுக்கு தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கும்
போது யார் நஷ்ட ஈடு கொடுப்பார்கள் அதேமாதிரி நின்ற
நாட்களுக்கு கரும்பு அறவை செய்ய முடியாமல், கரும்பு காய்ந்து
கிடக்குமே அந்த விவசாயிகளுக்கு யார் நஷ்ட ஈடு கொடுப்பது
(குறுக்கீடு) சீக்கிரம் முடித்து விடுகிறேன், ஆகவே அவர்களுக்கு
நஷ்ட ஈடு இல்லை. புதிய செய்தி என்ன என்று சொன்னால்,
காகித ஆலைக்குக் கொண்டுவரப்படும் இயந்திரங்கள் புதியது
அல்ல. ஒரு பன்னாட்டு முதலாளிகள் ஓட்டி காலாவதியான
ஒரு பழைய பேக்டரியை நமது அரசு வாங்குகிறது. அதுதான்
ரியல் பொசிஷன். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று
தமிழிலே நாம் சொல்வோம். இந்த பன்னாட்டு முதலாளி
கள் ஏன் இதை விற்கிறார்கள். காலாவதியானதை தனக்கு
இனி பயன் இல்லை என்பதால்தான் அவர்கள் விற்கிறார்கள்.
உடனே நம்முடைய தொழில் அமைச்சர் சொல்வார். உலக
வங்கியே அந்த பிராஜெக்டை ஒத்துக்கொண்டிருக்கிறது என்று,
கரெக்ட். பன்னாட்டு முதலாளிகள் தங்களுடைய காலாவதியான
பேக்டரியை நம் தலையிலே கட்டிவைப்பதற்கு, பன்னாட்டு
முதலாளிகளுக்கு உதவி செய்வதற்கும் தான் உலக
வங்கியே இருக்கிறது. Let us not forget that உலக
வங்கியை யார் நடத்துகிறார்கள் இந்த பன்னாட்டு
முதலாளிகளுடைய ஆட்சியிலே இருக்கிற, அமெரிக்கா போன்ற
பெரிய பெரிய நாடுகள்தான் இந்த உலக வங்கியை நடத்துகிறார்
கள். கன்ட்ரோலிங் பவர்ஸ் அவர்களுக்கு, சோ, இந்த முதலாளி
கள் காலாவதியானதை விற்றுத் தள்ளுவதற்கு, டெவலப்பிங்
கன்ட்ரியிலே, அதற்கு இந்த ஓர்ல்ட் பேங்க் உதவி செய்கிறது.
அதனால் உலக வங்கி அப்ரூவ் பண்ணியிருக்கிறது என்பதாலே
அது நடக்கக்கூடிய ஒரு புராஜெக்ட் என்று நீங்கள் நினைக்க
வேண்டாம். இப்படி காலாவதியான ஒரு பேக்டரியை நமது
அரசு வாங்குகிறது என்றால் இதில் கணிசமான ஊழல்
இருக்கும் என் பத்திரிக்கை படித்த விஷயம் அறிந்த
வட்டாரங்கள் கூறுவதில் வியப்பு இல்லை.
இந்தப் பன்னாட்டு முதலாளிகள் இப்படிப்பட்ட வியா
பாரத்தை கமிஷன் என்ற பெயரால், கிக் பெக் என்று ஆங்கிலத்
திலே சொல்வார்கள். அந்தப் பெயரால், கமிஷன் என்ற
பெயரால் லஞ்சம் கொடுப்பார்கள். part of their business

(பிற்பகல் 12-30)

மல்டி நேஷனல் டிரான்சாக்‌ஷனில் கிக் பெக் என்று சொல்வார்கள்.
அதாவது கொடுத்த பணத்தை திரும்பவும் வேறு வகையில் வாங்



குவது, அவர்களுடைய பிசினஸ் வழி, இப்படி ஓட்டுவதற்கு வழி
இல்லாத பாக்டரி நடத்துவதற்கு வழி இல்லாத, ஒரு பாக்டரில்
ஏற்கனவே காலாவதியாகிவிட்ட மெஷினை இங்கே கொண்டு
வந்து பாக்டரி நடத்துகிறேன் என்று சொன்னால் You are answer-
able to the people இப்படி ஒரு பாக்டரியை நீங்கள் கொண்டு
வருகிறீர்கள் என்று சொன்னால், ஜனங்களிடத்தில் நீங்கள் பதில்
சொல்லவேண்டியிருக்கும், அவர்கள் இதிலே ஏதோ ஊழல்
இருக்கிறது என்று எண்ணிக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.
அதற்கு பதில் என்ன என்பதை கட்டாயம் நீங்கள் சொல்ல
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏப்ரல் மாதம் முதல் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று
சொல்லி அறிவித்தார்கள். இப்போது ஏப்ரல் மாதம் முடிய
போகிறது. வேலை கிடைத்ததா, இல்லை. இப்படி சொல்லி
நீங்கள் ஊர் ஜனங்களை ஏப்ரல் பூல் ஆக்கியிருக்கிறீர்கள், என்று
கருதுகிறேன். சத்துணவுத் திட்டத்தில் இன்றைக்கு வேலை
கொடுத்தோம் என்று சொல்கிறீர்கள். 100 ரூபாய்., 150
ரூபாய் மாதம் சம்பளத்தில் வேலை கொடுக்கப்பட்டது
என்று சொன்னால் அது ஒரு வேலையா? நான் கேட்கிறேன்.
நான் டிரேட் யூனியன் பீல்டில் இருக்கிறேன். ஒன்றுமே
இல்லாத மக்களுக்கு மாதத்திற்கு 100 ரூபாய் 150 ரூபாய்
கொடுக்கிறோமே அது சிறந்தது இல்லயைா என்று நீங்கள்
கேட்கலாம். Something is better than nothing நீங்கள் சொல்லலாம்.
அபபடியானால் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மனித
சமுதாயத்தின் வளர்ச்சியிலே பல்வேறு மாற்றங்களை நாம்
கண்டிருக்கிறோம். அடிமை சமுதாயத்திலே அடிமைகளுக்கு
கூட வேலை கொடுத்தார்கள். நீங்களாவது குடும்பத்தில்
ஒருவருக்கு வேலை என்று சொன்னீர்கள். அடிமை சமுதாயத்
தில் அந்தக் குடும்பத்திற்கே வேலை கொடுத்தார்கள். இப்
போது அரசாங்கம் கொடுப்பது 100 ரூபாய் 150 ரூபாய் என்று
சொன்னால் இது ஸ்லேவ் சொசைட்டியை உருவாகத்தானே?
அடிமை சமுதாயத்திலே எல்லோருக்கும் வேலை உண்டு அவனுக்கு
உண்ண உணவு உண்டு. இருக்க இடம் உண்டு. இப்போது
நீங்கள் செய்கின்ற காரியத்தில் வித்தியாசம் என்ன இருக்கிறது.
நீங்கள் கொடுக்கின்ற 100 ரூபாயில் என்ன செய்ய முடியும்?
எல்லோரையும் சோசலிச வாழ்க்கைக்குக் கொண்டு போகா
வேண்டிய காலத்திலே, ஸ்லேவ் சொசைட்டிக்கு, அடிமை சமுத
யத்திற்கு அந்த மக்களை இந்த அரசு இழுத்துச் செல்கிறது
என்று சொல்லி, நீங்கள் அடிக்கடி தலையாட்டிக் கொண்டு
இருப்பதால்; என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்
கிறேன்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, 1983-84-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்க
சட்ட முன்வடிவின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சார்பாக
நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1983 ஏப்ரல் 21

மிகு இராகவானந்தம் அடிக்கடி சொல்வார்கள். திரட்டினோம். பல இடங்களில், குறிப்பாக திருச்சியில் திரட்டினோம். என்ன வாயிற்று? ஆனால் சட்டக் கூலி கேட்டவர்களை மிராசுதாரர் கள் என்பிளாக்காக வெளியேற்றினார்கள். வேலை கொடுக்க வில்லை. சட்டக் கூலிக்கும் குறைவான கூலிக்கு ஆட்களை கொண்டு வருகிறார்கள். அரசாங்கம் போலீஸ் என்ன செய்கிறது. சட்டக் கூலிக்கும் குறைவான கூலியில் வேலை செய்வதற்கு ஆட்களைக் கொண்டுவரும் மிராசுதாரர்களுக்குத்தான் போலீஸ் புரொடக்ஷன் கொடுக்கிறது. நீங்கள் ஹரிபாஸ்கர் குழு வினுடைய பரிந்துரைகளை பாஸ் பண்ணி என்ன பிரயோ ஜனம்? நான் கேட்கிறேன். அங்கே சட்டமல்ல. சட்டம் வேண் டியதுதான். என்போர்ஸ் பண்ணுவதற்கு ரெவின்யூ, போலீஸ் வந்தாலும்கூட, சட்டக் கூலியைவிட குறைந்த அளவிற்கு வேலை செய்வதற்கு ஆட்கள் கொண்டுவருவதில் போலீஸ்காரர்களே ஆதரவு கொடுப்பதற்கு உங்கள் தாசில்தார்கள் என்ன செய் வார்கள்? நிர்பந்தம் மிராசுதாரர்களுக்கு எப்படி வரும்? தாசில் தார்கள் என்ன பேசினாலும், எனக்கு வேலை செய்ய குறைந்த கூலியில் ஆட்கள் கிடைக்கிறார்கள் என்று மிராசு தாரர்கள் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதிலே ஒரு முக்கியமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். they mu t declare as a matter of policy. G. O. அனுப்ப வேண்டும். எல்லா போலீஸ் ஆபிசர்களுக்கும் அனுப்ப வேண்டும். சட்டக்கூலியைக் கேட்ட தொழிலாளர்கள் ஒன்று பட்டு முன்வருவார்களேயானால், அதை முறியடிக்க குறை வான கூலியில் ஆட்களை மிராசுதாரர்கள் கொண்டுவந்தால், தொழிலாளர்களுக்குத்தான் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமே தவிர, குறைவான கூலியில் ஆட்களை எடுக்கும் மிராசுதார் களுக்கு பாதுகாப்புக்கொடுக்கக் கூடாது என்று ஜனவரி 19-ஆம் தேதியன்று நான் கேட்டுக்கொண்டேன். கூலி கேட்டு அந்தப் பொது வேலை நிறுத்தம், ஒரு நாள் வேலை நிறுத்தம் நடந்ததிலே திருமெய்ஞானத்திலேயும், மன்னார்குடிக்குப் பக்கத்திலேயும் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளான விவசாயத் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட கேஸ்களை வாபஸ் பெறவேண்டும். கிட்டத்தட்ட 1¼ வருஷத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஆக இனிமேல் அதை இன்னும் இழுத்துக்கொண்டு இருப்பது சரியல்ல. அதை வாபஸ் பெறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு உடனடியாக கவனிக்கவேண்டிய ஒரு பிரச்னை அனைத்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஸ்தாபனங்கள் ஒரு கூட்டமைப்பை அமைத்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகளின் மூலமாக அதை தீர்க்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கூறுகிறது. ஆனால் நடப்பதைப் பார்த்தால் அரசாங்கம் கூறு வதைப் பார்த்தால் As a Devil qucting the Bible. சைத்தான் வேதம் ஓதுவது போல், என். ஜி. ஓக்களும் ஆசிரியர்களும் பல்லாண்டுகளாக பேசி தீர்க்க முயற் சித்தும் அரசு இடம் தரவில்லை. ஆகவேதான் அரசு ஊழியர்



1983 ஏப்ரல் 21] [திரு. ரா. உமாநாத்]

களிடையே ஏற்பட்டுள்ள ஒரு டெவலப்மென்டை நாம் பார்க்க வேண்டும். இப்போது என். ஜீ. ஓக்கள் மட்டுமல்ல, டீச்சர்ஸ் அரசாங்கத்தோடு கனெக்ட்டட்-ஆக இருக்கக்கூடிய எல்லா ரைவல் அசோசியேசன்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒருங்கிணைந்த ஒரு கமிட்டியை அவர்கள் அமைத்து, மூன்று கட்ட கிளர்ச்சி என்று சொல்லி, இதிலே உண்ணாவிரதம் என்ற முதல் கட்டம் முடிந்துவிட்டது. அடுத்தது தர்ணா என்றிருக்கிறது. அதற்குப் பிறகு மறியல். நான் சொல்லவிரும்புவது பேச்சு வார்த்தைகள் பல தடவை நடத்தியும் முடியாமல் அவர்கள் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறபோது மீண்டும் அவர்கள் இந்த மறியல் என்ற கட்டத்திற்கு போவதற்கு முன்னதாகவே அரசாங்கம் தலையிட்டு அவர்களுடைய பிரச்னையை தீர்த்துக்கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக ஊழல் விஷயமாக, நமது அரசாங்கம் தேர்தலிலே நிற்கிறபோது ஜனங்களுக்கு ஒரு முக்கியமான வாக்குறுதியைச் சொன்னார்கள். A clean administration will be formed ஒரு சுத்தமான வெள்ளை அரசாங்கம். Clean, White என்பது. அதே மாதிரி ஊழல் ஒழிக்கப்படும் என்ற ஒரு பிரதானமான கோஷத்தை வைத்து அதி காரத்திற்கு வந்தார்கள். நான் ஒன்று கேட்கவிரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்கிறபோது பதில் சொல் லட்டும். ஆறு ஆண்டுக்காலத்திலே எந்த ஒரு துறையிலா வது போய் ஊழலை ஒழித்தீர்களா? That was our promise இங்கே பேசுகிறபோது ஆளும் கட்சியிலே லஞ்சம் வாங்குகிறது என்று சொல்கிறார்கள். நான் இப்படிப் போடுகிறேன், ஊழலை ஒழிக்கிறேன் என்று சொல்லி, முக்கியமான ஒரு உறுதி யைக் கொடுத்த சர்க்கார் ஆறு வருஷம் ஆன பிறகும் ஏதாவது ஒரு துறையிலே இருந்த ஊழலையாவது ஒழித்தீர்களா? அதற்கு நேர்மாறாக இன்று இந்த ஊழல் has grown into an Octobus என்று நான் சொல்வேன். அதாவது சமுதாயத்தின் உடம்பு முழுவதையும் கவ்வியிருக்கும் பூதாகரமான ஒரு பூச்சியாக மாறி உள்ளது.

அடுத்து, புகலூரிலே கட்ட இருக்கும் பேப்பர் பேக்டரி. என்னைக் கேட்டால் நான் ஒன்று சொல்வேன். It is a standing monument for ஊழல் அப்படி என்றுதான் சொல்வேன். அது ஊழல் ஸ்தூபியாக விளங்குகிறது. கரும்புச் சக்கையைக் கொண்டு காகித உற்பத்தி செய்து அந்தச்சர்க்கரை ஆலையை ஓட்டுவதற்கு நிலக்கரி கொடுப்பது. இதுதான் ஏற்பாடு. ஏற் கனவே இந்த பேக்டரி கரும்பு சக்கையைக்கொடுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கு பதிலாக நிலக்கரி கொடுக்கப்படும் என்று இந்த பேக்டரினுடைய மேனேஜ்மென்ட் ஒரு அக்ரிமென்ட் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அப்படிச் சொல்கிறபோது நிலக் கரி பிரச்சினை வந்தது. இங்கே நாம் எல்லோரும் பேசினோம். எலக்ட்ரிசிடியே இன்று தகினத்தோம் போட்டது நிலக்கரி

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இதில், 1983–84 ஆம் ஆண்டுக்கு முழுமையாகச் செய்யப்பட வேண்டிய செலவினங்களை ஒன்று திரட்டி, அதற்கான நிதியைக் கோரும் முறையில் இந்தச் சட்டமுன்வடிவு இங்கே தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் இதை செலவு செய்யக்கூடிய நேரத்தில், அதை செலவு செய்யக்கூடிய முறைகளும், அதிலே ஏற்படக்கூடிய பலன்களும் என்ன என்பதை ஆராய்ந்து அதற்கான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

கடுமையான வறட்சியின் கட்டத்திலே தமிழகம் இன்றைய தினம் இருக்கிறது என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். எந்த ஆண்டும் இல்லாதகடுமையான வறட்சி இந்த ஆண்டு இருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். வறட்சி நடவடிக்கைகளைப் பற்றி இந்த மன்றத்திலே பேசியிருக்கிறோம். வெளியிலும் பேசியிருக்கிறோம். இதுவரையில் நடந்து இருக்கும் பணிகள் என்ன, காரியங்கள் என்ன என்பதை அவைக்கு அறிவிப்பது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம், கிராமங்களுக்கும், தொகுதிக்கும், மாவட்டங்களுக்கும் செல்கிற நேரத்தில் வறட்சி பணிகள் சம்பந்தமாக எந்தவிதமான முன்னேற்றத்தையும் நாம் பார்க்க முடியவில்லை என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு மாதத்திற்கு முன்னால் இந்தப் பணிகள் என்ன நிலையில் இருந்தனவோ அதே நிலையில் தான் இரண்டு மாதத்திற்குப் பிறகும் அந்தப் பணிகள் இருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தைப் பற்றி, அங்கே இருக்கிற நிலவரத்தை வைத்து நான் சொல்கிறேன். மாநிலம் முழுவதும் அதே நிலையில்தான் இருக்கும் என்று கருதுகிறேன். திருச்சி மாவட்டத்தில் சென்ற மாதம் 2-ந் தேதி அன்று வறட்சி நிவாரணக் குழு கூட்டப்பட்டது. கிணறுகளில் தண்ணீர் இல்லை. குடிநீர் குழாய்களில் தண்ணீர் இல்லை. குழாய்களிலே தண்ணீர் வரவில்லை என்று சொல்லக்கூடிய நேரத்தில் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு கீழே தண்ணீர் மட்டம் போய்விட்டது வறட்சியால் எனவே கிணறுகளை ஆழப்படுத்துவதற்குத் தேவையான வெடிமருந்துகளை பஞ்சாயத்து யூனியன் ஆணையரிடம் உடனடியாகப் பெற்றுத்தந்து அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்றவர்களிடம் உடனடியாக கொடுங்கள் என்று இரண்டு மாதத்திற்கு முன்னாலே கூறினேன். ஆனால் எங்கே வெடி இருக்கிறது என்று இன்றைக்கும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் ஒரு பகிரங்கக் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன்.

நாம் இங்கே சொல்கிறோம். அங்கேயும் சொல்கிறோம். கிணறுகளிலே தண்ணீர் இல்லை; குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை, உடனே கிணறுகளை ஆழப்படுத்த வேண்டுமென்று





சொல்கிறோம். அதற்கு தேவையான தோட்டாக்கள் இல்லாமல், வெடிமருந்துகள் இல்லாமல் கிணறுகளை ஆழப்படுத்த முடியவில்லை. தேவையான தோட்டாக்கள் இருக்கின்ற இடம்—தனிப்பட்ட வியாபாரிகளிடம் தோட்டாக்கள் இருக்கின்றன. அதற்கான லைசென்ஸ் கொடுப்பது மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிதான். அதற்கான அனுமதியைக் கொடுப்பது அக்ரிகல்ச்சர் எஞ்சினியரிங் டிபார்ட்மென்ட். இப்படி பல்வேறு இடங்களில் சுற்றி, ஒப்பந்தக்காரர்கள் தேவையான தோட்டாக்களையும் வெடிமருந்துகளையும் வாங்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு அவை கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கு தேவையான இபபடிபபட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பதன் மூலம் விரைவாக வேலை செய்ய முடியும் என்ற யோசனையை இன்றைக்குக்கூட ஏற்றுக் காள்ள முடியாத நிலையில் இருப்பதால் கிணறுகள் இன்றைக்கும் கூட ஆழப்படுத்த முடியாமல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு அதாவது ஒன்பதுஊ ராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு மொபைல் யூனிட் இருக்கிறது. குடிநீர் குழாய்களைப் பழுது பார்ப்பதற்கு என்று ஒரு டிவிஷனுக்கு, அதாவது 9 ஒன்றியங்களுக்கு ஒரு யூனிட் இருக்கிறது. அங்கே ஆழ்குழாய்கள் எத்தனை இருக்கிறது என்று பார்த்தால்—அனைத்திலும் தண்ணீர் மட்டம் கீழே போய் விட்டது—கிட்டத்தட்ட 2000 ஆழ்குழாய் கிணறுகள் இருக்கின்றன. குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிற இந்த ஒரு மொபைல் யூனிட்டை வைத்து அத்தனையையும் சீர்செய்து தணணீர் பெற்றுத்தர முடியாது. ஒரு தடவை சுற்றிவர வேண்டுமென்றால் எவ்வளவு காலம் ஆகும்என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே அதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். இதுவரையில் மாற்று ஏற்பாடு செய்யப்படவில்லை.

சென்ற ஆண்டு வறட்சி காலத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தனியார் இடத்திலே இருக்கிற ரிக்ஸ் (குழாய் போடும் இயந்திரங்கள்) பலவற்றைப் பெற்று, வாடகைக்கு வாங்கினார்கள். விவசாய இலாகாவில் இருக்கிற இயந்திரங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிற இயந்திரங்கள் எல்லாவற்றையும் பெற்று கிணறுகள் வெட்டவும், ஆழப்படுத்தவும் குழாய்கள் போடவும், பழுது பார்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் இந்த ஆண்டு அதைப்போன்ற நடைமுறை இதுவரை செய்யப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிதி ஒதுக்கீடு பற்றி நான் விவரமாகக் கூற முடியும். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு கிணறுகளை ஆழப்படுத்த ஒதுக்கியிருக்கிற தொகை 10,000 ரூபாய்தான். இதை வைத்து அவர்கள் கிணறுகளை ஆழப்படுத்தி, குடிதண்ணீர் கொடுக்க வேண்டும். இப்படி இருந்

[திரு. இரா. கருப்பையா] [1983 ஏப்ரல் 21

தால் என்ன வேகத்தில் நடைபெறும் என்பதை நீங்கள் சிந்திக்க
வேண்டும். ஆக, குடிதண்ணீர் முழுமையாகப் பெற்றுத் தரக்
கூடிய ஏற்பாடு இன்றையதினம் இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

உணவு விநியோகத்தைப் பொறுத்தவரையில் கடந்த 3 மாத
மாக கிராமப்புறங்களில் உணவு விநியோகம் என்பது நடைபெற
வில்லை; பிராக்டிக்கலி நில் (nil) அமைச்சரவர்கள்
சொல்லலாம் ஓரளவுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று.
ஒரு குடும்பக்கார்டுக்கு வாரம் 5 கிலோ கொடுக்க வேண்டுமென்
பது அரசாங்கம் அறிவித்திருக்கிற கொள்கை. இன்றையதினம்
15 நாட்களுக்கு 3 கிலோ கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு சொல்
கிறார்கள். எங்கு பார்த்தாலும் வறட்சி, வருமானம் இல்லை
இந்த நிலையில் குறைந்தபட்சம் உணவு விநியோகத்தையாவது
செய்து மக்களைப் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சில இடங்
களில் இருக்கக்கூடிய தன்மைகளைப் பயன்படுத்தி பம்புசெட்
மூலம் விவசாயம் செய்து, ஏதாவது கொஞ்சம் அரைகுறையாக
விளைவிக்கலாம் என்று நினைத்தால் இப்போதுதான் மின்சார
வாரியத்திற்கு சரியான காலம் என்று தெரிகிறது. மின்சாரத்தை
துண்டித்துவிடுகிறார்கள். கேட்டால் பழைய பாக்கி கட்டவில்லை
என்று சொல்கிறார்கள். அவ்வப்போது வசூல் செய்திருக்கவேண்டி
யது அவர்களுடைய கடமை, பொறுப்பு, அந்தந்த மாதத்திற்குத்
தேவையான மின்சார கட்டணத்தை பெற்றுக்கொண்டு ஏற்
கெனவே இருந்த 'பழைய பாக்கியை பின்னால் பெற்றுக்கொள்ள
லாம் என்ற அடிப்படையிலே மின்சாரத்தைக்கொடுத்து, இருக்கிற
தண்ணீரை வைத்து விவசாயத்தைச் செய்வதற்கு உதவி செய்
வதற்கான கொள்கை கூட இன்றையதினம் அரசாங்கத்திடம்
இல்லை. மின்சாரம் வாரியம் அதை நிறைவேற்ற மறுக்கிறது
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

ஏழரை கோடி ரூபாயை கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக
அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. யார் மூலமாக இதைச் செய்
கிறீர்கள்? நில வளவங்கி மூலமாக. நில வள வங்கியிலே கடன்
வாங்குவது என்றால் எப்படி என்று எல்லோருக்கும் தெரியும்
விவசாயி இப்போது மனு செய்தால், இந்த வறட்சியும் போய்
அடுத்த வறட்சியும் போய், மூன்றாவது ஆண்டிலே நிச்சயமாக
நிலவள வங்கியிலேயிருந்து கடன் வாங்கிவிடலாம். வறட்சியின்
காரணமாக கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். என்பதற்
காக, நடைமுறைகளை சுலபப்படுத்தி, அரசாங்கம் கொடுக்கக்
கூடிய அந்தத் தொகையை நேரிடையாக அந்த விவாயிகளுக்கு
கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நிலவள வங்கியில் அவர்கள்



1983 ஏப்ரல் 21] [திரு. இரா. கருப்பையா]

30 ஆண்டுகளுக்கான பத்திரம் இருக்கிறதா என்று கேட்பார்கள்
ஏற்கெனவே வாங்கிய கடனை திருப்பி செலுத்தியாகிவிட்டதா
என்று கேட்பார்கள்.

ஒட்டகம் ஊசித் துவரத்திலே நுழைவது என்று சொல்வார்
களே அப்படித்தான் நடைபெறும் யாரோ சிலர் கடனை பெற்றிருப்
பார்கள் என்ற நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த ஏற்பாடும்
அவர்களுக்கு பயன் அளிக்கப்போவதில்லை என்று குறிப்பிட
விரும்புறேன்.

கிராமத்திலே பார்த்தால், கடன் வசூல் கெடுபிடியாக
நடந்துக் கொண்டிருக்கிறது. ஜப்தி எல்லாம் இல்லை.
முடிந்த அளவுக்கு வசூல் பண்ணுங்கள் என்று சொல்லி
யிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கூட்டுறவு அதிகாரிகள்
நான்கு காரை எடுத்துக்கொண்டு போகிறார்கள். 10 அதிகாரிகள்
செல்லுகிறார்கள். தேவைப்பட்டால் போலீஸ்காரர்களைக் கூட
அழைத்துக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் இதன்பெயர்
ஜப்தி இல்லை—முடிந்த அளவுக்கு வசூல் செய்துவது என்று
பெயர். இம்மாதிரியான முறையிலே கடன் வசூல், வரி வசூல்
போன்றவை வறட்சிப் பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்
டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்களில் இன்றைக்கு சமுதாயத்தின் அடி மட்
டத்திலே இருக்கிற கைத்தறி தொழிலாளர்களும் இருக்கிறார்கள்.
அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு அவர்களுடைய
தொழிலுக்கு மிகவும் தேவையான நூல் கிடைக்கவில்லை.
நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அவர் அனுமதித்தால்,
பல இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போய் காட்டுவதற்கு
தயாராக இருக்கிறேன். கைத்தறி தொழிலாளர்களுக்கு நூல்
கிடைக்கவில்லை. கடந்த ஒரு மாத காலத்தில் ஒரு கட்டு நூலின்
விலை 50 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. 30 தினங்களுக்குள்ளே
இவ்வளவு உயர்வா? கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் வினியாகம்
என்பது கடந்த 3 மாத காலமாகவே கிடையாது. இவ்வாறு
இருக்கிற கைத்தறி தொழிலாளர்கள், இன்றையதினம் உள்ள
வறட்சி நிலைமையில், தங்களை தற்காத்துக்கொள்வது எப்படி
என்ற பெரிய பிரச்னையில் இருக்கிறார்கள். ஆகவே, இம்
மாதிரியான நிலை இனி நீடிக்கக்கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அரசாங்கத்தின் தொழிலாளர்கள் சம்பந்தமான கொள்கையை
எடுத்துக் கொண்டால் அதைப்பற்றி தெளிவாக பல முறை
குறிப்பிட்டிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு சரியான பாது
காப்பு இல்லை. தொழிலாளர்கள் மீது அடக்கு முறைச் சட்டம்,
வேலை நிறுத்தத் தடைச் சட்டம் போன்ற சட்டங்கள் கொண்டு
வரப்பட்டிருக்கின்றன. ஆனால் அமைச்சர் அவர்கள், இது
வரையில் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தினோமோ அதை

பிரயோகித்தோமா என்று குறிப்பிடுவார்கள். இப்போது
நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். பயன்படுத்தாத
நிலையில் உள்ளதாகக் கூறக்கூடிய ஒரு சட்டம் நமக்குத் தேவையா
என்று கேட்கிறேன். ஆகவே, அந்த அடிப்படையில் அடக்கு
முறைச் சட்டங்கள் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்க
இருக்கக்கூடிய தொழிற்சங்கங்களை சீர்குலைக்கின்ற, பிளவு
படுத்துகின்ற அதுவும் குறிப்பாக அதிகார இயந்திரத்தைப் பயன்
படுத்தி, ஆளும் கட்சியின் தொழிற்சங்கங்களை ஊக்குவிக்கும்
முறையில் தொடர்ந்து பல்வேறு இடங்களில் நடவடிக்கை எடுக்
கப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன். அதற்
கான ஆதாரங்கள் தேவை என்றால், எந்தச் சந்தர்ப்பத்திலும்
சபையிலே சமர்ப்பிக்க தயாராக இருக்கிறேன் என்பதையும்
கூறிக் கொள்கிறேன்.

சட்டங்கள் எவ்வளவோ கொண்டு வந்திருக்கிறோம் என்று
வரிசையாக சட்டங்களை அடுக்கிக் கொண்டே போகிறோம்.
இந்தச் சட்டங்களின் விளைவாக, பயன் அடைந்திருக்கிற தொழி
லாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள்
தயதுசெய்து கூறவேண்டும். conferment of permanent rights. 480
நாட்கள் வேலைசெய்த தொழிலாளர்களுக்கு வேலை நிரந்தரம்
அளித்து இயற்றப்பட்ட சட்டத்தின் பயனாக எத்தனை தொழி
லாளர்களுக்கு அந்த உரிமையை பெற்றுத் தந்திருக்கிறோம்?
கைத்தறித் தொழிலாளர்களுக்கு சட்டம் இருக்கிறது.
அந்தச் சட்டத்தின் பயன் எத்தனை கைத்தறி தொழிலாளர்
களுக்கு நன்மையை அளித்திருக்கிறது என்று குறிப்பிட்டுச்
சொல்ல முடியுமா? அந்தச் சட்டங்கள் ஏட்டு அளவிலேதான்
இருக்கிறது. ஆனால் அவைகள் நடைமுறையில் பயன் அளிக்க
வில்லை, செயல்படுத்தப்படுவதும் இல்லை என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இப்போது எடுத்துக் கொண்
டால், நம்முடைய நாட்டிலே நுழைவு வரி வந்திருக்கிறது.
அது சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்
முடைய மாநிலத்திற்கு வருமானம் அதிகமாக தற்போது
வருகிறது என்பது எதார்த்தமான உண்மை. ஆயத்தீர்வை
மூலமாகவும், சேல்ஸ் டாக்ஸ் மூலமாகவும் அதிகமான வரு
மானம் கிடைத்திருக்கிறது. ஆனால் செய்யக்கூடிய செல
வினங்களை எந்த முறையில் செய்யவேண்டும் என்று பார்த்து,
பிறகு மத்திய அரசிடம் தேவையான நிதி ஆதாரத்தை பெற
வேண்டும் என்கிற வகையில் முயற்சி எடுத்து, போராடுவதன்
மூலமாக அதைப் பெறுவதற்கு பதிலாக இன்றையதினம்
வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிற வாடுகின்ற மக்கள்
மீது மேலும் பளுவைச் சுமத்தக்கூடிய முறையில் நுழைவு
வரி கொண்டு வந்திருக்கிறீர்கள்.





ஆனால் அதே நேரத்தில், பொது கணக்குக் குழுவின்
அறிக்கையைப் பார்த்தால், ஸ்டீல் ரோலிங் மில்ஸஸுக்கு வரி
விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யார் சாதாரண
ஆளா ? அதேபோல சர்க்கரை ஆலைக்காரர்களுக்கு, பர்ச்சேஸ்
டாக்ஸ்சிலிருந்து விதிவிலக்கு. சர்க்கரை ஆலைக்காரர்களுக்கு
கேன் செஸ் என்றவகையில் கோடிக் கணக்கான ரூபாய் விதி
விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்திலே கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை
கேட்டால், நமது மாநில அரசாங்கம் சர்க்கரை ஆலைக்காரர்
களுக்கு 8 கோடி ரூபாய் மானியம் கொடுத்திருக்கிறது. சர்க்கரை
ஆலை முதலாளிகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக
8 கோடி ரூபாயை மானியமாக இன்றைய தினம் அரசு கொடுத்து
இருக்கிறது. இதை எல்லாம் ஒரு பக்கத்திலே செய்து விட்டு,
மக்கள் மீது 26 கோடி ரூபாய்க்கு நுழைவு வரி விதிக்க வேண்டியது
அவசியம்தானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சி சம்பந்தமாக இருக்கக் கூடிய
நிலைமையை ஏற்கனவே பேசியிருக்கிறோம். 22 கோடி ரூபாய்
அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் வேலை
இல்லாத் திண்டாட்டம் தீர்க்கப்படுவதற்காக, தொழில் வளர்ச்
சியை அதிகப்படுத்துவதற்காக எந்த அளவுக்கு நம்முடைய அரசு
கவலையோடு இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

ஆகவே அதே முறையிலே தொழில் வளர்ச்சிக்கான கவனம்
இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

போலீஸ் சம்பந்தமாக தொடர்ந்து நாம் சொல்லிக்கொண்டு
வந்திருக்கிறோம். தொழில் தகராறிலே போலீஸ் தலையிடக்
கூடாது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால்
தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஏதாவது தகராறு
ஏற்பட்டுவிட்டால் அல்லது உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம்
என்று ஏற்பட்டுவிட்டால் போலீஸ்காரர்கள் உடனே வந்து ஸ்டே
ஷனுக்குப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். இதுதான் இன்
றைக்கு இருக்கக் கூடிய நிலைமை. தொழிற்சங்க உரிமை,
ஜனநாயக உரிமை, அடிப்படை ஜனநாயக உரிமைகளின் அடிப்
படையில் நடக்கின்ற இயக்கங்களில் போலீஸ் குறுக்கிடுவது
என்பது அன்றாட நிகழ்ச்சியாக ஆகி இருக்கின்றது என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இப்போது
யாரும் எந்தவிதமான இயக்கமும் நடத்த முடியாது. உண்ணா
விரதமா போலீஸ்காரர்கள் அனுமதி பெற்றுத்தான் நடத்த
வேண்டும். தர்ணா, சத்தியாகிரக போராட்டம் ஆகியவை
எல்லாம் வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்து நாம் பெற்றிருக்கக்
கூடிய உரிமை. மறியல் செய்யக்கூடிய உரிமை இருக்கின்றது.
இப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகளின்படி நடப்பதற்குகூட

முடியாமல் போலீஸ் தலையீடு தடியடி செய்து அவற்றை நசுக்கு
வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பது தொடர்ச்சியாக நடந்து
கொண்டிருக்கிறது. அது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஜன
நாயக முறையிலே மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதற்கு
முடியாத நிலைமையில்; எந்தவிதமான இயக்கமாக இருந்தாலும்
அவற்றை அடக்குவது என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை
யாக இருக்கின்றது. தடியடிப் பிரயோகம் நடத்துவது சர்வ
சாதாரணமாகி விட்டது. மூன்றாண்டுகளுக்கு முன்பு விவசாயி
கள் போராட்டத்தை திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள்
நடத்தினார்கள். ஆனால் அப்போது "சேஸ் தெம் அவே" என்ற
வகையிலே அவர்களை அடித்து விரட்டுங்கள் என்று சொல்கின்ற
நிலைமை ஏற்பட்டது. அப்படி அடித்து விரட்டுங்கள் என்று
சொல்கின்ற நிகழ்ச்சி தொடர்ந்து நடக்கின்றது. அடித்து
விரட்டுவது என்றால் சமுத்திரத்திற்கா விரட்டுவது? ஆகவே
இந்த மாதிரியான கொள்கைகள் சரியல்ல. ஜனநாயக இயக்கங்
களை ஒடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படுவது
சரியல்ல.

அதுமட்டுமல்ல லாக்கப்புகளிலே மரணம் சாதாரண நிகழ்ச்சி
யாகி விட்டது. ஒரு மரணம் ஏற்பட்டது என்றால் விசாரணை
நடக்கின்றது. விசாரணை நடத்துவது யார்? இன்ஸ்பெக்டர்
வருவார், ஆர்.டீ.ஓ. வருவார். இவர்கள் இரண்டுபேரும் சேர்ந்து
ஒரு அறிக்கையைத் தயாரித்து விடுகிறார்கள். அதாவது
அடித்துக் கொல்லப்படவில்லை, அது தற்கொலைதான் என்று
முடிவு செய்துவிடுவார்கள். அதையே அமைச்சர்களும் சட்ட
மன்றத்திலே சொல்லிவிடுவார்கள். நூற்றுக்கணக்கான
கொலைகள் இன்று நடக்கின்றன. இந்த நிலைமையிலே ஒரு
மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். இதிலே விருப்பு,
வெறுப்பு என்பது அரசாங்கத்திற்கும் அமைச்சர்களுக்கும்
இருக்க வேண்டியதில்லை ஆனால் அதே நேரத்தில்
எங்கேயாவது லாக் அப்பிலே மரணம் என்று செய்தி கிடைத்து
விட்டால் உடனடியாக ஒரு நீதிபதியை வைத்து விசாரணை
நடத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைக்கு ஏற்பாடு
செய்தால் இப்படிப்பட்ட காரியங்களைத் தடுத்து நிறுத்த
முடியும். போலீஸ் அத்துமீறிய நடவடிக்கைகளைப் பற்றி வேறு
பல விஷயங்கள் சொல்ல வேண்டியிருந்தாலும் நேரம் இல்லை.

சென்னையிலே வேலை செய்யக்கூடிய ஹார்பர் தொழிலாளி
சண்முகவேலு. அவர் தன்னுடைய தகப்பனார் இறந்துவிட்ட
தன் காரணத்தால் இறுதி சடங்கிலே கலந்துகொள்ளச் சென்றவர்
திரும்பவில்லை. இவர் நெல்லை மாவட்ட களக்காடு காவல்
நிலையத்தைச் சேர்ந்த சுப்பிரமணியபுரம் என்ற ஊருக்குப்
போனார். ஆறு ஆயிரம் ரூபாய் பணத்தோடு சென்றார்.
இறுதிச் சடங்கிலே கலந்துகொள்ளச் சென்றவர் திரும்பி
வீட்டுக்கு வரவில்லை. பிணம் இரண்டு நாட்கள் கழித்து



கிடைக்கின்றது. புகார் செய்கிறார்கள் இது குறித்து. பணம்
வைத்திருந்தார், காணவில்லை என்று புகார் செய்கிறார்கள்.
ஆனால் போலீஸ் இலாக்காவின் சாமர்த்தியம் எப்படி இருக்
கின்றது தெரியுமா? புகார் செய்யப் போனவர்களை மிரட்டு
கிறார்கள். புகார் கொடுத்தால் வாங்கிக் கொண்டு ரசீது
கொடுக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்
றது. இப்படிப்பட்ட பல்வேறு சம்பவங்கள் இந்த மன்றத்திலே
குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆகவே காவல் துறை சம்பந்தப்
பட்ட வகையில் அடிப்படையான மாற்றம் தேவை. ஜனநாயகத்
திலே ஆளும் கட்சி எதிர்க்கட்சியாகவும், எதிர்க்கட்சி ஆளும்
கட்சியாகவும் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன.
ஜனநாயக இயக்கங்களைத் தடுக்கின்ற வகையிலே போலீஸ்
தலையிடுவதைத் தடுக்க வேண்டும்.

அடுத்து மத்திய அரசினிடத்திலே அரிசி கேட்கிறோம், நிதி
கேட்கிறோம், தொழில் துறை சம்பந்தப்பட்டவகையிலும் நியாய
மான நடவடிக்கை எடுங்கள் என்று நாம் மத்திய அரசினிடத்
திலே கேட்கிறோம். ஆனால் மாநில அரசைப் பொறுத்தவரை
யில் நம்முடைய அதிகாரத்தை வைத்து நாம் மக்களுக்குப்
பாதுகாப்பாக செயல்பட வேண்டும். அதிலே தயக்கம் ஏற்
பட்டிருக்கின்றது. அந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

நம்முடைய மாநிலத்திலே என்.ஜி.ஓ.க்கள் இருக்கிறார்கள்.
ஆனால் மத்திய அரசின் ஊழியர்களுக்கு பஞ்சப்படி போன்றவை
கொடுக்கப்படுகின்றபோது, நம்முடைய என்.ஜி.ஓ.க்களுக்கு
அதைத் தருவதற்கு நிதியமைச்சர் மறுக்கிறார்.

(பிற்பகல் 12-50)

இந்த அரசு இயந்திரம் யாரை நம்பி இருக்கிறது? தமிழ்
நாட்டில் இருக்கின்ற $6\frac{1}{2}$ இலட்சம் என்.ஜி.ஜி.ஓ.க்களை நம்பி
இந்த இயந்திரத்தை செயல்படுத்த வேண்டிய நிலையில் இருக்
கிறோம். அவர்கள் கேட்பதை எல்லாம் கொடுக்க வேண்டும்
என்று யாரும் அடிப்படையாக சொல்லவில்லை. நியாயமான
அவர்களுடைய கோரிக்கைகளை தீர்ப்பதற்கான முறையில் ஒரு
நடைமுறை தேவை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். அவர்களை எதிரியாகப் பாவித்து அவர்களுடைய
பிரச்சனையை தீர்க்காமல் இருப்பது சரியல்ல. அவர்கள் நம்
முடைய ஊழியர்கள் என்ற உணர்வோடு அவர்கள் பிரச்சனை
சம்பந்தமாக ஒரு சரியான அணுகு முறையை கடைப்பிடிக்க
வேண்டும். பஞ்சப் படியை அவர்களுக்கு உடனே வழங்குவதற்
கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதோடு, ஓய்வு
பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் வேண்டும் என்பதற்காக
அவர்களே பல யோசனைகளை சொல்லியிருக்கிறார்கள். அதைப்
பார்த்தால் அரசுக்கு அதில் எந்தவிதமான நஷ்டமும் இருக்கும்
என்று நாம் நம்பவில்லை. ஆகவே அந்த அடிப்படையில் அதை

[திரு. இரா. கருப்பையா] [1983 ஏப்ரல் 21

பெரிய பிரச்சனையாக கொண்டு இன்றைய தினம் அதைத்
தீர்க்காமல் இருப்பது சரியானதாக இருக்க முடியாது.
ஆகவே என்.ஜி.ஜி.ஓ. பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்று
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதி சம்பந்தமாக, மணப்
பாறை நகரம் நிரந்தரமாக வறட்சியில் பாதித்து இருக்கக்கூடிய
நகரம். சில இடங்களுக்கு வறட்சி சில வருடங்களில்தான்
வரும். ஆனால் மணப்பாறையில் நிரந்தரமாக வறட்சிதான்.
நிரந்தரமாக குடிநீருக்குப் பஞ்சம். அந்த மக்களின் குடிநீர்ப்
பஞ்சத்தைப் போக்க குளித்தலையிலிருந்து காவேரி நீரை அங்கே
கொண்டுபோய் கொடுக்க வேண்டும் என்று கோரி பல ஆண்டு
காலமாக கோரி வருகிறார்கள். இந்த நேரத்தில் அந்த மக்
களுடைய நிரந்தரமான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற
அந்த மணப்பாறை நகராட்சியிலும் அதைச் சுற்றிலுமுள்ள
மக்களுக்கு காவேரி நீரை கொண்டு சென்று அவர்களுடைய
குடிநீர் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை
அரசு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அடிப்படையாக விவசாய உற்பத்திக்கு
ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில் அரசின் கொள்கையும் திட்டங்
களும் இருக்க வேண்டும், விவசாயிகளின் கடன் பளுவை குறைப்
பதற்கான முறையில் நடவடிக்கை இருக்க வேண்டும், தொழில்
துறையில் உற்பத்தியை பெருக்குவதற்கு புதிய தொழிற்சாலை
களை ஏற்படுத்துகின்ற முறையில் திட்டங்களை உருவாக்க
வேண்டும். காவல் துறை சம்பந்தமாக இன்றைய தினம் இருக்
கின்ற கொள்கைகளை முழுமையாக மாற்றப்பட வேண்டும்.
ஜனநாயக இயக்கங்களை ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கக்
கூடிய முறையில் அதனுடைய கொள்கை இருக்க வேண்டும்
என்று சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.
நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. சி. கோபால்)
மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசும்
போது அவர்களுடைய பேச்சின் சில பகுதிகள் கவனித்துப்
பார்த்து நீக்கப்படும் என்றும் என்னுடைய தீர்ப்பை பின்னால்
அறிவிக்கிறேன் என்றும் அறிவித்து இருந்தேன். கீழ்க்கண்ட
அவருடைய பேச்சின் பகுதிகளை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்*
இந்த வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடு
கிறேன். நான் இப்போதுகூறியதையும் சேர்த்து நீக்கும்படி
உத்திரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1983 ஏப்ரல் 21]

**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலை
வர் அவர்களே, படித்ததில் சட்டமன்றத்தின் விதிமுறைக்கு புறம்
பாக எதுவும் இல்லை. இது ஒரு மொழிப் பிரச்சனை, உணர்வு
பூர்வமான பிரச்சனை. யார் யாருக்கு அந்த மொழி உணர்வு
இருக்கிறதோ அவர்கள் வாயிலிருந்து இப்படிப்பட்ட நெருப்பு
துண்டுகள் வந்து விழும். ஆனால் இவைகளை நீங்கள் எடுத்து..

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வாசகங்கள்
எதோடு வருகிறது என்று சொன்னால் அந்த வழக்கோடு ஒட்டி
அந்தவழக்கை தொடுத்த அம்மையாரை மிரட்டுவது மாதிரி
வருவதன் காரணமாகத்தான் எடுக்கப்படுகிறதே தவிர இதை
விட பயங்கரமான நெருப்புத் துண்டுகள் கூட மொழிப் பிரச்
சனைப்பற்றி தனியாக பேசுவதைப்பற்றி எந்தவிதமான அக்கறை
யும் இல்லை. நாம் ஆதரிக்கலாம். ஆனால் அதோடு தொடர்
புடையதோடு வருவதன் காரணமாகத்தான் அந்த அம்மையாரை
மிரட்டுகின்ற அளவுக்கு வருகின்ற வாசகங்கள் நீக்கப்படுகிறது.
மற்றவைகள் எல்லாம் அப்படியே வைத்து இருக்கிறார்கள். அதை
மட்டும் தான் படித்தார்களே தவிர மற்ற பகுதிகள் இருக்கின்
கின்றன.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் என்னுடைய உரையை நான்
தொடங்குவதற்கு முன்னாலே எதிர்க்கட்சியாக இருந்தாலும்கூட
ஆளுங்கட்சி செய்கிற நல்ல காரியங்களைப் பாராட்டவேண்டு
மென்ற முறையிலே முதலிலே அதைப் பாராட்டி என்னுடைய
உரையைத் தொடங்குகிறேன்.

அண்மையிலே வரலாற்றுச்சிறப்புமிக்க ஒரு ஒப்பந்தத்தினை
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர
முதலமைச்சருடன் செய்து இங்கே தமிழகத்திற்கு கிருஷ்ணா நதி
நீரைக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது
ஏறத்தாழ ஒரு ஆண்டுக்காலத்திற்கு மேலாக இருந்த பிரச்சினை,
இன்றைக்கு அதற்கு விடிவு காலம் பிறந்திருப்பதற்கு அதற்கான
முயற்சிகளை எடுத்த மாண்புமிகு முதலமைச்சருக்கு என்னுடைய
பாராட்டு, அதே நேரத்திலே 600 கோடி ரூபாய்க்கு மேல்
செலவாகக்கூடிய மாபெரும் திட்டமாக இருக்கிற காரணத்தி
னாலே ஆந்திர மாநில அரசும் தமிழக மாநில அரசும் மட்டுமே
செய்துவிட முடியாது. இதற்கு மத்திய அரசு கணிசமான அள
வுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மத்திய நிதி உதவியோடு ஆந்திர மாநில அரசும் நம்முடைய
மாநில அரசும் ஓரளவுக்கு நிதி உதவி செய்ய வேண்டியுள்ளது.
தமிழகத்தைப் பொறுத்தவரையில் 200 கோடி ரூபாய் ஆகும்
என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 200
கோடி ரூபாயில் மத்திய அரசு உதவி போக மீதம் இருக்கக்
கூடிய நிதியை எப்படித் திரட்டுவது என்பதற்காக என்னுடைய

[திரு. ப. நெடுமாறன்] [1983 ஏப்ரல் 21

யோசனையை நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.
எங்களுடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்ச
ராக இருந்த நேரத்திலே திருநெல்வேலி மாவட்டத்திலே மணி
முத்தாறு திட்டம் வகுக்கப்பட்டது, அந்த மணிமுத்தாறு திட்
டத்திற்கு அங்கே உள்ள விவசாயிகளிடம் கடன் திரட்டி அதன்
மூலம் அந்த அணை கட்டிமுடிக்கப்பட்டது. அதைப்போல்
கிருஷ்ணா நதி நீர் சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய மக்
களுக்கு மட்டுமல்ல, சென்னை நகரத்தைச் சுற்றியிருக்கிற ஏராள
மான தொழிற்சாலைகளுக்கும் கிடைக்க இருக்கிறது. ஆகவே
சென்னை நகரத்திலேயும் சென்னை நகரத்தைச் சுற்றியிருக்கிற
தொழிற்சாலைகளின் அதிபர்களிடமிருந்தும் நிதி உதவியைக்
கடன்பத்திரங்களாக இந்த அரசு பெற்று அதன்மூலம் இந்தத்
திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப்போலவே தமிழகம் இன்றைக்கு வரலாறு காணாத
வறட்சியை எதிர்நோக்கியிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய
மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டி
யதைப்போல் அடுத்த மாதம் என்ன ஆகும் என்பது யாருக்கும்
தெரியாது, எவ்வளவு மோசமான நிலையிலே தமிழகம் இருக்
கிறது, இதற்கு முன்னாலே எத்தனையோ வறட்சிகளை தமிழகம்
சந்தித்தாலும் இதுபோன்ற மோசமான வறட்சியை தமிழகம்
இதுவரை சந்தித்ததில்லை. இந்த மாதம் குடிக்க தண்ணீர்
இல்லை, கிராமங்களிலே உள்ள மக்கள் மிக அவலமான நிலைக்கு
ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலைமை இருக்
கிறது. இன்னும் சில மாதங்களிலே வறட்சி உச்ச கட்டத்தை
அடைகிற நேரத்திலே மக்கள் சொல்லொணாத் துயரத்தைச்
சந்திக்க இருக்கிறார்கள். மத்திய அரசு 60 கோடி ரூபாய்
நிதியுதவி அளிப்பதாகச் சொல்லியிருக்கிறது. இது மிக மிகக்
கொஞ்சம், யானைப் பசிக்கு சோளப் பொறி என்று அடிக்கடி
இந்த அவையிலே சொல்லப்பட்டதைப்போல் இருக்கிறது, ஆகவே
மத்திய அரசு முழுமையாக நிதியுதவியை செய்யவேண்டும். தமி
ழக மக்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும், ஒரு
பெரிய வறட்சி, வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டிருக்கிற
நேரத்திலே சட்டமன்றக் கூட்டத் தொடர் 26 அன்றோ 27 ஆம்
தேதியோ முடிவடைவதற்குப் பின்னாலே நம்முடைய
அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும்
பொறுப்பு ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலேயும்
தங்கி ஒரு மாத காலமாவது அங்கே இருந்து வறட்சி
நிவாரணப் பணிகளை முடுக்கிவிடவேண்டும். மாவட்டம்
பூராவும் அங்கங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை உடன்
வைத்துக்கொண்டு மக்களின் துயர் துடைக்கும் பணியிலே மிகத்
தீவிரமாக ஈடுபட்டாகவேண்டும், நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் ஒரு ஹெலிகாப்டர் வாங்கியிருக்கிறார்கள். அதை
இதுபோன்ற சந்தர்ப்பத்திலாவது பயன்படுத்தவேண்டும். நம்



1983 ஏப்ரல் 21] [திரு. ப. நெடுமாறன்]

முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த ஹெலிகாப்டரிலே தமி
ழகம் பூராவும் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று வறட்சி
நிவாரணப் பணிகளைப் பார்வையிட வேண்டுமென்று வற்புறுத்த
விரும்புகிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே இதுவரை முற்றிலும் பயன்படாத
ஒரு துறை இருக்கிறது. அன்டேப்டு ரிசோர்ஸ், அதை முற்றிலு
மாகப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்
டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டின் கடற்கரை நீளம் 650 மைல்
கள், தமிழ் நாட்டில் ஏறத்தாழ 7 மாவட்டங்களிலே, சென்னை,
செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம்,
நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களின் கடற்கரை மாவட்டங்
களாக இருக்கின்றன.

(பிற்பகல் 1—00)

இந்த மாவட்டங்கள் சென்னை, மாமல்லபுரம், கடலூர்,
பாண்டிச்சேரி, நாகப்பட்டினம், காரைக்கால், தொண்டி, இரா
மேஸ்வரம், தூத்துக்குடி, காயல்பட்டினம், கொளச்சல் போன்ற
நல்ல துறைமுகங்கள் இருக்கின்றன. சென்னை, தூத்துக்குடி
இரண்டும் பெரிய துறைமுகங்கள். இதுபோக இந்த சிறு துறை
முகங்களை வளர்ச்சியடையச் செய்வதன் மூலமாக தமிழ்
நாட்டின் பொருளாதார வளம் பெருகுமென்றும் நான் இங்கே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே சிறு, சிறு துறைமுகங்
களின் வளர்ச்சி பற்றி 1980 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மத்திய
அரசு குழு ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறது, கடலூர், நாகப்
பட்டினம் போன்ற சிறு துறைமுகங்கள் வளர்ச்சி பெறுமானால்
ஆண்டிற்கு 6 லட்சம் டன் சரக்குகளை ஒவ்வொரு துறைமுகத்
திலிருந்தும் ஏற்றுமதி செய்யலாம். 5 ஆண்டுகளில் இதை
இரண்டு மடங்சாக்கலாம். ஆண்டிற்கு 12 லட்சம் டன் கடலூர்
துறைமுகத்திலிருந்தும், நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்தும்
ஏற்றுமதி செய்யலாம். இதன்மூலம் நம்முடைய சென்னை
துறைமுகத்திலிருக்கிற நெருக்கடி குறையுமென்று அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே வற்புறுத்தப்பட்டு வருகிற
சேதுசமுத்திர திட்டமும் நிறைவேற்றப்படுமானால் தமிழ்நாட்டில்
இந்த ஏழு மாவட்டங்களிலிருக்கிற அத்தனை துறைமுகங்களும்
பெரிய அளவிற்கு வளர்ச்சி பெறுகிற ஒரு நிலைமை இருக்கிறது.
அதிலும் கடல் போக்குவரத்தை நாம் அதிகமாக பயன்படுத்தா
மல் இருக்கிறோம். அதற்கு ஒரு புள்ளிவிவரத்தை இந்த அவை
யின் பார்வைக்கு நான் வைக்க விரும்புகிறேன். அதாவது ஒரு
ஹார்ஸ் பவர் கொண்ட ஒரு லாரியையோ அல்லது தரை
வழியாக போகிற போக்குவரத்து சாதனத்தையே நீங்கள்
பயன்படுத்தினால் அதிலே 150 கிலோ கிராம் கொண்டு
போகலாம். சாலை வழியான போக்குவரத்திற்கு ஒரு
ஹார்ஸ் பவருக்கு 150 கிலோ கிராமும், அதே
ஒரு ஹார்ஸ் பவருக்கு ரெயில் மூலமாக 500 கிலோ கிராமும்

யிலே நான் அதை எழுப்பி குற்றம் சாட்டியிருக்கிறேன். தேர்தல்
கண்ணோட்டத்துடன் அந்தத் காரியங்கள் செய்யப்பட்டன.
மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் அன்பர்களை நான் ரொம்பப்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன் தமிழகத்தின் நலனுக்காக,
குரல் கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். நீங்கள் இதைத்
தொடர்ந்து செய்ய வேண்டும். இங்கே, அ.தி.மு.க.வைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஏ. சண்முகம் அவர்கள் இரண்
டொரு நாட்களுக்கு முன்னாலே பேசும்பொழுது மாநில மக்களின்
உரிமைகளுக்குக் குரல் கொடுக்க எல்லா கட்சிகளும் முன்வர
வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னார். அதே கருத்தை நான்
மீண்டும் சொல்கிறேன். அதிலே உங்களுக்கு எந்த விதமான
தயக்கமும்இருக்க வேண்டியதில்லை.

அண்டை மாநிலமான, கேரளம் உங்களுடைய—இந்திரா
காங்கிரசினுடைய—ஆட்சியிலே இருக்கக்கூடியது. அந்த மாநிலத்
தின் நிதியமைச்சர் தன்னுடைய பட்ஜெட் உரையிலே என்ன
சொன்னார் என்பதை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை
முடிக்க விரும்புகிறேன். கேரள மாநில நிதியமைச்சர் திரு.
கே. எம். மணி, தன்னுடைய வரவு-செலவுத் திட்ட உரையில்
3 பக்கங்களுக்கு மேலாக, மத்திய மாநில நிதி உறவுகள் முற்றிலு
மாக பரிசீலனை செய்யப்படவேண்டுமென்பதை அழுத்தந்
திருத்தமாக வலியுறுத்தியிருக்கிறார். மாநிலங்களுக்குப் பகிர்ந்
தளிக்கப்படும் வரிகள் குறித்து, புதிய அணுகு முறை இருக்க
வேண்டும், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் தேசிய
மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்றவற்றிலிருந்து மாநிலங்
களுக்குக் கணிசமான நிதி அளிக்கப்பட வேண்டும். இப்பொழுது
மாநிலங்களுக்கு எந்தப் பங்கும் அவற்றிலிருந்து அளிக்கப்பட
வில்லை. அவ்வாறு இருக்கக்கூடாது. வெளி மார்க்கெட்டில்
வாங்கப்படும் கடனில் 20 சதவிதம் மட்டுமே தற்போது மாநிலங்

(பிற்பகல் 1-10)

களுக்கு அளிக்கப்படுகிறது. இது 50 சதவீதமாக உயர்த்தப்
பட வேண்டும் என்று அவர் வற்புறுத்தியிருக்கிறார். அதுமட்டு
மல்ல, கார்ப்பரேஷன் வரியிலும் சுங்க வரியிலும் மாநிலங்களுக்கு
பங்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கி
றார். இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். அது மிகவும்
முக்கியமானது. பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாநிலங்
களுக்கு விசேஷ சலுகை எதையும் நிதிக் குழுக்கள் அளிக்கவில்லை
என்றும் கேரளம் குற்றம் சாட்டியுள்ளது. மத்திய அரசின் முத
லீடு என்பது கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையில் தலைக்கு
ரூபாய் 129 ஆக மட்டுமே உள்ளது. ஆனால் தேசிய அளவில்
தலைக்கு ரூபாய் 179 ஆக உள்ளது. கேரளத்திற்கு ஏன் இந்தப்
பாரபட்சம் என்று மத்திய அரசைப் பார்த்து கேரளாவிலே
இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் நிதி அமைச்சரவர்கள் கேட்கிறார்
கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன்.



கேரள மாநிலம் பின்தங்கிய மாநிலம் மட்டுமல்ல. வேலை
யில்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ள மாநிலமாகும். இந்தியா
பூராவிலுமுள்ள வேலையில்லாதவர்களில் 10 சதவிகிதம் கேரள
மாநிலத்தில் வாழ்கிறார்கள். அவர்களில் 50 சதவிகிதத்தினர்
படித்தவர்கள். எனவே, இந்த பிரம்மாண்டமான பிரச்சினையை
கேரள மாநிலம் மட்டும் தீர்த்து வைக்க முடியாது. மத்திய அரசு
உதவியும் அதற்குத் தேவை என்றும் அவர் வற்புறுத்தினார்.

கேரள மாநிலம் சமுதாய நலத் திட்டங்களில் சிறப்பான
சாதனை புரிந்துள்ளது. நான் எதற்காக இதைச் சொல்கிறேன்
என்றால், கேரள மாநிலத்திற்கு மத்திய அரசு விசேஷ சலுகை
அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துவதாகச் சொல்லுகிறார்
கள். கல்வித் துறையிலும், சுகாதாரத் துறையிலும் கேரள மாநி
லம் வெகுவாக முன்னேறியுள்ளது. 14 வயதுக்குட்பட்ட குழந்தை
கள் கட்டாயக் கல்வி பெறும் வகையில் உள்ளது. எனவே, இது
போன்ற திட்டமில்லாத துறைகளில் பெருமளவுக்குக் கேரள
மாநிலம் செலவழித்துள்ளது. இச்செலவுகளை மனதில் கொண்டு
மத்திய அரசு கேரளத்திற்கு நிதி ஒதுக்க வேண்டும். 1976-ஆம்
ஆண்டில் மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் செய்யப்பட்ட
திருத்தங்களின் விளைவாகக் கேரள மாநிலத்திற்கு 183 கோடி
ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதை மத்திய அரசு கொடுக்க
வேண்டும் என்றும் கேரள நிதி அமைச்சர், இந்திரா காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவர் சொல்வதை நான் உங்கள் கவனத்திற்கு
ஏன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், கேரள மாநிலத்தில்
14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக் கல்வி. ஆனால்
தமிழ்நாட்டிலே மேல்நிலைக் கல்வி வரையில் இலவசக் கல்வியை
அளித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, சமுதாய நலத் திட்டங்கள்
பல நம் மாநிலத்தில் பல அரசுகளின் காலத்தில் சிறப்பாக
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் கேரளாவிலுள்ள இந்திரா
காங்கிரஸ் நண்பர்கள் உணர்வு பெற்றவர்களாகக் குரல் கொடுக்
கின்ற அளவிற்குத் தமிழகத்தில் உள்ள நீங்கள் மத்திய அரசிடம்
உங்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தித் தமிழகத்
தின் நலன்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள்
என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு சட்டப் பேரவைத்
தற்காலிகத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.நெடு
மாறன் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது கேரள மாநிலத்
தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் நண்பர்கள் குரல் கொடுக்கிறார்கள்
மத்திய அரசிடம், ஆனால் தமிழகத்தில் உள்ளவர்கள் குரல்
கொடுக்கவில்லை என்ற உணர்வோடு இந்த அவையில் பிரதிபலிக்
கும் வகையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களுடன்
இருக்கும்பொழுது எந்த அளவிற்குக் குரல் கொடுத்தார்களோ
அதேகுரலைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். தமிழ்
நாட்டில் ஒட்டுமொத்த நன்மைகள் ஏற்பட வேண்டுமென்பதற்
காக காங்கிரஸ்காரர்கள் என்றைக்குமே குரல் கொடுப்பார்கள்
என்று உறுதியை அளிக்கிறேன்.

அதையே தண்ணீர் வழியாக கொண்டு செல்வோமானால்
ஒரு ஹார்ஸ் பவருக்கு 4 ஆயிரம் கிலோகிராமும் சரக்குகளை
கொண்டு போகலாம். ஆக இந்த அன்டேப்டு ரிசோர்ஸஸ்
இருக்கிறதே, தமிழ்நாட்டிலே கடல் வழி போக்குவரத்தைப் பயன்
படுத்தினால் நமக்கு ஏராளமான செலவு மிச்சப்படும் என்பது
மட்டுமல்ல, அதன் மூலம் மக்கள் போக்குவரத்தும், சரக்கு
போக்குவரத்தும் மிகக் குறைந்த செலவிலே செல்வதற்கான
வழிவகை ஏற்படும். கடல் போக்குவரத்து என்பது மிக மலி
வானது. மக்கள் போக்குவரத்து என்பது இன்றைக்கு தமிழகத்
திலே எப்படியிருக்கிறது என்றால் பிராட்கேஜ் அதிகமான அள
வில் இல்லை. இருக்கிற மீட்டர் கேஜும் ஒருவழிப் பாதையாக
இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டின் மக்கள் பெரும்பாலும்
சரக்கு போக்குவரத்திற்கும், மக்கள் போக்குவரத்திற்கும், அவர்
கள் பஸ்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அல்லது
லாரிகளை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த
பிரச்னையிலே கடல் வழியாக போக்குவரத்தை சென்னையிலே
இருந்து கன்னியாகுமரி மாவட்டம் வரை கடற்கரை வழியாக
நீங்கள் சிறுசிறு கப்பல்களை அரசாங்கத் துறையிலே நடத்தி,
அதன் மூலம் கடலில் மக்கள் போக்குவரத்தும், சரக்குப் போக்கு
வரத்தும் நடக்க வழி செய்வீர்களானால் அதன்மூலம் சிறந்த
உதவி மக்களுக்கு ஏற்படுமென்பதை அரசாங்கத்தின் கவனத்
திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயத்தை இந்த அவையின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய மத்திய
அரசாங்கத்தின் அமைச்சர் மாண்புமிகு நரசிம்மராவ்
அவர்கள் 26 ஆம் தேதியன்று இலங்கைக்குச் செல்ல
விருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்துடன் அங்கே வாழ்
கின்ற தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிய பேச்சு வார்த்
தையை நடத்தவிருக்கிறார்கள். இதிலே இந்த அவையில் ஆளும்
கட்சி உள்பட, சர்வகட்சி உறுப்பினர்களும் ஒருகோரிக்கையை
வற்புறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு பிரதமர் திருமதி
இந்திரா காந்தி அவர்களிடம் அந்த கோரிக்கையை அனைத்துக்
கட்சி தூது குழுவும் எடுத்துச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறது.
இலங்கையிலே இருக்கிற தமிழ் தோட்டத் தொழிலாளர்களுடைய
எதிர்காலம் பற்றி எந்த முடிவு எடுக்கவேண்டுமானாலும்,
பேச்சு நடத்தப்பட வேண்டுமானாலும், அதற்கு முன்னதாகவே
தமிழ் நாட்டிலேயிருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களையும்
கலந்தாலோசிக்க வேண்டும், இலங்கையிலே இருக்கிற தோட்டத்
தொழிலாளர்களின் தலைவர்களையும் கலந்தாலோசித்து, அவர்
களுடைய ஆலோசனையைப் பெற்ற பிறகுதான் இதைப்பற்றி
எந்த முடிவிற்கும் இந்திய அரசாங்கம் வரவேண்டுமென்று எல்லாக்
கட்சிகளும் சேர்ந்து வற்புறுத்தி இருக்கிறோம்.
ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பிரச்சனையிலே
தமிழக அரசையும் எதிர்க்கட்சிகளையும் கலந்து ஆலோசித்து ஒரு
முடிவுக்கு வர வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.
1980 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியோடு முடிந்த



ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தை எந்தக் காரணம் கொண்டும்
புதுப்பிக்கக் கூடாது என்பது தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக்
கட்சிகளின் கோரிக்கை. அதை இந்த நேரத்திலே மத்திய
அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது இந்த அரசின்
கடமை என்பதைநாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து அந்தமான் தீவிலே வாழ்கிற தமிழர்களைப் பற்றியும்
நம்முடைய அரசின் கவனத்திற்கு நான் இங்கே வைக்க விரும்பு
கிறேன். ஏறத்தாழ 50,000 க்கு மேற்பட்ட தமிழர்கள் அந்தமான்
தீவிலே வாழ்கிறார்கள். அங்கே தமிழ் படிக்க போதுமான வசதி
கள் இல்லை. ஒரே ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. இரண்டு
மூன்று நடுத்தர ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப்
பள்ளிகளுக்கு நம்முடைய தமிழக அரசு உதவி செய்யவேண்டும்.
மானியம் வழங்க வேண்டும். அந்தமான் தீவிலே இருக்கக்கூடிய
வங்கக் குழந்தைகளுக்கு மேற்கு வங்க அரசாங்கம் 1-ஆம் வகுப்பு
முதல் 5-ஆம் வகுப்பு வரை இலவசமாக புத்தகங்களைத்
தந்திருக்கிறது. எத்தனை குழந்தைகள் இருந்தாலும், அவர்
களுக்குப் புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. வங்கக்
குழந்தைகள் படிப்பதற்கு எல்லா உதவிகளையும் மேற்கு வங்க
அரசாங்கம் செய்கிறது. அதைப் போல நம்முடைய தமிழக அர
சும் அந்தமான் தீவிலிருக்கிற நம்முடைய குழந்தைகளுக்கு இல
வசமாகப் புத்தகம் அளிப்பதோடு, அந்தப் பள்ளிகளுக்கும் உதவி
களைச் செய்யவேண்டுமென்பதை நான் இங்கே வற்புறுத்த
விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசு
கின்ற பொழுது ஒன்றைச் சொன்னார்கள், காவிரிப் படுகையிலே
எண்ணெய் சோதனை நிறுத்தப்பட்டு விட்டது. அங்கேயுள்ள
குழாய்கள் எல்லாம் 'சிமிட்டு' முத்திரையிடப்பட்டுவிட்டன. இந்த
அரசு என்ன செய்தது என்று அவர்கள் கேட்டார்கள். ரொம்ப
நியாயமான கேள்வி. ஆனால் இதே பிரச்சினையை சில மாதங்
களுக்கு முன்னாலே இந்த அவையிலே எழுப்பினேன்.
காவிரிப் படுகைகளில் எண்ணெய் சோதனைகள் எந்தக் கட்டத்
திலே நிறுத்தப்பட்டன? முதல் கிணறு தோண்டப்பட்டு ஒரு
நாளைக்கு 1,500 பேரல் எண்ணெய் கிடைக்கிறது என்று அறி
விக்கப்பட்ட பின்னாலே அது நிறுத்தப்பட்டது. இரண்டாவது
கிணறு தோண்டப்பட்டு அதிலே எண்ணெய் டிரேசஸ் தெரிகிறது
என்று கண்டுபிடித்ததற்குப் பிறகு, சிமிட்டு மூடப்பட்டது. மூன்
றாவது கிணறு வேலை ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாக நிறுத்
தப்பட்டது. இதை எதற்காக நிறுத்தினார்கள்? அதுதான் முக்கி
யம். மாண்புமிகு சுந்தரராஜ் மற்றும் இந்திரா காங்கிரஸ் நண்
பர்களின் கவனத்திற்காக இதை நான் சொல்கிறேன். ஆந்திரா
விலே தேர்தல் தொடங்குவதற்கு முன்னால், இந்த வேலையை
இங்கே நிறுத்திவிட்டு, கோதாவரிப் படுகையிலே எண்ணெய்
தோண்டும் வேலையை அவசரம், அவசரமாக ஆரம்பித்தார்கள்.
இந்தத் துறையின் மத்திய அமைச்சராக இருக்கக்கூடிய மாண்பு
மிகு சிவசங்கர் அவர்கள் இதைச் செய்தபொழுது, இந்த அவை

**திரு. ப. நெடுமாறன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் திரு. பலராமன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவருடன் நான் இருந்தபொழுது எந்த அளவிற்குக் குரல் கொடுத்தேனோ அந்த அளவிற்குக் குரல் கொடுப்பதாக அவர்கள் சொன்னார்கள். ரொம்ப நன்றி. உங்களுடன் இருந்தபொழுது இந்தக் குரலைக் கொடுக்க முடியவில்லை என்பதால்தான் வெளி யிலே வந்து பலமான குரலைக் கொடுக்கிறேன். அங்கேயிருந்த பொழுது என்னைப் பின்பற்றிய நீங்கள் இப்பொழுதும் என்னைப் பின்பற்றி இதை விட வேகமான குரலைக் கொடுக்க வேண்டு மென்று மிக்க பணிவன்போடு உங்களைக் கேட்டுக்கொண்டு என் னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களால் இந்த பாமன் றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற நிதி ஒதுக்க மசோதாவின்மீது நான் சார்ந்திருக்கின்ற முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு நிதியமைச்சருடைய முக்கியமான பணி, வருவாயை அர சுக்குப் பெருக்குவது, பெருக்கி அந்த வருவாயை இழப்பு ஏற் படாவண்ணம் ஆக்கபூர்வமான பணிகளுக்குச் செலவு செய்வது; எங்கெங்கு மக்கள் மீது வரி போடாமல் வருமானம் வருமோ அவை களையெல்லாம் ஈட்டுவது அல்லது வருவாய் வருகின்ற ஊற்றுக் கண்கள் அடைத்து இருக்குமேயானால் அதை நீக்குவது நிதி யமைச்சருடைய தலையாய பணியாகும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை நம்முடைய நிதியமைச்சரவர்கள் செய்திருக்கிறார் களா என்பதை இந்த நேரத்தில் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாநிலத்திற்கு அதிகமான வருவாயை ஈட்டக் கூடியது விற்பனை வரி. இங்கே நண்பர் விஸ்வநாதன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது நமக்குக் கிடைத்திருக்கிற காம தேனு, கற்பக விருட்சம் என்று. அதிலே கூட வரவேண்டிய வரிகளை எப்படி ஸ்டீல் ரோலிங் மில்காரர்களுக்கு எல்லாம் நாம் தள்ளுபடி செய்தோம், அரசு கஜானாவிலே நிரப்பப்பட வேண்டிய பணத்தை யாருடைய கஜானாவையோ நிரப்புகிற மாதிரி, அதிலே ஒரு தள்ளுபடி செய்தோமே, அது நியாயமா என்று நான் இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டினேன்.

இன்னொன்று நமக்குப் பெருத்த வருவாயை ஈட்டக் கூடி யது ஆயத் தீர்வை. அதாவது புரொஹிபிஷன் அண்ட் எக்சைஸ்— இதிலே கிட்டத்தட்ட 156 கோடி ரூபாய்க்கு மேல் நமக்கு சென்ற ஆண்டு வந்ததாக கணக்குகள் தெரிவிக்கின்றன. ஆனால் அவற்றிலே கூட, இந்த மாநில ஆயத்தீர்வையில், நமக்கு வர வேண்டியவைகள், சரியாக வரவில்லை என்பதுதான் என்னு டைய குற்றச்சாட்டாகும்.



நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரவர்கள், அந்த மானியத்தை இங்கே வைக்கின்றபோது ஒரு கொள்கை குறிப் பைக் கொடுத்தார்கள். அந்தக் கொள்கைக் குறிப்பிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், தளர்த்தப்பட்ட மது விலக்குச் சட்டத்தை, கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு செயல்படுத்திவருகிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். எனக்கு இதைப் படித்தவுடன் சிரிப்புதான் வந்தது. ஏனென்று கேட்டால், மதுவிலக்குச் சட்டத்தைக் கடந்த இரண்டாண்டு காலமாக அரசு செயல்படுத்தி வருகிறது என்கிறார் அமைச்சரவர்கள். எப்படி செயல்படுத்துகிறார்கள் தெரியுமா? 9,304 கள்ளுக்கடைகளுக்கு உரிமங்கள்; 5,024 சாராயக் கடைகளுக்கு உரிமங்கள். கிளை களுக்கு வேறு உரிமங்கள் 1273 ஐ.எம்.எப்.எஸ். அதாவது 'இந்தியன் மேட் பாரின் ஸ்பிரிட்' இந்தியாவில் தயாரிக்கப்படும் உயர் ரக மதுக் கடைகளுக்கு உரிமம். 16 மாவட்ட சாராயக் கலவை, மொத்த விற்பனை உரிமம். 10 சாராயக் கலவை ஆலை களுக்கான உரிமம். 18 மொத்த வியாபாரிகள் உரிமம் இவ்வளவை யும் கொடுத்துவிட்ட பிறகு, நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தை அமல் படுத்துகிறோம் என்று சொல்வதில், இந்த நூற்றாண்டில் மகத்தான சிரிப்புக்கு, பரிசு கொடுக்கவேண்டுமானால், அதை அமைச்சரவர்களுக்குக் கொடுத்துவிடலாம். மேலும், அதைக் கொடுக்க ஏகமனதாகவும் தீர்மானித்துவிடலாம்.

அடுத்து, இன்னொன்றையும் அமைச்சரவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். சிபாரிசு செய்தவர்களுக்கு மது, சாராயம், கள் ஆகியவற்றை அருந்த இந்தச் சட்டம் அனுமதி வழங்கியிருக் கிறது என்கிறார்கள். பர்மிட் வாங்கியவர்கள் குடிக்கலாம் என்பது இந்தச் சட்டத்தின் நோக்கம் என்று கொள்கை குறிப் பில் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிபந்தனை இருக்கிறதா என்றால், அது ஒரு கண் துடைப்பு. கடந்த ஆண்டு கள் அருந்த பர்மிட் கொடுத்தது 4,31,047 பேருக்கு. சாராயம் அருந்த பர்மிட் கொடுத்தது 2,76,320 பேருக்கு. அயல் நாட்டு மது அருந்த பர்மிட் கொடுத்தது 88,812 பேருக்கு. இவ்வளவு பேர் களுக்கும் லைசென்சை கொடுத்தபிறகு இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில், நான் பார்க்கிறேன், எவ்வளவு பேருக்கு லைசன்ஸ் கொடுத்தோம் என்று கிடையாது. இனி அவர்கள் பர்மிட் வாங்கி குடிக்க வேண்டியதில்லை. பொதுமக்கள் எல்லோரும் விருப்பப்படி குடிக்கலாம் என்று நியதியைச் சொல்லிவிட்டு, நிபந் தனையோடு நாங்கள் பர்மிட் கொடுத்திருக்கிறோம். தளர்த்தப் பட்ட சாராயச் சட்டத்தை அமலாக்குகிறோம், பாரீர் எமது காந்தியக் கொள்கையை என்று பறைசாற்றுகிறீர்கள்—இது சரி யா இல்லையா என்பது தான் என்னுடைய கேள்வி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை).

அடுத்தபடியாக நீங்கள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத் தைப் பற்றி நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்பு கிறேன். 1981—82-ஆம் ஆண்டு மாதாந்திரச் சாராய விற்பனை

[திரு. துரைமுருகன்] [1983 ஏப்ரல் 21

52 இலட்சம் லிட்டர் என்று சொல்லியிருக்கிறீர்கள். குத்தகை கொடுப்பதன் மூலம் வருவாய் ரூ. 49.93 கோடி என்று சொல்லி யிருக்கிறீர்கள். 1982–83-ஆம் ஆண்டில் மாதாந்திர சாராயத் தினுடைய விற்பனை அளவு 84 இலட்சம் லிட்டர். 1981-82-ல் 52 இலட்சம் லிட்டர். இப்போது 1982-83-ல் 84 இலட்சம் லிட்டர். அதாவது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 62 சதவீதம் விற்பனை உயர்ந்திருக்கிறது. ஆனால் குத்தகை வருமானம் அந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறதா என்றால், இல்லை. ரூ. 55.41 கோடி தான் உயர்ந்திருக்கிறது. 62% அதிகம் என்றால், ரூ. 81 கோடி கிடைத்திருக்கவேண்டும். ஆனால் கிடைத்திருப் பது ரூ. 55 கோடி. ஆக கிட்டத்தட்ட ரூ. 30 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் கேட்கலாம்—84 இலட்சம் லிட்டர் சாராயம் விற்காது என்று நாங்கள் எதிர்பார்த்தோம். எனவே விற்றிருக்கிறது என்று சொல்லலாம். விற்றிருப்பதாக அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டார் என்று புள்ளிவிவரம் சொல் கிறது. எனவே அடுத்த ஆண்டாவது ரூ. 81 கோடிக்கு மேல் வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில், அதை ஒரு 'பேசாக்' வைத்து நீங்கள் குத்தகை பணத்தை ஈட்ட வேண்டுமென்று நான் அவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

இன்னொன்றையும் சொன்னார்கள். சமுதாய விரோத சக்திகளுக்குச் செல்லும் பணத்தை அரசின் பக்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சமுதாய விரோதிகள் அது யார் யார் என்பதை நான் போலீஸ் மானியத்தில் பேசுகிறபோது கூட போலீஸ் இலாக்கா கோணத்திலே சில பேர்கள் சமுதாய விரோதிகள். சில பேர்கள் மந்திரிமார்களுடைய பார்வையிலே சமுதாய விரோதிகள். முதலாளிகள் பார்வையிலே சில பேர்கள் சமுதாய விரோதிகள். பட்டாளி மக்கள் பார்வையிலே சில பேர்கள் சமுதாய விரோதிகள் என்று அந்தக் கோணத்திற்குக் கோணம் மாறும். ஆனால் இப்படிப்பட்ட சமுதாய விரோதிகள் இருக்கிறார்களே, அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 26 கோடி ரூபாய் செல்லுகிறது. எனவே இவற்றை எல்லாம் அரசு நாட்டுடைமையாக்குவதன் மூலம் இந்தச் சமுதாய விரோதச் சக்திகளை ஒழிக்கலாம் என்பதற்கான விளக்கங்களை எப்படி நுழைவு வரி 26 கோடி ரூபாய்க்கு போட்டு இருக் கிறார்களோ, இதை இதன் மூலம் எடுக்கலாம் என்பதை கலை ஞர் அவர்கள் இந்த மாமன்றத்திலே மிக விளக்கமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எனவே அரசு சமுதாய விரோதிகளை ஒழிப்பதிலே உள்ளபடியே நாட்டம் கொண்டிருக்குமானால் அவை களை நாட்டுடைமையாக்குவதன் மூலம் 26 கோடி ரூபாய் அரசு கஜானாவில் நிறையும். ஏற்கனவே நான் குறிப்பிட்ட ஒரு 30 கோடி ரூபாய், இது ஒரு 26 கோடி ரூபாய். ஆக 56 கோடி ரூபாய் லட்டு மாதிரி உங்களுக்கு வந்துசேரும். எனவே நம்



1983 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் இதையெல்லாம் எண்ணிப்பார்த்து அதை நடத்தவேண்டும். அப்படி அரசு ஏற்று நடத்தலாமா என்றால், கேரளாவிலே நடத்துகிறார்கள். ஆனால் நாம் மட் மட்டும் நடத்துவதிலே என்ன நஷ்டம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

* * * *

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

* *

திரு. துரைமுருகன்:

இப்போது ஒரு கமிஷனர் போட்டிருக்கிறார்கள் புரொகிபிஷன் அண்டு எக்சைசில் முன்னால் ஒருவர் இருந்தார். அவர் தர்மத்திலேயே இருந்தார், எக்ஸ்டன்ஷன், எக்ஸ்டன்ஷன், எக்ஸ் டன்ஷன் என்று. இப்போது எஸ். ஜே. இராமச்சந்திரனைப் போட்டிருக்கிறார்கள். அவர் 4 ஆண்டுகளாகத்தான் ஐ.ஏ.எஸ். ஆக இருக்கிறார். அடுத்தபடியாக . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலை வரவர்களே, அவர்கள் இதுவரை நடந்த விவரங்களைச் சொல்லி விட்டு அடுத்த இடத்திற்குச் செல்கிறார்கள். வேகமாகப் பேசும் போது உணர்வு கெட்டுவிடக்கூடாது, உணர்வு குன்றாமல் நினைத் ததை எல்லாம் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக நான் இடை மறிக்கவில்லை.

* *

அவர் சொல்கிறபோது, வேறு ஒன்றும் சொன்னார். போன வருஷம் 50 இலட்சம், இந்த வருஷம் 80 இலட்சம் விற்றிருக் கிறதே—பணம் குறைந்திருக்கிறதே ஏன் என்று கேட்டார்கள்? சாராயத்தை விற்று வருகிற பணம் ஒன்று; அதேபோல கடை களை ஆக்ஷன் போடுகிற போது ஆக்ஷன் பேரிலே வருகிற பணம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [1983 ஏபரல் 21

ஒன்று. ஆக்ஷன் போடுகிறபோது, போன ஆண்டு, நிறையச்
சாராயம் விற்கும் என்பதற்காக நிறையக் கேட்டிருக்கக்கூடும்.
இந்த வருஷம் ஆக்ஷன் குறைந்திருக்கும். ஆகையினால் ஆக்ஷன்
குறைந்ததும் இந்த நிலைமைக்கு காரணமான ஒன்று என்பதை
யும் தெரிவித்துக் கொள்கிறேன். **

அது மட்டும் அல்லாமல், சாராயம் இன்றைக்கு விற்கிற
போது 50 இலட்சம் என்பதை 80 இலட்சமாக விற்
கிறது என்றால் அந்த அளவுக்கு கள்ளச் சாராயம் குறைந்திருக்
கிறது என்று அர்த்தம். குடிப்பவர்கள் அதிகரித்திருக்கிறார்கள்
என்று சொல்வதைவிட அந்த அளவுக்கு கள்ளச் சாராயம் குறைந்
திருக்கிறது. குறைகிற அளவுக்கு அரசு வேண்டிய நடவடிக்கை
களை எடுத்திருக்கிறது என்பது தான் அதற்குப் பொருள்.**

அது எல்லோருக்கும் தெரிந்ததுதான் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. துரை முருகன்:** எல்லோருக்கும் தெரிந்ததுதான் என்று
சொன்னார்கள். அவருடைய முடிவை நான் ஏற்றுக்கொள்கி
றேன்.........

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** ** என்று
சொன்னேன்.

**திரு துரைமுருகன்:** நான் கேட்டதிலே** (குறுக்கீடு).

(பிற்பகல் 1-40)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சென்னையிலே போடாவிட்டாலும் அதற்
காக இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக தேவையான
வற்றைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதனால் எந்த
விதமான அரசினுடைய வருமானமும் குறையவில்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய வருமானத்தைக்
காப்பாற்றுவதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்
அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கின்றதோ அதைவிட
எனக்குக் குறைவாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

**திரு துரைமுருகன் :** **

அடுத்து இன்னொரு முக்கியமான செய்தி. அரசு பரிசுச்
சீட்டு திட்டம் இருக்கின்றது. அதாவது ஒரு ரூபாய்க்கு வாங்கி
னால் ஒரு இலட்சம். அதிலே 103-ஆவது குலுக்கல் தேதி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.



983 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

10—4—1983. அந்தப் பரிசுச் சீட்டிலே எண் வரிசை இருக்
கின்றது. இந்த எண் வரிசையிலே ஒரே எண் இரண்டிலே
இருக்கின்றது. தமிழ்நாடு பரிசுச் சீட்டு எல். என். 533199.
இது 103 ஆவது குலுக்கலுக்குரிய சீட்டு. நாள் : 10—4—83.
இதன் விலை ஒரு ரூபாய். இன்னொரு சீட்டு 103 ஆவது
குலுக்கல், நாள் : 10—4—1983 எண் எல். என். 533199
ஆக ஒரே நம்பரில் இரண்டு சீட்டுகள். நானும் வாங்குகிறேன்,
திரு. இளையபெருமாள் அவர்களும் வாங்குகிறார்கள் என்று
வைத்துக்கொண்டால் அதற்கு பரிசு அடித்துவிட்டது என்றால்
பரிசை யாருக்குக் கொடுப்பீர்கள் ? ஆக ஒரே எண்ணுள்ள
டிக்கட்டை அடித்து சேல் பண்ண வேண்டிய வேலை ஏன் ?

அடுத்து அரசுக்குத் தேவையான வருவாய் பெருகுவதற்காக
உள்ள இந்த குதிரைப் பந்தயத்தைப் பற்றி அண்ணா அவர்கள்
கூட எவ்வளவோ எழுதி இருக்கிறார்கள். 1967 ஆம் ஆண்டு
தேர்தல் அறிக்கையிலேகூட அதை வைத்திருந்தார்கள். பஸ்
களை தேசியமயமாக்கவேண்டும் என்பது பற்றியும் இதைப்பற்றி
யும் தேர்தல் அறிக்கையிலே வைத்தார்கள். ஆனால், அண்ணா
வின் பெயரைக் கொண்ட கட்சி என்ற காரணத்தால் கேட்கி
றேன். அண்ணாவின் கனவை நனவாக்குகின்ற வகையிலே அந்த
குதிரைப் பந்தயத்தை ஒழிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்
டாமா ? நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள் ஒரு நாள் ஒரு மாவட்டத்திற்கு அண்ணா பெயர் வைக்க
முடியுமா என்று கேட்டபோது, அதற்கு அவர்கள் பதில் சொல்
கின்றபோது மிக அழகாகச் சொன்னார்கள். அண்ணாவின்
பெயரை வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. அந்தக்
கொள்கைக்கேற்ப நடக்க வேண்டும் என்று சொன்னார்கள்.
மிகச் சரியான பதில் அது. ஐ அப்ரிசியேட்.

**மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் :** பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் அப்ரிசியேட் பண்ணுகின்றாரா இல்லையா என்
பது இல்லை. நான் அவர்களைத்தான் சொன்னேன். ஏனென்
றால் நாங்கள் அந்தக் கொள்கையைப் பின்பற்றுகிறோம்,
அவர்கள் அதைப் பின்பற்றவில்லை என்பதற்காகத்தான் சொன்
னேன். ஆனால், அதை அவர்கள் எங்கள் பக்கம் திருப்பி விடு
கிறார்கள்.

**திரு. துரைமுருகன் :** தைரியமாக அப்படித்தான் சொன்
னேன் என்று சொல்வார் என்று பார்த்தேன். அஞ்சா நெஞ்ச
னாகிய அவரே இப்படி பின்னடிக்கிறார் என்றால் வேறு யாரை
நான் நம்பப் போகிறேன். சரி போகட்டும். அடுத்து நம
முடைய எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். காங்கிரஸ்
கட்சியின் எம்.பி.க்கள் கொடுக்கவில்லை, தி.மு.க. எம்.பி.க்கள்
கொடுக்கவில்லை என்று. நாங்கள் கேட்பது இருக்கட்டும்
நீங்கள் ஒரு ஸ்பெஷல் ரெப்ரசன்டேடிவ் போட்டு மாதம் 2,000

[திரு. துரைமுருகன்] [1983 ஏப்ரல் 21

ரூபாய் சம்பளம் கொடுக்கிறீர்களே, அப்படி மந்திரி அந்தஸ்திலே
ஒரு ஆளை வேலைக்கு வைத்திருக்கிறீர்களே, அவர்கள் எண்ண
பண்ணுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவராகிய திரு.
இராசாராம் அவர்கள் அந்தப் பொறுப்பிலே இருக்கும்போது
அவருக்கு அந்த ஸ்டேட்டஸ் தேவையில்லை. அவரே எல்லா
இடத்திற்கும் புகுந்து பேசிக்கொண்டு வந்துவிடுவார். ஆனால்
இப்போது போனவர்களுக்கு விஸ்வத்மார்க் எது லோகியத்
மார்க் எது என்பதை தேடிக் கண்டுபிடிப்பதற்கே இரண்டு
நாட்கள் ஆகும். ஆகவே, அவர்கள் எல்லாம் என்ன
செய்கிறார்கள். சீஃப் செக்கரட்டரி லெவலிலே ஒரு செக்ரட்டரி
உட்கார்ந்திருக்கிறார். அதற்கு மேல் இவர் ஒருவர். இது
இரண்டாவது சம்பளம். அவர் போக வர, போக வர ஏதோ
போக்குவரத்து மாதிரி ஒரு மந்திரியாக இருக்கின்றார்களே அவர்
கள் என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்து, என். ஜி. ஓ.-வைப் பொறுத்தவரையில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள்கூட குறிப்பிட்டுச் சொன்
னார்கள். மத்திய அரசு இரண்டு டி.ஏ., அலவன்ஸ் பண்ணியதற்
குப் பிறகு நீங்கள் இதுவரையில் மௌனம் சாதிப்பது அந்த
என்.ஜி.ஓ.க்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தருகின்றது.
ஆகவே, இரண்டு டி.ஏ.,க்களை அந்த என்.ஜி.ஓ. க்களுக்குக்
கொடுக்க வேண்டும்.

அடுத்து மின்சாரத் தட்டுப்பாடு இருந்தாலும் கூட மின்சார
வெட்டு பத்திரிகைகளுக்கு நீக்கப்பட்டிருக்கின்றது.
மறுக்கவில்லை. நியூஸ் பேப்பர் கம்ஸ் அண்டர் தி எக்ஸ்ஸம்ப்டட் நான்
கேட்டகிரி என்ற வகையில் அவர்களுக்கு எல்லாம் விதிவிலக்கு
அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்படி எல்லா பத்திரிகை
களுக்கும் இருந்தாலும் 1 மணி நேரம் 2 மணி நேரம் பவர் கட்
செய்கிறார்கள். ஆனால் முரசொலி பத்திரிகை எதிர்க்கட்சிப்
பத்திரிக்கை, ஆளும் கட்சியை குறைச்சொல்லும் பத்திரிக்கை
அந்த பத்திரிக்கை அலுவலகத்தில் தான் எதிரொலியும் பிரிண்ட்
செய்யப்படுகிறது. மின்சார வாரியம் கேட்டுக்கொண்டதற்கு
இணங்க காலை 8 மணியிலிருந்து 9 மணி வரையிலும், 12 மணி
யிலிருந்து 1 மணி வரையிலும் இதுவரை பவர் கட் செய்து
கொண்டு இருந்தார்கள். ஆனால் இப்போது என்ன நிலைமை
என்று கேட்டால் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையிலும்
12 மணியிலிருந்து 1 மணி வரையிலும் என்று நாள் தவறாமல்
பவர்கட் செய்வதன் விளைவாக அந்த மோனோஸ்கிரிப்ட்ஸ் இருக்
கிறதே அவைகள் எல்லாம் ஆறி போகிற நிலையில் இருக்கிறது.
பத்திரிக்கை குறித்த நேரத்தில் வெளிவராத நிலையில் இருக்
கிறது. ஆளும் கட்சியை குறை சொல்கிறார்கள் என்பதற்காக
முரசொலி, எதிரொலிக்கு மட்டும் இந்த வேலையை செய்
கிறார்கள். முரசொலி ஆபிஸுக்கு பக்கத்தில் தான் மக்கள் குரல்
பத்திரிக்கை இருக்கிறது. அது உங்களுக்கு அனுசரணையாக



1983 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

இருக்கிறது என்ற காரணத்திற்காக அங்கே மட்டும் இந்த மாதிரி
பவர் கட் கிடையாது. முரசொலி அலுவலகத்திற்கு மட்டும்
குறி வைத்து இப்படி மின்சாரத்தை தடுப்பது........
(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க
மசோதாவின் மூலமாக 2,492 கோடியே 40 லட்சத்து 63 ஆயிரம்
ரூபாயை ஒதுக்கித் தந்து விட்டால் நேரத்தை எல்லாம் கூட நான்
ஒதுக்கித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆக அதை ஒதுக்கி
தருவதற்காகத்தான் நிதி ஒதுக்க மசோதா இங்கே வந்திருக்கிறது.
இதனுடைய அடிப்படை நோக்கமே சட்டமன்றப் பேரவையின்
மூலமாகப் பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மூலமாக ஒவ்
வொரு துறைக்கும் எவ்வளவு மானியம் ஒதுக்க வேண்டும் என்று
கேட்டு விவாதித்து ஒவ்வொரு துறை பற்றியும் மாண்புமிகு உறுப்
பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துத்
தெரிவித்து ஒவ்வொரு மானியத்திற்கும் மானியத்தைப்
பொறுத்தும் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு நிதி ஒதுக்கப்
படுகிறது. அது ஓரளவுக்கு ஒதுக்கப்பட்டாலும் கூட
சாட்டப்பட்ட தொகை என்ற அளவுக்கு இந்த
அவையினாலேயே நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற தொகை
அந்தத் தொகை. அது மட்டும் அல்லாமல், சட்ட மன்றத்
துறையிலே நாம் வைத்து இருக்கிற வகைகளில் சில முக்கிய
மான மானியக் கோரிக்கைகளை மட்டும் எடுத்துக் கொண்டு
நமக்கு கிடைக்கின்ற நேரத்தின் அடிப்படையில் விவாதத்தை
வைத்துக்கொண்டு, ஆக சிலபல மானியக் கோரிக்கைகளின் விவா
தத்தினைப் பொறுத்தவரையில் முழு வெட்டு போடுவது கில்லட்
டின் போடுவது என்ற ஒரு முறை வைத்து இருக்கிறோம். ஆக
சட்டமன்றத்திலேயே நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கை
கள் மூலம் ஒதுக்கப்பட்ட தொகைகள், மாநிலத் தொகு நிதிக்காக
சாட்டப்பட்ட தொகை அதைத்தவிர விவாதம் இல்லாமல் முழு
வெட்டாகப் போட்டு இருக்கின்ற அந்த மானியங்கள் எல்லா
வற்றையும் ஒன்று சேர்த்துக்கொண்டு வருவதற்காகத்தான்
நிதி ஒதுக்க மசோதா என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவேதான் இந்தச் சட்டமன்றத்திலே பல்வேறு நாட்
களாகப் பல்வேறு மானியக் கோரிக்கைகளுடைய அடிப்
படையில் 253 கோடியே 33 லட்சத்து 62 ஆயிரத்துக்கு
இந்த அவை ஏற்கனவே அனுமதி அளித்து இருக்கிறது.
இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலும் எந்த ஒரு
மானியக் கோரிக்கையும் முழு விவாதம் இல்லாமல் முழு வெட்டு
போடுகின்ற ஒரு சூழ்நிலையை நாம் ஏற்படுத்தாததன் காரணமாக
எல்லா மானியக் கோரிக்கைகளும் வந்து விட்டன. மாநில
தொகு நிதிக்கு சாட்டப்பட்ட தொகை 439 கோடியே 7 லட்சத்து
1 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு இரண்டையும் சேர்த்துத் தான்
2,492 கோடியே 40 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் ஒதுக்க வேண்
டும் என்ற அளவுக்கு நிதி ஒதுக்க மசோதா இங்கே கொண்டுவரப்
பட்டிருக்கிறது. இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் விடுபட்ட

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 2

கருத்துக்கள் பலவற்றையும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசுக்கு எடுத்துத் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை தெரிவிப்பதிலே தவறு இல்லை. இருந்தாலும் கூட எல்லாத் துறைக்கும் சேர்த்து அவர்கள் அந்த அந்த துறையைப்பற்றி சொல்லிய கருத்துக்கள் அத்தனைக்கும் என்னிடத்தில் நீங்கள் பதிலை எதிர்பார்ப்பீர்களானால் அது இயலாது என்பதையும் நடைமுறையில் இயலாது என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை 'முருகன் அவர்கள் ஆயத்தீர்வையின் போது பேசுவதற்கு குறித்து வைத்து இருந்ததை அன்று நேரம் இல்லாத காரணத்தினால் விடுபட்டதை எல்லாம் சேர்த்து வைத்திருந்து இப்போதாவது அவிழ்த்து விட்டுவிடுவோம் என்ற முறையிலே அவர்கள் இப்போது நேரத்தைப் பயன்படுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஆக ஆயத் தீர்வை பற்றிய கருத்துக்களையும், அதனுடைய உரிமங்களை வழங்கப்பட்டது பற்றியும் பல்வேறு கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் நான் சாதாரணமாக எண்ணவில்லை. அவற்றை நான் புறக்கணிக்கவும் இல்லை.

(பிற்பகல் 1-50)

ஆனால் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் தாங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்கலை எடுத்துச் சொன்னாலும் இதுவரையிலும் சொல்லி யிருக்கின்ற முக்கியமான கருத்துக்கள் அரசின் சார்பாக எடுத்துக் கொள்ளப்பட்டு துறைகளின் சார்பாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதற்கும் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் உறுதுணையாகப் பயன்படுகின்றன என்று தெரிவித்துக்கொள் கிறேன். இங்கே பேசிய உறுப்பினர்கள் வறட்சி நிலைபற்றி கவலையோடு கருத்தூக்களைத் தெரிவித்தார்கள். மாநில அரசு அதைப்பற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி எல்லாம் எடுத்துத் தெரிவித்தார்கள். மாநில அரசு குடிநீர்ப் பற்றாக் குறையைப் பொறுத்தவரையிலும், உணவுப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையிலும் தன்னுடைய தன்மைகளுக்கேற்ப அதிகார ஆதிக்க தன்மைகளுக்கு உட்பட்டு எந்த வகையில் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமோ அந்த வகையிலே எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன். எந்த அளவுக்கு மத்திய அரசினுடைய உதவியை— குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும் உணவுப் பற்றாக் குறையைப் போக்கவும்—பெறுவதற்கு கேட்டிருக்கிறோம் என் பதையெல்லாம் எடுத்துக் கூறி வந்தோம். அந்த வகையிலே இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள்—எடுத்துக் கொண்டுவருகிற நடவடிக்கைகளை அவ்வப்போது பல்வேறு துறைகளின் சார்பாக எடுத்துச் சொல்கிறபோது — நன்கு அறி



1983 ஏப்ரல் 21] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

வார்கள். மழை பொய்த்ததன் காரணமாகவும் மழை பெய்யாத தன் காரணமாகவும் இருக்கின்ற தண்ணீரை நாம் பயன்படுத்த வேண்டுமென்ற நிலை இருக்கிறபோது—மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா போன்றவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்லிய அளவிலே—பல இடங்களிலே தண்ணீர் கீழே போய்க் கொண்டே இருக்கிறது. குறிப்பிட்ட அளவுக்கு அதனு டைய மட்டம் குறைந்துகொண்டே போகிறபோது சிலபல இடர்ப் பாடுகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க தண்ணீர் இருக்கிற இடத்திலிருந்து பக்கத்திலே தண்ணீர் இல்லாத இடத்திற்கு எப்படி நகர்த்துவது, விரைவிலே எப்படி நகர்த்துவது, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வகைகளிலே என்ன காண வேண்டும் என்பதற்காக அதற்கான முயற்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் பல்வேறு துறைகளிடத்திலே யும் விட்டிருக்கிறோம். சென்னையை எடுத்துக் கொண்டாலும் குறிப்பிட்ட சில பகுதிகளில் தண்ணீர் ஊற்று இருக்கிறது, சில பகுதிகளில் நீர் ஊற்றே அடியிலே போய் இருக்கிறது. மாவட்ட அளவிலே எடுத்துக்கொண்டாலும் சில பகுதிகளிலே 10, 15 அடி யிலே தண்ணீர் ஊற்று இருக்கிறது சில இடங்களிலே 60 அடி, 70 அடி, 100 அடி, 150 அடி என்று போனாலும் ஊறாத நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு இல்லாத இடங்களி லிருந்து செலவானாலும் பரவாயில்லை என்று நகராட்சிகள் ஆங் காங்கே லாரிகளை வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு அனுமதியைத் தந்து நிதி ஒதுக்கீடுகள் செய்வதாக இருக்கிறோம். அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு வரு கிறோம். அதற்காக கூட்டங்களைக் கூட்டிக் கொண்டு வரு கிறோம். தலைமைச் செயலாளர் அளவிலே கூட்டங்கள் அடிக் கடி கூட்டப்படுகின்றன. அது சம்பந்தப்பட்ட துறை செயலாளர் களைக் கூப்பிட்டு வைத்து நிலைமைகளைப்பற்றிப் பேசி எடுக்கப் பட்ட நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள நிலைமைகளை அறிந்து கொண்டு வருகிறோம். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கூட மதுரையிலே 2 நாட்களுக்கு முன்னதாக3 சென்றபோது போகிற இடத்திலே அவர்களும் அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசுகின்றார்கள். எங்களைப் போன்றவர்களும் நானும் இன்னும் நான்கு நாட்களில் மதுரைக்குச் செல்கிறபோது அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கூப்பிட்டுவைத்துப் பேச நேரத்தை ஒதுக்கியிருக்கிறேன். அதைப் போலவே கோயம்புத்தூருக்கும் போகிறபோது நேரத்தை ஒதுக்கியிருக்கிறேன். ஆகவே என்ன என்ன வேலைகளை நடத்தி இருக்கிறார்கள் என்பதையும் என்ன என்ன வேலைகளைச் செய்ய இருக்கிறார்கள் என்பதையும் இடர்ப்பாடுகள் என்ன என்ன என்பதையும், நாங்கள் அறிந்து கொண்டால் அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களைப் போக்க முடியும் என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, இதிலே மெத்தனமாக இல்லை, எந்த அளவுக்கு இயலுமோ அதையெல்லாம் செய்துகொண்டு வருகிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 21

திரு. உமாநாத் அவர்கள் காவல் துறை அதிகாரியைப்பற்றி
ஒரு குறிப்பைச் சொன்னார்கள். அவர்களுக்கும் சில பொறுப்பு
கள் இருப்பதன் காரணமாக அவர்களும் கூட்டங்கள் போட்டு
செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு அவர்கள் கூடு
கிறார்கள். அவர்களைக் கூட்ட வேண்டாம் என்று நாம்
சொல்ல முடியாது. அது பாட்டிற்கு அது. ஆனால் எடுக்க
வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி தனியாக அவர்கள் யோசிக்
கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். 222 கோடியே 43 லட்சம்
ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்பட
வேண்டுமென்ற குறிப்புகளை மைய அரசுக்கு அனுப்பி வைத்து
இருக்கிறோம். இதுவரையிலும் 63 கோடியே 72 லட்சம்
ரூபாய்க்கு நமக்கு ஒப்புதல் அளித்து 17—4—1983 அன்று அங்
கிருந்து தந்தி வந்திருக்கிறது. 63 கோடியே 72 லட்சம் ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். அதுபோதாது என்று நாம் அவர்களுக்
குத் தெரிவித்திருக்கிறோம். எடுத்துக்கொண்ட முயற்சிகளும்
செய்யப்பட வேண்டிய பணிகளும் ஏராளமாக இருப்பதன் காரண
மாக ஆய்வு செய்ய வந்த மத்திய ஆய்வுக் குழுவின் அறிக்கையின்
படி அவர்களிடத்திலே நாம் எடுத்துச்சொல்லி இந்த ஒதுக்கீடு
போதாது, இன்னும் அதிகம் கொடுக்கப்பட வேண்டும் என்று வலி
யுறுத்தி வரு கிறோம். 63 கோடியே 72 லட்சத்திற்கு அவர்கள் அனு
மதி தந்திருக்கிறார்கள். என்றாலும் நம்முடைய வறட்சிப் பங்கிற்
காக நாமே செலவிடவேண்டியது 17 கோடியே 18 லட்சம் ரூபாய்.

ஆக ஆண்டு ஒன்றிற்கு கிட்டத்தட்ட 8 கோடியே சில்லறை
ரூபாயை நாம் ஒதுக்கி வைத்துத் தீர வேண்டும். அந்த அடிப்
படையிலே 17 கோடியே 18 இலட்சம் ரூபாய் நம்முடைய
கணக்கிலேயிருந்து செலவழித்துத் தீர வேண்டிய பகுதி. மீதி
46 கோடியே 54 இலட்சம் இந்த 63 கோடியிலே. அந்த 46
கோடியே 54 இலட்சம் ரூபாயில் மானியமாக அவர்கள் இப்
போது அளித்திருப்பது 30 சதவீதம் தான் தருகிறார்கள். அதன்
படி 13 கோடியே 95 இலட்சம் ரூபாய் நமக்கு மானியமாக
இதிலே கிடைக்கும். மீதி 70 சதவீதம், அதாவது 32 கோடியே
59 இலட்சம் ரூபாய் நமக்குக் கடனாக தந்திருக்கிறார்கள். ஆகவே
இது போதாது என்றுதான் சொல்கிறோம். என்றாலும் கூட
அது வருகிற வரையில் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்
என்றல்ல ; இதுவரை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செல
வழிக்கலாமென்று நாம் அனுமதித்தது 57 கோடி ரூபாய் ;
இதை நாம் பல்வேறு துறைகளிலே, பல்வேறு மாவட்டங்களுக்கு
அனுமதித்திருக்கிறோம். ஆனால் மத்திய அரசின் அனுமதி
கிடைக்கும் என்று எதிர்பார்த்து நாம் அனுமதித்துக் கொண்டு
வருகிறோம். மேற்கொண்டு அவர்களை அதிகமாக தொகையை
ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு வரு
கிறோம் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்
பிடுகிறபோது மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது
பற்றியும், பிற மாநிலங்களுக்கு மாணவர்களை அனுப்புவது



1983 ஏப்ரல் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பற்றியும் பிற மாநிலங்களின் மாணவர்களை நாம் இங்கே
சேர்ப்பது பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். பிற மாநிலங்
களிலிருந்து மாணவர்களை மருத்துவக் கல்லூரிகளிலும், பொறி
யியல் கல்லூரிகளிலும் சேர்ப்பதைப் பொறுத்து ஒரு உடன்பாடு
இருக்கிறது. சிலபல மாநிலங்களுக்கு 5 மாணவர்களை நாம்
தருவது, அவர்கள் அங்கேயிருந்து 5 மாணவர்களை இங்கே
அனுப்புவது என்று ஒரு மியூச்சுவல் அண்டர்ஸ்டான்டிங் என்ற
அளவிற்கு ஒரு ஏற்பாட்டின் அடிப்படையில் நடைபெற்றுக்
கொண்டு இருக்கிறது. ஆகவே அந்தந்த மாநிலங்களில் எந்தெந்த
விதிமுறைகள் இருக்கிறதோ அதற்கேற்ப யார், யார் விண்ணப்பிக்
கிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கிற,
டிஸ்கிரிஷன் என்று சொல்கிற அளவிற்கு, யாரை அனுப்புவது
என்ற பொறுப்பு அரசிடத்திலே தொடர்ந்து இருந்துகொண்டு
இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அதற்கு இவ்வளவு
மார்க் இருக்க வேண்டுமென்றும், அந்த மாணவனுடைய எண்கள்
எவ்வளவு இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்களோ, அந்த
அடிப்படையிலே விண்ணப்பங்கள் இருக்க வேண்டும். உதார
ணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பொறியியல் கல்லூரியைப்
பொறுத்தவரை நம்முடைய மாநிலத்திலே அடிப்படையாக 60
மார்க் இருக்க வேண்டுமென்றும், சேர்த்துக் கூட்டி மொத்தமாக
70 சதவீதம் இருக்க வேண்டுமென்றும் நாம் போட்டிருக்கிறோம்.
பக்கத்திலே இருக்கிற கர்நாடகா மாநிலம் என்று எடுத்துக்
கொண்டோமேயானால் அங்கே 50 சதவீதம் மார்க் அடிப்படை
யாக இருந்தால் போதும் என்று வைத்திருக்கிறார்கள். அங்கே
நாம் அனுப்புகிற ஐந்து பேர்களுடைய அப்ளிகேஷன்கள் 50
சதவீதம் என்கிற அந்த விதிமுறைக்கு கீழே போகாமல் இருக்க
வேண்டும். அந்த அடிப்படையிலேதான் அனுப்பி வைக்கிறோம்.
இந்த மார்க்கின் அடிப்படையிலே அனுப்ப வேண்டுமென்ற
டிஸ்கிரிஷன் என்பது தொடர்ந்து சாங்கிரஸ் ஆட்சியிலும் சரி,
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி இருந்து வந்து
இருக்கிறது. இப்போது அதை வைத்துக் கொண்டிருக்கிறோம்.
அனுப்பி வைப்பதைப் பொறுத்தவரையில் இருக்கிற விதிமுறை
களில் எந்த தவறும் ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். அப்படி அனுப்பி வைக்கப்பட்டது
யார் என்று கேட்டு மருத்துவப்பணி குடும்பநலத் துறை
யினுடைய பெரிய அதிகாரி என்று சொன்னார்கள். மருத்துவப்
பணி குடும்பநலத் துறை இயக்குநர் திருமதி சரஸ்வதி அவர்
களுடைய மகன் ஜெகன்மோகன். இவர் ஆதி திராவிட வகுப்பைச்
சேர்ந்தவர். சாதாரணமாக ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த
வர்கள் என்று வருகிறபோது அவர்களுக்கு மினிமம் மார்க்
ரிக்குவயர்மெண்ட் இருக்கிறதோ அவ்வளவு இருந்தால் போது
மென்று தான் நாம் வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே
அந்த அம்மையாருடைய மகன் ; மாநில அரசினுடைய மூத்த
அதிகாரி அவர் ; அதுவும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவரின்
மகன் என்பதாலே அவனுடைய பெயர் கர்நாடகா அரசிற்கு
அனுப்பப்பட்டது. அதற்காக ஒரு விதிமுறையும் இல்லை.

ஆகவே எந்த விதிமுறையும் மாற்றப்படவும் இல்லை. திருப்பி
எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றிய விவரம் இல்லை.
அது பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
அவர்கள் விசாரித்துப் பார்த்து முறைகேடுகள் இருக்குமானால்
அது பற்றி நடவடிக்கை எடுப்பார்கள். தொடர்ந்து
வருகிறவை ஒத்துக்கொள்ளப்பட்ட முறைப்படி, அத்தகைய
மார்க்குகளின் அடிப்படையிலே தான் நடைபெறுகிறது என்
பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் எழுப்புகிற
போது, தீயணைப்புத் துறையினுடைய துணை இயக்குநர் பற்றிச்
சொன்னார்கள். இவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை பற்றிய
கோப்பும், இவரை லண்டனுக்குப் பயிற்சிக்கு அனுப்புவது பற்றிய
கோப்புகளிலும் இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.
விரிவான பரிசீலனைக்குப் பிறகுதான் அதுபற்றி முடிவு எடுக்கப்
படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை
எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள் என்றாலும் உணவுப்
பங்கீட்டைப் பொறுத்தவரையில் நாம் இன்னமும் வற்புறுத்திக்
கொண்டுதான் வருகிறோம். ஆகவே மத்திய அரசு இந்த மாதத்
தைப் பொறுத்தவரையில் 15 ஆயிரம் டன் அரிசியும், 15 ஆயிரம்
டன் கோதுமையும் தந்து, அடுத்த மாதத்திற்கு இன்னமும் 5
ஆயிரம் டன் கோதுமை கூடுதலாகத் தருவதாக அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-00)

ஆக, 20,000 டன் சோதுமையும், 15,000 டன் அரிசியும்
மே மாதத்திற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால், அது
வும் போதாது. கொஞ்சம் அதிகமாகத் தந்தால்தான் சமாளிக்க
முடியும். மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள்
சொல்லிய மாதிரி, சில பல இடங்களில் நாம் எண்ணிய அளவுக்குக்
கொடுக்க முடியாத அளவுக்கு, இருக்கிற இருப்பை வைத்து
பகிர்ந்து கொடுக்கும்போது முழு அளவுக்குக் கொடுக்க முடியாமல்
தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதை அரசே உணருகிறது என்
றாலும், இதை மேலும் சீர்படுத்துவதற்கான முயற்சியை அரசு
செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில இந்திய ரீதியிலே ஒரு கணக்கை நான் அண்மையிலே
பார்த்தபொழுது, சென்ற ஆண்டு 13 கோடியே 60 இலட்சம்
டன் மொத்தத்திலே உற்பத்தியாகி இருந்தாலும், இந்த வருஷம்
1 கோடியே 40 இலட்சம் டன் தான் குறைந்து, 12 கோடியே
20 இலட்சம் டன் மொத்தத்திலே உற்பத்தி ஆகி இருக்கிறது.
அகில இந்திய ரீதியிலே, 15 மாநிலங்கள் வறட்சியாலே பாதிக்கப்
பட்ட நிலையிருந்தாலும், உற்பத்தியிலே 1 கோடி டன்தான்
குறைந்திருக்கிறது என்ற அளவுக்குக் கணக்கு வந்திருக்கிறது.
இதிலே என்ன தகராறு வருகிறது என்று பார்த்தால், மத்திய



அரசினுடைய இன்னொரு கணக்கு வரும்போது, விளைச்சலிலே
12½ சதவீதம் தான் அவர்கள் கொள்முதல் செய்திருக்கிறார்கள்.
மற்றதை எல்லாம் வெளிச் சந்தையிலே விற்பதற்கு இடம்
கொடுத்ததன் காரணமாகத்தான் அரியானா, பஞ்சாப், மற்ற
மாநிலங்களிலிருந்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், சொல்
கிற மாதிரி, தனித்தனி வியாபாரிகள் இங்கு வந்து, நான் அரிசி
தரட்டுமா, நீ அரிசி வாங்குகிறாயா, எவ்வளவு அனுப்பட்டும்
என்றெல்லாம் கேட்கிறார்கள் என்று வருகிற பொழுது, கொஞ்சம்
அதிகமாக லெவியை வாங்கி, மத்திய இருப்பிற்கு வைத்து,
இதுமாதிரி கஷ்டப்படுகிற மாநிலங்களுக்குக் கூடுதலாகத் தரு
கின்ற பொறுப்பை மத்திய அரசு ஏற்றிருக்குமேயானால், இன்னும்
கொஞ்சம் சுலபமாகப் பிரச்னை முடியும். உதாரணத்திற்கு,
தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட உறுப்
பினர்களும், மற்றவர்களும் கூட அடிக்கடி தெரிவித்தார்கள்.
ஆகவே, விவசாயிகள் தங்களுடைய தேவைக்கு வைத்தது போக,
மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்று சந்தையிலே விற்கக்கூடிய
அத்தகைய நெல் முழுவதையும்—சென்ட் பர்சென்ட்—கொள்
முதல் செய்தால்தான் நம்முடைய பங்கீட்டு முறையைச் சரி
யாக்க முடியும் என்ற கொள்கையை நாம் வைத்திருக்கிறோம்.
நூற்றுக்கு நூறு கொள்முதல் செய்யவேண்டிய அளவுக்கு இக்
கட்டான சூழ்நிலையை நாம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது.
ஆனால் மைய அரசு 12½ சதவீதம் தான் மொத்தத்திலே கொள்
முதல் செய்து வைத்திருக்கும்போது, அவர்கள் 25 சதவீதம்,
30 சதவீதம் கொள்முதல் செய்வார்களானால், மத்திய
இருப்புக்குச் சேரும்; மத்திய இருப்புக்குச் சேர்ந்தால் இப்படி
கஷ்டப்படுகிற மாநிலங்களுக்கு—தமிழகம் மட்டும் என்று நான்
சொல்லவில்லை; நம்மை விடக் கூடக் கடுமையாக, இராஜஸ்
தான் கஷ்டப்படுகிறது; மகாராஷ்டிரம், கர்நாடகம் கஷ்டப்
படுகிறது. கேரளம் மிகக் கடுமையாக இந்த ஆண்டு பாதிக்கப்
பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரங்கள் எல்லாம் வருகின்றன.—
எல்லோருக்குமே தருவதற்கு வாய்ப்பு ஏற்படும். இந்த 12½
சதவீதம் கொள்முதலை விடக் கூடுதலாகக் கொள்முதல் செய்கிற
அளவுக்கு மத்திய அரசு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டு
மென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னவற்றிற்கு விடை
யாக நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மானியச் செலவினங்கள் முறையாகப் பயன்படுத்தப்பட
வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்
வதை இந்த அரசு ஏற்று அதை முறையாகச் செலவழிக்க வேண்டு
மென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. என்றாலும்
மானியங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை சில இனங்களிலே கூடு
வதும், சில இனங்களிலே குறைவதுமாக ஆகின்றது. சில இனங்
களிலே கூடுதலாக ஆகும்பொழுது, நாம் துணை மானியக்
கோரிக்கைகள் கொண்டு வந்து அவையினுடைய ஒப்புதல் பெற்று,
அதை நிறைவேற்றுகின்ற ஒரு முறையை வைத்திருக்கிறோம். இது
எல்லா அரசுகளைப் பொறுத்தும், எல்லா ஆண்டுகளைப்

பொறுத்தும் நடைபெறுகின்ற ஒன்றுதான். ஆனால் செல
வழிக்கப்படாமல் சரண்டர் செய்ய வேண்டிய கட்டங்கள் வரு
மானால், ஏன் வருகிறது என்பதற்கான காரணங்களைச் சொல்
லியே தீரவேண்டும். அந்தக் காரணங்களை, தொடர்புடைய
துறையினர், சொல்ல வேண்டுமென்பதோடு, அக்கவுண்டண்ட்—
ஜெனரலுக்கு—தணிக்கை அதிகாரிக்குச் சொல்லியாக வேண்டும்.
தணிக்கை அதிகாரிக்கு அப்பால், பொதுக் கணக்குக் குழுவுக்கும்
சொல்லியாக வேண்டும். அவர்களுடைய சமாதானங்களைப்
பொதுக் கணக்குக் குழு ஏற்றுக்கொள்ளா விட்டால், பொதுக்
கணக்குக் குழு அதன்மீது என்ன, என்ன நடவடிக்கைகளை எடுக்
கலாம் என்று கூட, யோசனை சொல்லலாம். ஆகவே, ''செக்
வால்வ்ஸ்'' என்று சொல்கிற மாதிரி, அதனைத் தடுத்து நிறுத்திக்
கண்காணிக்க பல்வேறு முறைகள் எல்லாம் இருக்கின்றன.
ஆனால், இவ்வளவுதான் செலவழிக்க முடியும் என்று நாம்
திட்டவட்டமாகச் செய்ய முடியாது. சில இனங்களிலே கூடுதல்
ஆவதும் சில இனங்களிலே குறைவதுமாக இருப்பது இயல்பாக
இருக்கின்ற ஒன்றுதான். அந்தத் தன்மையை நான் உணர்த்த
விரும்புகிறேன்.

காகித ஆலையைப் பற்றிய குறிப்புகளை மாண்புமிகு உறுப்
பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றிய
முழு விளக்கங்களை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
அவர்கள் வாய்ப்பு ஏற்படும்போது விளக்குவார்கள் என்றாலும்
கூட ஒன்றை மட்டும் அவர்கள் குறிப்பு மூலம் தந்திருக்கிறார்கள்.
அங்கே வாங்கப்பட்ட இயந்திரங்கள் எல்லாம் செக்கன்ட்
ஹாண்டிலே வாங்கப்படவில்லை என்றும், உபயோகப்படுத்தப்
பட்ட இயந்திரங்களாக வாங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு
இருக்கிறார்கள். வேறு பல கருத்துக்களை எல்லாம் அவர்கள்
சொல்லி இருக்கிறார்கள். வாய்ப்பு ஏற்படும்போது, மாண்பு
மிகு தொழில் துறை அமைச்சர் அது பற்றி விரிவாக இந்த அவை
யில் விளக்குவார் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதற்கு ரூ 15. கோடி
ஒதுக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். வீட்டுக்கு ஒருவருக்கு
வேலை கொடுப்பதற்கு எவ்வளவு ரூபாய் ஆகும் என்று திட்ட
மிட்டு, அவ்வளவு கோடி ரூபாயை நாம் ஒதுக்கவில்லை. இந்த
ஆண்டு நம்மால் முடிந்தது ரூ. 15 கோடி. இந்த ரூ. 15 கோடி
நிரந்தரமாக இருப்பது அல்ல. வீட்டுக்கு ஒருவர் எவ்வளவு
என்று கணக்கெடுத்து, அவர்கள் அத்தனை பேருக்கும் வேலை
கொடுத்தால் எவ்வளவு கோடியாகும் என்று கணக்கெடுத்து
அந்தக் கணக்கை—தேவையை ஒட்டி நாம் பட்ஜெட் போட
வில்லை.

நம்முடைய நாட்டு பட்ஜெட் எப்படி என்று கேட்டால் இருப்
பதை எப்படிச் செலவழிப்பது என்ற பட்ஜெட்டே தவிர, எவ்
வளவு தேவை என்பது அல்ல. இரண்டு வடைகள் இருக்கின்றன



என்றால், இரண்டு பேர்கள் இருக்கிறார்கள் என்றால் ஆளுக்கு
ஒரு வடை என்று கோவில்களிலே கொடுப்பார்கள். இரண்டு
வடைகள் இருந்து, வந்தது இருபது பேர்கள் என்றால் அந்த
இரண்டு வடைகளைத்தான் பிட்டுப் பிட்டுக் கொடுக்க வேண்டும்.
அதே மாதிரி, இருக்கின்ற வசதிகளை வைத்துக் கொடுப்பது
என்கின்ற அளவிற்கு இந்த ஆண்டு.......

திரு. துரைமுருகன் : சாப்பிடுகின்ற நேரத்தில் வடை என்று
சொன்னால் பசி அதிகமாகிறது.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, இரண்டு வடைகள் இருந்தால், பத்துப் பேர்
கள் இருந்தால் பிட்டுப் பிட்டுக் கொடுப்போம் என்று சொன்னால்
அது சரிதான். ஆனால், அப்படிச் சொல்லாமல் வீட்டுக்கு ஒரு
வருக்கு வேலை ஏப்ரல் மாதத்திலேயிருந்து கொடுக்கப்படும்
என்று மொத்தமாகச் சொன்னால், வடை இரண்டு என்று யாருக்
கும் தெரியாது ; ஆளுக்கு ஒரு வடை கிடைக்கும் என்றுதான்
எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, அது அப்பொழுதே
தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை
என்பது கொள்கை. அந்தக் கொள்கையை எப்படி நடை
முறைப்படுத்தப் போகிறோம் என்று சொல்லும்பொழுது,
இந்த ஆண்டு 15 கோடியாக ஒதுக்கப்படும் என்பது, இந்த 15
கோடி ஒதுக்கிக் கொடுத்தது வீணாக ஆகி விடக் கூடாது, ஒரு
ஆண்டு வேலையோடு அவன் நின்று விடவும் கூடாது. அதை
அந்தத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரை
வில் இதுபற்றி முடிவெடுத்து ஒவ்வொரு மாவட்டத்தைப்
பொறுத்தவரையிலேயும் ஏற்கனவே 7 கோடி ரூபாய் செல
வழித்துப் பலருக்குப் பயிற்சி தந்திருக்கிறோம். அப்படிப் பயிற்சி
பெற்றவர்களை எடுத்து வைத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு
ஏற்படுத்தும் முறையில், நிரந்தர வருமானம் ஏற்படுகின்ற அள
விற்கு ஏற்பட வேண்டும். எந்தெந்த மாவட்டத்தில் வேலைகள்,
வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையெல்லாம் கண்டறிந்து,
இந்த 15 கோடி ரூபாய் மட்டுமல்ல ; இந்த 15 கோடியை
ஒதுக்குவதன் மூலம் மேற்கொண்டு இதைப்போல நான்கு மடங்கு
கள், வங்கிகள் மற்றவைகளிலேயும் கடன்கள் வாங்கி, நாம்
ஒதுக்குவது 15 கோடி என்றாலும் மேற்கொண்டு 60 கோடியை
வங்கிகள் மற்றவைகளிலேயிருந்து கடன் வாங்கி, 75 கோடி அள
விற்கு, இன்ஃப்ராஸ்ட்ரக்சர் மற்றவைகளெல்லாம் ஏற்பாடு செய்து
வேலை வாய்ப்பு தருவதன் மூலமாக, அந்த வேலை நடக்க
வேண்டும். வாங்கிய கடன்களையும் ஏழெட்டு ஆண்டுகளில் திருப்
பித் தருகின்ற அளவிற்கு, அவர்கள் யாரும் பணம் தர வேண்டிய
அவசியமில்லை என்றாலும் எதிர்காலத்திலே இந்தச் சொத்துக்
களை அவர்களுக்கு உரிமைகளாக ஆக்குவதன் மூலம், எதிர்

மாநிலமாக நமது மாநிலத்திலே ஒழிக்க முன்வரலாம். மற்றவைகளில் ஒழிக்காத நிலையில் நாம மட்டும் ஒழிக்க முடியாது. சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு மற்றவைகள் எல்லாம் நமக்குச் சாதகமாக வருமேயானால், அகில இந்திய ரீதியில், அத்தகைய ஒரு முடிவு எடுக்கப்படுமேயானால், அதைப்பற்றி யோசிக்கலாம். காலங்கடந்து விட்டதன் காரணமாகவும், திரு. துரைமுருகன் பசியைத் தீர்ப்பதன் காரணமாகவும், பொதுவாகப் பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னதன் காரணமாகவும், அந்தந்த துறை அதைப்பற்றி ஆராய்ந்து அதற்கு வேண்டிய முறைப்படி நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்ற உறுதி மொழியை அளித்து, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் கூறிய குற்றச்சாட்டுகள் விசாரணையில் இருப்பதால், அதை இங்கே விவாதம் செய்வது சரியல்ல. இதைப்பற்றி திரு. துரைமுருகன் பேசியதையும், நான் பேசியதையும் மற்றும் உறுப்பினர்கள் யாரேனும் பேசியிருந்தால், அதையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விசாரணையின் முன்பு உள்ள பிரச்சினை என்பதால், திரு. துரைமுருகன், அது பற்றி பேசியது அனைத்தையும், மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டதையும் சேர்த்து அவைக்குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன். முன்பே அதை நீக்கியும் இருக்கிறோம்.

திரு. துரைமுருகன் : * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவற்றையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. துரைமுருகன் : * * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : * *
ன்பதுதான் இப்போது விசாரணைக் கமிஷன் முன்பு இருக்கிறது.
*

அதை விசாரிக்க கமிஷன் இருக்கிறது.

*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்குத்தான் சொல்கிறேன். இந்த விவகாரம் எல்லாம் கமிஷனுக்குப் போக வேண்டும். (குறுக்கீடு). தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே, அந்த விவாதங்கள் எல்லாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப் பெற்றுள்ளன. இப்போது நடைபெற்ற இந்த விவாதங்களும் நீக்கப்படுகின்றன.

3. அறிப்புகள் (தொடர்ச்சி).

(இ) உறுப்பினர் திரு. வே. இராஜசேகரன் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு சென்னை நகர காவல்துறை ஆணையரிடமிருந்து ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :—

'I have the honour to inform you that Thiru V. Rajasekaran M.L.A, referred to in this Office letter cited was produced before the Chief Metropolitan Magistrate, Egmore, Madras, to-day (21.4.83)

2. The charge sheet in the above case was filed in the Court and the same has been taken on file in C.C.No. 4935/83. The case was adjourned to 5-5-1983 for furnishing copies to the accused.

3. He has been remanded to judicial custody till 5-5-83 as no bail was moved for him. He is lodged in the Central Prison, Madras.'

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 3.) சட்ட முன் வடிவு 1983—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காலத்தில் வளர்ப்பதற்கு இயலுமா என்பதைப்பற்றி ஒரு
திட்டம் தீட்டப்பட்டுக் கொண்டு வருகிறது. பெரும்பாலும்,
விரைவில் அது முடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்
பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் கூறும்பொழுது
இலங்கை ஸ்ரீமாவோ உடன்பாட்டினுடைய காலம் முடிவடைந்து
விட்டது, எக்காரணத்தைக் கொண்டும் புதுப்பிக்கக் கூடாது
என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்து
தான் இந்த அரசுக்கும் இருக்கிறது என்பதையும், அதை வலி
யுறுத்தி மத்திய அரசுக்கு இந்த அரசு கடிதம் எழுதி இருக்கிறது
என்பதையும், எக்காரணத்தைக் கொண்டும் அதைப் புதுப்பிக்
கின்ற நிலை ஏற்படுமேயானால் சுமையைத் தாங்க வேண்டியது
மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும்தான் அதிகமாக இருக்கும்
இதைப்பற்றி மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம்
என்பது மட்டுமல்லாமல், மத்திய அரசினுடைய வெளி விவகார
அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு நரசிம்மராவ் அவர்களை
நாம் நேரடியாகக் கண்டு, இதைப்பற்றி அவர்களிடத்திலே
எடுத்துத் தெரிவித்தபொழுது நம்முடைய எண்ணத்திற்கு அனு
சரணையாகவும், அனுதாபம் தெரிவிக்கின்ற வகையிலேயும்தான்
அவர்களே இருக்கிறார்கள். ஆனால் அதைப் பக்குவமாக எப்படி
முடிக்க வேண்டுமோ அதை முடிக்கின்ற முயற்சியிலே மத்திய
வெளி விவகாரத் துறை இருக்கும் என்று அவர்கள் எடுத்துச்
சொல்லி இருக்கிறார்கள். அதை மேலும் வற்புறுத்தும் என்பதை
நான் இந்த வாய்ப்பில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, சிலோனிலிருந்து இங்கு வரக் கூடியவர்களின்
அந்தப் பளுவை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்பது என்ற
முறையிலே மாண்புமிகு முன்னவரவர்கள் சொன்னார்கள். அந்த
சிலோன் அகதிகள் சம்பந்தமாக ஒரு ரிஹேபிலிடேஷன் கமிட்டி
யில் சீஃப் மினிஸ்டர் சேர்மன். அந்தக் கூட்டத்திலே ஏகமனதான
முடிவு, வரக் கூடியவர்கள் தமிழ் பேசக் கூடியவர்களாக இருந்
தால் மத்திய சர்க்காரும், இன்னொரு சர்க்காரும் இப்படி இரண்டு
நாட்டு சர்க்கார்களும் சேர்ந்து, நாட்டினுடைய பொதுப்
பிரச்சினையாகத்தான் அவர்களைக் கருதுவதால் அப்படி வருப
வர்களின் முழுப் பொறுப்பையும், செலவையும் மத்திய சர்க்கார்
தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்தக் கமிட்டியிலே
ஏகமனதாக ரெகமென்டேஷன் போய் இருக்கிறது. ஆகவே,
இரண்டு பேரும் ஷேரிங் கிடையாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
உமாநாத் அவர்கள் கூறுவது உண்மை. அந்த அடிப்படையிலே
வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். இதிலே அகதிகளிலேயே
சில பல வேறுபாடுகள் வைத்திருக்கிறார்கள். பாகிஸ்தான்



அகதிகள், மற்ற அகதிகள், பர்மா அகதிகள் என்று இவர்களுக்குத்
தனித்தனியான சில முறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த
வேறுபாடு கூடாது என்பதையும் நாம் வற்புறுத்தி வருகிறோம்.

உதாரணத்திற்கு நான் உதவி என்று சொன்னது, அவர்
களுக்குப் பணம் தருவது, காப்பாற்றுவது அந்த அரசும், இந்த
அரசும் எடுத்துக் கொண்ட உடன்பாட்டின் அடிப்படையிலே
வரும்பொழுது மத்திய அரசுதான் பொறுப்பேற்றுக் கொள்ள
வேண்டும் என்பதைத்தான் வற்புறுத்தி வருகிறோம். சில சமயங்
களிலே நிலங்கள் தருவது, அந்த நிலங்களை எடுப்பது, இதைப்
போலவே மாநில அரசும் அவர்களுக்கு உதவி செய்வது என்கின்ற
வகையிலேதான் மாநில அரசினுடைய உதவி என்று நான் சொன்
னேன். மற்றைய பொறுப்பு ஏற்றுக் கொள்வது என்கின்ற
பொழுது மத்திய அரசுதான் வருகிறது.

பரிசுச் சீட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன்
அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பரிசுச் சீட்டு சில சமயங்
களிலே இலட்சக் கணக்கான சீட்டுகளை அச்சிடுகின்ற பொழுது
சில பல தவறுகள் ஏற்பட்டு விடும். தவறு ஏற்படாமல் இருப்ப
தற்காக இரண்டு மூன்று இடங்களிலே அதைக் கண்காணிக்க
வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அந்தக் கண்காணிப்பையும்
மீறி சில சமயங்களிலே வெளியே வந்து விடுமேயானால் அதைப்
பற்றி நடவடிக்கை எடுக்க, அந்த முதல் கண்காணிப்பு சரியாக
இல்லாமல், இரண்டாவது கண்காணிப்பும் சரியாக இல்லாமல்,
டிரஷரிக்குப் போனதற்குப் பிறகும் ஒரு கண்காணிப்பு செய்யும்
படியாகச் சொல்லியிருக்கிறோம். அதையும் மீறி வெளியே
வந்திருக்கிறது என்றால், அந்த இடத்தைக் கண்டறிந்து அது
பற்றிய விவரக் குறிப்புகளை என்னிடத்திலே தருவார்களே
யானால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலேயும் ஒன்றிரண்டு
கேஸ்கள் அவ்வப்பொழுது வருவதைப் பார்த்து அதை யார்
தவற விட்டார்கள் என்று நடவடிக்கை எடுத்துக் கொண்டு வரு
கின்றோம்.

(பிற்பகல் 2-10)

ஆக அந்த 2, 3 கட்டங்களைத் தாண்டித்தான் பொதுமக்களுக்குப்
போகிறது. அப்படித் தவறு ஏற்பட்டால், அது பற்றி விசாரணை
நடத்தி, தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொள்
வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குதிரைப்பந்தயத்தை இந்தியாவிலே எல்லா மாநிலங்
களும் ஒழித்துவிட்டால், நாமும் ஒழித்துவிடலாம். பெங்களூர்,
பம்பாய் போன்ற இடங்களில் ஓடும் குதிரைகளுக்குக் கட்டுகிறார்
கள். ஆகவே கட்டுகின்றவர்கள் எல்லாவற்றிற்கும் கட்டுவார்கள்.
இதிலே $3\frac{1}{2}$ கோடி ரூபாய் வந்துகொண்டிருக்கிறது. இதை மற்ற
இடங்களில் ஒழித்து விடுகின்ற முடிவு வருமேயானால், முதல்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். '' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1983) நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 22—4—1983 காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—18 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்:

எதுவுமில்லை.

ஆவணக்காப்பக
சென்னை-600 008
136643
Y211,31 N83
N83.50.4 ... 5

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited. Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.